செல்வம் கொழிக்கும் வீட்டின் அமைப்பு

பாகம் - 1

சுவாமி விஜயானந்தா

மனையடி சாஸ்திரம்

150 விளக்கப்படங்களுடன்

வளரி
புத்தக நிலையம்

செல்வம் கொழிக்கும் வீட்டின் அமைப்பு

(மனையடி சாஸ்திரம்)

சுவாமி விஜயானந்தா

வள்ளி புத்தக நிலையம்

புத்தகம் வெளியிடுவோர் & விற்பனையாளர்கள்
8-A, சுந்தரேஸ்வரர் கோவில் தெரு,
இராயப்பேட்டை : : சென்னை - 600 014.

முதற்பதிப்பு : டிசம்பர், 1990
திருத்தங்களுடன் இரண்டாம் பதிப்பு : ஜூலை, 1992
மூன்றாம் பதிப்பு : ஆகஸ்ட், 1994
நான்காம் பதிப்பு : சூன், 1995
ஐந்தாம் பதிப்பு பிப். 1996
© பதிப்புரிமை பெற்றது.

அச்சிட்டோர்: நடராஜ் ஆப்செட் பிரஸ், சென்னை – 5.
தொலைபேசி: 840188, 840284

ஆசிரியன் பேசுகிறேன்

செல்வம் என்பது பொருள் மட்டுமன்று. உடல் நலம், மக்கட்பேறு, முதியவர்கள் வலிமையுடன் மகிழ்ச்சி கொண்டிருத்தல், இல்லத்தில் உள்ளவர்கள் அனைவரும் உடல் நலத்துடன் தம் செயல்களை திறம்பட நடத்துதல் போன்றவையும், மாடு கன்று போன்றவை வளர்ந்து பயன்படுவதும் செல்வத்துள் அடங்கும்.

இவ்வனைத்துக்கும் இருக்கையாவது வீடு. வீடு நல்ல நிலையில் இருந்தால் இவை அனைத்தும் நல்ல நிலையில் இருக்கும்.

வீடு என்பது செங்கல், சிமெண்ட், மரம் போன்ற பல பொருள்க ளின் கூட்டால் அமையப்படுவதாகும், வீடு கட்டப் பயன்படுத்தப்படும் பொருள்கள் தரமாக இருத்தல், அவற்றை ஒழுங்காக ஒன்று சேர்த்துச் சரியாக அமைத்தல், வீட்டின் ஜன்னல்கள், கதவுகள், அறைகள், கிணறு போன்றவை சௌகரியமாக அமைந்திருத்தல் போன்ற பல விஷயங்கள் வீட்டின் நலத்திற்கு இன்றிமையாதவை.

பொறியியல் வல்லுநர்களைக் கொண்டு முன்னதாகச் சரியான திட்டம் வகுத்து, வீட்டின் அமைப்பைக் காட்டும்வரை படம் தயார் செய்து, அரசாங்க, நகராட்சி மன்ற ஒப்புதல்கள் பெற்று, அரும்பாடு பட்டு லட்சக்கணக்கில் பணம் செலவு செய்து வீட்டை அமைத்துக் கொள்கிறோம்.

இவையனைத்தும் வீட்டின் 'உடல்' திடமாக இருக்க உதவுப வையே. ஆனால் வீட்டில் வசிப்பவர்கள் எத்தகைய துன்பமுமின்றி நீண்ட ஆயுள் பெற்று முதலில் நாம் கூறிய செல்வங்கள் அனைத்தும் குறையாத வண்ணம் அமைந்திட இவை போதுமா?

சுவர்கள் திடமாக இருக்கின்றனவா? கதவுகள் வலிவாக இருக்கின்ற னவா? அறைகள் காற்றோட்டமும், வெளிச்சமும் கொண்டு அழகாக இருக்கின்றனவா? சுவர்களுக்கு தீட்டிய வண்ணம் கண்ணைக் கவரும் படி இருக்கிறதா? வீட்டின் அமைப்பு பார்ப்பவர் பிரமிக்கும்படி இருக்கிறதா? என்றெல்லாம் யோசனை செய்கிறோம்.

இவற்றுடன், இந்த வீட்டில் வசித்தால் குறையாத செல்வம் நிலையாக விளங்குமா? என்றும் சிந்திப்பது மிக்க அவசியமல்லவா?

இவ்விஷயத்தில் தக்க யோசனைகள் கூறி நல்வாழ்வுக்கு வழி காட்டுவதுதான் 'வாஸ்து சாஸ்திரம்'.

''நம் நாட்டில் தான் எதற்கும் சாஸ்திரம் பார்க்கிறோம். வெளிநாட் டினர் அரசாங்க சட்டத்திற்கு ஏற்ப சுகாதார நிலைகளுக்குத் தக்கபடி வீடுகள் கட்டிக் கொண்டு வாழவில்லையா? நம்மைப் போல் சாஸ்திரங் களைப் பார்க்கிறார்களா?'' என்ற தங்களின் கேள்வி காதில் விழுகிறது.

ஒன்று சொல்லுகிறேன். வெளிநாட்டில் வீடுகட்டி வாழ்பவர்கள் அனைவரும் நாம் முன்கூறிய செல்வங்கள் அனைத்தும் பெற்று வாழ்கிறார்கள் என்பதற்கு என்ன உறுதி? ஆராய்ந்து பார்த்தால் அல்லவா தெரியும், அவர்கள் அவ்வாறு வாழ்கின்றனர் என்பது உறுதியானால் நாமும் சாஸ்திரங்களைத் தள்ளி விடலாம்.

சாஸ்திரங்களை பார்ப்பதால் அதிகமாகச் செலவு ஏற்படப் போவ தில்லை. வீட்டின் அமைப்பில் சில மாறுதல்கள் செய்ய வேண்டிவரும்; அவ்வளவு தான். எனவே, ஒரு கண்ணால் சாஸ்திரத்தையும் கவனித்து தக்கபடி அமைத்துக் கொண்டு நல்வாழ்வு வாழ்வது விவேகம் அல்லவா?.

நம் முன்னோர்கள் அரும்பாடுபட்டுத் தாம் கண்ட உண்மைகளை நமக்கு அறிவித்துள்ளனர். அவர்கள் கூறும் பொருள்களில் கவனம் செலுத்துவதால் பொருள் நஷ்டம் ஒன்றும் இல்லை. மேலாக நன்மை களே விளையும் என்பது திண்ணம்.

தெலுங்கு, தமிழ், வடமொழி போன்ற பல மொழிகளில் உள்ள வாஸ்து சாஸ்திரங்களை ஆராய்ந்து நாற்பதாண்டுகளுக்கு மேலாக அனுபவமும் பெற்று அடைந்த அறிவை முன்னிட்டு இந்நூல் எழுதப்பட் டுள்ளது.

வீடு என்றால் பெரிய கட்டடங்களாக, மாளிகைகளாக இருக்க வேண்டும் என்பதில்லை. எளிய ஓலைவேய்ந்த குடிசைகளுக்கும், ஓட்டு வீடுகளுக்கும் இப்புத்தகத்தில் கூறப்பட்ட விஷயங்கள் பெரும்பாலும் பொருந்தும்.

இப்புத்தகத்தில் கூறிய இலக்கணங்கள் அனைத்தும் அமைந்திருக்க வேண்டும் என்பதில்லை. பெரும்பான்மையான இலக்கணங்கள் சரியாக இருந்தாலே போதுமானது.

'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு'.

என்பது நினைவிற் கொள்ளத் தக்கது.

சுவாமி விஜயானந்தா.

பொருளடக்கம்

	பக்கம் எண்
ஜாதகமும் வீடும்	9
செய்தொழிலுக்கேற்ப நிலம்	9
நிலத்தின் வடிவம்	11
திசைகளில் நிலம் வளர்ந்துள்ள மனைகளின் பலன்	12
வீடு கட்டத் தகாத நிலங்கள்	21
வீட்டு மனையும், மேடான பகுதியும்	21
வீட்டு மனையும், பள்ளமான பகுதியும்	22
பூமி வீதிகளும், அதன் பலன்களும்	22
வாஸ்து வேற்றுமைகளும் பலனும்	23
திசைகளின் விளக்கம்	24
திசைகள் தரும் பலனகள்: கிழக்கு	27
தென் கிழக்கு	29
தெற்கு, தென்மேற்கு	31
மேற்கு	32
வடமேற்கு	33
வடக்கு, வடகிழக்கு	34
பிறந்த மாதமும், தக்க நிவாசமும்	35
மனைகளின் சுற்றுப் புறங்கள்: கிழக்கு	39
தென்கிழக்குப் பகுதி நிலம்	41
மனைக்குத் தெற்குப்பகுதி நிலம்	43
மனையின் தென்மேற்கு நிலம்	44
மனையின் மேற்குப்பகுதி நிலம்	46
மனையின் வடமேற்குப்பகுதி நிலம்	47
மனைக்கு வடக்குப்பகுதி நிலம்	49
மனைக்கு வடகிழக்குப்பகுதி நிலம்	49
மனைநல ஆராய்ச்சி	51
பழைய வீடுகளில் சல்யம் முதலியன கண்டு கொள்ளும் வழி	53
வீடுகட்ட நாள் குறித்தல்	55
வீடு கட்டத்தக்க நக்ஷத்திரங்கள்	56
கிரகங்களின் நிலையும் நன்னாளும்	57
வீடு கட்டத் துவங்க லக்னம்	58
லக்னத்தை நோக்கி கிரகங்களின் அமைப்பும் பலனும்	58
இல்லத்தின் ஆயுள்	59

துவங்கும்போது கிரகங்களின் நிலையால் வரும் பலன்கள் 59
பெயரின் முதல் எழுத்தும் இல்லமும் 61
பெயரும், தக்க திசையும் சுண வேறு முறை 62
ஆயம் காணும் முறை 62
மனைக்கு உரிய திதி நக்ஷத்திர வாரம் முதலியவற்றை அறிதல் 64
தனம், ரிணம் முதலியவற்றின் பலன் 64
திதி பலன், தம் பெயர்களுக்கேற்பத் திசைகளைத் தேர்ந்தெடுத்தல் 65
கிராமங்களில் வசிக்கத் தக்க திசை அறிதல் 67
எழுத்துகளும், திசைகளும் 68
திசைகளைப் பற்றிய விளக்கம் 69
வீடு கட்ட துவங்கச் சிறந்த நாள் 71
வீடு கட்டத் துவங்கக் கூடாத நாட்கள் 72
வீடுகட்டத் துவங்கும்போது கவனத்தில் கொள்ளத்தக்கவை 72
பூமி பூஜை 74
கிணறு இருக்க வேண்டிய இடம் 74
வீட்டைச் சுற்றி காலி இடம் 74
வீட்டின் அமைப்பு 75
வேறு வேறு செயல்களுக்கு ஏற்ற திசைகள் 75
வாயில், ஜன்னல் முதலியவற்றின் எண்ணிக்கை 77
கிழக்குத் தலைவாயில் வீடு 77
தெற்கு திசை நோக்கிய தலைவாயில் கொண்ட வீடு 94
மேற்கு நோக்கிய இல்லத்தின் அமைப்பு 102
வடக்குத் திசையை நோக்கிய இல்லத்தின் அமைப்பு 115
தென்கிழக்குத் திசை இல்லம் 121
தென்மேற்குப் பகுதியில் வீடு 128
வடமேற்குத் திசை இல்லம் 130
வடகிழக்குப் பகுதியில் உள்ள இல்லம் 137
வேதை அல்லது சூலை விளக்கம் 157
வீடும் மரமும் 173
வீட்டைப் பங்கிடுதல் 174
வாடகைக்கு அமர்த்துதல் 175
வீட்டை விரிவு படுத்தல் 175
வாமரவி மாதங்கள் 177
கும்ப சக்கரம் 178
அக்னிவாச விளக்கம் 178
புது வீட்டிற்குள் பிரவேசம் செய்ய வேண்டிய முறை 179
வாஸ்து பூஜை 179
வாஸ்து சாந்தி செய்யும் முறை 181
வீட்டிற்குப் பெயர் சூட்டுதல் 183

தோஷங்களைத் தீர்க்கும் யந்திரங்கள் 192
வீட்டின் அளவு 194
வாயில்களின் அளவு 196
துவாரங்களின் நீள அகலங்களின் விளக்கம் 196
செங்கற்கள் அளவு 197
வீடு கட்டும் போது கடைப்பிடிக்க வேண்டிய சில குறிப்புகள் 197
முடிவுரை 200

இரண்டாம் பதிப்பின்

முன்னுரை

முன்னோர் வகுத்த சாஸ்திரங்களில் இக் காலத்தவர்களுக்கு நம்பிக்கை உள்ளதோ, இல்லையோ என்ற ஐயத்துடனேயே 'செல்வம் கொழிக்கும் வீட்டின் அமைப்பு' எனும் நூலை எழுதினேன். ஆதரவுடன் வள்ளி புத்தக நிலையத்தாரும் வெளியிட்டனர். ஓராண்டு கடந்ததும் மறுபதிப்பை எதிர் நோக்கியது. எனவே அன்பர்கள் அப்புத்தகத்திற்கு தந்துள்ள மதிப்பு உணரலாயிற்று.

அதுமட்டுமல்ல, சென்னையிலும், வெளியூர்களிலும் உள்ள அன்பர் கள் நூற்றுக்கணக்கில் நேரிலும், கடிதம் மூலமாகவும் இப்புத்தகத்தைப் பாராட்டிய தோடல்லாமல், அவர்கள் எல்லாரும் இந்தப் புத்தகத்தில் உள்ள விஷயங்கள் நூற்றுக்கு நூறு பங்கு உண்மை என்பதை அனுபவத் தில் உணர்ந்து கொண்டோம் என்று கூறியிருக்கின்றனர்.

பலர் எம் யோசனையின்படி தம் இல்லங்களைச் சீர் திருத்திக் கொண்டு நன்மை பெற்றுள்ளனர். மேலும் பல விஷயங்கள் கூறவேண்டி யிருப்பதால் பல அரிய விஷயங்களுடன் இக்காலத்தில் நவீன முறையில் அமைக்கப்படும் இல்லங்களுக்குத் தக்க இலக்கணங்கள், அளவுகள், இருக்கும் தோஷங்களைப் போக்கிக் கொள்ளத் தக்க விரிவான சாந்தி முறைகள் முதலியவற்றுடன் இப்புத்தகத்தின் இரண்டாம் பகுதி வெளியி டப் பட்டுள்ளதென்பதை அன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவாமி விஜயானந்தா.

பதிப்புரை

20-ம் நூற்றாண்டில் வாழும் நாம், நமக்கு ஒரு சொந்த வீடு பெற்றேயாக வேண்டும் என்ற லட்சியத்தோடு வாழ்கிறோம். தவ றில்லை. பெருமைப்படத்தக்க லட்சியமே. நகரப்பகுதியில் அடுக்கு மாடிக் கட்டடங்களில்தான் வீடு கிடைக்கிறது. புறநகர்ப் பகுதிகளில் நமக்கென ஒரு வீட்டுமனை பெற்று அதில் நாம் எவ்வாறெல்லாம் வீட்டை அமைத்துக் கொண்டால் கஷ்டமின்றி செல்வம் பெருகும் என்பதைப் பற்றி அறிந்து கொள்ள பன்மொழி அறிஞர் சுவாமி விஜயானந்தா எழுதியுள்ள 'செல்வம் கொழிக்கும் வீட்டின் அமைப்பு' என்ற நூல் பெரிதும் உதவும். சுவாமி விஜயானந்தா அவர்கள் வாஸ்து சாஸ்திரத்தில் வல்லவர். அவர்கள் தம் வாழ்க்கை அனுபவத்தில் கண்டு, கேட்டு, ஆராய்ந்த பின் எழுதிய அற்புதமான நூல் தங்கள் கைகளில் தவழும் இதுவாகும்.

வீட்டை எந்தெந்தத் திசைத் தெருக்களில் எந்தத் திசையில் தலைவாயில் (Main Gate) அமைப்பது, பூந்தோட்டம், கிணறு, படுக்கை அறை முதல் அவுட் ஹவுஸ் வரை அவரவர் ஜாதகப்படி எப்படி அமைய வேண்டும்; எப்படி அமையக் கூடாது. அப்படி அமைய நேரிட்டால் அதற்குப் பரிகாரம் என்ன என்ற விவரங்களையும் தெள்ளத் தெளிவாக, பூமி பூஜை முதல் கட்டிய வீட்டிற்கு பெயர் சூட்டும் வரை அனைத்து விஷயங்களையும் ஆராய்ந்து விளக்கியுள்ளார். வாஸ்து பூஜை முறையைக் குறித்துள்ளது மிக்க பயன் தரும்.

மிகுந்த பொருட் செலவில் இப்புதகத்தை வெளி கொணர்ந்திருக்கி றோம். சில வீட்டின் அமைப்பு படங்களுக்கு கீழ்□இக்குறியிட்டு சில இன்றியமையாத குறிப்புகளைத் தந்திருக்கிறோம். இப்புத்தகத்தை சாமா னிய மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் தயாரித்துள்ளோம். எங்களின் எல்லா புத்தகங்களையும் வாங்கி ஆதரித்த தங்களைப் போன்ற சான்றோர்கள் இப்புத்தகத்தையும் வாங்கி எங்களை மேலும் ஊக்கப்ப டுத்த வேண்டுமென வேண்டுகிறோம்.

இந்த நூலை வெளியிட அனுமதி தந்த பன்மொழி அறிஞர் சுவாமி விஜயானந்தா அவர்களுக்கு எங்கள் நன்றி என்றும் உரியது.

-பதிப்பகத்தார்

செல்வம் கொழிக்கும் வீட்டின் அமைப்பு

(மனையடி சாஸ்திரம்)

ஜாதகமும், வீடும்

அவரவர் ஜாதகத்தில் நான்காம் வீடு இல்லத்தைக் குறிக்கும். நிலத்திற்கு உரிய கிரகம் செவ்வாய். அழகான வீட்டிற்கு உரிய கிரகம் சுக்கிரன். ஜாதகத்தில் நான்காம் வீட்டிற்கு உரிய கிரகங்களும் சுக்கிரனும், செவ்வாயும் நல்லபடி தொடர்பு கொண்டிருந்தால் அழகான நல்ல வீடு அமையும். நான்காம் வீட்டிற்கு உரியவனும் 5,9ம் இல்லங்களுக்கு உரியவர்களின் தொடர்பும் இருந்தால் வீட்டில் செல்வம் மிகுதியாக வளரும். எனவே, நான்காம் வீட்டிற்கு உரியவன், செவ்வாய், சுக்கிரன், நான்காம் வீட்டில் அமர்ந்துள்ள கிரகம் இவற்றில் ஒன்றோடொன்றுள்ள தொடர்பு ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து அவைகளில் வலிமை பெற்றுள்ள கிரகம் இருக்கும் திசையில் வீடு அமைத்துக் கொள்வது மிக்க நலம் தரும்.

கணவன், மனைவி இருவரின் ஜாதகங்களையும் நன்கு ஆராய்ந்து, நல்ல யோகம் உள்ளவர்களின் பெயரில் இல்லம் அமைத்துக் கொள்வது பெருத்த நன்மை தரும். இவ்விஷயத்தில் குழந்தைகள் இருந்தால் அவர்களின் ஜாதகங்களையும் பரிசிலனை செய்வது நல்லது.

செய்தொழிலுக்கேற்ப நிலம்

ஒவ்வொரு பயிருக்கும் தனித்தனித் தன்மைகள் கொண்ட நிலம் தகுந்தது. எல்லாப் பயிர்களும் எல்லா நிலத்திலும் விளைவதில்லை. அதைப் போல அவரவர்கள் செய்தொழிலுக்

கேற்ப வீடு கட்டிக் கொள்ள நிலத்தின் தன்மை அமைந்திருப்பது மிக்க நலம் தரும். எடுத்துக் காட்டிற்கு இங்கு ஒன்று கூறுவது தகும். மற்போர் கற்பவர்கள், தாம் பயிற்சி செய்யும் நிலத்தில் செம்மண்ணைப் பரப்பி வைப்பார்கள். சிவப்பு நிறம் உடல் வலிமை தரும். புலனடக்கம் தரும் என்பது நம் முன்னோர்களின் நம்பிக்கை. மற்போர் செய்பவர்களுக்கு விந்துவைக் கட்டுதல் மிக்க நலம் தரும். சந்நியாசிகள் காவி உடுப்பதும் இக் கொள்கையைப் பற்றியதே. அதைப் போல அவரவர் செய்யும் தொழிலுக்கேற்ற நிலம் வீடு கட்டிக் கொள்ளத் தக்கது எனலாம்.

தொழில்களை முக்கியமாக நான்கு வகைப்படுத்தலாம். அறிவால் செய்யப்படுவது ஆசிரியர் தொழில் போன்றவை. உடல் வலிமை கொண்டு செய்யப்படுவது நாட்டைக் காத்தல் முதலி யவை. உத்தியைக் கொண்டு செய்யப்படுவது வாணிபம் முதலி யவை. உடல் உழைப்பை முக்கியமாகக் கொண்டது பயிர்த் தொழில் முதலியவை.

வெண்மை நிறம் கொண்டதும் இனிப்புச் சுவையுள்ளதும் தாமரை மணம் கொண்டதுமான நிலம் அறிவால் தொழில் புரிபவர்களுக்கு ஏற்றது.

சிவப்பு நிறமும், துவர்ப்புச் சுவையும், யானை, குதிரைகளின் உடலின் வாசனையைப் போன்ற மணமும் கொண்ட நிலம் வீரத்தையும், உடல் வலிமையையும் கொண்டு தொழில் செய்யும் பாதுகாவலர், படையாட்கள் போன்றவர்கள் வீடு கட்டிக் கொள் ளத்தக்கது.

பச்சை நிறமும், புளிப்புச் சுவையும், மாடுகள், தானியங்கள் போன்றவற்றின் மணம் கொண்ட நிலம், வியாபாரம் செய்பவர் கள் வசிக்கத்தக்கது.

கரு நிறமும், கசப்பு அல்லது கார்ப்புச் சுவையும், கள் மணமும் கொண்ட நிலம், பயிர்த் தொழிலில் ஈடுபடுவோர் வசிக்கத் தக்கது.

வேறொரு கொள்கையின்படி வீடு கட்டிக் கொள்ளத் தேர்ந் தெடுக்கும் நிலம் தெற்கு மேற்குப் பகுதிகளில் சற்று மேடாக இருந்தால் செல்வத்தை வளர்க்கும். அவ்வாறில்லாவிடில் அங்கு வீடு கட்டி வாழ்வதால் செல்வம் குறையும்; நறுமணமுள்ள நிலத்தில் வசித்தல் பொன்னைச் சேர்க்கும். துர்நாற்றம் கொண்ட நிலம் துன்பங்களை விளைவிக்கும்.

நிலத்தின் (தோற்றம்) வடிவம்



கிழக்கு மேற்காக நீள் சதுர வடிவில் உள்ள மனை 'ஆயுதம்' எனப்படும். இந்த மனையில் வீடு கட்டுவதால் நன்மைகள் அனைத்தும் உண்டாகும்.

நான்கு பக்கங்களிலும் சம அளவு கொண்ட மனை 'சதுஷ்கோணம்' எனப்படும். இம்மனை செல்வத்தை வளர்க்கும்.



அகலப் பக்கங்கள் சற்று அகன்ற வட்டம் போல் இருக்கும் மனை 'விருத்தம்' அல்லது 'வர்த்துகம்' எனப்படும். இம்மனையில் வீடு கட்டுவது (மத்திம) நடுத்தரப் பலனைக் கொடுக்கும். இத்தகைய நிலம் அறிவாற்றலை வளர்க்கும் என வசிஷ்ட ஸம்கிதை கூறுகிறது.



அகலப் பக்கங்கள் இரண்டும் சம அளவில் இருந்து நீளப் பக்கங்கள் இரண்டும் சற்று உள்ளடங்கி இருக்கும் மனை 'பத்ரபீடம்' எனப்படும். இதுவும் செல்வத்தை வளர்க்கக் கூடியதே.

இந்நான்கு வகைத் தோற்றங்களைக் கொண்ட மனைகளில் வீடு கட்டிக் கொள்வதால் செல்வம் வளரும். சுகமும் அமைதியும் மிகும்.



இத்தகைய தோற்றமுள்ள மனை 'கும்பாகாரம்' (பானை போன்ற தோற்றம் கொண்டது) என்னப்படும். இத்தகைய மனை தீராத நோய்களுக்கு இடம் தரும்.



ஒவ்வொரு பக்கமும் வேறு வேறு அளவில் இருப்பது 'விஷம பாகு' எனப்படும். இத்தகைய மனையில் வீடு கட்டினால் தீராத துக்கத்தை விளைவிக்கும்.

திசைகளில் நிலம் வளர்ந்துள்ள மனைகளின் பயன்



வடகிழக்குப் பகுதியில் நிலம் கிழக்கு நோக்கி வளர்ந்திருக்கும் மனை புகழைத் தரும். ஆனால் செல்வ வளர்ச்சி நடுத்தரமாக இருக்கும்.



தென்கிழக்குத் திசையில் கிழக்குப் பகுதியில் நிலம் வளர்ந்திருக்கும் மனையில் பெண் குழந்தைகள் மிகுந்திருப்பர். ஆண் குழந்தைகள் இருந்தாலும் அறிவாற்றலும், உடல் வலிமையும் குறைந்தவர்களாவர்.



தென்கிழக்குத் திசையில் நிலம் தெற்கை நோக்கி வளர்ந்திருந்தால் மக்கட் பேறும், புகழும் இருக்கும். செல்வம் வளர்வதும் குறைவதுமாக இருக்கும். சீராக இருக்காது. இந்த இல்லத்தில் வசிக்கும் ஆண்களின் உடல் நலம் அடிக்கடி சீர் குலையும்.



தென்மேற்குத் திசையில் நிலம் தெற்கு நோக்கி வளர்ந்த மனை: இதில் வீடு கட்டி வசிக்கும் இல்லத்தில் ஆண்கள் கொடுந் தன்மை கொண்டிருப்பர். பெண்கள் என்றும் வருந்திக் கொண்டிருப்பர்.



தென்மேற்கு மனை மேற்கு திசை நோக்கி வளர்ந்திருக்குமாயின் அந்த மனையில் வீடுகட்டி வாழ்வோர் தீய வழிகளில் செல்வம் சேர்ப்பர். பெண்கள் வருந்திக் கொண்டிருப்பர். செல்வம் தீய வழிகளில் செலவாகும்.



வடமேற்குப் பகுதியில் நிலம் மேற்கு திசை நோக்கி வளர்ந்திருக்குமா யின் எளிதில் செல்வம் சேரும். அரசாங் கத்தினால் நன்மை உண்டாகும். பெண் கள் உற்சாகம் கொண்டிருப்பர்.



வடமேற்குப் பகுதியில் நிலம் வடக்கு நோக்கி வளர்ந்திருக்கும் மனையில் வீடு கட்டி வாழும்போது, இல்லத்திலுள்ள ஆண்கள் நெறியற்ற வழியைப் பின்பற்றுவார்கள். பெண்க ளைக் கொடுமைப் படுத்துவர். கோர்ட்டு விவகாரங்கள் உண்டாகும்.



வடகிழக்குத் திசையில் நிலம் வடக்கு நோக்கி வளர்ந்திருக்குமாயின் அம்மனை யில் வீடு கட்டி வாழ்பவர்கள் மிக்க செல்வ மும், சுகபோகங்களும் கொண்டு விளங்கு வர். பெண்களுக்கு நல்ல மதிப்பு உண்டா கும்.



வடக்கிலும், கிழக்கிலும் தெருக்கள் இருந்து வடகிழக்குப் பகுதி வளர்ந்த மனை நலம் தரும்.



தென்கிழக்கு வளர்ந்து, கிழக்கிலும் தெற்கிலும் வீடுகள் உள்ள நிலம் கேடு விளைவிக்கும்.



தென்மேற்குத் திசை வளர்ந்துள்ள மனை கேடு விளைவிக்கும்.



வடமேற்குத் திசை வளர்ந்துள்ள மனை கேடு விளைவிக்கும்.



கிழக்குப் பகுதியும் வடகிழக்குப் பகுதியும் வளர்ந்த நிலம் வீடு கட்டப் பயன்படும்.



கிழக்கும், வடகிழக்கும் குறைந்த இடம் வீடு கட்டப் பயன்படாது.



கிழக்கும் தென்கிழக்கும் குறைந்த இடம் வீடு கட்டப் பயன்படும்.



தென்கிழக்குப் புகுதி குறைந்துள்ள மனை, வீடு கட்டச் சிறந்ததாகும்.



தென்மேற்குப் பகுதி குறைந்துள்ள மனை வீடு கட்டத் தகும்.



தென்மேற்கு வளர்ந்த நிலம், பயனற்றது.

(கிழக்கு மேற்காக உள்ள இடத்தில் நிலம் கிழக்கு நோக்கி அதிக அளவில் இருப்பதைக் காண்க.)



தென்மேற்குப் பகுதி குறைந்த நிலம், வீடு கட்டத் தகுந்தது.

(வடக்கு கிழக்காக உள்ள நிலப் பகுதி அளவில் மிகுந்திருப்பதைக் காண்க.)



தென்மேற்குப் பகுதி வளர்ந்த நிலம் பயனற்றது.



வடமேற்குப் பகுதி குறைந்துள்ள மனை வீடு கட்டத் தகுந்தது.



வடகிழக்குப் பகுதி குறைந்த மனை வீடு கட்டத் தகாததாகும்.



விசிறியைப் போன்ற மனையில் வீடு கட்டினால் செல்வம் குறையும்.



அகலப் பக்கங்களில் ஒன்று அளவில் குறுகியதாக இருப்பது கோமுகம் (பசுவின் முகம் போன்றது) எனப்படும். இத்தகைய மனையில் வீடு கட்டிக் கொண்டால் அகால மரணம், நிலம் போன்ற சொத்துக்கள் அழிந்து படுதல் உண்டாகும்.





அகலப் பக்கங்கள் அகன்று ஒரு பக்கம் இடையில் உள்ளடங்கி மற்றொரு பக்கம் முன் வந்திருப்பது 'தனுராகாரம்' (வில்லைப் போன்றது) எனப்படும். இத்தகைய மனை பகைவர்களால் தீங்கு விளைவிக்கும். திருடர்களால் அச்சம் விளைவிக்கும்.

அகலப் பக்கங்கள் அளவில் மிகக் குறைந்து நீளப் பக்கங்கள் மிக நீண்டிருத்தல் 'தண்டாகாரம்' (கழி போன்றது) எனப்படும். இத்தகைய மனை செல்வத்தை அழிக்கும்.



முக்கோண வடிவில் உள்ள மனையில் வீடு கட்டிக் கொண்டால் ஓயாது கோர்ட்டு விவகாரங்கள் ஏற்படும்.



வட்டவடிவமான (சக்கரம் போன்ற) மனையில் வீடு கட்டுவது செல்வத்தையும் சுகத்தையும் அமைதியையும் கெடுக்கும்.



ஒரு பக்கம் சமசதுரமாகவும் மற்றொரு பாதி அதைவிட அகலத்தில் நீண்டும் இருப்பது 'சகடம்' (வண்டியின் தோற்றம் கொண்டது) எனப்படும். இந்த மனை செல்வத்தை அழிக்கும்.



'ட' என்னும் எழுத்தைப் போன்ற தோற்றமுள்ள மனை 'விஷம கோணம்' எனப்படும். இத்தகைய மனையில் வீடு அமைந்தால் எப்போதும் ஏதேனும் வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் ஏற்படும்.





இப்படத்திலுள்ளது போன்ற மனை கூர்ம (ஆமை போன்ற) ஆகாரம் உள்ளது எனப்படும். இத்தகைய மனையில் வசிப்பவர்கள் அரசாங்கத்தால் தண்டனைக்குள்ளாக நேரலாம். எனவே, நன்கு சிந்தனை செய்து செல்வம் வளர்க்கக் கூடிய தோற்றத்தில் உள்ள மனையில் வீடு அமைத்துக் கொள்வது நலம்.

—

வீடு கட்டத் தகாத நிலங்கள்

கரம்பான அல்லது உவர்மண் கொண்ட நிலம், கிராமத்தின் நடுப்பகுதி, ஒரு மூலையாகக் குளம் இருக்கும் மனை, கழிவுநீர் தங்கும் இடம், மக்களால் இகழ்ந்து ஒதுக்கப்பட்ட இடம், கோவில் நிழல் படும் இடம், மயானம், ஊரிலுள்ள மாடுகள் மந்தைகளாகக் கூடும் இடம், மேற்கு தெற்கு மூலைகள் குறுகியிருக்கும் இடம், தேன், நெய், தயிர், எண்ணெய், இரத்தம், மீன், பிணம், பறவைகள் இவற்றின் மணம் கொண்டுள்ள மண் உள்ள இடம் வீடு கட்டத்தகாதவை.

பிளவுபட்ட நிலத்தில் வீடு கட்டினால் மரணம் விளைவிக்கும், மனையில் எலும்புகள் இருந்தால் மனத்திற்கு அதிக வருத்தமும் புற்றிருந்தால் செல்வநாசமும், மிக்க உயரமாக இருந்தால் ஆயுள், செல்வம் குறைவதும், குழியாக இருந்தால் மரணமும், உவர் நிலமானால் தனநாசமும், மேடும் பள்ளமுமாக இருந்தால் பகைவர் மிகுதலும் தோற்றுவிக்கும். ஆற்றின் வெள்ளத்தால் அரிக்கப்பட்ட நிலத்தில் வீடு கட்டினால் மூர்க்கரும், மக்கட் பேறில்லாதவர்களுமான குழந்தைகள் பிறப்பர். பெரும்பாறைகள் உள்ள நிலமாயின், மக்கள் ஏழ்மையில் வாடுவர். பாம்புப் புற்றுகள் அல்லது பாம்புகள் வசிக்கும் பொந்துகள் உள்ள நிலத்தில் வீடு கட்டினால் பொய் சொல்லி பிறரை வஞ்சிக்கும் மக்கள் தோன்றுவர். பல துளைகளைக் கொண்ட நிலமாயின் பசுக்களும், குழந்தைகளும் கேடுறுவர். கோணல் மானலான நிலத்தில் வீடு கட்டி வசித்தால் கல்வி அறிவில்லாத குழந்தைகள் தோன்றுவர். யாகசாலை இருக்கும் மனை அச்சத்தையும், புற்றுகள் இருக்கும் நிலம் ஆபத்தையும், சிவலிங்கம் உள்ள நிலம் புத்திர நாசத்தையும் விளைவிக்கும் என்பது 'விச்வகர்ம பிரகாசிகை' என்னும் நூலின் கருத்தாகும். நான்கு பக்கங்களிலும் தெருவைக் கொண்ட மனை புகழைக் கெடுக்கும். தைவத்திற்கு உரிய மனை மனக்கலக்கத்தைத் தோற்றுவிக்கும்.

வீட்டு மனையும், மேடான பகுதியும்

வீடு கட்ட நினைத்த நிலத்தின் கிழக்குப் பகுதி மேடானால் புத்திர நாசத்தையும், தென்கிழக்கு மேடானால் தன லாபமும், தெற்கு மேடானால் உடல் நலமும், தென்மேற்கு மேடானால் செல்வ வளர்ச்சியும், மேற்குப் பகுதி மேடானால் புத்திர லாபமும், வடமேற்கு மேடானால் செல்வமும், வடக்கு மேடா

னால் தரித்திரமும், வடகிழக்கு மேடானால் மனக்கலக்கமும் தோன்றும். மனையின் நடுப்பகுதி மேடானால் செல்வம் வளரும்.

வீட்டு மனையும், பள்ளமான பகுதியும்

கிழக்குப் பகுதி பள்ளமாக இருப்பது சிறப்பானது. ஆயுளும், செல்வமும், உடல் வலிமையும் மிகும். தென்கிழக்குப் பகுதி பள்ளமானால் நெருப்பால் தீங்கு விளையும். பகைவரால் துன்பமும் பாபச் செயல்களில் ஈடுபாடும் உண்டாகும். தெற்குப் பகுதி பள்ளமானால் செல்வம் அழியும்; நோய்கள் தோன்றும். இல்லத் தலைவனுக்கு மரணமும் நேரும். அத்தகைய இல்லத்தில் ஆண்கள் வளர்ச்சி பெறார். தென்மேற்குப் பகுதி பள்ளமாக இருந்த' ல் செல்வம் குறையும்; நோய்கள் மிகும்; இல்லத் தலைவனுகு மரணமும் நேரலாம். மேற்குப் பகுதி பள்ளமாக இருந்தால் செல்வம் குறையும். துக்கம் மிகும். வம்சம் விளங்காமல் போகும். வடமேற்குப் பகுதி பள்ளமாக இருந்தால் பகைவர் மிகுந்திருப்பர். துறவு மனப்பான்மை தோன்றும். குலமும் க்ஷீணமாகும். பெண்களுக்கு நோயால் துன்பம் நேரும். அச்சம் மிகும். தலைவன் அஜீரண நோயால் துன்புறுவான். வடக்குப் பகுதி பள்ளமாக இருந்தால் மிக்க மகிழ்ச்சி, இலாபம், மிகக் கௌரவம், போகம் முதலியன உண்டாகும். மக்கள் நலம் மிகும். வெகு காலம் பிள்ளை, பேரன்களைப் பெற்றுத் தலைவன் மகிழ்ந்திருப்பான். மனையின் வடகிழக்குப் பகுதி பள்ளமாக இருந்தால் சுகம், பெண்கள் சிறப்புறுதல், உண்மையான செயல்களில் ஆர்வம், அறவழியில் ஊக்கம் மிகுதல் போன்ற நற்பலன்கள் உண்டாகும். இத்தகைய மனை மிகவும் சிறப்புடையது. மனையின் நடுப்பகுதி பள்ளமாக இருக்கக் கூடாது.

பூமி வீதிகளும், அதன் பலன்களும்

மனையின் மேற்குப் பகுதி உயர்ந்து கிழக்குப் பகுதி தாழ்ந்திருந்தால் அது 'கோவீதி' எனப்படும். இந்த மனை கால்நடைச் செல்வத்தை மிகச் செய்யும்.

கிழக்குப் பகுதி உயர்ந்து மேற்குப் பகுதி தாழ்ந்து இருந்தால் அது 'ஜல வீதி' எனப்படும். இம்மனை ஏழ்மையை உண்டாக்கும்.

வடக்குப் பகுதி உயர்ந்து தெற்குப் பகுதி தாழ்ந்திருந்தால் 'யம வீதி' எனப்படும். இ'பகுதியில் உள்ள வீடு தலைவனைக் கொல்லும்.

தெற்குப் பகுதி உயர்ந்து வடக்குப் பகுதி தாழ்ந்திருந்தால் 'கஜ வீதி' எனப்படும். இத்தகைய மனை செல்வமும் அறநெறியும் மிகச் செய்யும்.

வடகிழக்குப் பகுதி உயர்ந்து தென்மேற்குப் பகுதி தாழ்ந்திருந்தால் அம்மனை 'பூத வீதி' எனப்படும். இம்மனை யக்கர், அரக்கர் முதலிய துஷ்ட கிரகங்களால் துன்பம் விளைவிக்கும்.

தென்கிழக்கு மேடாகி வடமேற்கு தாழ்ந்திருந்தால் அம்மனை 'நாக வீதி' எனப்படும். இம்மனை பாம்பு போன்ற விஷமுள்ள உயிரினங்களால் கெடுதலை விளைவிக்கும். வடமேற்குப் பகுதி உயர்ந்து தென்கிழக்குப் பகுதி தாழ்ந்திருந்தால் அது 'வைச்வானர (அக்னி) வீதி' எனப்படும். இத்தகைய மனையில் வீடு கட்டினால் நெருப்பால் அச்சம் விளையும்.

தென்மேற்குப் பகுதி உயர்ந்து வடகிழக்குப் பகுதி தாழ்ந்திருந்தால் அம்மனை 'தன வீதி' எனப்படும். அத்தகைய மனையில் வீடு அமைத்துக் கொண்டால் செல்வங்கள் அனைத்தும் பெற்று நீடூழி வாழலாம்.

வாஸ்து வேற்றுமைகளும் பலனும்

கிழக்கும் தென்கிழக்கும் மேடாகி, மேற்கும் வடமேற்கும் தாழ்ந்திருந்தால் 'பிதாமஹ வாஸ்து' எனப்படும். இந்த மனை பல கெடுதல்களை விளைவிக்கும். தென்கிழக்கும் தெற்கும் மேடாகி வடமேற்கு வடக்குப் பகுதிகள் தாழ்ந்திருந்தால் 'சுபத வாஸ்து' எனப்படும். இந்த மனை சிறப்பான நற்பலன்களைத் தரும். வடக்கும், வடகிழக்கும் தாழ்ந்து, தென்மேற்கும் தெற்கும் மேடாக இருக்கும் நிலம் 'தீர்காயுர் வாஸ்து' எனப்படும். இந்த மனை நீண்ட ஆயுளும், வமிச வளர்ச்சியும் தரும். வடகிழக்கு - வடக்குப் பகுதிகள் தாழ்ந்து, தென்மேற்கு - மேற்குப் பகுதிகள் உயர்ந்திருந்தால் அந்த மனை 'புண்யக வாஸ்து' எனப்படும். இம்மனை நற்பலன்களைச் சிறப்பாகத் தரும்.

கிழக்கு, தென்கிழக்குப் பகுதிகள் தாழ்ந்து, மேற்கு தென் மேற்குப் பகுதிகள் மேடாக இருந்தால் இம்மனை 'அபத வாஸ்து' எனப்படும். இந்த மனை பகைமையையும், கலகத்தையும் மிகுதியாக்கும்.

தெற்கும்-தென்கிழக்கும் தாழ்ந்து, வடக்கும் - வடமேற்கும் மேடாக இருக்கும் மனை 'பூமி ரோக கிருத வாஸ்து' எனப்படும். இத்தகைய மனையில் வீடு அமைத்தால் நோய்கள் மிகும்.

தென்மேற்கு - தெற்குப் பகுதிகள் தாழ்ந்து வடக்கு - வடகிழக்குப் பகுதிகள் மேடாகி இருந்தால் 'அர்கள வாஸ்து' எனப்படும். இம்மனையில் வீடு கட்டி வாழ்ந்தால் பாவச் செயல்கள் மிகும். சிறைவாசமும் நேரலாம்.

வடகிழக்கு-கிழக்குப் பகுதிகள் மேடாகி தென்மேற்கு - மேற்குப் பகுதிகள் பள்ளமானால் அம்மனை 'மயான வாஸ்து' எனப்படும். இத்தகைய மனையில் வீடு கட்டினால் வமிசம் அழியும்.

தென்கிழக்கு தாழ்ந்து தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகள் மேடாக இருந்தால் 'சியேநக வாஸ்து' எனப்படும். இம்மனை அழிவையும், மரணத்தையும் தோற்றுவிக்கும். வடகிழக்கு, தென்கிழக்கு, மேற்குப் பகுதிகள் மேடாகி, தென் மேற்குப் பகுதி தாழ்ந்திருந்தால் அந்த மனை 'சுவமுக வாஸ்து' எனப்படும். இம்மனை ஏழ்மையை மிகச் செய்யும். வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்குப் பகுதிகள் மேடாகி வடமேற்கும் கிழக்கும் தாழ்ந்திருந்தால் அம்மனை 'பிரும்மக்ன வாஸ்து' எனப்படும். இம்மனை மிக்க கெடுதல்களை விளைவிப்பதாகும்.

தென்கிழக்குப் பகுதி மேடாகி தென்மேற்கு, வடகிழக்கு, வடமேற்குப் பகுதிகள் தாழ்ந்திருந்தால் அந்த மனை 'ஸ்தாவர வாஸ்து' எனப்படும். இது வாத நோய்களையும், குலநாசத்தையும் விளைவிக்கும். தென்மேற்கு உயர்ந்து, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்குப் பகுதிகள் தாழ்ந்திருந்தால் அது 'ஸ்தண்டில வாஸ்து' எனப்படும். இத்தகைய மனை செல்வங்களனைத்தையும் கெடுக்கும்.

எனவே, மனையை நன்றாகக் கவனித்து மேடு பள்ளங்களைச் சமப்படுத்தி சாஸ்திர முறைப்படி ஏற்றத் தாழ்வுகள் அமைத்து அதன்பின் வீடு கட்டுவது நலம் தரும்.

திசைகளின் விளக்கம்

நாம் செய்யும் காரியங்கள் பயன்தருவதில் திசைகளும் முக்கியமான பங்கு பெறுகின்றன. அதாவது இன்ன இன்ன செயல்களுக்கு இந்த இந்த திக்கு சிறந்தது என்பதை முன்னோர் வகுத்துள்ளனர். அவர்கள் அவ்வாறு முறைப்படுத்தியதில் ஏதேனும் பொருள் உண்டா என்பது சிந்திக்கத் தக்கது.

முதலில் திசைகளை வகுக்கும் முறையைக் காண்போம்.

பூமி உருண்டை வடிவமுடையது. சதுரமான இடத்திற்கு திசைகளை அளவிடலாம். உருண்டை வடிவமுள்ள நிலத்தில் திசைகளை வரையறுத்துக் கூறுவது எப்படி? மேலும் நான்கு திசைகளில் ஒன்று மற்றொன்றுடன் சேரும் இடம் மூலைகள் என நான்கு மூலைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. சதுர வடிவ முள்ள நிலத்தில் மூலைகள் என்பது இரு கோடுகளும் சேரும் முனை என்று கொள்ளத்தகுமா? அதற்கு வேறு வரையறை உண்டா? என்பதும் சிந்திக்கத்தக்க விஷயமாகும்.

நிலத்தின் மேல் அடையாளக் கோடுகள் இல்லாவிடினும், நிலவியல் சாஸ்திர நூலியற்றிய விற்பன்னர்கள் சில அடையாளக் கோடுகளை ஏற்படுத்தி உள்ளனர். பூமியின் நடுப்பகுதி 'பூமத்திய ரேகை' என்றும் அதையடுத்துத் தெற்கிலும், வடக்கிலும் அளவு கோடுகளை வரையறுத்து அக்ஷரேகைகள் எனவும் குறிப்பிட்டுள்ள னர். அதைப்போல நீள அளவைகளாக 'தீர்க்க ரேகை'களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சூரியனைச் சுற்றி வரும்போது பூமி $23^{1}/_{2}^{0}$ அளவில் வடகோடு சாய்ந்திருப்பதால் தக்ஷிணாயன, உத்தராயணங்கள் என இருவ கைக் கால அளவுகள் ஏற்பட்டுள்ளன. சூரியன் தெற்கில் மகர ரேகை வரையிலும், வடக்கில் கடக ரேகை வரையிலும் சஞ்சாரம் செய்வதைக் கொண்டு இந்த அளவுகள் குறிக்கப்பட்டுள்ளன. எனவே மகர ரேகைக்கும், கடக ரேகைக்கும் இடையில் உள்ள பகுதி கிழக்கு எனவும், அவ்வாறே மேற்கில் சூரியன் அஸ்தமனம் அடையும் அளவு உள்ள பகுதி மேற்கு எனவும் கணக்கிடுவது பொருந்தும். இனி தெற்கிலும் வடக்கிலும் உள்ள பகுதியை எளிதில் நாம் வரையறுத்துக் கொள்ளலாம்.

இனி நான்கு மூலைகளைக் கணக்கிடுவது கவனிக்கத்தக்கது. கிழ்ப் பகுதியை நான்கு பிரிவுகளாக்கி மையத்தில் உள்ள பகுதி நேர் கிழக்காகவும், தெற்கு முடிவில் உள்ள பகுதி கிழக்குத் தெற்கு மூலையாகவும் கொள்க. அவ்வாறே வடக்குப் பக்கத்தைச் சார்ந்த கிழக்குப் பகுதியை வடகிழக்குப் பகுதியாகக் கொள்க. அவ்வாறே வடக்கிலும், தெற்கிலும் உள்ள பகுதிகளையும் நான்கு பிரிவுகளாகச் செய்து இடையில் உள்ள பகுதிகளிரண்டும் நேர் தெற்கு, நேர் வடக்கு எனக் கொள்க. இரு முனைகளிலும் உள்ள பகுதிகளைப் பக்கத்தில் உள்ள திசைகளுடன் கூட்டுக. வீட்டு மனையைக் கணக்கிடும்போது திசைகளையும், மூலைகளையும் இவ்வாறே வரைப்படுத்திக் கொள்க.



நீள் சதுரமாகவோ, வட்டமாகவோ இருக்கும். நிலப்பகுதியையும் மொத்த அளவைக் கண்டு இவ் வாறு பாகுபடுத்தித் திசைகளை வரையறுத்துக் கொள் ளுதல் தகும்.

திசைகள் தரும் பலன்கள்

நான்கு திசைகளுக்கும், நான்கு மூலைகளுக்கும் அதிபதிகள் உண்டு என நம் முன்னோர்கள் கறியுள்ளனர். அதன்படி கிழக்குக்கு இந்திரனும், தென்கிழக்குக்கு அக்னியும், தெற்குக்கு இயமனும், தென்மேற்குக்கு நிருதியும், மேற்குக்கு வருணனும், வடமேற் குக்கு வாயுவும், வடக்குக்குக் குபேரனும், வடகிழக்குக்கு ஈசா னன் (ஈசுவரனும்) அதிபதிகள் ஆவார்கள்.

விஞ்ஞான உலகில், நிலத்தைச் சுற்றி வந்தவர்கள் யாரும் இவ்வாறு திசைக்கு உரிய அதிபதிகளைக் கண்டதில்லையே? இது வெறும் புராணப் புரட்டு எனத் தள்ளி விடுபவர்களைக் காண்கி றோம். அவ்வாறு அந்தந்த திசைகளை ஆளும் நபர்கள் இல்லை என்பதை நாம் அறிவோம்.

சூரியனைச் சுற்றி பூமி சுழலும் போது அந்தந்தத் திசைகளிலி ருந்து வீசும் காற்று, வானிலையில் மாறுபாடு, தட்பவெப்ப நிலை முதலியவற்றைச் சார்ந்து பல நன்மைகளும், தீமைகளுமான

பலன்கள் ஏற்படுகின்றன. கடும் மழை, சூறாவளிக் காற்று, அதிக வெப்பம் முதலியவற்றிற்கும் இவ்வாறு நிலம் சுழல்வதே காரணம். எனவே, அந்தந்தத் திசையில் இருந்து நமக்கு உண்டாகும் பலன்களையும், அப்பலன்களைத் தரும் சக்தியையும் ஒட்டி அந்தந்தத் திசைகளில் உள்ள சக்திகள் நிர்ணயம் செய்யப்பட்டு அவற்றிற்கு ஏற்ப தோற்றமும் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இவ்விஷயத்தின் விளக்கம் வேறு நூல்களில் தரப்படும்.

இனி அந்தந்தத் திசைகளால் நமக்கு உண்டாகும் பலன்கள் விளக்கப்படுகின்றன.

கிழக்கு

ஒரு வண்டியில் உட்கார்ந்து பயணம் செய்யும் போது பெரும்பாலும் வண்டி செல்லும் திசை நோக்கி அமர்ந்திருக்க விரும்புகிறோம். ஏனெனில் அப்பொழுதுதான் வழியில் எதிர்ப டும் காட்சிகளை நன்கு கவனிக்க முடியும். நேர் எதிர்முகமாக இருப்போமாயின் பலவிஷயங்கள் நம் நோக்கிலிருந்து தவறிவி டும். மேலும் சில நேரங்களில் நம்மை யாரோ பின்பக்கமாகப் பிடித்து இழுத்துச் செல்வது போன்ற உணர்ச்சியும் உண்டாகும்.

ஆதவன் உதிக்கும் திசை கிழக்கு. பூமி மேற்கிலிருந்து கிழக்கு திசை நோக்கிச் சுழல்கிறது. ஆகவே, விடியற்காலையில் கிழக்கு வெளுக்கிறது. மெல்ல சூரிய கிரணங்கள் நிலத்தில் பரவத் துவங்குகின்றன. பெரும்பாலும் நாம் காலையில்தான் இறைவ னைக் குறித்து தியானம், ஜபம் முதலியன செய்யத் துவங்குகி றோம். பூசைகளும் காலை வேளையில்தான் நடைபெறத் துவங்கு கின்றன.

எனவே, சூரியனை நோக்கி அமர்ந்திருப்போமாயின் நம் சிந்தையும், மனமும் நன்கு தெளிவு பெறுகின்றன. ஆதவனின் கிரணங்கள் நம் முகத்திற்கு நேராக இருப்பதால் பிராண சக்தியை நாம் நன்கு உட்கொள்ள முடிகிறது. நிலத்தின் சுழற்சிக்கேற்ப நாம் அமர்ந்திருப்பதால் இயற்கைச் சக்திகளை நம்முன் மிகுதியா கச் சேமித்து வைத்துக் கொள்ளலாம். அவ்வேளையில் நமக்கு உயிர் சக்தியூட்டும் ஆதவனுக்கு எதிர்நோக்கி அமர்ந்திருந்தால் எளிதில் சக்தியை நாம் ஈர்த்துக் கொள்ள முடிகிறது. அதனால் தான் நாம் செய்யும் செயல்களைக் கிழக்கு முகமாக அமர்ந்து செய்தால் எளிதில் சிறந்த பலன்களைப் பெற முடியும் என நம் முன்னோர்கள் உணர்ந்தனர். நாம் செய்யும் பூஜை, ஜபம், தியானம் முதலியவைகள் அனைத்தும் இயற்கையின் பேராற்றலை நம்முள்

மிகுதியாகச் சேமித்து வைத்துக் கொண்டபோது நம் செயல்களைத் திறமையுடன் செய்ய முடியும் என்ற நோக்கங் கொண்டே நிகழ்த்தப்படுகின்றன. (இதைப் பற்றிய மேலும் சில விஞ்ஞான பூர்வமான விளக்கங்கள் எமது "யோக நெறி விளக்கம்" என்னும் நூலில் காணலாம்.)



கிழக்குத் திசையிலிருந்து நமக்குக் கிடைக்கும் ஆற்றலை இந்திரனாக உருவகப் படுத்தியுள்ளனர் நம் முன்னோர். நம் புலன் களை நன்கு இயங்கச் செய்யும் சக்தியே இந்திரன். இந்திரன் தேவர்களுக்கு அரசன். செல்வம் மிக்கவன். கல்வி, தொழில், மேன்மை, அமைதி, மனத்தில் ஊக்கம், சுக போகங்களில் விருப்பம் முதலியன இந்திர னைச் சார்ந்தவை.

கிழக்குத் திசையில் தெரு உள்ள இல் லம் கிழக்கு நோக்கிய இல்லம் எனப்படும். கிழக்குத் திசையில், கிழக்குத் திசை நோக் கிய தலைவாயில் கொண்ட இல்லத்தில் வசிப்பவர்கள் அத்திசையிலிருந்து பரவும் சக்தியை மிகுதியாகக் கொண்டிருப்பர்.

இத்தகைய இல்லத்தில் வசிப்பவர்கள் பெரும் செல்வம் ஈட்டும் திறமை கொண்டிருப்பர். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவர். செய்தொழிலில் சிறப்பாக அரசாங்க உத்யோகத்தில் சிறப்புப் பெறுவர். பிறர்க்கு உதவும் சிந்தனையாளர். உலகத்திற் கும் சமுதாயத்திற்கும் பயன்தரும் செயல்களில் ஈடுபட்டிருப்பர். அமைதி மிக்க வாழ்க்கையை விரும்புவர். சுவைபட உரையாடுவ திலும், பெண்களிடமும், நறுமணப் பொருள்களிலும் ஆசை கொண்டிருப்பர். பரந்த மனம் கொண்டிருந்தாலும், எளிதில் தம் மனத்தை வெளியிட மாட்டார்கள். வரும் பொருள் உணர்ந்து செயல்படும் திறமை கொண்டிருப்பர். இத்திசை நோக்கிய இல்லங்களில் வசிக்கும் ஆடவர்கள் வலிமை மிக்கவராவர். சிலர் பல விசனங்களில் (சூது, பந்தயம் முதலியவற்றில்) ஈடுபாடு கொண்டிருப்பர்.

(இங்கு ஒரு விஷயத்தை முக்கியமாகக் கூற விரும்புகிறோம். கிழ்த்திசை நோக்கி வசிப்பவர்கள் அனைவரும் இத்தகைய குணநலன்களைப் பெறுவார்கள் எனப் பொருள் கொள்ள வேண்டாம். இயற்கையாக அவரவர்கள் மனத்தில் இத்தகைய குணங்கள் அமைந்திருக்கும்போது அத்திசையை நோக்கிய இல்லம் மேலும் அவர்களின் ஊக்கத்தையும், திறமையையும் மிகுதிப்படுத்தும் என்பதே எம் கருத்து. விதை ஒன்று பயிர் ஒன்றாகாது. ஆனால், விதைக்குத் தக்க எரு முதலியவற்றைச் சேர்ப்பதால் பலன் மிகுதியாகும் என்பது கண்கூடு. அதைப்போலவே இங்கும் பொருள் கொள்க. பல்லாண்டுகள் சாஸ்திர உதவியுடன் எம் ஆராய்ச்சிப் பயனும் துணையாகக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மேலும் அன்பர்கள் தம் அனுபவங்களையும் ஆராய்ந்து தக்கபடி பயன் உணர்க. எம் அனுபவத்தில் பெரும்பான்மையாகக் கண்டறிந்த விஷயங்களை இங்கு குறிப்பிட்டுள்ளோம். ஏனைய திசைகளைப் பற்றிய விளக்கங்களையும் இவ்வாறே ஆராய்ந்து உணர்ந்து கொள்க). ஒவ்வொரு திசையிலிருந்தும் வீசும் காற்றுக்குத் தனித்தனித் தன்மைகள் உண்டு. கீழ்க்காற்று உவர்ப்பு, இனிப்புச் சுவைகள் கொண்டது. அழற்சியைத் தோற்றுவிக்கும். கப, பித்தங்களையும், உப்புசத்தையும், வாத நோய்களையும் தோற்றுவிக்கும். எனவே, இத்தகைய நோய்களுக்கு வயப்படக் கூடியவர்கள் இந்த இல்லத்தை விலக்க வேண்டும்.

தென் கிழக்கு

கிழக்கிலும், தெற்கிலும் தெருக்கள் உள்ள மனை தென் கிழக்கு திசையில் இருப்பதாகும். அதற்குத் தலைவாயில் கிழக்கு அல்லது தெற்குத் திசையில் இருக்கும். எத்திசையில் வாயில் இருந்தாலும் இரு திசைகளிலும் தெருக்களை உடையது. ஆகையால் அது தென்கிழக்குத் திசை கொண்ட இல்லம் எனப்படும். தென்கிழக்குத் திசைக்கு உரியவன் அக்னி. அக்னி தூய்மையானது. அதை மலினம் தீண்டாது. ஆனால் எளிதில் சீற்றம் பெறுதல், அண்டிய பொருளைச் சிதைத்தல் இவனுடைய குணமாகும். ஹோமம், யக்ஞம் முதலியவைகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் கலகம், குழப்பம் முதலியவைகளுக்கும் காரணமானது நெருப்பு. தொப்புள் பகுதி (நம் உடலில்) நெருப்பு (உஷ்ண சக்தி)க்கு இருப்பிடமாகும்.

இத்திசையை நோக்கிய தலைவாயில் கொண்ட இல்லத்தில் தென்கிழக்குக் காற்று, ஒலி, ஒளி முதலியன மிகுதியாகப் புகும்.

எனவே, இந்த இல்லத்தில் வசிப்பவர்களுக்குத் தைரியம், வலிமை, பிடிவாத குணம், விரைவில் உணர்ச்சிவயப்படுதல்,



தனிமையில் விருப்பம், என்பன இயற்கையாகவே தோன்றக்கூடிய குணங்கள் ஆகும். இந்த இல்லத்தில் வசிப்பவர்கள் கள்ளங்கபடமின்றிப் பழகுவர். ஆனால் விரைவில் உணர்ச்சி வயப்படுவர். விரும்பியவர்களுக்கு உயிரையும் கொடுப்பர். வேண்டாதவர்களை அடியோடு ஒழிக்கும் வரை ஓய்வு பெறமாட்டார். உடல் உழைப்புக்குப் பின்தங்கார். இத்தகைய இடத்தில் வசிப்பவர்கள் சிலர் ஏழ்மையும், கடின உழைப்பு உள்ளவர்களுமாகக் காணப்படுகின்றனர். கொடைவள்ளல்களாகச் சிலர் காணப்படுகின்றனர்.

சாஸ்திரப்படி அக்னி மூலையில் உள்ள இல்லம் சிறந்ததல்ல. இல்லத்தில் வசிக்கும் பெண்களுக்கு நலம் குறையும். வீடு பலர் கை மாறும். நிலையாக ஒருவரிடம் இருக்காது. பெண் சந்ததிக்கு வயப்பட்டுப் போகும். இந்த இல்லத்தில் வசிப்பவர்கள் இயற்கையாக உடல் வலிமை குறைந்துள்ளவர்கள் ஆயின் வயிறு, சிறுநீரகம் முதலியவற்றைச் சார்ந்த நோய்களுக்கு இலக்காக நேரும்.

தென்கிழக்குக் காற்று உஷ்ணம் மிகுந்தது. பிசுபிசுப்புள்ளது. உடலில் இயற்கையாகவே சூடு மிகுந்துள்ளவர்களுக்கு இந்த இல்லம் மேலும் சூட்டை வளர்த்து நோய்களைத் தோற்றுவிக்கக் கூடும்.

தெற்கு

வீட்டின் தெற்குப் பகுதியில் தெரு இருக்குமாயின் அது தெற்கு நோக்கிய இல்லம் எனப்படும். தெற்கு திசைக்கு உரிய தெய்வம் இயமன். பாரபட்சமின்றி நியாயம் பரிபாலிப்பவன். அறநெறி பிறழாதவன். சாஸ்திரப்படி தெற்கு வாயில் உள்ள இல்லம் சிறப்பானது. இந்த இல்லத்தில் தென்றல் மிகப் பரவும் தன்மை கொண்டிருப்பதால் உடல் நலம் மிகும். தென்றல் வாத-பித்த-கபங்களைத் தணிக்கும். எனவே, இந்த இல்லத்தில் வசிப்பவர்கள் உடல் நலம் பெற்றிருப்பர். உடல் நலம் வேறு காரணங்களால் மாறுபடினும் எளிதில் குணமாகும்.



தெற்கு தெரு

தெற்கு வாயில் கொண்ட இல்லத்தினர் கம்பீரமான தோற்றம், மனம் கொண்டிருப்பவர். அரசாங்க விவகாரங்களில் மிக்க ஈடுபாடு கொள்பவர். அடிக்கடி தம் கொள்கையை மாற்றிக் கொள்பவர். எப்படியாவது நினைத்த காரியத்தில் வெற்றி பெற வேண்டும் என்று நினைப்பவர். செல்வம் ஈட்டுவதில் திறமை கொண்டவர். தன்னலம் மிக்கவர். பிறருக்கு கீழ்ப்படிதலை விரும்பாதவர்களாக இருப்பர். ஆனால், இவ்வில்லத்தில் வசிப்பவர்களுக்குப் பொதுவாகப் பகைவர்கள் பலர் இருப்பர். முதுகுத் தண்டினைச் சார்ந்த நோய் கொண்டவர்களுக்கு இந்த இல்லம் அனுகூலமல்ல.

தென்மேற்கு

தெற்கிலும் மேற்கிலும் வீதிகளைக் கொண்ட இல்லம் தென்மேற்கு இல்லம் எனப்படும்.

தென்மேற்கு திசைக்கு உரியவன் நிருதி. இவன் அரக்கர் தலைவன். தாழ்ந்த மனப்போக்கு கொண்டவன். விரைவில் பலன் தருபவன். நன்மையோ தீமையோ இவன் தரும் பலன்கள் வலிமை மிக்கவையாக இருக்கும். செருக்கு, பிடிவாதம், சர்வாதிகார மனப்போக்குக் கொண்டவன்.



பொதுவாகத் தென் மேற்கு இல்லத்தில் வசிப்பவர்கள் தலைமை தாங்குவதில் எல்லையற்ற விருப்பம், தன்னிச்சையாக நடத்தல், கபடம், செயல் திறமை, கஷ்டப்பட்டு உழைக்கும் தன்மை, திருப்தியின்மை, முதலிய குணங்களைக் கொண்டிருப்பர். தென்மேற்குத் திசையில் இருந்து வீசும் காற்று மேக நோய். அழற்சி போன்றவற்றைத் தோற்றுவிக்கும். பொதுவாக நோய்களை மிகச் செய்யும். எனவே உடல் வலிமை குன்றியவர்கள் இந்த இல்லத்தில் வசிப்பதைத் தவிர்த்தல் நல்லது.

மேற்கு

மேற்குத் திசைக்கு உரியவன் வருணன். மழைக்கு உரிய தெய்வம் வருணன். பயிர் விளைவதற்கு முக்கிய காரணமானவன் ஆகையால், பயிர்த்தொழில் இவனைச் சார்ந்ததாகும்.



மேற்குத் திசையை நோக்கிய இல்லத்தில் வசிப்பவர்கள் பொதுவாகப் பயிர்த் தொழிலில் மிக்க ஆர்வம் கொண்டிருப்பர். அல்லது செடி கொடிகள் வளர்ப்பதில் மிக்க ஆர்வம் கொண்டிருப்பர். நற்செயல்களில் விரைந்து ஈடுபடுவர். நட்புக்கு உரியவர். ஆசிரியர், மதபோதகர் முதலியவர்களுக்கு மேற்கு நோக்கிய இல்லம் அனுகூலமானது. நீண்ட யோசனை, ஆராய்ச்சியில் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பர். திடமான மனம், தன்மானம் என்பன கொண்டிருப்பார்கள். மேற்கத்திய காற்று மிக்க வெப்பமுள்ளது. சூட்டைக் கிளப்பும். உஷ்ண சம்பந்தமான நோய்கள், உடல் இளைப்பு உள்ளவர்கள் இந்த இல்லத்தில் வசிப்பது நல்லதல்ல.

வடமேற்கு

வடமேற்கு திசைக்கு உரியவன் வாயு தேவன். வலிமை மிக்கவன். நன்மை தீமைகள் இரண்டையும் விளைவிப்பவன். அனைத்து உயிரினங்களுக்கும் உயிர் அளிப்பவன். இவனுடைய பெருமை பெண்களிடம் சிறப்பாகும். திருமண வாழ்க்கை, பெண்களின் முன்னேற்றம், அறிவியல் அறிவு போன்றவற்றில் இவன் பெருமையைக் காணலாம். கருவுறுதல், கருவை வளர்த்தல், எளிதில் கருவை வெளியேற்றல், கலவியல் மகிழ்ச்சி போன்றவை வாயுவின் பிரபாவத்தால் நடைபெறுபவை. எனவே, பெண்களிடம் வாயுவின் பிரபாவம் அதிகம் என்பதை உணர்க. உயிரினங்களின் உறுப்பில் சுவாசப்பை இவனுக்கு உரியது.

மேற்கிலும் வடக்கிலும் தெருக்களைக் கொண்ட இடம் வாயு மூலையைச் சார்ந்ததாகும். இத்தகைய இடத்தில் வசிப்பவர்கள் வலிமை, மன உறுதி படைத்தவர்கள். சீர்திருத்தவாதிகள், பிடிவாதத்துடன் எதிர்ப்புகளைச் சமாளித்து முன்னேறுபவர், சாஸ்திர அறிவு பெற்றவர்கள், உண்மை, நேர்மைகளைப் பாதுகாக்கப் பாடுபடுபவர், ஆன்ம சக்தி உள்ளவர்கள். இவர்களுடைய வாழ்க்கையில் எதிர்பாராத் திருப்பங்கள் பல நேரும். எதிர்ப்புகள் அதிகம். கோர்ட்டு விவகாரங்களில் ஈடுபடுவர். நியாயவாதிகள், வக்கீல்கள் பலர் இத்தகைய இல்லங்களில் வசிக்கின்றனர். அல்லது இத்தகைய இல்லத்தில் வசிப்பது அவர்களுடைய தொழிலுக்கு மேலும் சிறப்பு தரும் என அறிக.



வடமேற்குத் திசையிலிருந்து வீசும் காற்று கார்ப்பு, கசப்புச் சுவைகள் கொண்டது. (காற்றுக்குச் சுவை என்பது அச்சுவைகளைக் கொண்ட தாவரங்களை வளர்க்கும் காற்று எனப் பொருள் கொள்க) உடலில் உள்ள நீரைச் சுண்டச் செய்யும். எரிச்சலையும், அழற்சியையும் தோற்றுவிக்கும். கப-பித்தங்களைத் தணிக்கும். எனவே, வாதம் மிகுந்த உடல் கொண்டவர்களுக்கு, வறண்டு நீர் குறைந்து உலர்ந்த மெலிந்த உடல் கொண்டவர்களுக்கு இத்தகைய இல்லம் உடல்நலம் தராது.

வடக்கு



வடக்குத் திசையில் மட்டும் தெரு உள்ள இடம் வடக்குத் திசையைச் சார்ந்தது. வட திசைக்கு உரியவன் குபேரன். செல்வம் மிக்கவன். வாணிபத் தில் சிறந்தவன். உடல் வலிமை குறைந்தவன். மென்மையான மனம் கொண்டவன். ஆடல் பாடல்களிலும், கலைகளிலும் நாட்டங்கொண்ட தெய்வ இனத் தின் தலைவன். ஆனால் தோல் நோய் (வெண்குட்டம்) உள்ளவன்.

வடக்கு திசை நோக்கிய தலைவாயில் கொண்ட இல்லத்தில் வசிப்பவன் பெரும்பாலும் நியாய வழியைப் பின்பற்றுவர். கௌரவத்தை முக்கியமாகக் கருதுவர். பழிபாவங்களுக்கு அஞ்சு வர். பொறுமை, நிதானம் கொண்டிருப்பர். தைரியம் குறைவு. அரசியலிலோ அல்லது சமுதாயச் சீர்திருத்தங்களிலோ பங்கு கொள்ளத் தயங்குவர். ஆனால், வடக்குத் திசை இல்லத்தில் வசிப்பவர்களில் சிலர் பொருளே தம் குறிக்கோளாகக் கொண்டு காணப்படுகின்றனர். அதனால் பணம் சேர்க்கத் தவறான வழிக ளைப் பின்பற்றத் தயங்குவதில்லை. பெரும்பான்மையாக வடக் குத் திசை இல்லங்களில் வசிப்பவரில்லங்களில் பெண்களின் கை ஓங்கியிருப்பதைக் காணலாம். உடல் நலம் குறைவுபடுதலால் அடிக்கடி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டியவர்கள் ஆகின்ற னர்.

வடக்குத் திசையில் இருந்து வீசும் காற்று இனிப்புச் சுவையும், பிசுபிசுப்புத் தன்மையும் கொண்டிருக்கும். குளுமையா னது. தாதுக்களுக்கு வலிமை தரும். ஆனால் சீதளமும் பித்தமும் மிகும்படிச் செய்யும். எனவே, இயற்கையாகக் கபம் மிகுந்த உடல் கொண்டவர்களுக்கு இவ்வில்லத்தில் வசிப்பது உடலில் கோளாறுகளைத் தோற்றுவிக்கும்.

வடகிழக்கு



இதுதான் ஈசானிய திசை எனப் படும். இத்திசைக்கு ஈசானன் அதி பதி. எனவே, இத்திசை சிறப்பா னது. கிழக்கிலும், வடக்கிலும் தெருக்களைக் கொண்ட இடம் ஈசா னிய திசையில் உள்ள இல்லம் எனப்படும்.

இந்த இல்லத்தில் வசிப்பவர் கள் பொதுவாகக் கல்வி கேள்வி களில் சிறந்து விளங்குவர். தவம், புகழ், தெய்வீக அருள், கலைகளில் ஆர்வம், ஆராய்ச்சியில் ஊக்கம், சிறப்பான வாழ்க்கை, தனிச்சிறப்புக் கொண்ட வாழ்க்கை ஆகியவை கொண்டிருப்பர். ஆனால், விரைவில் சினம் கொள்பவராகவும், சிலர் உலோப குணம் கொண்டவர்களாகவும் காணப்படுகின்ற னர். எளிதில் பிறரை நம்ப மாட்டார்கள். பிறர் சொல்லைக் கேளார். தம் இச்சைப்படியே நடந்து கொள்வர். செல்வமும், சுகபோகங்களும் இவர்களைத் தாமே வந்து அடையும். பொதுவா கத் தெய்வ அருள் பெறுவதில் விருப்பம் கொண்டிருப்பார்கள். ஆனால் தான தருமம் முதலிய செயல்களில் விருப்பம் இருக்காது.

நிலத்தின் தன்மை, வானிலை, காற்றின் பரிமாணம், தட்ப வெப்ப நிலைகளில் மாறுபாடு முதலியவற்றால் பயிர்களின் தன்மைகளில் ஏற்றத்தாழ்வு காணப்படுவது போல, இவை அனைத்தும் மக்களின் இயற்கையான குணநலன்களில் மாறுபாடு களைத் தோற்றுவிக்கவும் செய்கின்றன. எனவே, சாஸ்திர உதவியு டன் பல்லாண்டு பெற்ற அனுபவத்துடன் பெரும்பாலும் கண்ட குணநலன்களை இங்கு விவரித்துள்ளோம். இவை அனைத்தை யும் அப்படியே கொள்ளாமல், அவரவர்களின் முன் செய்வினை, பண்பாடு, இயற்கை முதலியவற்றிற்கு ஏற்ப இவற்றை ஆராய்ந்து கண்டு கொள்க. வடகிழக்குக் காற்று இனிப்புச் சுவையுள்ளது. மனத்திற்கு மகிழ்ச்சி தரும். உடலில் தாதுக்களைச் சமநிலைப்ப டுத்தும். சடராக்னியை வளர்க்கும். சீதபித்தத்தையும், கபவாதங்க ளையும் போக்கும். ஆனால், கண் நோய்களையும் இரத்த பித்தத்தையும் தோற்றுவிக்கும்.

இனி ஜாதகப்படி அவரவர்கள் பிறந்தபோது ஆத்மகாரகனா கிய சூரியனின் வலிமையைக் கொண்டு அவரவர்களுடைய

உடல்நிலை, மனநிலை முதலியவற்றை ஒட்டி நிவாசம் செய்யத் தக்க இடங்கள் கூறப்படுகின்றன.

பிறந்த மாதமும், தக்க நிவாசமும்

எந்த வருஷத்தில் ஆனாலும், மார்ச்சு 21 முதல் ஏப்ரல் 19ம் தேதி வரை உள்ள நாட்களில் பிறந்தவர்கள் திடமான உடல் கொண்டிருப்பர். விரைவாக நோய் வராது. வந்தால் எளிதில் குணமாகாது. தலை, முகம், காது, வயிறு, சிறுநீரகம் போன்ற உறுப்புகளில் நோய் தோன்றலாம். தலை, முகுது, முழங்கால் ஆகிய உறுப்புகளில் காயம் படலாம். இவர்களுக்கு நல்ல காற்று, நீர், அமைதியான சூழ்நிலை, பெரிய நகரங்கள் சுகம் தரும். ஒரு மூலையில் உள்ள வீடு இவர்களுக்கு ஏற்றது. இல்லத்திலும் ஒரு மூலையில் உள்ள அமைதியான அறையைத் தனக்கெனக் கொண்டு அங்கு இருத்தல் உடல்நலத்தை வளர்க்கும்.

எந்த வருஷத்திலும் ஏப்ரல் 20 முதல் மே 20 வரை உள்ள நாட்களுக்கு இடையில் எந்தத் தேதியில் பிறந்தவர்களானாலும், ஆகார நியமங்களைக் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும். இவர்களில் பெரும்பான்மையோர் மென்மையான உள்ளம் கொண்டிருப்பர். எனவே, தீர்க்க சிந்தனை, உணர்ச்சி வயப்படுதல் ஆகியவற்றை விலக்க வேண்டும். அமைதியான நிழல் மிகுந்த இடம், நகரத்தைச் சார்ந்துள்ள மக்கள் நடமாட்டம் குறைந்துள்ள இடம். மலர்ச் செடிகள், கொடிகள் நிறைந்துள்ள இல்லம் இவர்களுக்கு உடல்நலம் தரும்.

எந்த வருஷத்திலும் மே 21 முதல் ஜூன் 20ம் தேதிக்கு, இடையே எந்த நாளில் பிறந்தவர்கள் ஆயினும், மனக்கவலை, மிக்க ஆலோசனை ஆகியவைகளால் கலங்குவர். பெரும்பாலும் நரம்பு சம்பந்தமான அல்லது கண், குடல், சுவாச கோசம் ஆகிய உறுப்புகளைச் சார்ந்த நோய்களுக்கு இலக்காகக்கூடியவர்கள். சுவாசப்பயிற்சி, நல்ல தூக்கம், மன ஆரோக்கியம் இவர்களுக்கு இன்றியமையாதது. மலைப்பாங்கான அல்லது உயரமான இடங்கள், நிழல் தரும் சூழ்நிலை, ஒலி குறைந்த வீடு இவர்களுக்கு ஏற்றது. அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொள்வது இவர்களுக்கு நலம் பயக்கும்.

எந்த ஆண்டிலும் ஜூன் 21 முதல் ஜூலை 22 வரை உள்ள இடைக்காலத்தில் எந்தத் தேதியில் பிறந்தவர்கள் ஆயினும், சிரண சக்தி குறைந்தவர்களாக இருப்பர். மலச்சிக்கல், வாத நோய்கள், நரம்பு சம்பந்தமுள்ள நோய்கள், இரத்தம் கட்டிக் கொள்ளுதல் போன்ற துன்பங்களுக்கு எளிதில் உள்ளாகக் கூடியவர்கள் ஆவர்.

நீர் நிலைகளுக்கு அருகில் குளிர்ந்த சூழ்நிலை உள்ள இடம் இவர்களுக்கு ஏற்றது. நகரங்களில் மூலையில் உள்ள இடம், முக்கிய வியாபார கேந்திரங்கள் இவர்களுக்கு ஏற்றது. தம்மைச் சுற்றி மக்கள் கூட்டம் மிகுந்திருப்பதை விரும்புவார்கள். எனவே, மக்கள் மிகுந்துள்ள இடத்தில் வசிப்பது இவர்களுக்கு மகிழ்ச்சி தரும்.

எந்த ஆண்டிலும் ஜூலை 23 முதல் ஆகஸ்டு 22 வரை உள்ள நாட்களுக்கு இடையில் பிறந்தவர்கள் மானசிக நோய்க ளுக்கு இலக்காகக் கூடியவர்களாவார்கள். இரத்த ஓட்டம் சீராக இல்லாமை, இதய நோய், காய்ச்சல், கீழே நழுவி விழுதல், முதுகு முழங்கால் முதலிய உறுப்புகளில் காயம் போன்றவைகள் நேரக்கூடும். எனவே, நன்றாகத் தூங்குதல், மூச்சுப் பயிற்சி, போதிய ஓய்வு, விநோதக் காட்சிகளில் ஈடுபடுதல் என்பவை இவர்களுக்கு நன்மை தரும்.

காடு, மலை, ஆறு, கால்வாய் ஆகியவற்றிற்கு அருகில் நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில், விசாலமான அறைகள் கொண்ட இல்லம் நலம் தரும். பகலில் குளுமையும், இரவில் வெப்பமும் தரக்கூடிய சூழ்நிலை உடல்நலத்தை வளர்க்கும்.

எந்த ஆண்டிலும் ஆகஸ்டு 23ம் தேதி முதல் செப்டம்பர் 22ம் தேதி வரை உள்ள நாட்களுக்கு இடையில் எந்தத் தேதியில் பிறந்தவர்களாயினும், இரத்த ஓட்டம் சீராக இல்லாமை, அசிரணம் போன்ற வயிற்று நோய்கள், விரைவில் காயம் படுதல் போன்ற துன்பங்களுக்கு இலக்காகக் கூடியவர்களாவர். எனவே, அமைதி யான சூழ்நிலை, ஆரோக்கிய முறைகளை அறிந்து கவனத்துடன் பின்பற்றுதல், உணவுப் பொருள்களின் குணதோஷங்களை அறிந்து தமக்குத் தக்க பொருள்களைப் பயன்படுத்தல், உடலைச் செழிப்புறச் செய்யும் முறைகளைப் பின்பற்றுதல் ஆகியவை இவர்களுக்கு நன்மை தரும்.

நகரங்களுக்குத் தொலைவில் புறநகர்ப் பகுதிகள், சிறு கிராமங்கள், மலைப்பாங்கான இடம், நீர் நிலைகளுக்கு அருகில் வசித்தல், பழமையான இல்லம், நிழல்தரும் மரங்கள் நிறைந்த இடம் இவர்களுக்கு ஏற்றது.

எந்த ஆண்டிலும் செப்டம்பர் 23 முதல் அக்டோபர் 22ம் தேதி வரை உள்ள நாட்களுக்கு இ யில் எந்த நாளில் பிறந்தவர்களானாலும், வலிமையற்ற சி ஈ உறுப்புகளைக் கொண்டிருப்பர். தலைவலி, காய்ச் ல், முதுகு வலி, லிவர் ஸ்பி

ளீன் ஆகியவற்றைச் சார்ந்த நோய்கள் தோல் நோய் போன்றவை இவர்களைத் துன்புறுத்தக்கூடும். தேவையான அளவு வேலை யுள்ள, சுறுசுறுப்புத் தன்மை கொண்ட சூழ்நிலை இவர்களுக்கு ஏற்றது. வீட்டிற்கு அருகில் ஆஸ்பத்திரி, போலீஸ் ஸ்டேஷன், மாமிசக் கடை போன்றவை இருக்கக் கூடாது. அமைதி, அழகு நிறைந்த சூழ்நிலையில் வாசம் புரிவது இவர்களுக்கு நன்மை தரும்.

எந்த ஆண்டிலும் அக்டோபர் 23 முதல் நவம்பர் 21 வரை உள்ள நாட்களுக்கு இடையே எந்தத் தேதியில் பிறந்தவர்களானா லும், நெஞ்சு, தொண்டை, சிறுநீரகம், கணுக்கால் ஆகிய உறுப்புகள் ஏதாவது ஒன்று வலிமையற்றதாகக் கொண்டிருப்பர். சிலர் மனநோய்களுக்கும் இலக்காகின்றனர். இரத்தப் போக்கு, பால் உறுப்புகளைச் சார்ந்த நோய்கள் சிலருக்கு உண்டாகலாம். நிறைய நீர், ஓய்வு, தூக்கம், நல்ல காற்று உள்ள சூழ்நிலை இவர்களுக்கு ஏற்றது. பருவங்களுக்கு (காலநிலைக்கு) ஏற்ற உணவு முறைகளை உணர்ந்து பயன்படுத்தல் இவர்களுக்கு முக்கியமானது. ஏரி, வாய்க்கால், சேறாக உள்ள நிலம் ஆகியவற் றிற்கு அருகில் வசிப்பது நல்லது. கிராமங்களில், மலைச்சரிவுக ளில் சற்று பள்ளமான இடத்தில் குளுமை நிறைந்த சூழ்நிலையில் வசிப்பது இவர்களுக்கு நன்மை பயக்கும்.

எந்த ஆண்டிலும் நவம்பர் 22 முதல் டிசம்பர் 21 வரை உள்ள நாட்களுக்கு இடையில் பிறந்தவர்கள் சுவாசப்பை, சீரண உறுப்புகள், இவற்றைச் சார்ந்த அல்லது இரத்த சம்பந்தமுள்ள நோய்களுக்கு எளிதில் இலக்காகக் கூடியவர்களாவார்கள். சிலர் நரம்பு சம்பந்தமான நோய்களுக்கு இலக்காகியுள்ளனர். விபத்து, உடலில் காயம் படுதல் போன்றவை நேரலாம். திறந்த வெளியில் உலாவுதல், மூச்சுப் பயிற்சி இவர்களுக்கு நலம் தரும். வறண்ட நிலம், மலைப்பாங்கான இடம், பெரிய வீடு, அகன்ற அறைகள், தாராளமாகக் காற்று வரக்கூடிய இல்லங்கள், கிழக்கு அல்லது தெற்கு முகமாகிய மேடான இடத்தில் வசிப்பது நலம் தரும்.

எந்த ஆண்டிலும், டிசம்பர் 22 முதல் ஜனவரி 19ம் தேதி வரை உள்ள நாட்களுக்கு இடையில் பிறந்தவர்களை வாதநோய் கள், குளுமையால் ஜலதோஷம் போன்றவற்றால் நேரும் நோய் கள், சீரண உறுப்புக்களைச் சார்ந்த நோய்கள் ஆகியவற்றில் ஒன்று தாக்கலாம். உடலின் கிழ்ப்பகுதியில் உள்ள உறுப்புகளில் நோய் தோன்றலாம்.

ஆசை, வேதாந்தம், மகிழ்ச்சி தரும் நண்பர்களின் கூட்டம், உஷ்ணமான வானிலை, ஓய்வு இவர்களுக்கு நலம் தரும்.

நகரங்களுக்குத் தொலைவில், புறநகர்ப் பகுதிகளில் மக்கள் நெருக்கடி இல்லாத ஏகாந்தமான இடம் இவர்களுக்கு நலம் தரும். சற்று இருட்டான அறையில் இருத்தல் நலம் தரும்.

எந்த ஆண்டிலும் ஜனவரி 20 முதல் பிப்ரவரி 18 வரை உள்ள நாட்களுக்கு இடையில் பிறந்தவர்கள் இதயம், சிறுநீரகம் தொண்டை ஆகிய உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். உடல் வலிமையை விட மனவலிமை மிகுதியாகக் கொண்டிருப்பார்கள். நல்ல உடல் பயிற்சி, தூயகாற்று, அழகிய காட்சிகள், அமைதியான சூழ்நிலை ஆகியவை இவர்களது உடல்நலத்தை வளர்க்கும்.

நகரத்திற்கு வெளியே உயர்வான இடத்தில், பகலில் பல பேர்களுடனும், இரவில் ஏகாந்தமாகவும் இருக்கக்கூடிய இடம் ஏற்றது.

பருவங்கள், தாதுக்கள் முதலியவற்றிற்கு ஏற்றவையும், உடல் நலத்தை வளர்ப்பவையும் அவரவர்களது உடலின் தன்மைக்கு ஏற்றவையும் ஆகிய உணவுப் பொருள்களைப் பற்றிய விளக்கங்களை எம் ''நூறாண்டு வாழ வழிகள்'' என்னும் நூலில் காண்க.

நடு அறை, வியாபார நிறுவனங்கள் நிறைந்துள்ள இடம் இவர்களுக்கு ஏற்றது.

எந்த ஆண்டிலும் பிப்ரவரி 19 முதல் மார்ச்சு 20 வரை உள்ள நாட்களுக்கு இடையில் பிறந்தவர்கள் சிந்தனை மிக்கவர். எதற்கும் கவலை கொள்வார்கள். அது இவர்களது சீரண உறுப்பைக் கெடுக்கும். வீண் வாதங்களைத் தவிர்ப்பது, தன்னைப் பற்றியே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருப்பது என்பவை இவர்களது உடல்நலனைக் கெடுக்கும்.

சுத்தமான இயற்கை அழகு கொண்ட இடங்கள், கடற்கரை அல்லது பெரிய நீர்நிலைகளுக்கு அருகில் உள்ள இடம், ஏகாந்தமான அமைதி தரும் இடம், மறைவான இடம் இவர்களுக்கு மிக்க நன்மை தரும்.

மனைகளின் சுற்றுப்புறங்கள்

இதுவரை எம் அனுபவத்தால் சாஸ்திர விதிகளை ஒட்டி அறிந்து கொண்ட விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. இனி சாஸ்திரங்

களில் வீட்டுமனைக்கு நாற்புறங்களிலும் உள்ள நிலப்பகுதிகள் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளனவோ, அப்பொருள்கள் விளக்கப்படுகின்றன.

கிழக்கு

வீட்டுமனை, வீட்டின் மனையில் வீடு கட்டியது போக மீதி இருக்கும் வெற்றிடம், அறை, இல்லத்தின் மையம், சார்பு முதலியவற்றில் கிழக்குப் பகுதி பள்ளமாக இருந்தால் அதாவது ஏனைய பகுதிகளை விட தாழ்ந்து இருந்தால் செல்வம் வளரும். கௌரவம் மிகும்.

அவ்வாறு அல்லாது கிழக்குப்பகுதி மேடாக இருக்குமானால் மக்களுக்குக் கேடு, வீட்டுத் தலைவனுக்கு ஆயுள் குறைவு, செல்வம் குறைதல் போன்ற தீமைகள் உண்டாகும். பெண்களின் கை ஓங்கும்.

வீட்டின் சுற்றுப்புறத்தில் விடப்பட்டுள்ள வெற்றிடத்தை விட கிழக்குப் பகுதியில் வெற்றிடம் அளவில் மிகுந்திருக்க வேண்டும்.

அவ்வாறு அல்லாது இடத்தின் அளவைக் குறைத்துபந்தல், சார்பு போன்றவை அமைத்தால் செல்வம் குறையும். மக்களுக்குக் கேடு, வீட்டுத் தலைவனின் மூத்தமகன் குடும்பத்தை விட்டு வேறுபடுதல், அல்லது தன் மனைவியை துறந்து விடுதல் போன்ற தீய குணங்கள் உள்ளவன் ஆவான்.

கிழக்குப் பகுதியில் (ஏனைய திசைகளில் உள்ளதை விட) வெற்றிடம் மிகுந்திருந்தால் செல்வம் வளரும். மக்கள் நன்கு சிறப்புற்று விளங்குவார்கள். வெற்றிடம் சற்று குறைந்தால் பெண் சந்ததி மிகும். கிழக்கு எல்லையில் வெற்றிடம் விடாமல் சேர்த்து வீடு கட்டினால் ஆண் குழந்தைகள் எண்ணிக்கையில் குறைதல் அல்லது மரித்தல் போன்ற தீங்குகள் உண்டாகும். செல்வமும் குறையும்.

கிழக்குப் பகுதியில் குப்பைகளைக் கொட்டுதல், கற்குவியல் களைப் போட்டு வைத்தல், மண்ணைக் கொட்டி மேடாக்கி வைத்தல் போன்றவை செய்தால் செல்வம் குறையும். மக்களுக்கு முக்கியமாக ஆண் மக்களுக்குக் கெடுதல் உண்டாகும்.

கிழக்குப் பகுதியில் கழிவறை முதலியன கட்டக்கூடாது.

கிழக்குப் பகுதி மேடாக இருந்து அதில் கிணறு இருந்தால் மக்களுக்குத் தீங்கு உண்டாகும்.

கிழக்குப்பகுதி பள்ளமாக இருந்து, அதில் கிணறு, குழி, வீட்டின் கழிவு நீர் செல்லும் வழிகள் இருந்தால் செல்வம் வளரும்.

கிழக்குப் பகுதியில் நீர்த்தொட்டி (நீரைச் சேமித்து வைக்கும் தொட்டி) அமைத்தால் கௌரவம், புகழ் செல்வாக்கு குறையும்.

கிழக்குத் திசையில் இல்லத்திற்கு அருகில் குளம், ஏரி, அழுக்கு நீர் தங்கிய குழி முதலியன இருந்தால் மக்களுக்குக் கேடு விளையும்.

பூமி 23½ டிகிரி சாய்ந்த நிலையில் தன்னைத்தானே சுற்றிக் கொண்டு, சூரியனையும் சுற்றி வருகிறது. மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சுற்றுகிறது. அதனால் ஆறுகளும், நிலத்தடி நீரும் கீழ்த்திசையை நோக்கிச் செல்கின்றன. வடகோட்டின் சாய்வினால் சில இடங்களில் சற்று வட திசை நோக்கியும் நீரோட்டம் உள்ளது. எனவே, வீட்டிலும், மனையிலும் கழிவு நீரும் மழை நீரும் கீழ்த்திசையையோ, வடதிசையையோ நோக்கிச் செல்லுமானால், நீர் நிலத்தில் தங்காமல் வடிந்து விடுகிறது. அவ்வாறல்லாது எதிர்த்திசையில் மேற்கிலோ தெற்கிலோ நீர் ஓட்டம் இருக்குமானால் நிலத்துக்குள் வற்றுவதில் தாமதம் ஏற்படுவதும், நீர் தங்கியிருந்து கெட்டு நோய்க் கிருமிகள் தோன்றக் காரணமாவதும் ஏற்படும். மேலும் நிலத்தடி நீர், கீழ்த்திசை நோக்கியும், மனையில் சேர்ந்த நீர் அதற்கு எதிர்த் திசையிலும் செல்லுமாயின் அதனாலும் சில தீங்குகள் நேரிடலாம். கிழக்கில் காலையில் சூரியன் உதிப்பதால் காலை வெயில் மற்றும் ஒளி கிழக்குப் பகுதியில் அதிகமாகப்படுமானால் இல்லத்தில் உள்ளவர்களுக்குப் பிராண சக்தி மிகுதியாகக் கிடைக்கும். சக்தி சாமர்த்தியங்கள் மிகுவதால் சுறுசுறுப்புத் தன்மையும், அறிவாற்றலும் மிகும். அதனால் செல்வம் ஈட்டுவது எளிதாகும் என்பது உணரத்தக்கது. ஏனைய திசைகளுக்குக் கூறப்பட்ட பலன்களிலும் இவ்வாறே உட்கருத்து அறிந்து கொள்க.

தன் மனையுடன் கிழக்குப் பகுதியில் உள்ள நிலப்பகுதியைச் சேர்த்துக் கொள்ளும்போது அப்பகுதி பள்ளமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். கிழக்கு, தெற்கு, வடக்கு எனும் இம்மூன்று திசைகளிலும் தெருக்கள் இருக்க நடுவில் உள்ள இடம் கிழக்கு மனை எனப்படும். அதில் வீடு கட்டி வாழ்பவர்கள் மக்கட்பேறு பெற்று சிறப்பாக வாழ்வார்கள்.

தென்கிழக்குப் பகுதி நிலம்

வீட்டுமனை, வீட்டைச் சுற்றிலும் உள்ள வெற்றிடம், இல்லத்தின் நடுப்பகுதி, சார்பு முதலியவைகளில் தென்கிழக்குப் பகுதி பள்ளமாக இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் நெருப்பால் அச்சம், பகைவர்களால் தொல்லை, இல்லத்தில் இருப்பவர்கள் அகால மரணம் அடைதல், இல்லத்தில் உள்ளவர்கள் பாவச் செயலுக்கு அஞ்சாமை போன்றவை நேரும்.

தென்கிழக்குப் பகுதி மேடாக இருந்தால் செல்வங்கள் அனைத்தும் வளர்ச்சி பெறும். மக்களுக்கு நன்மை, பெண்களுக்குச் சுகம் உண்டாகும்.

தென்கிழக்குப் பகுதி மேடாக இருந்து அதில் குழி, கிணறு போன்றவை இருந்தால் பெண்களுக்கு கருச்சிதைவு போன்ற துன்பங்கள், இல்லத்தில் இருப்பவர்களில் சிலருக்கு அகால மரணம், வீண் செலவுகள் முதலியன நேரும்.

தென்கிழக்குப் பகுதி பள்ளமாக இருந்து, அதில் பந்தல், கொட்டகை, அல்லது ஏதாவது கட்டடம் இருந்தால் சுகக் குறைவு, வீண் செலவு உண்டாகும்.

தென்கிழக்குப் பகுதி மேடாகி, அதில் உயர்ந்த கட்டங்கள், கொட்டகை போன்றவை இருந்தால் செல்வம் வளரும். மக்கள் நன்மை பெறுவர். சுகம் உண்டாகும்.

தென்கிழக்குப் பகுதியில் எருக்குவியல், கற்குவியல் போன்றவை இருப்பது நலம் விளைவிக்கும்.

தென்கிழக்குப் பகுதியில் உள்ள வேறு ஒருவருக்குச் சேர்ந்த வெற்று இடத்தை வாங்குவதோ, வேறு வழியில் தன் மனையுடன் சேர்த்துக் கொள்வதோ நல்லதல்ல, பல கஷ்ட நஷ்டங்களைத் தோற்றுவிக்கும்.

மனையைச் சார்ந்த தென்கிழக்குப் பகுதியில் ஏரி, குளம் போன்றவை இருந்தால் செல்வம் குறையும். நெருப்பால் தீங்கு விளையலாம்.

மனைக்குத் தென்கிழக்குப் பகுதி வளர்ந்திருந்தால், (தன் வீட்டைச் சார்ந்த வெற்றிடம் மேலும் அகலம் பெற்றால்) செல்வம் குறைந்து போகும். இப்பகுதி கிழக்கை நோக்கி அகன்று இருந்தால் மக்களின் எண்ணிக்கை குறைதல், மக்கட் பேறின்மை போன்ற தீங்குகள் உண்டாகும்.

தென்கிழக்குப் பகுதியில் வெற்றிடம் தெற்குத் திசையை நோக்கி பரந்திருந்தால் செல்வம் குறையும். அப்பகுதியில் கிணறு, குழிகள் போன்றவை இருந்தால் அகால மரணம், நெருப்பால் தீங்கு விளைதல் உண்டாகும். கணவன் மனைவி இடையே மனவேற்றுமை மிகும். மக்கள் தீய வழியில் நடப்பர். இல்லத் தலைவன் தீராத நோய் வயப்படுதல், கோர்ட்டு விவகாரங்களில் ஈடுபட்டுச் சிரமப்படுதல் போன்றவை நேரும். நாள்தோறும் செல்வம் குறையும்.

தென்கிழக்குப் பகுதியில் வெற்றிடம் கிழக்குத் திசையை நோக்கிப் பரந்திருந்து, அதில் கிணறு, குழி போன்றவை இருந்தால் இல்லத் தலைவனுக்கும் மகன்களுக்கும் கருத்து வேறுபாடு, குடும்பத்தில் ஒற்றுமை இன்மை, தலைவன் தன் மனைவியைத் தள்ளி வைத்தல், அல்லது வேறு பெண்களுடன் தொடர்பு கொள்ளுதல் நேரும். மக்களும் தீய வழியைப் பின்பற்றுவர். இல்லத்தில் பிறந்த பெண்கள் கணவனால் சுகமின்றி யிருப்பர். அல்லது கணவனுடன் சண்டையிட்டு வேறுபட்டிருப் பர். சில இடங்களில் இத்தகைய இல்லத்தில் வசிப்பவர்களின் குழந்தைகள் மனநோய் கொண்டவர்களாகவும் காணப்படுகின்ற னர்.

தென்கிழக்குப் பகுதியில் கிணறு, குளம் இருந்தால் இல்லத்த ரசி மரணமடைவாள்; அல்லது தீராத நோய்வாய்ப்பட்டிருப்பாள். மக்களுக்கு உடல்நலம் அடிக்கடி குறைவுபடும். மக்கள் மதுபா னம், விபசாரம் போன்ற தீய வழிகளுக்கு வயப்படுவர். எனவே, நாள்தோறும் செல்வம் குறைவுபடும்.

தென்கிழக்குப் பகுதி பரந்து அதில் கிணறு, குழி போன்றவை இருந்தால் இல்லத் தலைவனின் இரண்டாவது மகன் தீராத நோய் வயப்படுவான். அல்லது தீய நடத்தையால் விரைவில் மரிப்பான்.

தென்கிழக்கு, தென்மேற்கு, தெற்கு, மேற்குப் பகுதிகளில் மழைநீர், கழிவு நீர் தேங்கியிருக்குமாயின் அல்லது வாய்க்கால் போன்றவற்றால் நீரோட்டம் மிகுதியாக இருக்குமாயின், இல்லத் தில் உள்ள பெண்கள் ருது பித்த சம்பந்தமான அல்லது இன்ப உறுப்பைச் சார்ந்த நோய்களால் துன்பமடைவர். வேறு வழியின்றி தென்கிழக்குத் திசையில் உள்ள மனையில் வீடுகட்ட நேர்ந்தால் கிழக்குப் பகுதியில் வெற்றிடம் அதிகமாக விட்டுத் தெற்குத் திசையில் தலைவாயில் அமைத்துக் கட்டிக் கொள்வது நலம்.

மனைக்குத் தெற்குப் பகுதி நிலம்

கிழக்கு, தெற்கு, மேற்குத் திசைகளில் தெருக்கள் இருந்து நடுவில் உள்ள மனை தெற்கு மனையாகும். அதில் தெற்கு நோக்கித் தலைவாயில் உள்ள இல்லம் அமைத்து வசிப்பவர்கள் சர ஆஸ்தி, பணம், நகை முதலியவற்றை மிகுதியாகப் பெறுவர்.

வீட்டுமனை, வீட்டின் அமைப்பில் தென்பகுதியில் உள்ள வெற்றிடம், இல்லத்தின் நடுப்பகுதி, சார்பு முதலியவற்றில் தெற்குப் பகுதி பள்ளமாக இருந்தால் செல்வம் குறையும். புகழ் செல்வாக்கு முதலியன குறையும். தீராத நோய்களும், சிலருக்கு அகால மரணமும் நேரும். அத்தகைய இல்லத்தில் ஆண் குழந்தைகளின் ஆயுள் குறைவாகவே இருக்கும். அந்த வீடு நிலையாக ஒருவரிடம் தங்காமல் பலர் கைமாறும். பெண் சந்ததியினருக்கு உரியதாகிவிடும். அத்துடன் வடக்குப் பகுதியில் உயர்ந்த கட்டடம் கட்டினால் கோர்ட்டு வழக்கு ஏற்படும். பல சிரமங்கள் உண்டாகும்.

எனவே, தெற்குப் பகுதி மேடாக இருந்தால் இல்லத்தில் வசிப்பவர்களின் செல்வம் மிகும்.

தெற்குப் பகுதி மேடாக இருந்து அதில் பந்தல், கொட்டகை, சார்பு போன்றவை அமைந்திருந்தால் செல்வமும், உடல்நலமும் மிகும்.

தெற்குப் பகுதி மேடாக இருந்து அதில் கற்குவியல் முதலியன இருந்தால் நலம் உண்டாகும்.

தெற்குப் பகுதி மேடாக இருந்து அதில் கிணறு குழி போன்றவை இருந்தால் செல்வம் குறையும். தீராத நோய்களும், ஆயுள் குறைவும் உண்டாகலாம்.

தெற்குப் பகுதி பள்ளமாக இருந்து அதில் கொட்டகை, பந்தல், சார்பு போன்றவை அமைந்திருந்தால் உடல்நலம் குறையும். செல்வம் குறையும். வீண் செலவுகள் உண்டாகும். சிலருக்கு மரண பயமும் தோன்றலாம்.

தெற்குப் பகுதியில் ஏனைய பகுதிகளை விட வெற்றிடம் மிகுந்திருந்தால் பல சிக்கல்களும், நஷ்டங்களும் உண்டாகும்.

தெற்குப் பகுதியில் கழிவறை அமைந்திருந்தால் ஸ்வல்பமாகச் செல்வம் குறைவுபடும்.

வீட்டுமனைக்குத் தெற்கில் குளம், ஏரி, சேற்றுக் குழி போன்றவை இருந்தால் பகைவராலும் நோய்களாலும் துன்பம் நேரும்.

வீட்டில் புழங்கும் நீர், மழைநீர் ஆகியவை தெற்குத் திசையாக வெளியேறினால் இல்லத்தில் உள்ள பெண்களுக்கு நோய்களும், குடும்பத்தில் கலகமும், வீண் செலவும் உண்டாகும்.

தெற்குப் பகுதியில் உள்ள சுற்றுச்சுவர் (காம்பௌண்ட் வால்) ஏனைய பகுதிகளில் உள்ளதை விடச் சற்று உயர்வாகக் கட்டுதல் நலம் தரும்.

மனையின் தென்மேற்கு நிலம்

மனை, வீட்டின் புறத்து வெற்றிடம், இல்லத்தின் நடுப்பகுதி, அறைகளின் உட்பகுதி ஆகியவை தென்மேற்குப் பகுதியில் பள்ளமாக இருந்தால் செல்வம் குறையும், நோய்களும் மிகும்.

மேற்படி இடங்களில் தென்மேற்குப் பகுதி மேடாக இருப்பதால் செல்வம் மிகும். சுகம் உண்டாகும்.

தென்மேற்குப் பகுதி மேடாக இருந்து அதில் கிணறு, குழி முதலியவை இருந்தால் தீராத நோய்கள், கலகம், பகை, அவமானம், உயிருக்குத் தீங்கு முதலியன நேரும்.

தென்மேற்குப் பகுதி மேடாகி அதில் பந்தல், கொட்டகை போன்றவை அமைந்திருந்தால் செல்வம் வளரும், கௌரவம், புகழ் முதலியன ஓங்கும்.

தென்மேற்குப் பகுதி மேடாகி அதில் கற்குவியல், எருக்குவியல் முதலியன இருந்தால் செல்வம் மிகும்.

தென்மேற்குப் பகுதி பள்ளமாகி அதில் கட்டடம், பந்தல், கொட்டகை போன்றவை இருந்தால் செல்வம் மிகும். ஆனால் அமைதி இன்மை, நோய்களால், பகைவர்களால் துன்பம் முதலியன நேரும்.

தென்மேற்குப் பகுதியில் கிணறு, குளம் போன்ற நீர் நிலைகள் இருந்தால் பெண்களும், குழந்தைகளும் உடல் நலம் கெட்டுத் துன்புறுவர். விரைவில் மரிப்பர். இத்தகைய இல்லத்தில் வசிப்பவர் சிலர் மனநோயிலும், குட்டம், உப்புசம் (ஆஸ்த்மா) போன்ற நோய்களிலும் துன்புறுகின்றனர். இத்தகைய இல்லத்தில் வசிக்கும் பெண்கள் சிலர் தீய நடத்தைக்கு உட்படுகின்றனர். அல்லது கொடுமையான தன்மை, கலக குணம் கொண்டிருக்கின்றனர்.

தென்மேற்குப் பகுதியில் வெற்றிடம் மிகுந்திருந்தால் பல துன்பங்களும், குழந்தைகளுக்குக் கேடும் நேரும்.

தென்மேற்குப் பகுதியில் நீரைச் சேமிக்கும் தொட்டி முதலியவை இருந்தால் கலகம், செல்வம் குறைதல், நோயால் துன்பம், புகழுக்கும், கௌரவத்திற்கும் இழுக்கு முதலியன உண்டாகும்.

மனைக்கு அருகில் தென்மேற்குப் பகுதியில் குளம், ஏரி முதலியவை இருந்தால் வீண் சச்சரவுகள், அவமானங்கள் ஏற்படும்.

மழைநீர் அல்லது வீட்டின் புழக்கத்தில் உள்ள நீர் தென்மேற்குத் திசையாக வெளியேறினால், உடல்நலம் குறைதல், வீட்டில் உள்ளவர்களிடையே மனவேறுபாடு, கலகம், அவமானம், செல்வக்குறைவு முதலியன நேரும்.

தென்மேற்குப் பகுதியில் வெற்றிடம் மிகுந்திருந்தால் பகை, பணச் செலவு, உடல்நலமின்மை, வீட்டில் கலகங்கள் முதலியன நேரலாம்.

தென்மேற்குப் பகுதியில் வெற்றிடம் தெற்கு நோக்கிப் பரப்பில் மிகுந்திருந்தால் தீராத நோய்களும், அகால மரணமும் நேரலாம்.

தென்மேற்குப் பகுதி தென்மேற்குத் திசையில் பரந்திருந்தால் பகை, கடன் முதலியவற்றால் துன்பமும், கோர்ட்டு விவகாரங்களால் வீண் செலவுகளும் உண்டாகும்.

தென்மேற்குப் பகுதியில் வெற்றிடம் மேற்குத் திசையில் வளர்ந்திருந்தால் பணச் செலவு, தீய நடத்தை, தீயவர்களுடன் தொடர்பு முதலியன உண்டாகும்.

தென்மேற்குப் பகுதியில் வெற்றிடம் பரந்து அதில் கிணறு, குழி போன்றவை இருந்தால் இல்லத்தில் வசிக்கும் பெண்கள் தீய வழியில் நடத்தல், குழந்தைகள் மரித்தல், பகை, வீட்டுத் தலைவன் கொடுந்தன்மை கொண்டிருத்தல், தீயநடத்தை கொண்டிருத்தல் போன்றவை நேரும்.

கிழக்கு, மேற்குத் திசைகளில் தெரு இருக்கும் இடம் தென்மேற்கு மனையாகும். இதில் வீடுகட்ட வேண்டியிருந்தால் மேற்கு திசையை நோக்கித் தலைவாயில் வைத்து வீடு கட்டுதல் நலம் தரும். தெற்கு திசையில் வாயில் அமைக்கக்கூடாது.

மனையின் மேற்குப் பகுதி நிலம்

வீட்டுமனை, வீட்டின் வெளிப்புறத்தில் உள்ள வெற்றிடம் அறைகள், சார்பு முதலியவற்றின் மேற்குப் பகுதி பள்ளமாக இருந்தால் செல்வம் குறைதல், புகழ்மங்குதல், துக்கம் முதலியன நேரும். இந்த இல்லங்களில் பெண்களின் ஆளுகை காணப்படும்.

மேற்குப் பகுதி மேடாக இருந்தால் செல்வம் வளரும்.

மேற்குப் பகுதி பள்ளமாகி அதில் கொட்டகை, பந்தல் போன்றவை இருந்தால் செலவு மிகும்; சுகம் குறையும்.

மேற்கு நிலம் பள்ளமாகி அதில் கிணறு குழி முதலியவை இருந்தால் தீராத நோய், கெட்ட பெயர், தலைவன் மரணமடைதல் முதலியன உண்டாகும்.

மேற்குப் பகுதி மேடாக இருந்து அதில் கிணறு, குழி முதலியன இருந்தால் செல்வம் குறையும். அவப்பெயர் உண்டாகும்.

மேற்குப் பகுதியில் பரந்த வெற்றிடம் இருந்தால், செல்வம் குறையும். வமிசம் விளங்காது. பல துன்பங்கள் உண்டாகும்.

மேற்குப் பகுதியில் எருக்குவியல், கற்குவியல் முதலியன இருந்தால் நன்மை உண்டாகும்.

மேற்குப் பகுதியில் நீர் சேமித்து வைக்கும் தொட்டி முதலியன இருந்தால் குடும்பத்தில் கலகம், மக்களுக்குக் கெடுதல் நேரும். நெடுந் தொலைவு பயணங்கள் நேரும்.

மனைக்கு மேற்கில் குளம், ஏரி போன்றவை இருந்தால் இல்லத்தில் உள்ள பெண்கள் துஷ்டத்தன்மை கொண்டிருப்பர்.

மேற்குத் திசையாக மழைநீர், இல்லத்தில் புழங்கும் நீர் வெளியேறுமாயின் பகையால் துன்பமும், அவப்பெயரும் உண்டாகும்.

தெற்கு மேற்கு வடக்குத் திசைகளில் தெரு இருந்து, நடுவில் மனை இருந்தால் அது மேற்கு நிலம் எனப்படும். மேற்குத் திசையை நோக்கித் தலைவாயில் அமைத்து வீடு கட்டினால் செல்வம் மிகும்.

மனையின் வடமேற்குப் பகுதி நிலம்

வீட்டுமனை, வீட்டின் புறத்து வெற்றிடம், அறைகள், சார்பு முதலியவை வடமேற்குப் பகுதியில் பள்ளமாக இருந்தால் பகை

மிகும். பெண்களுக்குக் கெடுதல், அசீரண நோய், அச்சம் முதலியன உண்டாகும்.

வடமேற்குப் பகுதி மேடாக இருந்தால் செல்வமும் வமிச மும் வளர்ச்சி பெறும். வடமேற்குப் பகுதி பள்ளமாக இருந்து அதில் கொட்டகை, மாட்டுக் கொட்டகை முதலியன இருந்தால் கால்நடைகள் வளர்ச்சியின்மை, செல்வக் குறைவு, பகைவர்க ளால் தீங்கு ஆகியவை உண்டாகும்.

வடமேற்குப் பகுதி மேடாகி அதில் கொட்டகை, பசுக்களின் கொட்டகை முதலியன இருந்தால் கால்நடைகள் வளர்ச்சி பெறும். தனதானியங்கள் மிகும்.

வடமேற்குப் பகுதியில் கிணறு, குழி முதலியவை இருந்தால் பகைவர் தொல்லை, அசீரண நோய், மன அமைதி இன்மை ஆகியவை உண்டாகும்.

வடமேற்குப் பகுதியில் எருக்குவியல், சாணக்குவியல், கற்குவியல் முதலியன இருந்தால் செல்வம் வளரும்.

மழைநீர், இல்லத்தில் புழங்கும் நீர் முதலியன வடமேற்குத் திசையாக வெளியேறுமாயின் மன அமைதியின்மை, செல்வக் குறைவு, சுகமின்மை உண்டாகும்.

வடமேற்குப் பகுதியில் நீர்த்தொட்டியிருந்தால் குடும்பத்தில் கலகம், மக்களுக்குத் தீங்கு விளையும்.

மனைக்கு வடமேற்குப் பகுதியில் குளம் முதலிய நீர் நிலைகள் இருந்தால் கால்நடைகளுக்கும், செல்வத்திற்கும் கேடு உண்டாகும்.

மனைக்கு வடமேற்குப் பகுதி பரந்திருந்தால் வீண் செலவு, பகை, மன அமைதியின்மை முதலியவை உண்டாகும். அடிக்கடி வெகுதூரப் பயணம் மேற்கொள்ள நேரும்.

வடமேற்குத் திசையில் உள்ள இடம், மேற்காகப் பரவியிருந் தால் அமைதியின்மை, அவப்பெயர், வீண் நஷ்டங்கள் உண்டா கும்.

வடமேற்குப் பகுதியில், மனை வடக்குத் திசையில் பரந்து இருந்தால் அவப்பெயர், பகைவரால் தொல்லை, சுகமின்மை, வீண் செலவு ஆகியவை உண்டாகும்.

வடமேற்குத் திசையில் மாட்டுக் கொட்டகை, வைக்கோல் போர் இருந்தால் கால்நடைகள் வளரும். செல்வம் மிகும்.

வடமேற்குப் பகுதி குறைந்திருந்தால், செல்வம் மிகுந்திருந்தாலும் இல்லத்தில் வசிப்பவர்கள் பிறருடன் தொடர்பு கொள்ளாமலும் ஏகாந்தமாக வசிக்கவும் விரும்புவர்.

வடமேற்குப் பகுதி வளர்ந்து அதில் கிணறு, குழிகள் முதலான வாஸ்து தோஷங்கள் இருந்தால் தலைவனின் குழந்தைகளில் மூன்றாமவன் வீட்டை விட்டு வேறு இடத்தில் வசித்திருப்பான்.

மேற்கு, வடக்குத் திசைகளில் தெரு இருக்கும் நிலம் வடமேற்கு நிலமாகும். அந்த மனையில் வீடு கட்டினால் மனத்திற்குத் துன்பங்களும், பகைவர்கள் தொல்லைகளும் நேரும். அத்தகைய இடத்தில் வீடு கட்ட வேண்டி இருந்தால் தெற்கு நோக்கியோ, மேற்கு நோக்கியோ தலைவாயில் வைத்து வீடு கட்டினால் வெற்றி உண்டாகும்.

மனைக்கு வடக்குப் பகுதி நிலம்

வீட்டுமனை, வீட்டின் புறப்பகுதி வெற்றிடம், அறைகள் சார்பு முதலியவை வடக்குப் பகுதி பள்ளமாக இருந்தால் செல்வம் வளரும். மக்கள் நன்மை பெறுவர். நன்மைகள் அனைத்தும் உண்டாகும்.

வடக்குப் பகுதி மேடாக இருந்தால் கௌரவக் குறைவு, செல்வக் குறைவு, மக்களுக்குத் துன்பங்கள் நேரும்.

வடக்குப் பகுதி பள்ளமாக இருந்து அதில் கொட்டகை, பந்தல் முதலியன இருந்தால் வரவுக்கு மிஞ்சிய செலவு, கடன் படுதல், மக்கள் வளர்ச்சி பெறாமை முதலியன உண்டாகும்.

வடக்குப் பகுதியில் கிணறு, குழி முதலியன இருந்தால் செல்வம் மிகும்; மக்கள் நன்மை பெறுவர்.

வடக்குப் பகுதியில் வெற்றிடம் மிகுந்திருந்தால் செல்வம் பெருகும். சந்ததிகள் நலம் பெறுவர்.

வடக்குப் பகுதியில் கற்குவியல், குப்பைமேடு முதலியன இருந்தால் செல்வம் அழியும். மக்களுக்குக் கெடுதல் விளையும்.

வடக்குப் பகுதியில் நீர்த்தொட்டிகள் இருந்தால் வீண் செலவு மிகும். அந்தத் தொட்டிகள் தரைமட்டத்திற்கும் ஆழமாக இருந்தால் நலம் பெருகும்.

மனைக்கு வடக்கில் குளம், ஏரி முதலியன இருந்தால் செல்வம் வளரும்.

மழைநீர், வீட்டில் புழங்கும் நீர் முதலியன வடக்குத் திசையாக வெளியேறும்படி அமைத்தால் செல்வம் மிகும். மக்கள் நலம் பெறுவர்.

மேற்கு, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தெருக்கள் இருக்கும் மனை வடக்கு மனையாகும். வடக்குத் திசையில் வெற்றிடம் மிகுந்திருக்கும்படி வீடு அமைத்தால் செல்வங்கள் வளரும்.

மனைக்கு வடகிழக்குப் பகுதி நிலம்

மனை வீட்டின் புறப் பகுதியில் உள்ள வெற்றிடம் அறைகள், வீட்டின் நடுப்பகுதி ஆகியவைகளில் வடகிழக்குப் பகுதி பள்ள மாக இருந்தால் செல்வம் வளரும். அறநெறியில் நாட்டம், புகழ், சுகம் முதலியன மிகும்.

வடகிழக்குப் பகுதி மேடாக இருந்தால் செல்வம் அழியும். பல கஷ்டங்கள் உண்டாகும்.

வடகிழக்குப் பகுதியில் கொட்டகை, பந்தல் முதலியவை அமைத்தால் ஏழ்மை உண்டாகும். சுகம் குறையும்.

வடகிழக்குத் திசையாக மழை நீரும், வீட்டில் புழங்கும் நீரும் வெளியேறுமானால் தனதானியங்கள் வளரும். சுகம் உண்டாகும். மக்கள் பல நன்மைகளைப் பெறுவர்.

வடகிழக்குப் பகுதியில் கற்குவியல், குப்பை மேடு முதலி யவை இருந்தால் செல்வம் குறைவு படும். சுகக்கேடு, வீண் கலகம், ஆயுள் குறைவு ஏற்படும். இல்லத்தில் வசிப்பவர் தீய செயல்களில் ஈடுபடுவர்.

நீர்த்தொட்டி முதலியவை நிலமட்டத்திற்குத் தாழ்வாக இருக் கும்படி அமைத்தால் சுகம், செல்வம் மிகும். உயரமாக அமைத் தால் வீண் செலவு, கடன்படுதல், குடும்பத்தில் ஒற்றுமை குறைவு முதலிய கெடுதல்கள் விளையும்.

வடகிழக்குத் திசையில் குளம், ஏரி முதலியன இருந்தால் செல்வம் மிகும்.

வடகிழக்குப் பகுதியில் வெற்றிடம் பரந்திருந்தால் பல வகைகளில் செல்வம் வளரும். சுகம் மிகும். மக்கள் நன்மையடை வர்.

வடகிழக்குப் பகுதியில் நிலம் வடக்கு நோக்கிப் பரந்திருந் தால் பலவகைகளில் செல்வம் வளரும். ஆனால் இல்லத்தில் வசிப்பவர்கள் உலோப குணமுள்ளவர்களாக இருப்பர்.

வடகிழக்குப் பகுதியில் வெற்றிடம் கிழக்குத் திசையில் பரந்திருந்தால் அறவழியில் ஈடுபாடு, புகழ் முதலியன ஓங்கும். செல்வம் வளரும்.

வடகிழக்குப் பகுதி பரந்து அதில் கிணறு இருந்தால் குடும்ப வளர்ச்சி, செல்வம் முதலிய நன்மைகள் பல உண்டாகும்.

வடகிழக்குப் பகுதியில் தன் மனையை ஒட்டிய வேறு நிலப்பகுதிகளைச் சேர்த்துக் கொண்டால் பல நன்மைகள் உண்டாகும். ஆனால், தாழ்வாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

வடகிழக்கு, வடக்குப் பகுதிகளில் வெற்றிடமாக இருக்கும் பகுதியை வேறு ஒருவருக்கு விற்கக்கூடாது.

வடக்கு, கிழக்குத் திசைகளில் தெரு உள்ள மனை, வடகிழக்கு மனையாகும். அந்த மனையில் கிழக்கிலும், வடக்கிலும் வெற்றிடம் அதிக அளவில் விட்டு, வீடு கட்டுவதால் பல வகைகளில் செல்வம் வளரும்.

மனை நல ஆராய்ச்சி

இதுவரை மனைக்கு எண் திசைகளிலும் நிலப்பகுதி அமைந்திருக்க வேண்டிய வகை விளக்கப்பட்டது. இனி மனையின் தன்மையை ஆராயும் வகை விளக்கப்படும்.

தெற்கு, மேற்கு, தென்மேற்கு, வடமேற்கு திசைகள் உயர்ந்து, ஏனைய பகுதிகள் தாழ்ந்துள்ள மனை 'கஜ பிருஷ்டம்' எனப்படும். இந்த மனையில் வீடு கட்டி வாழ்பவன் செல்வங்கள் அனைத்தும் பெற்று, நெடுநாள் வாழ்வான்.

நடுப்பகுதி உயர்ந்து ஏனைய நான்கு பகுதிகளிலும் தாழ்ந்துள்ள நிலம் 'கூர்ம பிருஷ்டம்' எனப்படும். இத்தகைய நிலத்தில் வீடு கட்டி வாழ்பவன் நாள்தோறும் ஊக்கம் மிக, சுகங்களனைத்தும் பெற்று வாழ்வான் (இத்தகைய நிலத்தில் முன்பு கூறிய தெற்கு மேற்கு தென்மேற்கு வடமேற்குப் பகுதிகள் ஏனைய பகுதிகளைவிட சற்று உயர்ந்திருக்குமாறு மனையைச் சீர்படுத்திக் கொள்வது நன்மை தரும்)

கிழக்கு, தென்கிழக்கு, வடகிழக்குப் பகுதிகள் உயர்ந்து மேற்குத் திசையில் நிலப்பகுதி தாழ்வாக இருந்தால் அம்மனை ''தைத்ய பிருஷ்டம்'' எனப்படும். இத்தகைய மனையில் வீடு கட்டி வாழ்வதால் கால்நடைகளும், செல்வமும் கேடுறும். மக்களும் பல துன்பங்களுக்கு இலக்காவர்.

கிழக்கு மேற்குப் பகுதிகள் நீண்டு, வடக்கு தெற்குப் பகுதிகள் உயர்ந்து, நடுப்பகுதி தாழ்ந்திருந்தால் அந்த மனை 'நாக பிருஷ்டம்' எனப்படும். இந்த நிலத்தில் வீடு அமைத்துக் கொண்டால் பகைவர்களால் துன்பம், மரணபயம், ஏவல் முதலிய வற்றால் கஷ்டங்கள், பெண்களுக்கும் மக்களுக்கும் தீங்கு ஆகியவை உண்டாகும்.

மக்களுக்குப் பயன்தரும் செடி கொடிகள் செழித்துவளர்ந்து சமமாக இருக்கும் நிலம், சற்று இளைப்பாறத் தங்கி இருந்தவர்களுக்கும் உடல்நலம் தந்து செல்வத்தை வளர்க்கும். (செல்வத்தைப் பெறத் தக்க அறிவாற்றல்களையும் ஊக்கத்தையும் உண்டாக்கும்) அத்தகைய நிலத்தில் வீடுகட்டி வாழ்பவர்களுக்கு நன்மைகள் பல விளைவதில் வியப்பில்லை.

செடி கொடிகள் நன்கு செழித்து வளரும் நிலம், உயிர் உள்ளதெனப்படும். அத்தகைய நிலம் உடல் நலத்தையும், அறிவாற்றலையும் வளர்க்கும். சாரமில்லாமல் உவர்ப்பு நிலமாகிப் புல்லும் முளைக்காத நிலம் உயிரற்றதாகும். அத்தகைய நிலம் வீடு கட்ட ஏற்றதல்ல.

பல பிளவுகள் உள்ளது. மேடுபள்ளங்கள் நிறைந்தது. புற்றுகள் உள்ளதுமான நிலத்தை விலக்க வேண்டும். பிளவுபடக் கூடிய தன்மை கொண்ட நிலம் ஆயுளைக் குறைக்கும். உவர் நிலம் செல்வத்தைக் குறைக்கும். எலும்புகள் நிறைந்துள்ளது துக்கத்தை விளைவிக்கும். ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த நிலம் பகைவர்களை வளர்க்கும்.

வீடுகட்டத் தேர்ந்தெடுத்த நிலத்தின் மையத்தில் ஒரு கை நீளம், ஒரு கை அகலம், ஒரு கை ஆழம் உள்ள பள்ளம் தோண்டி மறுபடியும் அம்மண்ணைக் கொண்டு பள்ளத்தை மூடினால் பள்ளம் நிறைந்து மண் மிகுந்திருக்குமாயின் உயர்தர நிலம் என்றும், பள்ளத்திற்குச் சரியாகிவிட்டால் நடுத்தரமானது என்றும், பள்ளத்தைச் சரியாக நிரப்பிடப் போதுமானதாக இல்லை எனில் விலக்கத்தக்க நிலம் என்றும் உணர்க. (கெட்டியான, மண் செறிவுடன் திடமான நிலத்தில் கட்டிய வீட்டுச் சுவர்களும் திடமாக இருக்கும். மண் பள்ளத்தை நிரப்பப் போதுமான அளவில்லை என்றால், அந்த நிலத்தில் கட்டிய சுவர்கள் உறுதியாக இருக்காது. தற்காலத்திலும், மண்ணின் தரத்தை அறிய பெரும் பள்ளம் வெட்டி மணல் மூட்டைகளை நிரப்பி சோதனை செய்வதைக் காண்கிறோம்.)

மற்றொரு முறை: ஒரு கை ஆழம், ஒரு கை நீளம், ஒரு கை அகலம் உள்ள பள்ளம் தோண்டி நீரால் நிரப்புக. மறுநாள் பார்க்கும்போது நீர் ஊற்றிய அளவில் இருந்தால் உயர்ந்த தரமுள்ள நிலம் என்றும், ஊற்றியதும் வற்றிப் போகுமாயின் வீடு கட்டத் தகாததென்றும் உணர்க.

முன் போலப் பள்ளம் தோண்டி மாலையில் நீரால் நிரப்பி மறுநாள் காலையில் பார்க்கும் போது நீர் தங்கியிருந்தால் உயர்ந்த தரமுள்ள நிலம் எனவும், சேராகி இருந்தால் நடுத்தரமானது எனவும், அடியோடு உலர்ந்து வெடிப்புகள் காணப்பட்டால் வீடு கட்டத் தகுதியற்ற நிலம் என்றும் உணர்க.

பாலில் நீர் கலந்து அப்பள்ளத்தில் விட்டால் அது வலமாகச் சுழன்றால் அந்நிலத்தில் வீடு கட்டி வாழ்பவர்கள் நன்மைகள் அனைத்தும் பெறுவார்கள் என்று அறிக. மாறாக, இடமாகச் சுழன்றால் அந்நிலம் விலக்கத்தக்கதென்று உணர்க.

நிலத்தில் பள்ளம் வெட்டும்போது முதலில் கருங்கல் காணப்பட்டால் தங்கமும், செங்கல் காணப்பட்டால் செல்வமும், தாமிரம் முதலிய உலோகங்கள் காணப்பட்டால் பொருட் செல்வ மும் மிகும். நிலத்தில் பள்ளம் தோண்டும் போது எறும்புப் புற்று வெளிவந்தால் அந்த இல்லத்தில் வீடு கட்டக்கூடாது. உமி, எலும்பு, துணி, சாம்பல், குவியல், முட்டை போன்றவை காணப்பட்டாலும், பாம்பு வெளிவந்தாலும் வீட்டுத் தலைவனுக் குக் கேடு விளையும். சோழி காணப்பட்டால் வீண் சண்டை உண்டாகும். பஞ்சு வெளிவந்தால் துக்கம். எரிந்து போன கட்டை காணப்பட்டால் நோய்மிகும். கப்பரை வெளிவந்தால் வீண் சண்டை, இரும்பு காணப்பட்டால் தலைவனுக்குக் கேடு. எனவே வீடு கட்டும் முன் இவற்றை ஆராய்ந்து தக்க முடிவு செய்ய வேண்டும்.

பழைய வீடுகளில்
சல்யம் முதலியன கண்டு கொள்ளும் வழி

ஏதேனும் ஓர் இல்லத்தில் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை யாரேனும் மரிக்க நேரிட்டால் அம்மனையில் தெற்குப் பகுதியில் மனிதன் எலும்பு புதைந்திருக்கும் என்று உணர்க.

ஏதேனும் ஓரில்லத்தில் வசிப்பவர்கள் அடிக்கடி அரசாங்கத் தண்டனைக்கு உள்ளாக நேரிடுமாயின் அவ்வில்லத்தின் தென்கி ழக்குப் பகுதியில் கழுதை எலும்பு தையுண்டிருக்கும். இல்லத்

தில் வசிப்பவர்கள் அடிக்கடி நோய்வாய்ப்பட நேர்ந்தால், அவ் வில்லத்தின் தெற்குப் பகுதியில் எலும்பு புதைந்திருக்கும். இல்லத் தில் வசிப்பவர்களின் குழந்தைகள் மரிக்க நேர்ந்தால் மனையின் தென்கிழக்குப் பகுதியில் நாய் எலும்பு புதைந்திருக்கும். வீட்டுத் தலைவன் மனக்கலக்கம் கொண்டு ஊர் சுற்றுவானாயின் அவ்வில் லத்தின் மேற்குப் பகுதியில் குழந்தையின் எலும்பு புதையுண்டிருக் கும்.

வீட்டுத் தலைவனுக்குப் பன்னிரண்டு ஆண்டுகள் வலிமை கொண்ட பகைவரால் துன்பம் நேர்ந்தால் அந்த இல்லத்தின் வடமேற்குப் பகுதியில் கரி, உமி போன்றவை புதைந்திருக்கும். வீட்டுத் தலைவன் வீடு கட்டும் போது செல்வந்தனாகிப் பிறகு இல்லத்தில் வசிக்கத் துவங்கியதும் ஆண்டுதோறும் செல்வம் குறைவுபடத் தொடங்கினால் அம்மனையின் வடபகுதியில் மனித எலும்பு புதையுண்டிருக்கும்.

இல்லத்தில் உள்ள கால்நடைகள் அழிந்து வருமாயின் அந்த இல்லத்தின் வடகிழக்குப் பகுதியில் மாட்டு எலும்பு புதையுண்டு இருக்கும்.

இல்லத் தலைவனுக்கு வமிசநாசம் ஏற்பட்டால் இல்லத்தின் நடுப்பகுதியில் எலும்பு, இரும்பு, சாம்பல் போன்ற பொருள்கள் புதையுண்டிருக்கும். இல்லத்தில் பசுக்களிருந்தும் பால் கொடுக்கா மல் இருந்தால் கிழக்கில் குழந்தை எலும்பு புதையுண்டிருக்கும் என்று உணர்க.

வீட்டில் வசிப்பவர்கள் அபமிருத்யுவால் அழிந்து போவார் கள் ஆயின், அம்மனைக்கு மேற்கில் எருது எலும்பு புதையுண்டி ருக்கும்.

வீட்டில் வசிப்பவர்கள் எப்பொழுதும் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டிருப்பார்களானால், அவ்வீட்டின் கிழக் குப் பகுதியில் மண்டை ஓடு அல்லது தலை எலும்பு புதையுண்டி ருக்கும்.

இல்லத் தலைவன் க்ஷய நோய் வாய்ப்படுவானாயின் அந்த வீட்டின் கிழக்கில் கால் எலும்பு புதையுண்டிருக்கும். எனவே, இத்தகைய இல்லங்களை வேறு யாராவது வாங்கினால் முதலில் மனை முழுவதையும் நன்றாகத் தோண்டி 'சல்ய சோதனம்' (எலும்பு முதலியன இல்லாமல் தூய்மை) செய்து, பிறகு வீடு கட்ட வேண்டும்.

வீடு கட்ட நாள் குறித்தல்

தக்க நிலம் தேர்ந்தெடுத்த பின், வீடுகட்டத்தக்க நாள் கண்டுகொள்ள வேண்டும்.

வீடு கட்ட தேர்ந்தெடுக்கத்தக்க மாதங்கள் வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி என்பனவாம். இவை ஸ்திர ராசிகளைச் சேர்ந்த மாதங்களாகும். அதாவது இந்த மாதங்களில் சூரியன் விருஷப - சிம்ம - விருச்சிக - கும்ப ராசிகளில் இருப்பான். சித்திரை மாதத்தில் வீடு கட்டத் துவங்கினால் கேடு விளையும். வைகாசியில் வெற்றி, ஆனியில் உயிருக்குக் கேடு, ஆடியில் கால்நடைகள் அழிதல், ஆவணியில் சேவகர்கள் மிகுதல், புரட்டாசி நோய், ஐப்பசி கலகம், கார்த்திகை செல்வ வளர்ச்சி, மார்கழி அச்சம், தை நெருப்பால் தீங்கு, மாசியில் செல்வம், பங்குனியில் செல்வம் அழிதல் என்னும் பலன்களைத் தரும்.

சுக்கில திருதியை முதல் கிருஷ்ணபக்ஷ பஞ்சமி அல்லது சப்தமி வரை உள்ள திதிகளில் நல்லதாகப் பார்த்து நாள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பிரதமை, சஷ்டி, ஏகாதசி என்பன மூன்றும் 'நந்தா' எனப்படும். இந்நாட்களில் வீடுகட்டத் துவங்கினால் செல்வம் குறையும். துவிதியை, சப்தமி, துவாதசி இம்மூன்றும் பத்திர திதி எனப்படும். இந்நாட்களில் துவங்கினால் பந்தனம் (கட்டுப்படுதல், அதாவது சிறைச்சாலை முதலியவற்றில் கட்டுண்ணப்படுதல்) உண்டாகும். திருதியை, அஷ்டமி, திரயோதசி இம்மூன்றும் ஜயதிதிகள் என்று கூறப்படும். இவை சுப பலனை விளைவிப்பவை. பஞ்சமி, தசமி, பௌர்ணமி இம்மூன்றும் பூர்ண திதிகள் எனப்படும். இவை மூன்றும் மிக்க செல்வத்தை விளைவிக்கும். சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி என்பன மூன்றும் ரிக்த திதிகள் எனவும், அமாவாசை தர்சதிதி எனவும் கூறப்படும். இந்நான்கும் ஆயுளைக் குறைக்கும். (சாஸ்திரத்தில் அஷ்டமி கூறப்பட்டாலும் வழக்கத்தில் அது ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.)

இனி, வீடு கட்டத் தக்க வார நாட்களைக் கவனிப்போம்.

ஞாயிறு, செவ்வாய் என இவ்விரு நாட்களில் வீடு கட்டத் துவங்கினால் நெருப்பால் தீங்கு, திங்கள் வீண் சிக்கல், புதன், வியாழன், வெள்ளி என இம்மூன்றும் சுகத்தையும், சனி திருடர் பயத்தையும் விளைப்பனவாம்.

சனத்குமாரர் என்பவர் இவ்வாறு கூறுகிறார்.

ஞாயிறு நெருப்பால் கேடு, திங்கள் கெடுதல், செவ்வாய் மிக்க துன்பமும் பல சிக்கல்களும், புதன் செல்வம், வியாழன் சுகம், வெள்ளி சுபம், சனி திருடர்களால் கேடு விளைவிக்கும். வேறு நூலாசிரியர் ஞாயிறு துக்கம், திங்கள் சுபம், புதன் செல்வம், வியாழன் பாக்யம், சனி திருடரால் கஷ்டம் எனக் கூறியுள்ளார்.

வீடு கட்டத் தக்க நக்ஷத்திரங்கள்

ரோகிணி, மிருகசீரிஷம், பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், ரேவதி.

சனத்குமாரர் பூசம், சுவாதி இவ்விரண்டையும் விலக்கி புனர்வசு, அசுவினி, உத்திரம் என்பனவற்றைச் சேர்த்துக் கூறுகிறார். வேறு சில நூல்கள் தனித்தனியாக நட்சத்திரங்களுக்குப் பலன்களைக் குறிப்பிட்டுள்ளன. அவற்றின்படி வீடு கட்டத் துவங்க அசுவினி சுபம், பரணி ஆயுள் குறைவு, கிருத்திகை நெருப்பால் தீங்கு, ரோகிணி மக்கட் பேறு குறைவு படுதல், மிருகசீரிஷம் உடல் நலம், திருவாதிரை அச்சம், புனர்வசு செல்வம், பூசம் விருப்பங்கள் கை கூடுதல், ஆயில்யம் அச்சமும் துன்பமும், மகம் குறைந்த அளவில் நன்மை, பூரம் தைரியம், உத்திரம் புண்ணியச் செயல்களில் விருப்பம், அஸ்தம் புகழ், மக்கட்செல்வம், சித்திரை வீடு நன்கு விளங்குதல், பெருமை அடைதல், சுவாதி நூறாண்டு வாழ்வும், ஸ்திரமான நிலையும், விசாகம் நெருப்பால் தீங்கு, அனுஷம் நண்பர்களால் நன்மை, கேட்டை பசியால் வாடுதல், மூலம் பகை நீங்குதல், பூராடம் அச்சம், உத்திராடம் செல்வமும் மக்கட் பேறும், திருவோணம் மகிழ்ச்சி, சதயம் ஆயுளும் உடல் நலமும் மிகுதல், பூரட்டாதி வீட்டின் பெருமை குறைதல், உத்திரட்டாதி ஏழ்மை, ரேவதி கால்நடைகளின் சிறப்பு எனும் பலன்களைத் தரும்.

இனி யோகங்களில் விருத்தி, வரீயான், சித்தம், ஹரிஷம், சுபம், சோபனம், பிரும்மம், ஐந்திரம், சுக்லம், சித்தம், சாத்யம், சிவம், பிரீதி, சௌபாக்யம், திருதி, துருவம், ஆயுஷ்மான் என்பன நலம் தரும். வியாகாதம், கண்டம் விஷ்கம்பம், சூலை, வஜ்ரம், வியதீபாத், வைதிருதி, பரிகை என்பன விலக்கத் தக்கவை.

கரணங்களில் பவ, வணிக, தைதுலம், பாலவ, கௌலவ கரஜி என்பன நலம் தரும் சகுனி, கிம்ஸ்துக்னம், பத்ரை, நாகவம் சதுஷ்பாத் என்பன விலக்கத்தக்கவை.

கிரகங்களின் நிலையும், நன்னாளும்

பரணி நட்சத்திரத்தின் மூன்றாவது நான்காவது பாதங்களிலும், கிருத்திகையின் நான்கு பாதங்களிலும், ரோகிணியின் முதல் இரண்டு பாதங்களிலும், சூரியன் கோசாரத்தில் சஞ்சாரம் செய்யும் காலம் (அக்னி நட்சத்திரம் எனக் குறிப்பிடப்படும் காலத்தில்) வீடு கட்ட ஆரம்பிக்கக் கூடாது. அவ்வாறு கட்டப்படும் வீட்டிற்கு நெருப்பால் அச்சம் உண்டாகும்.

கிருத்திகை, பூசம், மகம், பூரம், மூலம், ரேவதி எனும் நட்சத்திரங்களில் செவ்வாய் சஞ்சாரம் செய்யும் காலத்தில் வீடுகட்டத் துவங்கக் கூடாது. அவ்வாறு கட்டினால் மக்கள் மடிவர். நெருப்பாலும், பகையாலும் கெடுதல் உண்டாகும்.

இவ்வாறு செவ்வாய் கூடாத நட்சத்திரங்களில் சஞ்சாரம் செய்யும்போது சந்திரன் கடகம், மகரம், மீனம் என்னும் ஜலராசிகளில் எதிலாவது இருந்து சுக்கிரனால் பார்க்கப்பட்டால் செவ்வாயால் தோஷமில்லை. (அதாவது செவ்வாய் முன் கூறிய நட்சத்திரங்களில் இருந்தாலும் தோஷம் இல்லை.)

அசுவினி, ரோகிணி, மிருகசீரிஷம், ஹஸ்தம், உத்திரம், சித்திரை என்னும் நக்ஷத்திரங்களில் புதன் இருந்தாலும், புதன் கிழமையிலும், புதன் இருக்கும் லக்னத்திலும் அல்லது புதன் கன்னியில் உச்சம் பெற்றிருந்தபோதும் வீடு கட்டுவதால் சுகம், செல்வம், மக்கட்பேறு முதலியன உண்டாகும்.

ரோகிணி, மிருகசீரிஷம், பூசம், ஆயில்யம், உத்திரம், பூராடம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி என்னும் இந்த நக்ஷத்திரங்களால் குரு சஞ்சாரம் செய்யும்போதும், வியாழக்கிழமையிலும், குரு லக்னத்தில் இருக்கும் போதும், குரு உச்சம் பெற்றுள்ள போதும் வீடு கட்டத் துவங்குவதால் நலம் உண்டாகும்.

திருவாதிரை, புனர்பூசம், சித்திரை, விசாகம், அனுஷம், கேட்டை, பூராடம், அவிட்டம், சதயம், ரேவதி என்னும் நக்ஷத்திரங்களில் சுக்கிரன் சஞ்சாரம் செய்யும்போது வீடு கட்டத் துவங்குவது நன்மை தரும்.

பரணி, சுவாதி, அனுஷம், கேட்டை, அவிட்டம், சதயம், உத்திரட்டாதி என்னும் நக்ஷத்திரங்களில் சனி சஞ்சாரம் செய்யும் காலத்தில் வீடு கட்டத் துவங்கினால் யக்ஷர் ராக்ஷசர் பிசாசர் முதலியவர்களால் துன்பம் விளையும்.

இராகு சஞ்சாரம் செய்யும் நக்ஷத்திரம் முதல் பதினான்கு நக்ஷத்திரம் வரை இடையே உள்ளவைகளில் வீடு கட்டத் துவங்குதல் நலமல்ல.

குருவும், சுக்கிரனும் அஸ்தமயம் (சூரியனுடன் சேர்ந்திருக்கும்) நாட்களிலும் அல்லது அந்தக் கிரகங்கள் இராசியின் துவக்கத்திலோ, முடிவிலோ சஞ்சாரம் செய்யும்போதும் வீடு கட்டக்கூடாது. கட்டினால் நெருப்பால் தீமை விளையும்.

வீடுகட்டத் துவங்க லக்னம்

விருஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் எனும் இந்நான்கும் ஸ்திர லக்னங்கள் ஆகும். இந்த லக்னங்களில் முன்பு குறிப்பிட்டபடி வாரம், நட்சத்திரம், யோகம், கரணம், கிரகங்களின் நிலைகள் நன்றாக அமைந்துள்ளபோது வீடு கட்டத் துவங்கினால் பல தலைமுறைகளுக்கு அந்த இல்லம் சிறப்பாக விளங்கும்.

மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகியவை சரராசிகள் எனப்படும். இந்த ராசிகள் லக்னமாக அமைந்தபொழுது வியாபாரம் செய்யத் துவங்க நலம் தரும். பொருள்கள் விரைவாக விற்பனையாகும். ஆனால், இந்த லக்னங்களில் வீடு கட்டத் துவங்கினால் அவ்வில்லம் பலர் கைமாறும். நிலையாக வாழ முடியாமல் பல இன்னல்களை விளைவிக்கும்.

மிதுனம், கன்னி, தனுசு, மீனம் என்பன த்விஸ்வபால (இரட்டைத் தன்மை கொண்ட) லக்னங்கள். இவை வீடு கட்ட நடுத்தரமானவை.

லக்னத்தை நோக்கி கிரகங்களின் அமைப்பும், பலனும்

வீடு கட்டத் துவங்க எண்ணிய லக்னத்திற்கு ஆறு, பத்து, ஏழு என்னும் ராசிகளில் எந்தக் கிரகமும் இல்லாமல் இருப்பது நலம் தரும். இதைக் கவனியாமல் கட்டினால் அந்த இல்லம் விரைவில் வேறு ஒருவர் வசமாகும். லக்னத்தில் ஒரு கிரகம் இருந்து அக்கிரகத்துக்கு அந்த இல்லம் நீசம் அல்லது பகை இல்லமானாலும், லக்னத்திற்கு உரிய கிரகம் நீசம் அல்லது பகையான இல்லம் பெற்று இருந்தாலும், அல்லது லக்னத்திலிருந்து ஏழாவது அல்லது பத்தாவது இல்லத்தில் இருந்தாலும் வீடு கட்டக்கூடாது என்றும், அவ்வாறு கட்டினால் விரைவில் வேறு ஒருவருக்குச் சொந்தமாகிவிடும் என்றும் சில நூல்களில் காணப்படுகிறது.

இல்லத்தின் ஆயுள்

லக்னத்தில் குரு, ஏழில் புதன், ஆறில் சூரியன், சுக்கிரன் நாலில், சனி மூன்றில் இருக்கும் நாளில் சுப லக்னத்தில் வீடு கட்டத் துவங்கினால் அவ்வில்லம் நூறாண்டுகள் சிறப்புடன் விளங்கும்.

சுக்கிரன் லக்னம் அல்லது பதினொன்று, சூரியனும் புதனும் பத்து, குரு கேந்திரம் (1-4-7-10) உள்ளபோது வீடு கட்டத் துவங்கினால் அவ்வில்லம் நூறாண்டுகள் சிறப்புடன் விளங்கும்.

சுக்கிரன் லக்னமும், சூரியன் மூன்றாம் இல்லமும், குரு ஐந்தாம் இல்லமும், செவ்வாய் ஆறாம் இல்லமும் பெற்றுள்ள நாளில், சுப லக்னத்தில் வீடு கட்டத் துவங்கினால் அந்த வீடு இரு நூறாண்டுகள் சிறப்புடன் விளங்கும்.

ஏழில் சூரியனும், மூன்றில் சனியும் இருந்தபோது சுப லக்னத்தில் வீடு கட்டினால் அவ்வில்லம் நூறாண்டுகள் விளங்கும். மூன்றில் சூரியனும், ஆறில் செவ்வாயும் இருக்க சுப லக்னத்தில் வீடு அமைத்தால் அவ்வில்லம் இருநூறாண்டுகள் சிறப்புடன் விளங்கும்.

லக்னத்தில் சுக்கிரன், பத்தில் புதன், பதினொன்றில் சூரியன், கேந்திரத்தில் குரு (1-4-7-10) குரு இருந்தபோது துவங்கிய இல்லம் நூறாண்டுகள் சிறப்புப் பெற்று விளங்கும். நாலில் குரு, பத்தில் சந்திரன், பதினொன்றில் செவ்வாய் அல்லது சனி இருக்கும்போது கட்டிய வீடு எண்பது ஆண்டுகள் நிலைத்திருக்கும்.

துவங்கும்போது கிரகங்களின் நிலையால் வரும் பலன்கள்

லக்னத்தில் சூரியன் இடிவிழுதலால் கேடு, சந்திரன் செல்வக் குறை, செவ்வாய் மரணம், புதன் நலமும் வலிமையும் ஆயுள் வளர்ச்சியும், குரு அறச்செயல்களில் மிக ஈடுபடுதலால் நன்மை யும், சுக்கிரன் வம்ச வளர்ச்சியும், சனி ஏழ்மையும் தருவார்கள்.

லக்னத்தில் சூரியன் கேடு, சந்திரன் பகைவர்கள் கேடுறுதல், செவ்வாய் சிறைப்படுதல், புதன் செல்வ வளர்ச்சி, குரு அறச்செ யல்களில் ஈடுபாடு, சுக்கிரன் மிக்க மகிழ்ச்சி, சனி செய்யும் தொழில்கள் பயனற்றுப் போதல் என்னும் பலன்களைத் தருவார் கள் என்று வேறு நூல் கூறுகிறது.

மூன்றில் சுபகிரகம் நன்மையை விளைவிக்கும். மூன்றில் பாவகிரகமும் நன்மைதரும். மற்றும் விரைவில் விருப்பம் நிறைவேறச் செய்யும். நான்கில் குரு அரசாங்கத்தால் கௌரவம், நன்மை விளைவிக்கும். நான்கில் சந்திரன் செய்தொழில்களில் எப்பொழுதும் லாபம் விளைவிக்கும். நான்கில் சுக்கிரன் பூமி லாபம், நான்கில் சூரியன் நண்பர்களை அழிக்கும். நான்கில் செவ்வாய் நண்பர்கள் பகையாவார்கள். நான்கில் சந்திரன் அறிவு குன்றும். சனி நான்கில் வலிமை பெற்றால் லாபம் மிகும்.

ஐந்தில் குரு நண்பர்கள், ஆடையாபரணங்கள் முதலியவற்றின் சேர்க்கையும், லாபமும் விளைவிப்பான். ஐந்தில் சுக்கிரன் மக்கள், செல்வம் முதலிய அனைத்தையும் மிகச் செய்வான். புதன் ஐந்தில் தங்க நகைகள் இல்லத்தில் மிகும்படிச் செய்வான். ஐந்தில் சூரியன் புத்திரர்களால் கஷ்டம். ஐந்தில் சந்திரன் கலகம், ஐந்தில் செவ்வாய் பகையால் துன்பம் விளைவிப்பர். ஐந்தில் சனி எடுத்த காரியங்கள் அனைத்தையும் கெடுப்பான்.

ஆறில் சூரியன் அரசாங்க கௌரவம் மிகச் செய்வான். சந்திரன் ஆறில் மகிழ்ச்சி மிகச் செய்வான். செவ்வாய் ஆறில் லாபம், சனி ஆறில் பகைவர்களின் வலிமையை ஒடுங்கச் செய்வான். குரு ஆறில் செல்வமும், சுக்கிரன் கல்வியில் சிறப்பும். புதன் கௌரவமும் அறிவாற்றலும் மிகச் செய்வர்.

ஏழில் குரு யானை போன்ற ஊர்திகள், புதன் குதிரை, சுக்கிரன் நிலச் செல்வம், சூரியன், புகழ் செவ்வாய் துரோகம், சந்திரனும் சனியும் உடலுறுப்பு சிதைதல், அச்சம் போன்ற பலன்களை விளைவிப்பார்கள்.

எட்டில் சூரியன் பகையும் ஆபத்தும், சந்திரன் கேடும். செவ்வாய் அல்லது சனி அச்சமும். புதன் கௌரவமும் செல்வமும், வெற்றியும் சுக்கிரன் தம் சுற்றத்தினரால் சுகமும் விளையச் செய்வார்கள்.

ஒன்பதில் குரு அறிவாற்றலையும் செல்வத்தையும் மிகச் செய்வான். புதன் பலவகை போகங்களைத் தருவான். சுக்கிரன் நடுத்தர பாக்ய ரோகம் தருவான். சந்திரன் தாதுக்களை வலிவிழக்கச் செய்வான். சூரியன் அறநெறியில் ஈடுபடுவதைக் குறைப்பான். செவ்வாய் சக்தி இழக்கச் செய்வான். சனி கெட்ட நடத்தையால் மதிப்பு குறையச் செய்வான்.

பத்தாம் இடத்தில் சுக்கிரன் சயன சுகமும், குரு சௌக்யமும், புதன் வெற்றியும், சூரியன் செல்வ வளர்ச்சியும், சந்திரன் மிகுதியான சேமிப்பையும், செவ்வாய் உடல் நலத்தையும், சனி புகழ் கெடுதலையும் விளைவிப்பார்கள்.

பதினோராம் இடத்தில் எல்லாக் கிரகங்களும் நன்மையே விளைவிப்பார்கள். பன்னிரண்டாம் இடத்தில் கிரகங்கள் எதுவும் நன்மை தராது.

பெயரின் முதல் எழுத்தும் இல்லமும்

அ,ஆ,இ,ஈ,உ,ஊ முதலிய உயிர் எழுத்துக்கள் 'அவர்கம்' எனப்படும். இவை கிழக்குத் திசையைச் சார்ந்த எழுத்துக்கள். இவற்றிற்குத் தலைவன் கருடன்.

க, ங என்பவை 'கவர்கம்' (வடமொழில் 'க' நான்கு வகைப்படும். இவற்றில் கருணாகரன், கஜேந்திரன் என்பன போல 'க' அல்லது (GA) க (3) என்பது முதல் எழுத்தாக இருந்தால் கவர்கம் எனக்கொள்க.) இதற்குத் திசை தென்கிழக்கு. தலைவன் மார்ஜாலம் 'ச, ஞ' என்பன சவர்கமாகும். (சந்திரன் ஐயராமன் இவை சவர்கமாகும்.) இதற்குத் திசை தெற்கு. தலைவன் சிங்கம். 'ட, ண' இவ்விரண்டும் தென்மேற்குத் திசையைச் சார்ந்தவை. தலைவன் சுனகம். 'த,ந' (தம்பி, தசரதன் என Ta, Da இவ்விரண்டையும், நாகராஜன், நாராயணன் என்பன போல 'ந' முதல் எழுத்தாக உள்ள பெயரையும், கொள்க) என்பவை மேற்கு. தலைவன் ஸர்ப்பம். 'ப,ம' (பசுபதி பானு, மகேந்திரன் முதலிய PA, BA, BHA முதல் எழுத்துள்ள பெயர்களைக் கொள்க) பவர்கமாகும். திசை வடமேற்கு. தலைவன் எலி. 'ய,ர,ல,வ' என்பவை சுவர்கம். திசை வடக்கு. தலைவர் யானை. 'ச,ஷ,ஸ,ஹ' என்பன (SA) சவர்கம் திசை வடகிழக்கு. தலைவர் சசம் (முயல்).

இங்கு ஸர்ப்பம் கருடன் முதலியன அந்தந்த எழுத்துக்களின் பலன்களைக் கொண்டு அடையாளத்திற்காகக் கூறப்பட்டவையாகும். காரியத்தில் சாமர்த்தியம் உள்ளவனைப் 'புலி' என்பது போல, தன் பெயரின் முதல் எழுத்தும், மேற்படி எழுத்துக்களுக்கு உரிய தலைவனையும் கவனித்து நட்பு ஆனால் அத்திசையில் வீடு கட்டுவது நலம். பகையானால் அத்திசை விலக்கத்தக்கது. கருடவர்கம் உள்ளவர்கள் கருடனை தலையாகக் கொண்ட திசையிலும், பாம்பைத் தலையாகக் கொண்ட திசையிலும் வீடு கட்டலாம். ஆனால் ஸர்ப்பத்திற்கு உரிய எழுத்தை முதலாகக் கொண்ட பெயர் உள்ளவர்கள் கருட திசையில் வீடு கட்டினால் சிறப்பாக இருக்காது.

சுபகிரகங்களால் பார்க்கப்பட்ட விருஷப, மிதுன, சிம்ம, கன்னி, விருச்சிக, தனுசு, கும்ப, மீன லக்னங்களில் வீடு கட்டத் துவங்குவது நன்மை தரும். லக்னத்தில் இருந்து 5,6 வது ராசிகளில் சுபர்கள் வலிமை பெற்று, சந்திரன் 1-4-7-10 இல் இருந்து, பாபர்கள் 3,6,11 இல் இருந்தால், அந்தச் சமயத்தில் வீடு கட்டத் துவங்குவது மிகவும் நன்மை தரும். 8 இல் பாபர் இருக்கும் போது வீடுகட்டத் துவங்கினால் தலைவனுக்குக் கேடு விளையும்.

பெயரும், தக்க திசையும் காண வேறு முறை

அவர்கம்-1, கவர்கம்-2, சவர்கம்-3, டவர்கம்-4, தவர்கம்-5, பவர்கம்-6, யவர்கம்-7, சவர்கம்-8, (கிழக்கு 1, தென்கிழக்கு 2, தெற்கு 3, தென்மேற்கு 4, மேற்கு 5, வடமேற்கு 6, வடக்கு 7, வடகிழக்கு 8 என எண்களைக் கொள்க.)

தன் பெயருக்கு உரிய எழுத்தின் எண்ணையும், தான் வீடு கட்ட நினைத்த இடத்தின் திசைக்கு உரிய எண்ணையும் குறித்துக் கொள்க. பெயர் எண்ணை முதலிலும், அடுத்த திசை எண்ணையும் குறித்து வைத்துக் கொள்க. அதை எட்டால் வகுக்க மிகுந்துள்ள எண் தனமாகும். மேற்படி எண்களை இடம் மாற்றி (திசைக்கு உரிய எண்ணை முதலிலும், பெயரின் எண்ணை அடுத்தும் வைத்து) எட்டால் வகுத்தால், மீதி வருவது ரிணமாகும். ரிணத்தை விட தனம் அதிகமாக இருந்தால் அந்த இடத்தில் வீடு கட்டலாம். ரிணம் அதிகமானால் கூடாது.

உதாரணம்: கந்தன் என்பவன் வடக்கில் வீடு கட்டலாமா என்றால், கவர்கம் 2, வடக்கு 7 எனவே '27'ஐ &ஆல் வகுத்தால் மீதி '3', இது தனமாகும். எண்களை இடம் மாற்றினால் 72 இதை &ஆல் வகுத்தால் மீதி பூஜ்யம் '0'. எனவே ரிணம் இல்லை. ஆகவே, கந்தன் வடக்குத் திசையில் இல்லம் அமைத்து வாழ்வது சிறப்பாகும்.

ஆயம் காணும் முறை

'ஆயம்' என்பதைக் கொண்டு வீடு கட்டத் தக்க இடம் காணும் முறையும் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

வீடு கட்ட நினைப்பவன் நீளத்தையும், அகலத்தையும் அளந்து கண்டு கொள்க. (எட்டு யவதானியங்களை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கினால் உள்ள நீளம் ஓர் அங்குலமாகும். இத்தகைய அங்குலங்கள் பன்னிரண்டு கொண்டது விதஸ்தி எனப்படும். பன்னிரண்டு விதஸ்திகள் ஒரு ஹஸ்தம் எனப்படும்.) அகலத்தின்

ஹஸ்த அளவை நீளத்தின் ஹஸ்த அளவால் பெருக்கி வந்த தொகை பதம், க்ஷேத்திரபலம், த்ருவம் என்றெல்லாம் சொல்லப்படும். பதம் என்னும் அளவை எட்டால் வகுத்தால் ஒன்று மீதி இருந்தால் துவஜாயம், இரண்டு மீதி இருந்தால் தூமாயம், மூன்று மீதி இருந்தால் ஸிம்மாயம், நான்கு மீதி இருந்தால் சுவானாயம், ஐந்து மீதி இருந்தால் விருஷபாயம், ஆறு மீதி இருந்தால் கராயம், ஏழு மீதியிருந்தால் கஜாயம், எட்டு மீதியிருந்தால் காகாயம் எனப்படும்.

இவற்றில் துவஜாயத்திற்கு இந்திரன், தூமாயத்திற்கு நெருப்பு, யமன், ஸிம்மாயனத்திற்கும் சுவானாயத்திற்கும் நிருதி, விருஷபாயத்திற்கு வருணன், கராயத்திற்கு வாயு, கஜாயத்திற்கு குபேரன், காகாயத்திற்கு சிவன் அதிபர்களாவார்கள்.

சிம்மாயத்திற்கு வடக்கிலும், சிம்ம, கஜ ஆயங்களுக்கு மேற்கிலும் வீடு கட்டலாம். விருஷபாயத்திற்கு மேற்கில் தவிர்த்து வேறு திசைகளில் வீடு கட்டக்கூடாது. துவஜாயத்திற்கு தென்கிழக்கில் தவிர்த்து ஏனைய திசைகளில் வீடு கட்டலாம். சுவானாயத்திற்கு நைருதி திசையிலும், காகாயத்திற்கு வடகிழக்குத் திசையிலும் வீடு கட்டலாம்.

சில நூல்களில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

வீடு கட்டத் தேர்ந்தெடுத்த மனையின் அளவிற்கு வீட்டின் நீளம் கால்பாகத்தை விட மிஞ்சி சரி எண்ணிக்கை (இரட்டைப் படை)யாக இருந்தால் த்வஜாயம் ஆகும். கால் பங்கிற்கும் குறைந்து இரட்டைப்படை எண்ணிக்கையில் இருந்தால் கஜாயம் ஆகும்.

துவஜாயம் வெற்றி தரும். தூமாயம் மரணத்தை விளைவிக்கும். சிம்மாயம் வெற்றியைத் தரும். சுவானாயம் நோய்களை விளைவிக்கும். விருஷபாயம் அரச வைபவம் தரும். கராயம் துன்பம் தரும். கஜாயம் சுகம் மிகச் செய்யும். காகாயம் பயனற்றதாகும்.

இந்த ஆயநிர்ணயத்தில் ஓரங்குலம் குறைந்தாலும், மிகுந்தாலும், ஆயத்திற்கு உரிய பலன்களை நிறைவாகத்தரும்.

மனைக்கு உரிய திதி நக்ஷத்திர வாரம் முதலியவற்றை அறிதல்

மனிதர்களுக்கு உரிய நக்ஷத்திர வார திதி முதலியவற்றைப் போலவே மனைக்கும் திதி - வார - நக்ஷத்திர - யோக - கரணங்களைக் கணக்கிடும் முறை ஒன்று உள்ளது. அதன்படி மனையின் நீளத்தை அகலத்தால் பெருக்க வந்த தொகை 'பதம்' எனப்படும். 'பதத்'தை ஆறால் பெருக்கி முப்பதால் வகுக்க, மீதியுள்ளது பிரதமை முதலான திதியாகும். பதத்தை ஒன்பதால் பெருக்கி ஏழால் வகுத்தால் மீதி வருவது வாரமாகும். பதத்தை எட்டால் பெருக்கி இருபத்தேழால் வகுத்தால் மீதி வருவது அசுவினி முதலான நட்சத்திரமாகும். நான்கால் பதத்தைப் பெருக்கி இருபத்தேழால் வகுத்தால் மீதி வருவது யோகமாகும். பதத்தை ஐந்தால் பெருக்கி ஏழால் வகுத்தால் வருவது கரணமாகும். பதத்தை ஒன்பதால் பெருக்கி நூற்றி இருபதால் வகுக்க மீதி வருவது ஆயுள் எனப்படும். பதத்தை ஒன்பதால் பெருக்கி எட்டால் வகுக்க மீதி வருவது 'திக் பதி' எனப்படும்.

அவ்வாறு வகுக்கும் போது ஒன்றும் மீறாத போது அத்தொகைக்கு 30 கூட்ட திதியும், ஏழு கூட்ட வாரமும், இருபத்தேழு கூட்ட நக்ஷத்திரமும், ஏழு கூட்ட யோகமும், ஏழு கூட்ட கரணமும், இருபது கூட்ட ஆயுளும், எட்டு கூட்ட திக்பதியும் எனக்கொள்க.

பதத்தை எட்டால் பெருக்கி பன்னிரண்டால் வகுத்தால் மீதி வரும் எண் 'தன'மாகும். பத்தை மூன்றால் பெருக்கி எட்டால் வகுத்தால் வருவது 'ரிண'மாகும்.

இவ்வாறு தனம், ரிணம் முதலியவற்றையும், வாரம் முதலியவற்றையும் கண்டு அவற்றிற்குக் கீழே குறிப்பிட்டபடி பலன்களைக் காண்க.

தனம், ரிணம் முதலியவற்றின் பலன்

இவ்வாறு கணக்கிடும் போது 'தனம்' மிகுந்திருந்தால் செல்வம் வளரும். ரிணம் மிகுந்திருந்தால் கடனாளியாவான்; ஏழ்மையும் மிகும். தன, ரிணங்கள் சமமாக இருந்தால் வருவாயும், செலவும் சமமாக இருக்கும்.

திதி பலன்

சுக்ல பிரதமை துக்கத்தை விளைவிக்கும். சதுர்த்தி - சதுர்த்தசி இரண்டும் வீட்டை அழிக்கும். அமாவாசை ஆனால் இல்லத் தலைவன் மரிப்பான். மீதி உள்ள திதிகள் நன்மை தரும்.

தம் பெயர்களுக்கேற்பத் திசைகளை தேர்ந்தெடுத்தல்

திருமணத்திற்குச் சிலர் பெயர்ப் பொருத்தம் பார்ப்பர். ஆனால், அந்தந்த நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களுக்கு நக்ஷத்திரத் திற்கு உரிய எழுத்துக்களை அறிந்து அவ்வெழுத்து முதலாகக் கொண்டபடி பெயர் வைத்தபோதுதான் இப்பொருத்தம் பயன் தரும். எடுத்துக்காட்டாக கிருத்திகையில் பிறந்தவர்களுக்கு ஆ,ஈ.ஊ,ஏ என்னும் நான்கு எழுத்துக்கள் உரியன. எழுத்துக்கள் நான்கும் நான்கு பாதங்களுக்கு உரியன. எனவே, கிருத்திகை முதல் பாதத்தில் பிறந்தவனுக்கு 'ஈசுவரன்', மூன்றாம் பாதத்தில் பிறந்தவனுக்கு 'உபேந்திரன்', நான்காம் பாதத்தில் பிறந்தவனுக்கு 'ஏகாம்பரம்' போன்ற பெயர்கள் தகும். இவ்வாறே தேர்ந்தெடுக்க நினைத்த பெண்ணின் பெயரும் பிறந்த நக்ஷத்திரத்திற்கு ஏற்ப அமைய வேண்டும். ஆனால், பழக்கத்தில் நிலைத்துவிட்ட பெயரின் முதல் எழுத்துக்கு உரிய நக்ஷத்திரங்களைக் கொண்டு பொருத்தம் பார்ப்பதும் பலன் தரும் என்பது சிலரின் கருத்து.

ஜோதிட சாஸ்திரத்தில் சில சிறப்பான செயல்களை நாம் நக்ஷத்திரம் அதாவது பெயர் ராசி பார்த்துச் செய்ய வேண்டும் எனக் கூறுகிறது. அதன்படி நாடு, கிராமம், வீடு, போர், தொழில், கோர்ட்டு விவகாரங்கள் முதலியவற்றைப் பற்றிய விஷயங்க ளுக்கு நாம் நக்ஷத்திரத்தைக் கொண்டு பலன் அறிய வேண்டும்.

'' தேசே க்ராமே க்ருஹே யுத்தே ஸேநாயாம்
வ்யவஹாரகே ।
நாமராசேः ப்ரதானத்வம் ஜன்மராசிம் ந சிந்தசேத்'' ।।
(ஜோதிர் நிபந்தம்)

காகிண்யாம் வர்க சுத்தெளச தானே த்யூதே ஜ்வரோதயே ।
மந்த்ரே புனர்பூவரணே நாமரா சேः பிரதானதா ।।
(லல்லாசாரியர்)

தான் வசிக்கத்தக்க நாடு, கிராமம், வீடு என்பனவற்றைத் தேர்ந்து எடுக்கும்போதும், போர், தொழில் துவக்கம் அல்லது உத்யோகத்தில் அமர்தல், கோர்ட் விவகாரம், தானம் செய்தல்,

சூதில் வெற்றி தோல்விகள் அறிதல், காய்ச்சல் கொண்டபோது குணமாகக் கூடிய நாட்கள் முதலியவற்றை உணர்தல், மந்திர உபாசனை துவங்க நாள் தேர்ந்தெடுத்தல், பெண்ணுக்கு இரண்டாவது திருமணம் முடிக்க வரனைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவற்றிற்குப் பெயர் ராசி அதாவது பெயரின் முதல் எழுத்துக்கு உரிய நக்ஷத்திரம் அறிந்து அதற்கு ஏற்ப பொருத்தம் பார்த்தல் தகும் என்பது சோதிட நூல் முடிவாகும்.

இதன்படி தன் பெயருக்கு உரிய நட்சத்திரம் கொண்ட ராசிக்குத் தக்க நாடு, கிராமம் முதலியவற்றில் வசித்தல் நலம் தரும். (தம் பெயருக்கு ஏற்ப கிராமத்தின் பெயர் அமையாத போது தம் பெயருக்கு ஏற்ற பெயரைத் தம் இல்லத்திற்கு வைத்துக் கொள்வது நலம். வீட்டிற்கு உரிய பெயர் வைத்தல் என்பதைப் பற்றி இந்நூலின் முடிவில் உள்ள அத்தியாயத்தில் விளக்கம் காண்க.)

தன் பெயரின் ராசிக்குத் தான் வசிக்க நினைத்த அல்லது வீடு கட்ட நினைத்த கிராமத்தின் பெயர் 1-7 ராசிகளில் ஒன்றானால் பகைவரால் துன்பம், 3-6 ராசிகளில் ஒன்றானால் கேடு, 4-8-12 ராசிகளில் ஒன்றானால் தீராத நோய், 2, 5, 6, 10, 11 ராசிகளில் ஒன்றானால் மிக்க நன்மை உண்டாகும்.

4-8-12 ராசிகளில் ஒன்றானால் வரும் செல்வம் செலவாகிவிடும் என்பதும், 1-3-6-7 ர்ராசிகளில் ஒன்றானபோது குடும்ப தனம் வீணாகிவிடும் என்பதும், மக்கட் செல்வம் குறையும் என்பதும் பாதராயணரின் கொள்கையாகும். (கிராமத்தின் பெயரின் முதல் எழுத்துக்கு உரிய நக்ஷத்திரத்தைக் கொண்டு கிராம ராசியை அறிக)

இதன்படி

மேஷராசியில் பிறந்தவர்களுக்கு விருஷப, சிம்ம, தனுசு, மகர, கும்ப ராசிகள் நலம் தரும்.

விருஷப ராசியில் பிறந்தவர்களுக்கு மிதுன, கன்யா, மகர, கும்ப, மீன ராசிகள் நலம் தரும்.

மிதுன ராசியில் பிறந்தவர்களுக்கு கடகம், துலாம், கும்பம், மீனம், மேஷம் ஆகியவை நலம் தரும்.

கடக ராசியில் பிறந்தவர்களுக்கு சிம்மம், விருச்சிகம், மீனம், மேஷம், விருஷபம் என்னும் ராசிகள் நலம் தரும்.

சிம்ம ராசியில் பிறந்தவர்களுக்கு கன்வி, தனுசு, மேஷம், விருஷபம், மிதுனம் என்னும் ராசிகள் நலம் தரும்.

கன்னி ராசியில் பிறந்தவர்களுக்கு துலாம், மகரம், விருஷபம், மிதுனம், கடகம் என்னும் ராசிகள் நலம் தரும்.

துலா ராசியில் பிறந்தவர்களுக்கு விருச்சிக, கும்ப, மிதுன, கடக, சிம்ம, கன்னி எனும் ராசிகள் நலம் தரும்.

விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு தனுசு, மீனம், கடகம், சிம்மம், கன்னி எனும் ராசிகள் நலம் தரும்.

தனுர் ராசியில் பிறந்தவர்களுக்கு மகரம், மேஷம், சிம்மம், கன்னி, துலாம் என்னும் ராசிகள் நலம் தரும்.

மகர ராசியில் பிறந்தவர்களுக்கு கும்பம், விருச்சிகம், கன்னி, துலாம் என்னும் ராசிகள் நலம் தரும்.

கும்ப ராசியில் பிறந்தவர்களுக்கு மீனம், மிதுனம், துலாம், விருச்சிகம், தனுசு என்னும் ராசிகள் நலம் தரும்.

மீன ராசியில் பிறந்தவர்களுக்கு மேஷம், கடகம், விருச்சிகம், தனுசு, மகர ராசிகள் நலம் தரும்.

மேற்கூறிய ராசிகளில் பிறந்தவர்களுக்கு நலம் தரக்கூடிய ராசியைச் சார்ந்த கிராமத்தில் (நகரத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி பெயர்கள் இருப்பதால் அதைக் கொண்டு வசிக்கத்தக்க இடமறிந்து) வீடுகட்டிக் கொள்ளுதல் செல்வம், சுகம், குடும்பநலம் முதலிய பலன்களைத் தரும். வேறு நிர்ப்பந்தத்தால், உத்தியோகம் முதலிய காரணங்களால் தம் ராசிக்குத் தகாத கிராமங்களில் வசிக்க நேர்ந்தால் தம் பெயருக்குத் தக்க திசையில் உள்ள வீட்டில் வசிப்பது நலம் தரும். நகரத்தில் வசிப்பவர்கள் தம் வீடுகளுக்குத் தனித்தனியாகப் பெயர்கள் சூட்டிக் கொள்வது நினைவில் கொள்ளத்தக்கது. தம் ராசிக்கு ஏற்ப பெயர் வைத்துக் கொள்வதால் நன்மை விளையும்.

கிராமங்களில் வசிக்கத்தக்க திசை அறிதல்

அந்தந்த ராசிக்கு உரியவர்கள் தமக்குத் தக்க கிராமத்தில் (நகரத்தில் தம் பெயருக்கு ஏற்ற பெயர் கொண்ட பகுதியில்) வீடு கட்ட நினைக்கும் போது தமக்கு ஏற்ற திசைகளை அறிதலும் முக்கியமாகும். மனைக்குத் திசை அறியும் வகை முன்பு கூறப்பட்டது. அதைப்போலவே கிராமத்தின் பரப்புக்கேற்றபடி திசையறிக. எண் திசைகளுடன் நடுப்பகுதியும் சேர மொத்தம் ஒன்பது திசைகளாகக் கொள்க.

மேஷ ராசியில் பிறந்தவர்கள் வடக்குத் திசையைத் தவிர்க்க

வும். அவ்வாறே விருஷப, மிதுனங்களில் பிறந்தவர்கள் நடுப்பகுதியையும், கடகத்தில் பிறந்தவர்கள் தென்மேற்குத் திசையையும், சிம்மத்தில் பிறந்தவர்கள் தெற்குப் பகுதியையும், கன்யா ராசியில் பிறந்தவர்கள் தெற்குப் பகுதியையும், துலா ராசியில் பிறந்தவர்கள் வடமேற்குப் பகுதியையும், தனுர் ராசியில் பிறந்தவர்கள் மேற்குப் பகுதியையும், மகர ராசியில் பிறந்தவர்கள் நடுப்பகுதியையும், கும்ப ராசியில் பிறந்தவர்கள் நடுப்பகுதியையும், மீன ராசியில் பிறந்தவர்கள் வடகிழக்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளையும் தவிர்க்க வேண்டும்.

எழுத்துக்களும் திசைகளும்



'அ'வர்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு கிழக்கு தன வர்கம், மேற்கு பகை வர்கம். 'க'வர்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு வடகிழக்கு தனவர்கம், வடமேற்கு பகைவர்கம். 'சவர்கத்தில்' பிறந்தவர்களுக்குத் தெற்கு தனவர்கம், வடக்கு பகைவர்கம். 'ட'வர்கத்தில் பிறந்தவர்களுக்கு தென்மேற்கு தனவர்கம், வடகிழக்குப் பகைவர்கம். 'த'வர்கத்தில் பிறந்தவர்களுக்கு மேற்கு தனவர்கம், கிழக்கு பகைவர்கம். 'ப'வர்கத்தில் பிறந்தவர்களுக்கு வடமேற்கு தனவர்கம். தென்கிழக்கு பகைவர்கம். 'ய'வர்கத்தில் பிறந்தவர்க

ளுக்கு வடக்கு தனவர்கம், தெற்கு பகைவர்கம். 'ச'வர்கத்தில் பிறந்தவர்களுக்கு வடகிழக்கு தனவர்கம், தென்கிழக்கு பகைவர் கம்.

பகைவர்கத்திற்கு உரிய திசையை விட்டு, ஏனைய திசைகளில் வசிப்பது நலம் தரும். இது சுய வீடு உள்ளவர்களுக்கே அல்லாது வாடகை வீட்டில் வசிப்பவர்களுக்கும் பொருந்தும்.

திசைகளைப் பற்றிய விளக்கம்

தெற்கு வடக்காகத் தெரு இருக்கும் போது இரண்டு பக்கங்களிலும் வீடுகள் கட்டப்படுகின்றன. அவற்றில் மேற்குப் பகுதியில் உள்ள வீடுகள் கிழக்கு நோக்கிய தலைவாயில் கொண்டிருக்கும். எனவே, நோக்கிய திசையைக் கொண்டு அவை கிழக்கு திசைக்கு உரிய வீடுகளாகும் என்பது ஒரு கருத்து. ஆனால் வீட்டில் உள்ளவர்கள் மேற்கு திசையை நோக்கி உட்புகுவதாலும், தெருவின் மேற்குப் பகுதியில் வீடுகள் இருப்பதாலும் அவை மேற்குத் திசையைச் சார்ந்த வீடுகள் என்று கருதத் தகும் என்பது ஒரு கருத்து. ஆனால் காற்று எத்திசையில் இருந்து வருகிறதோ அதற்கேற்ற பெயர் கொண்டுள்ளது. தெற்கு திசையில் இருந்து வீசுவது தென்றல். அக்காற்று வடக்கு திசையை நோக்கி வீசுவ தால் வடக்குக்காற்று ஆகாது. அதைப் போலவே கிழக்கை நோக்கித் தலைவாயில் இருக்கும்போது கிழக்கு திசையிலிருந்து காற்று, ஒளி, ஒலி முதலியன இல்லத்திற்குள் பரவுவதால் கிழக்குத் திசைக்கு உரிய தெய்வத்தின் அல்லது சக்தியின் பிரபாவம் இந்த இல்லத்தில் மிகுந்திருக்கும். ஆகையால் அது கிழக்கைச் சார்ந்த இல்லம் என்பதே தகும் என்று ஒரு கருத்து நிலவுகிறது. எந்தத் திசையை நோக்கித் தலைவாயில் கொண்டிருக்குமோ அந்தத் திசைக்கு உரிய பிரபாவம் அவ்வில்லத்தில் வசிப்பவர்களிடம் காணப்படுமென்பது முன்பு விளக்கப்பட்டுள்ளது. எம் அனுபவத் தில் பெரும்பாலும் சரியாகக் காணப்பட்ட விஷயங்கள் அங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

பெயர் ராசியைக் கொண்டு அந்தந்தத் திசைகளில் வசிப்ப தால் உண்டாகும் பலன்களைக் கீழ்க்கண்டவாறு உணரலாம்.

உயிர் எழுத்துக்களில் ஒன்று முதல் எழுத்தாக உள்ளபோது அச்சுதன், ஆனந்தன், இளங்கோ, ஈசுவரன், உமாபதி, ஊர்மிளா, எதிராசன், ஏழுமலை, ஐயப்பன், ஓம்பிரகாஷ் போன்ற பெயர் கொண்டவர்களுக்கு கிழக்கு செல்வம் தரும் தென்கிழக்கு நடுத்தர சுகம், தெற்கு போகங்கள் மிகுதல், தென்டேற்கு நோய், மேற்கு

பகை, வடமேற்கு கலகம், வடக்கு மிக்க சுகம், வடகிழக்கு ஆயுள் குறைவு என்னும் பலன்களைத் தரும்.

'க' வர்கத்தைச் சேர்ந்த கணபதி, காசிநாதன், ஞானேசுவரன், ஞானானந்தம் போன்ற பெயர்கள் கொண்டவர்களுக்கு கிழக்கு ஆயுள் குறைவு, தென்கிழக்கு சுகம், தெற்கு குறைந்த அளவில் சுகம், தென்மேற்கு போகங்கள் மிகுதல், மேற்கு பகை, வட மேற்கு நோய், வடக்கு கலகம், வடகிழக்கு செல்வ வளர்ச்சி என்னும் பலன்களைத் தரும்.

'ச' என்னும் வர்கத்தைச் சார்ந்த எழுத்து முதலாக சலபதி, ஜகன்னாதன், ஜம்புலிங்கம் போன்ற பெயர்கள் கொண்டவர்க ளுக்கு கிழக்கு மிக்க சுகம், தென்கிழக்கு ஏழ்மை, ஆயுள் குறைவு, தெற்கு மிக்க சுகம், தென்மேற்கு குறைந்த அளவில் லாபம், மேற்கு மிக்க சுகம். வடமேற்கு நோய், வடக்கு பகை வடகிழக்கு கலகம் என்னும் பலன்களைத் தரும்.

'ட' என்ற வர்கம் முதல் எழுத்து கொண்ட (டேவிட், டாகுர், முதலிய பெயர்கள் வடநாட்டிலும் வேறு மதத்தினரிடமும் காணப்படுகின்றன.) நபர்களுக்கு கிழக்கு கலகம், தென்கிழக்கு மிக்க சுகம், தெற்கு ஆயுள் குறைவு, தென்மேற்கு சுகம், மேற்கு குறைந்த அளவில் சுகம், வடமேற்கு மிக்க சுகம், வடக்கு நோய், வடகிழக்கு பகை என்னும் பலன்களைத் தரும்.

'த' என்ற எழுத்தை முதலாகக் கொண்ட (தங்கமணி, தியாகராசன், தனசேகரன், தாண்டவராயன், தசரதன், நாகராஜன் போன்ற பெயர்களைக் கொண்ட)வர்களுக்கு கிழக்கு பகை, தென்கிழக்கு கலகம், தெற்கு சுகம், தென்மேற்கு ஆயுள் குறைவு, மேற்கு மிக்க லாபம், வடகிழக்கு நோயால் துன்பம் ஆகியவற்றை விளைவிக்கும்.

'ப' என்ற எழுத்தை முதலாகக் கொண்ட (பத்மநாபன், பாப்பம்மாள், பசுபதி, பாலன், பலராமன், மகேசன், மஞ்சுளா போன்ற பெயர்கள் உள்ள)வர்களுக்கு கிழக்கு நோய், தென்கி ழக்கு பகை, தெற்கு கலகம், தென்மேற்கு மிக்க லாபம், மேற்கு ஆயுள் குறைவு, வடமேற்கு மிக்க லாபம், வடக்கு சுபம், வடகிழக்கு மிக்க செல்வம் முதலிய பலன்களைத் தரும்.

'ய' என்ற வர்கத்தைச் சேர்ந்த (யக்ஞராமன், யசோதா, ராகவன், லக்ஷ்மணன், வெங்கடேசன், விஜயன் போன்ற) பெயர்க ளைக் கொண்டவர்களுக்கு கிழக்கு மிக்க சுகம், தென் கிழக்கு நோய், தெற்கு பகை, தென்மேற்கு கலகம், மேற்கு செல்வ

வளர்ச்சி, வடமேற்கு ஆயுள் குறைவு, வடக்கு மிக்க சுபம், வடகிழக்கு சுகம் என்னும் பலன்களைத் தரும்.

'ச' (Sa) வர்கத்தைச் சேர்ந்த (சாரங்கன், சண்முகம், சபாபதி, ஹரி போன்ற) பெயர்களைக் கொண்டவர்களுக்கு கிழக்கு மிக்க சுகம், தென்கிழக்கு மிக்க சுகம், தெற்கு நோய், தென் மேற்கு பகை, மேற்கு கலகம், வடமேற்கு மிக்க சுகம், வடக்கு ஏழ்மை, வடகிழக்கு மிக்க மகிழ்ச்சி ஆகிய பலன்களைத் தரும்.

வசிக்கும் வீட்டிற்கு மட்டுமல்லாது தாம் செய்தொழிலை நோக்கிச் செல்லும் திசைகளுக்கும் இதைக் கொண்டு பலன் அறியலாம். அந்தந்தத் திசையை நோக்கிச் செல்வதால் அந்தந்தப் பலன்கள் உண்டாகும் எனக் கொள்க.

இவ்வாறு கிராமத்தில் தனக்கு ஏற்ற திசையில் மனை அமைத்துக் கொள்வதும், தனக்கு ஏற்றபடி தலைவாயில் கொண்ட இல்லம் அமைத்துக் கொள்வதும் நன்மை தரும் என்று உணர்க.

இங்கு ஓர் ஐயம் தோன்றலாம். தந்தைக்கும் மகனுக்கும் வேறு வேறு பெயர்கள் இருக்கும். தந்தையின் பெயருக்குத் தகுந்தபடி அமைந்த இல்லம் தனயனுக்குப் பொருந்தாவிடில் என்ன செய்வது? என்றபோது தந்தை சிறப்பாக வளர்ந்து வாழ்ந்த இல்லத்தில் தனயன் சிறப்பிழந்து வாழ்வதையும், தந்தை வறுமையால் துன்புற்று வசித்த வீட்டில் தனயன் மிக்க செல்வம் சேர்த்துப் பெருமையாக வாழ்வதையும் காண்கின்றோம். தந்தைக்குப் பின் வீடு நிலங்களை விற்று விடுபவரையும், வேறு இடத்தில் வீடு கட்டி வாழ்பவரையும் காண்கிறோம். எனவே, தந்தையின் வீடு தனக்குச் சரிப்படாத நிலையில் வீட்டிற்குத் தன் பெயருக்கு ஏற்ப சில மாறுதல்களைக் கட்டடத்தில் செய்து சிறப்புப் பெறலாம். இதன் விளக்கம் அடுத்த அத்தியாயங்களில் விளக்கப்படும்.

வீடு கட்டத் துவங்கச் சிறந்த நாள்

சுக்கிரன் உச்சம் பெற்று லக்னத்திலும், குரு உச்சம் பெற்று நான்காம் இடத்திலும், சனி உச்சம் பெற்று பதினோறாம் இடத்திலும் இருக்கும்போது துவங்கப் பெற்ற வீடு ஆயிரம் ஆண்டுகள் சிறப்பாக விளங்கும்.

வீடு கட்டத் துவங்கக் கூடாத நாட்கள்

குரு சுக்கிரர்கள் அஸ்தமயம் பெற்றுள்ள போதும் (ஏதேனும் ஒரு கிரகம் சூரியனை நெருங்கி இருத்தல் அஸ்தமயம் எனப்படும். பஞ்சாங்கங்களில் அந்தந்த ஆண்டு கிரகங்கள் அஸ்தம் பெறும்

நாட்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.) கிரகம் பால்யம் அல்லது கிழட்டுத் தன்மை பெற்றுள்ள போதும் (ஏதேனும் ஒரு கிரகம் ஒரு ராசியில் பிரவேசம் செய்யும் முதல் ஐந்து நாட்கள் பால்ய காலம் எனவும், ஒரு ராசியை விட்டு வேறு ராசியில் பிரவேசம் செய்வதற்கு முன் உள்ள ஐந்து நாட்கள் கிழட்டுத் தன்மை கொண்டதாகவும் கணக்கிடப்படும்) கார் பருவத்திலும் வீடு கட்டத் துவங்கக் கூடாது.

தனக்குக் குழந்தை பிறந்த தீட்டுள்ள நாட்களிலும், நெருங்கிய உறவினரிழப்பால் தீட்டுள்ள நாட்களிலும், மனைவி வீட்டிற்குப் புறம்பாகி உள்ள நாட்களிலும், மனைவி கருவுற்றிருக்கும் போதும் வீடு கட்டத் துவங்கக் கூடாது. ஒன்பது மாதங்கள் நிறைந்து பிள்ளைப் பேற்றிற்கு உரிய நாட்கள் நெருங்கியிருக்கும் போது வீடு கட்டத் துவங்கலாம் எனச் சில நூல்களில் குறிப்பிட்டுள்ளது. எவ்வளவு சிறந்த முகூர்த்தமுள்ளதாயினும் இரவு நேரம் துவங்கத்தக்கதல்ல. இரவில் நான்காவது சாமம் அதாவது சூரிய உதயத்திற்கு மூன்று மணிநேரம் முன்பு வரை உள்ள காலம் நல்லது.

வீடு கட்டத் துவங்கும் போது கவனத்தில் கொள்ளத்தக்கவை

முதலில் மனையைச் சமப்படுத்திப் பள்ளம், குழி முதலியன இல்லாமல் மேற்கு தெற்குப் பகுதிகள் சற்று மேடாக இருக்கும் படி சமப்படுத்திக் கொள்க. திசைகளைச் சரியாகக் குறிப்பிடக்கூடிய திசை காட்டியந்திரத்தின் உதவியால் முதலில் தென்மேற்குத் திசையைக் கண்டு அங்கு ஒரு வலிவுள்ள முளையை நடவேண்டும். அங்கு மூலை மட்டம் என்னும் கருவியின் உதவியால் கயிற்றை இழுத்துப் பிடித்துத் தென்கிழக்கு மூலையைக் கண்டு அங்கு ஒரு முளையை நடவேண்டும். பிறகு தென்மேற்குப் பகுதியிலிருந்து கயிற்றை நேராகப் பிடித்து மூலைமட்டத்தின் உதவியால் வடமேற்கு மூலையைக் கண்டு அங்கு ஒரு முளையை நடவேண்டும். பிறகு அங்கிருந்து வடகிழக்கு மூலையை அறிந்து அங்கும் ஒரு முளையை நடவேண்டும். இவ்வாறு மனையில் நான்கு திசைகளையும், நான்கு மூலைகளையும் அளவிட்டறிந்த பின் கடைக்கால் தோண்ட வேண்டும். சில அங்குலம் வடக்குப் பகுதி ஏனைய பகுதிகளை விட அதிகமாக இருக்கும்படி அளவிடுதல் நலம்.

முதலில் வடகிழக்கு அல்லது கிழக்கு அல்லது வடக்குப் பகுதிகளில் கிணறு எடுக்க வேண்டும். கிணறு கட்டியபின் அக்கிணற்றின் நீரைக் கொண்டேதான் வீட்டைக் கட்ட வேண்டும். குழாய் நீரைப் பயன்படுத்துவதாயின் வடகிழக்குப் பகுதியில் நீரைச் சேமித்து வைக்கத்தக்க தொட்டி கட்ட வேண்டும். மேற்கு அல்லது தெற்கு (தென் மேற்கு, தென் கிழக்குப் பகுதிகளில்) நீரைச் சேமித்து வைக்கக்கூடாது. பிறர் மனையிலிருந்து நீர் கொண்டுவந்து வீடு கட்டுவது சிறந்ததல்ல. ஒருவேளை வழி யின்றி பிறரது கிணற்று நீரைப் பயன்படுத்த வேண்டியிருந்தால் கட்ட இருக்கும் வீட்டிற்கு வடகிழக்கு, கிழக்கு, வடக்குப் பகுதிகளில் இருக்கும் கிணற்றினால் தோஷம் இல்லை. அவ்வா றின்றி தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்குத் திசைகளில் உள்ள நீரைக் கொண்டு வீடுகட்டுவது சிறந்ததல்ல.

கடைக்கால் தோண்டும் போது முதலில் வடகிழக்கில் துவங்கி அங்கிருந்து வடமேற்கு, வடகிழக்கிலிருந்து தென்கி ழக்கு, வடமேற்குத் திசையில் இருந்து தென்மேற்குத் திசைகளை நோக்கிப் பள்ளம் தோண்ட வேண்டும். பிறகு தெற்குப் பகுதி யைத் தோண்டி முடிக்க வேண்டும்.

கட்டத் துவங்கும் போது முதலில் தென்மேற்கிலிருந்து தென் கிழக்கிற்கும், வடமேற்கிலிருந்து வடகிழக்குக்கும் கட்டத் துவங்க வேண்டும். அதாவது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியும் தெற்கிலி ருந்து வடக்கு நோக்கியும் கட்ட வேண்டும்.

நாள்தோறும் வேலை முடிக்கும்போது தென்மேற்குப் பகுதி உயர்ந்திருக்கச் சில செங்கல் வரிசைகளை அடுக்கிக் கட்டி வடகிழக்குப் பகுதி தாழ்ந்திருக்கும்படிச் செய்ய வேண்டும்.

வீடுகட்டச் சேமித்து வைக்கும் செங்கல், மணல் போன்றவற் றைத் தெற்கு அல்லது மேற்குப் பகுதியில் சேமித்து வைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் கிழக்கு, வடகிழக்குப் பகுதியில் குவியலாகச் சேமிக்க வேண்டாம்.

கடைக்காலில் சுவர் எழுப்பிப் பக்கத்தில் பள்ளங்களை மண்ணிட்டு மூடும்போது முதலில் தென்மேற்குப் பகுதியிலிருந்து தென்கிழக்காகவும், தென்மேற்குத் திசையிலிருந்து வடமேற்காக வும் பிறகு தென்கிழக்கிலிருந்து வடமேற்காகவும், பிறகு வடகிழக் கிலிருந்து வடமேற்காகவும் மூடிக்கொண்டு வரவேண்டும்.

பழைய வீடுகளைப் புதுப்பிக்கும்போது அல்லது பழைய சுவரை அகற்றும்போது வடகிழக்குப் பகுதியில் துவங்கி நீக்க

வேண்டும். அவ்வாறு இடித்த செங்கல் முதலிவற்றைத் தெற்கு அல்லது மேற்குப் பகுதியில் குவிக்க வேண்டும்.

வீட்டுச் சுவர், அல்லது சுற்றுச் சுவர் ஆகியவை வடகிழக்குப் பகுதியில் வட்டமாக வளைந்துள்ள நிலையில் கட்டக்கூடாது. சதுர மூலையாகவே கட்ட வேண்டும்.

வீட்டுச் சுவர், அல்லது சுற்றுச் சுவர் ஆகியவை வடகிழக்குப் பகுதியில் வட்டமாக வளைந்துள்ள நிலையில் கட்டக் கூடாது. சதுர மூலையாகவோ கட்ட வேண்டும்.

சாஸ்திரத்தை ஒட்டியும் அனுபவத்தை ஒட்டியும் இந்த விஷயங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

இவற்றிற்கு மாறாகச் செய்யும் போது காலதாமதம், தடைப்படுதல், வீட்டுத் தலைவன் அல்லது குடும்பத்தில் யாரேனும் ஒருவருக்கு உடல்நிலை சரியின்மை போன்ற துன்பங்கள் நேருகின்றன. வீடு கட்டத் துவங்கு முன் சுற்றுச்சுவர் (காம்பௌண்ட்) கட்டினால் வேறு வீட்டைச் சார்ந்த வாஸ்து தோஷங்கள் தாக்காமலிருக்கும்.

பூமி பூஜை

வீடு கட்டத் துவங்கு முன் ஒரு நன்னாளில் விநாயகர், துர்க்கை முதலிய தெய்வங்களையும், தன் குல தெய்வத்தையும் நினைத்துப் பூஜை செய்து பிறகு பூதேவியையும் மனைக்கு எட்டு திசைகளில் உள்ள திக்குகளுக்கும் உரிய திதி பாலக தெய்வங்களையும் அந்தந்தத் திக்கில் மானசீகமாக ஆவாஹனம் செய்து பழம், வெற்றிலைப் பாக்கு, தீபம் முதலியவற்றால் பூஜை செய்து வணங்க வேண்டும்.

கிணறு இருக்க வேண்டிய இடம்

மனை, அல்லது வீட்டின் நடுவில் கிணறு தோண்டினால் செல்வம் கெடும், வடகிழக்குப் பகுதியில் கிணறு அமைத்தால் செழிப்பும், கிழக்கில் அமைத்தால் செல்வமும் வளரும். தென்கிழக்கு மக்களுக்குக் கேடு, தெற்கு பெண்களுக்குக் கேடு. தென்மேற்கு தலைவனுக்கு ஆயுள் குறைவு; மேற்கு உடல் நலமின்மை, வடமேற்கு பகைவரால் துன்பம் வடக்கு சுகம் என்னும் பலன்களை விளைவிக்கும் (மேற்கு செல்வம் தரும் எனச் சில நூல்கள் கூறுகின்றன. ஆனால் மேற்கில் பள்ளம் தோண்டுவது கூடாது எனச் சில நூல்கள் குறிப்பிடுகின்றன.)

வடமேற்குத் திசையில் கிணறு எடுத்து அதற்கு 'ப்ளாட் பாரம்' ஏற்படுத்தும்போது வடக்கு சுற்றுச் சுவரைத் தொடாமல் இருக்கக் கட்ட வேண்டும்.

வீட்டைச் சுற்றிக் காலி இடம்

வீட்டைச் சுற்றிலும் வெற்றிடம் இருக்க வேண்டும். ஆனால், தெற்கிலும், மேற்கிலும், குறைந்த அளவிலும், கிழக்கிலும், வடக்கிலும் அதிக அளவிலும் வெற்றிடம் விட்டு வீடு கட்ட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் கொட்டகை 'அவுட் ஹவுஸ்' போன்றவையோ தனியாகக் குளியல் அறை கழிப்பிடம் போன்றவையோ அமைக்கக்கூடாது. அவற்றைத் தெற்கிலும், மேற்கிலும் அமைத்துக் கொள்ளலாம்.

இதுவரை வீடு கட்டத்தக்க மனையைத் தேர்ந்தெடுக்கும் முறையும், வீடு கட்ட நன்னாள் தேர்ந்தெடுக்கும் முறையும் விளக்கப்பட்டன.

இனி, வீட்டின் அமைப்பைப் பற்றிய விளக்கங்கள் கூறப்படுகின்றன.

வீட்டின் அமைப்பு

வீட்டின் கிழக்குப் பகுதியில் குளியல் அறை, தென்கிழக்குப் பகுதியில் சமையல் அறை, தெற்குப் பகுதியில் படுக்கை அறை, தென்மேற்குப் பகுதியில் யந்திரம் போன்ற கருவிகள் வைக்கும் அறை, மேற்குப் பகுதியில் உணவு உட்கொள்ளத்தக்க அறை, வடமேற்குப் பகுதியில் தானியம் முதலிய பொருள்கள் வைக்கும் அறை, வடக்கில் பணப்பெட்டி, வடகிழக்குப் பகுதியில் பூஜைக்கு உரிய அறை இருப்பது நலம் தரும். ஓரில்லத்தில் தனித்தனியாக அறைகள் இல்லாவிடினும் இருக்கும் ஒன்றிரண்டு அறைகளில் அந்தந்த பொருள்கள் வைக்கவும், குளியல் சமையல் முதலியவற்றிற்கும் அந்தந்தச் செயல்களுக்கு ஏற்ற திசையில் ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டும்.

வேறுவேறு செயல்களுக்கு ஏற்ற திசைகள்

வடகிழக்கு தேவ பூஜைக்கும், அதை ஒட்டித் தெற்கில் பிரசவ அறையும், அதற்குத் தெற்கில் தயிர் கடையத்தக்க இடமும் அதற்குத் தெற்கில் சமையல் அறையும், அதற்கு மேற்கில் எண்ணெய் வைக்கும் இடமும், அதற்கு மேற்கில் படுக்கை

அறையும், அதற்கு மேற்கில் கழிவறையும், அதற்கு மேற்கில் ஆயுதங்கள் கருவிகள் வைக்கும் இடமும், அதை ஒட்டி வடக்கில் கல்விகற்கும் இடமும், அதன் பக்கத்தில் வடக்காக உணவு கொள்ளும் அறையும், அதற்கு வடக்கில் மனவருத்தம் தீர்த்துக் கொள்ளத்தக்க அறையும், அதற்கு வடக்கில் மாடுகளுக்கும், தானியங்களுக்கும் ஏற்ற அறையும், அதன் கிழக்கில் கலவி புரியத்தக்க இடமும், அதற்கும் கிழக்கில் செல்வம் வைக்கும் அறையும், அதற்குக் கிழக்கில் மருந்துகள் வைக்கும் அறையும் செல்வம் மிக்கவர்கள் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று பண்டைய நூல்கள் கூறுகின்றன.



முற்காலத்தில் அரசர்களும், மிக்க செல்வந்தர்களும் இவ்வாறு தம் மாளிகைகளில் அறைகள் தனித்தனியாக அமைத்துக் கொண்டனர். பெண்கள் சினம் அல்லது வருத்தம் கொண்டபோது அழுவதற்கெனவும் தனி அறைகள் இருந்தன. இதைக் கோப கிருஹம் அல்லது ரோதன கிருகம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

அழுகைக்குத் தனி இடம் தேவையா? என்பது வேடிக்கையாகத் தோன்றலாம். ஆனால், வருத்தம் அதிகமான போது அழுகையை அடக்கினால் நோய் தோன்றும். கண்ட இடத்தில் இருந்து அழுவதால் வேறு கேடுகள் தோன்றலாம். பூஜை அறை செல்வம் வைக்கும் அறை முதலியவற்றில் அழுதுகொண்டிருந்தால் அவ்வ

றையின் தனித்தன்மை பாதிக்கப்படும். ஆகையால் அதற்கெனத் தனி இடம் ஒதுக்குவது நல்லதென்று முன்னோர் கருதினர். குளியல், சமையல், மருந்து வைக்கும் அறை என அந்தந்தப் பொருள் அல்லது செயல்களுக்கு ஏற்ப இடங்கள் அமைத்துக் கொள்வது நலம் தரும். தனித்தனியாக அறைகள் இல்லாவிடினும் அந்தந்த திசைப்பகுதிகளில் அலமாரி போன்றவைகளை அமைத்துக் கொண்டு மருந்து, தானியம், எண்ணெய் வகைகள் போன்ற பொருள்களை வைத்துக் கொள்வது மிக்க நலம் தரும்.

வாயில், ஜன்னல் முதலியவற்றின் எண்ணிக்கை

வீட்டிற்கு ஒரே திசையில் இரண்டு வாயில்கள் இருப்பது நலம். மூன்று வாயில்கள் பகை, நான்கு வாயில்கள் நீண்ட ஆயுள், ஐந்து வாயில்கள் மரணம், ஆறு வாயில்கள் ஆண் சந்ததி வளர்ச்சி, ஏழு வாயில்கள் ஆயுள் குறைவு, எட்டு வாயில்கள் எல்லா நன்மைகளும், ஒன்பது வாயில்கள் நெருப்பால் தீங்கு, பத்து வாயில்கள் பெண்களுக்கு நோய், திருடரால் பொருள் நாசம், பதினொரு வாயில்கள் செல்வம் குறைதல், பன்னிரண்டு வாயில்கள் பகைவரால் தீங்கு, பதிமூன்று வாயில்கள் விரைவில் மரணம், பதினான்கு வாயில்கள் செல்வ வளர்ச்சி, பதினைந்து வாயில்கள் செய்தொழில்கள் செயலற்றுப் போதல், பதினாறு வாயில்கள் மிக்க நன்மை பயக்கும் என நூல்கள் கூறுகின்றன. தலைவாயிலும், இல்லத்தில் உள்ள அறைகளின் வாயில்கள் அனைத்தும் கூட்ட இரட்டைப்படை எண்ணிக்கையில் இருக்க வேண்டும். ஆனால் 10, 20 போல பூஜ்யத்துடன் முடிவதாக இருக்கக் கூடாது.

இதைப் போலவே ஜன்னல்களும், அலமாரிகளும் இரட்டைப்படை எண்ணிக்கையில் இருக்க வேண்டும். ஜன்னல்கள், வாயில்கள், அலமாரிகள், ஒன்றுக்கொன்று நேர் எதிரில் இருக்கும் படி அமைப்பது நலம்.

கிழக்குத் தலைவாயில் வீடு

கிழக்குத் திசையில் தெரு இருந்து அத்திசையை நோக்கிய தலைவாயில் கொண்ட வீடு அமைத்துக் கொள்ளும்போது தெற்கு வடக்காக உள்ள வீட்டின் சுவற்றை ஒன்பது பகுதிகளாகக் கொண்டு வடக்கிலிருந்து முறையே சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது எனத் தெற்குத் திசை வரை ஒன்பது கிரகங்களுக்கும் உரிய பகுதிகளாகக் கொள்க.

இப்பகுதிகளில் சந்திரன் இடத்திலும் புதன், குரு, சுக்கிரர்களுக்கு உரிய இடங்களிலும் தலைவாயில் அமைத்துக் கொள்ளலாம்.



ஆனால் தெற்கு வடக்காக உள்ள சுவரைப் பாதியாக அளந்து வடபாதியில் தலைவாயில் அமைக்க நலம் தரும். சந்திரனுக்கு உரிய இடத்தில் தலைவாயில் அமைத்தால்



செல்வம் வளரும் என்பது சிலர் கருத்து. சூரியனுடைய பகுதியில் அமைத்தால் நெருப்பால் தீங்கு, சந்திரனின் பகுதி சுகம், செவ்வாயின் பகுதி கலகம், புதனின் பகுதி கால்நடை வளர்ச்சி, குருவின் பகுதி செல்வ வளர்ச்சி, மக்களின் மேன்மை, சுக்கிரனின் பகுதி தனதானிய லாபம், சனியின் பகுதி ஆயுள் குறைதல், ராகுவின் பகுதி திருடர்களால் பொருட் சேதம், கேதுவின் பகுதி துஷ்ட கிரகங்களால் பீடை என்னும் பலன்களைத் தரும் என்பது வாஸ்து சாஸ்திரத்தின் கருத்தாகும்.

தலைவாயில் உள் அளவு ஒன்பது பங்கு உயரம், ஐந்து பங்கு அகலம் இருக்க வேண்டும். அதாவது 65"X35" (1மீ. 91செ. X 0.95) என்ற அளவு இருக்கும். வாயில் சிம்மாயம், 65"X37" துவஜ ஆயம், 67"X35" துவஜ ஆயம் 67"X37" கஜ ஆயம். 69"X37" துவஜ ஆயம், 69"X39" சிம்ம ஆயம், 71"X39" துவஜ ஆயம், 71"X41" கஜ ஆயம்: 73"X41" துவஜ ஆயம், 73"X43" சிம்ம ஆயம் என்ற அளவில் சாஸ்திரங்கள் வகுத்திருக்கின்றன. இதைப்போல வீட்டின் நீளம், அகலங்களுக்கும் ஆயங்கள் உண்டு. அந்தந்த ஆயங்களுக்குத் தக்கபடி வாயில்கள் அளவு இருக்க வேண்டும் என்பது வாஸ்து சாஸ்திரக் கொள்கையாகும். ஜன்னல்களும் இதைப்போல தகுந்த ஆயம் அளவு கொண்டிருக்க வேண்டும் என்பது பண்டைய நூல்களின் கருத்து.

தலைவாயில் மிக்க நீளம் கொண்டிருந்தால் திருடர்களால் அச்சம், மிகக் குருகி இருந்தால் பசியும், ஏழ்மையும் உண்டாகும். எனவே 64"X34" என்ற அளவிற்குக் குறையாமல் அமைத்துக் கொள்வது நலம் தரும்.

கிழக்குத் திசையை நோக்கித் தலைவாயில் அமைந்துள்ள வீட்டில் தெருவிலிருந்து வீடுவரை உள்ள இடைவெளி மிக்க அகலமாக இருக்க வேண்டும். அதாவது வீட்டின் மற்ற திசைகளில் வீட்டைச் சுற்றி விடப்பட்ட வெற்றிடத்தை விட கிழக்



குப் பகுதியில் வெற்றிடம் அளவில் மிகுந்திருக்க வேண்டும். தெற்கிலும் மேற்கிலும் ஒன்பதில் ஒரு பங்குக்கு அவ்வாறு வெற்றிடமாக விட்டால் குலம் விளங்காது. பல சிக்கல்கள் விளையும். அவ்வாறு வெற்றிடம் இருந்தால் அந்த தெற்கு, மேற்கு, தென்மேற்குப் பகுதிகளில் வட்டமான தோற்றத்தில் வேறொரு வீடு அது முதல் வீட்டை விடச் சற்று உயர்ந்து இருக்குமாறு கட்டினால் — தோஷம் நீங்கும். கிழக்கில் இருப்பது போல வடக்குப் பகுதியிலும் ஏனைய இரு பக்கங்களிலும் இருப்பதைவிட வெற்றிடம் அதிகப் பரப்பில் இருக்க வேண்டும்.

கிழக்குத் தலைவாயில் கொண்ட இல்லத்தில் தலைவாயில் வடகிழக்குத் திசையை நோக்கி இருக்கும்படி கட்டினால் செல்வம் வளரும். கிழக்கில் தெரு உள்ள இடத்தில் தென்கிழக்குத் திசை



நோக்கி வாயில் அமைத்தால் பல சிக்கல்கள் உண்டாகும். நெருப்பால் அச்சம், காற்றினால் துன்பம், செல்வம் குறைதல், இல்லத்தில் வசிப்பவர்கள் எப்பொழுதும் கடன்பட்டுச் சண்டை சச்சரவுகளால் துன்பப்படுதல் போன்றவை நேரும்.

கிழக்கு நோக்கிய தலைவாயில் கொண்ட வீட்டிற்கு நான்கு பக்கங்களிலும் சார்புகள் அமைத்துக் கொள்ளலாம். ஆனால் வடக்கிலும் கிழக்கிலும் வெற்றிடத்தை அடைத்துக் கட்டக் கூடாது. கிழக்கு வடக்குப் பகுதிகளில் வீட்டை வளர்த்திக்



கட்டுவது, உயர்த்தி மாடி கட்டுவது போன்றவை செய்யக் கூடாது. அவ்வாறு கட்டினால் வமிசம் கேடுறும். செல்வமும் குறையும்.

கிழக்கு திசையில் தலைவாயில் கொண்ட வீட்டிற்கு மேற்குப் பகுதியில் வெற்றிடத்தைக் குறைத்தும், மிக்க உயரமாகவும் மாடி கட்டினால் செல்வம் மிகும். சௌக்யம் உண்டாகும்.

கிழக்கை நோக்கித் தலைவாயில் கொண்ட வீட்டிற்கு எக்காரணத்தைக் கொண்டும் தெற்குப் பகுதியில் வேறு வாயில் கட்டக்கூடாது. அமைத்தால் தலைவனுக்குக் கேடு விளையும்.

கிழக்கை நோக்கிய தலைவாயில் கொண்ட இல்லத்தில் புழங்கும் நீர், அறைகளில் கழுவும் நீர் முதலிய வடகிழக்குப் பகுதியாக வெளியேறும்படி அமைக்க வேண்டும். நடு அறை (ஹால்)



அகலம் நான்கு அடிகளுக்கு (3.685மீ. அளவிற்கு) அதிகமாக இருக்கக் கூடாது. சுற்றிலும் சார்புகள் அமைக்கும் போது, கிழக்கு வடக்குச் சுவர்களை விட தெற்கு மேற்கு திசைகளில் உள்ள சுவர் உயரம் அதிகமாக இருக்க வேண்டும்.

கிழக்கை நோக்கிய இல்லத்தின் முன் பக்கத்தில் தெருவை ஒட்டி பந்தல், சார்பு முதலியன அமைக்கக் கூடாது. அதைப் போல வடக்கிலும் வேறு அறைகளோ கார்ஷெட் முதலிய வையோ கட்டக்கூடாது. அவற்றைத் தெற்கு அல்லது மேற்குப் பகுதிகளில் அமைத்தல் நலம் தரும். மேற்கில் உயரமான கட்டடமெழுப்பி மாடி அமைக்கலாம். ஆனால் கிழக்குப் பகுதி யிலோ, வடக்குப் பகுதியிலோ உயரமாகக் கட்டக்கூடாது.



மாடிப்படி அமைக்கும்போது தென்மேற்குப் பகுதியில் முதலில் தெற்குமுகமாக ஏறி, பிறகு கிழக்குப் பகுதியாகச் சென்று

கிழக்கு நோக்கிய வாயில் வழியாக மாடிக்குள் செல்லும்படி அமைக்க வேண்டும். வடகிழக்கிலோ வடக்கிலோ மாடிப்படி அமைக்கக் கூடாது. அதனால் அப்பகுதிகளில் வெற்றிடம் அளவில் குறைந்து பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும். வடக்குப் பகுதியில் கட்ட வேண்டியதானால் வடமேற்குப் பகுதியில்



முதலில் மேற்கு நோக்கி ஏறிப் பிறகு கிழக்குப் பக்கம் திரும்பி வடக்கு திசையை நோக்கிய வாயில் வழியாக மாடி அறைக்குள் செல்லும்படி அமைத்துக் கொள்ள வேண்டும்.

நேராகத் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஏறும்படி படிக்கட்டு அமைக்கக் கூடாது. வடக்கிலிருந்து நேராகத் தெற்கு நோக்கி ஏறும்படி அமைத்துக் கொள்ளலாம். வடக்கில் கட்ட வேண்டியி ருந்தால் சுற்று சுவரைச் தொடாமல் கிழக்கிலிருந்து



மேற்காக ஏறி அங்கு திரும்பி வடக்கிலிருந்து தெற்காக ஏறி மீண்டும் கிழக்காக நடந்து மாடிக்குள் செல்லும்படி அமைக்க வேண்டும்.

வீட்டிற்குள் மாடிப்படி அமைக்க வேண்டியிருந்தால் வடகி ழக்குப் பகுதியை விட்டு ஏனைய பகுதிகளில் கட்டலாம்.

படுக்கை அறை தென்மேற்குப் பகுதியில் அமைத்துக் கொள்ள வேண்டும். படுக்கை அறையில் கட்டில் முதலியவற்றைக் கிழக்கு அல்லது வடக்குப் பகுதியை அடைத்துக் கொண்டிருக்கும்படி போடக்கூடாது. கிழக்கிலும் வடக்கிலும் வெற்றிடம் விட்டு ஏனைய திசைகளில் அடைப்பு ஏற்படும்படி



அமைத்துக் கொள்ள வேண்டும். வடக்குத் திசை நோக்கித் தலைவைத்துக் கொண்டு படுப்பது போல கட்டிலைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

மாடியில் நீர்த் தொட்டிகள் (வாட்டர் டாங்க்) அமைத்துக் கொள்ள வேண்டியிருந்தால் தென்மேற்கு, தென்கிழக்கு, வடமேற்குப் பகுதிகளில் அமைத்துக் கொள்ள வேண்டும். எந்தக்



காரணத்தைக் கொண்டும் வடகிழக்குப் பகுதியில் அமைக்க வேண்டாம். ஆனால், தென்கிழக்குப் பகுதியில் டாங்க் அமைத்துக் கொள்ளும்போது தென்மேற்குப் பகுதியில் அந்த டாங்கு உயரத்திற்குக் குறையாமல் அல்லது சற்று உயரமாக வேறு அறை கட்டிக் கொள்ள வேண்டும். மற்ற தென்மேற்கு வடமேற்குப் பகுதிகளில் 'டாங்க்' இருக்கும்போது வடகிழக்கு அல்லது தென்கிழக்குப் பகுதிகளில் வேறு அறை கட்டவேண்டாம். ஏனெனில் கிழக்கு

வடக்குப் பகுதிகள் மற்ற இரண்டு பகுதிகளை விடத் தாழ்ந்திருப் பது நலம் தரும்.

தெற்கு, மேற்குப் பகுதிகளில் உள்ள அறைகள் பரப்பளவில் மிகுந்தும், கிழக்கு வடக்கில் உள்ள அறைகள் பரப்பளவில் குறைந்தும் இருக்கும்படி அமைத்துக் கொள்வது நலம். பூமி மேற்கிலிருந்து கிழக்கை நோக்கிச் சுற்றுவதாலும் வடக்கு



துருவம் கிழக்கு நோக்கிச் சற்று சாய்ந்து சுற்றுவதாலும் தெற்கு மேற்குப் பகுதிகள் அதிகப் பளுவைத் தாங்கும்படி அமைக்க

வேண்டும். கிழக்கு வடக்குப் பகுதிகளில் அதிக பளு போடக்கூடாது.

கிழக்கிலும் வடக்கிலும் தெரு இருக்கும் போது வடகிழக்குப் பகுதியில் வீடு கட்டும்போது கிழக்குத் திசையை நோக்கித்



கிழக்கு வாசல்

தலைவாயில் அமைத்துக் கொள்வது சிறப்பான பலன் தரும். வாஸ்து சாஸ்திர முறைப்படி கிழக்குத் திசையில் தலைவாயில் கொண்ட வீட்டில் வசிப்பவர்கள் புகழ்பெற்று வாழ்வர். பிறருக்கு

உதவும் மனப்பான்மை, சுபகாரியங்களில் ஈடுபடுவதில் உற்சாகம், பெண்களிடமும், நறுமணப் பொருள் போன்ற சுகபோகப் பொருள்களிலும், கலைகளிலும் மிக்க அபிமானம்



கொள்வர். இந்த இல்லங்களில் வசிப்பவர்களின் குழந்தைகள் கல்வி கேள்விகளில் சிறப்புற்று எளிதில் எல்லா வித்தைகளிலும் முதலிடம் பெற்று விளங்குவர். உத்தியோகமும் எளிதில் கிடைக்கும். ஊக்கத்துடன் உழைத்து முன்னேற்றம் அடைவர்.



☐ புதிய வீடு கட்டத் துவங்கிய பிறகு ஓராண்டுக்குள் புது இல்லத்தில் குடிபுக வேண்டும். வீடு கட்டி முடித்த பின் மூன்று மாதங்களுக்கு மேல் 'காலி'யாக விட்டு வைக்கக்கூடாது. இல்லாவிடில் புது வீட்டில் வெளவால் புகுதல், தேன் கூடு கட்டுதல், பாம்பு புகுதல், பறவைகள் வசிக்கத் துவங்குதல் முதலியன ஏற்படலாம். பிறகு அத்தகைய இல்லத்தில் வசிப்பதால் பொருள் நஷ்டம், கோர்ட் விவகாரம், உடல் நலமின்மை முதலிய தீங்குகள் நேரும்.



□ சமையல் அறையில் ''வாஷ்பேஸின்'' வடகிழக்குப் பகுதியில் இருக்கும்படி கட்ட வேண்டும். சமையல் செய்பவர் கிழக்குத் திசையை நோக்கி இருந்து சமையல் செய்யும்படி அடுப்பு அமைய வேண்டும். கிரைண்டர், மிக்ஸி முதலியவை தெற்கு அல்லது மேற்குச் சுவரை ஒட்டி இருக்கும்படி அமைத்துக் கொள்க.

தெற்குத் திசை நோக்கிய தலைவாயில் கொண்ட வீடு

தெற்கில் தெரு இருந்து அதை நோக்கித் தலைவாயில் அமைக்க விரும்பியபோது,

கிழக்குத் தெற்காக வீட்டின் சுவரை அளந்து ஒன்பது பகுதிகளாக்கிக் கிழக்கிலிருந்து முறையே சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது என ஒன்பது கிரகங்களுக்குப் பங்கிட்டுச் சந்திரன் அல்லது குருவின் பகுதியில் தலைவாயில் அமைத்துக் கொள்வது நலம் தரும். சுக்கிரன் பகுதி மேற்குத் திசையை ஒட்டி இருப்பதைத் தவிர்க்க வும்.

கிழக்கு, மேற்கு அளவைச் சரிபாதியாக்கிக் கிழக்குப் பாதியை ஒட்டித் தெற்கு முகமாகத் தலைவாயில் அமைத்துக் கொள்ள வேண்டும். தெற்குத் திசையில் தலைவாயில் இருக்கும் போது அதற்கு நேராக வடக்கில் ஒரு வாயில் இருக்க



வேண்டும். அல்லது கிழக்குப் பகுதியில் ஒரு வாயில் இருக்க வேண்டும். தெற்கில் மட்டும் ஒரே வாயில் இருக்கும்படி அமைக்கக் கூடாது. மேற்கில் வாயில் வைக்கக் கூடாது.

தெற்கிலிருந்து வடக்கு வரை மனையை அளந்து ஒன்பது பகுதிகளாகச் செய்து தெற்கில் ஒன்பதில் ஒரு பங்கு இடம் விட்டு வீடு கட்ட வேண்டும். வடக்கிலும் கிழக்குத் திசையிலும் வெற்றிடம் அளவில் மிகுந்திருக்க வேண்டும். அவ்வாறல்லாது வடக்கு கிழக்குப் பகுதிகளில் வெற்றிடத்தைக் குறுக்கி வீடு கட்டினால் பல துன்பங்கள் விளையும். இதற்கு முன் தெற்கிலும் மேற்கிலும் அதிக இடம் விட்டு வீடு கட்டியிருப்பவர்கள் தோஷம் நீங்குவதற்காகத் தென்கிழக்கு அல்லது தென்மேற்குப் பகுதியில் முதல் இல்லத்தைவிடச் சற்று உயரமாக வட்டமாள கட்டடம் கட்டினால் தோஷம் நீங்கும். இதற்கு முன் கிழக்கு வடக்குப் பகுதிகளில் இடம் விடாமல் கட்டடம் கட்டியிருப்பவர்கள் கிழக்கு, வடகிழக்கு, வடக்குப் பகுதிகளில் வெற்றிடம் இருக்கும்

படி வீட்டைத் திருத்தி அமைத்துக் கொண்டு தென்கிழக்கிலோ தென்மேற்கிலோ வட்டமான கட்டடம் கட்டினால் தோஷம் நீங்கும்.



தெற்கு நோக்கிய இல்லத்தில், வாயில் தென்மேற்குத் திசையை நோக்கி அமைத்தால் பகைவரால் துன்பம், குலநாசம், அகால மரணம் போன்ற துன்பங்கள் நேரும். தென்கிழக்குத் திசையை நோக்கி அமைத்தால நெருப்பால் அல்லது ஆயுதத்தால் தீங்கு, பலவகைத் துன்பங்கள் நேரும்.

அந்த இல்லத்தில் வசிப்பவர்கள் கடன், பகை, வீண் சச்சரவு முதலியவற்றால் துன்பம் அடைவர். மேற்கு, தெற்குத் திசைகளில் உள்ள சுவற்றைவிடத் தாழ இருக்கும்படி கிழக்கிலும்



வடக்கிலும் சார்புகள் அமைத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த இருதிசைகளிலும் வெற்றிடம் மிகுந்திருக்கும்படி அமைக்க வேண்டும். வடக்கு அல்லது கிழக்குப்பகுதியில் உயரமான மாடிக்கட்டடம் அமைத்துக் கொள்ளக்கூடாது. அப்படிக் கட்டினால் ஏழ்மை மிகும்.

தெற்கு நோக்கிய இல்லத்தில் தெற்குப் பகுதி வீட்டை உயர்த்தி மாடி கட்டி வசித்தால் செல்வம் மிகும். தெற்கு நோக்கிய இல்லத்தில் மழை நீர் மற்றும் வீட்டில் புழங்கும் நீர் முதலியவை வடக்கு நோக்கிச் செல்லும்படி நீரோட்ட வழி அமைக்க வேண்டும். தெற்கு நோக்கிய வீட்டிற்குக் கிழக்குப் பகுதியில் வெற்றுநிலம் அளவில் மிஞ்சியிருந்தால் ஆண் சந்ததியும் மேற்குப் பகுதியில் நிலம் வெற்றாகப் பரந்திருந்தால் பெண் சந்ததியும் மிகும்.



தெற்கு நோக்கிய இல்லங்களுக்கு மாடிப்படி அமைக்கும் போது கிழக்குத் திசையிலிருந்து மேற்குத் திசை நோக்கி ஏறி பாதியில் திரும்பி வடக்கு நோக்கி ஏறும்படி அமைக்க வேண்டும். தெற்கிலிருந்து நேராக வடக்கு நோக்கி ஏறும்படி படி அமைக்கக் கூடாது. அல்லது மேற்கிலிருந்து நேராகக் கிழக்கு நோக்கி ஏறும்படி படி அமைக்கலாகாது. வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஏறி பாதியில் திரும்பிக் கிழக்குத் திசையாக மாடிக்குச் செல்லும் படி, படி அமைக்க வேண்டும். வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நேராக ஏறும்படி படிக்கட்டு அமைத்துக் கொள்ளலாம். வீட்டிற் குள் படி அமைக்கும்போது தெற்கு மேற்கு அறைகளை ஒட்டிப் படிக்கட்டு அமைத்துக்கொள்வது நல்லது. கிழக்கு வடக்குச் சுவர்களைத் தொடாமல் வீட்டிற்குள் மேற்கு அல்லது தெற்குச் சுவரைத் தொட்டுப்படி அமைப்பது நல்லது.


வடக்கு சந்து
சமையல் அறை
உணவு அறை
அறை
ஹால்
பருகீகை அறை
W
D
மேற்கு
கிழக்கு
MG.
தெற்கு தெரு


வடக்கு சந்து
உணவு அறை
ஹால்
W
D
MG
தெற்கு தெரு

தெற்கிலும் மேற்கிலும் தெருக்கள் இருக்கும்போது அந்த இடத்தில் கட்டப்படும் வீடு தென்மேற்கு இல்லம் ஆகும். இந்த இல்லத்தில் தெற்கு நோக்கித் தலைவாயில் அமைத்துக் கொள்ள வேண்டும். கிழக்குப் பகுதியில் வாயில் அமைக்கலாம். ஆனால் மேற்குப் பகுதியில் வாயில் அமைப்பது நலம் தராது.



இந்த தென்மேற்குத் திசையில் உள்ள வீட்டில் வசிப்பவர்கள் பெரும்பாலும் அரசாங்க விஷயங்களில் மிக்க ஆர்வம் கொள்கின்றனர். வீட்டுத் தலைவன் தன்னிச்சையாக அதிகார மனப்பான்மை கொண்டிருப்பான். சுதந்திரத்தை விரும்புகிறவர்கள்.



பிறருக்கு அடங்கி அல்லது பிறருடைய ஆணைக்கு உட்பட்டு நடப்பதை இவர்கள் விரும்புவதில்லை. வெற்றி பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதால் அதற்காகத் தவறான முறையில் நடந்து கொள்ளவும் பின் தங்கார். காலத்தை வீணாக்காமல் பயன்படுத்திக் கொள்வதில் வல்லுநர்களாக இருப்பர். எனவே

அரசாங்க அதிகாரங்களைத் தாங்குபவர்களுக்கும், அரசியலில் ஈடுபட்டு முன்னேற விரும்புகிறவர்களுக்கும் தென்மேற்கில் உள்ள தெற்கு நோக்கிய இல்லம் மிக்க நன்மை விளைவிக்கும். தெற்குப் பகுதியில் உள்ள சுற்றுச்சுவர் (காம்பௌண்ட் சுவர்) ஏனைய பகுதிகளில் உள்ளதைவிடச் சற்று உயர்த்திக் கட்டுவது நலம் தரும்.

தெற்குத் திசை நோக்கிய இல்லங்களை அமைக்கும் போது கிழக்கு வடக்குப் பகுதிகளைக் குறுக்கி கிழக்கு திசையில் மாடி கட்டினால் தலைவன் தீராத நோய்க்கு இலக்காக நேரும். அல்லது நடுவயதில் மரிக்கவும் நேரும். தெற்கு நோக்கி இல்வத்தில் தெற்குத் திசை தாழ்ந்திருந்து அதில் சார்பு அமைத்துக் கிழக்கிலும் வெற்றிடம் குறுகியுள்ளபோது தலைவன் தீராத நோய்க்கு இலக்காக நேரும். குழந்தைகளும் கெட்ட வழிகளைப் பின்பற்றுபவர்கள் ஆவர். தெற்கு நோக்கிய இல்வத்தில் கிழக்கு வடக்குத் திசைகளில் வெற்றிடம் குறைந்து மேற்குப் பகுதி தாழ்ந்து அதில் கிணறும் இருந்தால் தலைவன் க்ஷயம் போன்ற கொடிய நோய்களுக்கு இலக்காகலாம். இத்தகைய இல்வத்தில் கிழக்கு அல்லது தென்கிழக்குப் பகுதியில் காலிமனை அதிக அளவில் இருந்த போது அத்தகைய இல்வத்தில் வசிப்பவர்களுக்கு குழந்தைகள் பிறப்பதில்லை. அல்லது பிறந்த குழந்தைகள் சிறப்பாக வாழ்வ தில்லை. இத்தகைய இல்வத்தில் வசிக்கும் நங்கை தன் கணவ னையே கொல்லக் கூடியவளாக இருப்பது சில இடங்களில் நேர்ந்துள்ளது.

□ □ □

□ மனையில் அரசு, பலா, வேம்பு, புளியமரம் போன்ற மரங்கள் தடங்கலாக இருந்தால் வீடு கட்டத் துவங்குவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே வேருடன் நீக்கிவிட வேண்டும். பூ, காய் முதலியன இல்லாத பருவத்தில் மரங்களை வெட்ட வேண்டும். வீட்டில் வசிக்கத் துவங்கிய பிறகு மரங்களை நீக்குவதானால் வீட்டில் வசிக்கத் துவங்கிய பின் குறைந்தது மூன்று மாதங்கள் கடந்த பிறகே நீக்க வேண்டும்.

மேற்கு நோக்கிய இல்லத்தின் அமைப்பு



வீட்டின் மனையில் மேற்குப்பகுதி, வீட்டிற்குள் உள்ள கூடம் (ஹால்), அறைகள் சார்பு முதலியவை அனைத்தும் மேற்குப் பகுதியில் சற்று மேடாக இருக்கும்படி அமைத்துக் கொண்டால் செல்வம் வளரும். அவ்வாறு இன்றி ஏனைய பகுதியை விட மேற்குத் தாழ்வாக இருக்குமாயின் செல்வம் குறையும். வமிசமும் கெடும். புகழ் கெடும். வீட்டுத் தலைவனின் ஆயுள் குறையும், பெண்களின் தலைமையும் அதிகாரமும் மிகுந்து காணப்படும்.



மேற்குத் திசை நோக்கிய இல்லத்தில் நேராக மேற்கு நோக்கித் தலைவாயில் அமைத்தால் செல்வளம் வளரும். மேற்குத் திசையில் தெருவுள்ள வீட்டில் தென் மேற்குத்திசை நோக்கித் தலைவாயில் அமைத்தால் தீராத நோய், வீண்செலவு, செல்வக் குறைவு இல்லத்தில் வசிப்பவர்களின் ஆயுள் குறைதல் போன்றவை நேரும். மேற்கு நோக்கிய இல்லத்தில் வடமேற்குப் பகுதியில் அமைத்தாலும், வடமேற்குத் திசையை நோக்கி இருக்கும்படித் தலைவாயில் அமைத்தாலும் பகைவரால் கேடு, புகழ் கெடுதல், வீணாகச் செலவுகள் உண்டாதல் போன்ற துன்பங்கள் உண்டாகும்.



☐ வீட்டின் வடகிழக்கு வடமேற்குப் பகுதிகளில் உயரமாக வளரக்கூடிய தென்னை, மாதுளை போன்ற மரங்களை வளர்க்கக் கூடாது. கிழக்கு மேற்கு தென்மேற்குத் திசைகளில் வளர்க்கலாம். வீட்டு மனையில் எருக்கு, அரளி, வில்வம், இலந்தை போன்ற செடி (மரங்)களை வளர்க்கக்கூடாது. தெற்கு தென்மேற்கு தென்கிழக்குத் திசைகளில் துளசிமாடம் கட்டவேண்டாம். கிழக்கு, வடக்கு, வடகிழக்கு திசைகளிலோ கிழக்கு வாயில் கொண்ட வீடானால் மேற்கு வடமேற்குத் திசைகளிலோ துளசிமாடம் அமைத்துக் கொள்ளலாம்.



மேற்குப் பகுதியில் சார்பு வைக்காமல் உயர்த்தி மாடிகட்டினால் செல்வம் வளரும். மேற்குப்பகுதியில் உள்ள சுவர்கள் சுற்றுச்சுவர் (காம்பௌண்ட் சுவர்) ஏனைய பகுதியில் உள்ளதை விட உயர்த்திக்கட்டுதல் நன்மை தரும். மேற்கிலிருந்து கிழக்கு வரை உள்ள மனையின் அளவில் ஒன்பதில் ஒரு பகுதி முன் பக்கத்தில் விட்டுக் கிழக்கில் மற்றும் வடக்கில் அதைவிட அதிக அளவில் வெற்றிடம் விட்டுத் தெற்குப் பகுதியில்



மிகக்குறைந்த அளவில் இடம்விட்டு வீடு அமைத்துக்கொள்வது நலம் தரும். கிழக்கு, வடக்கு, வடகிழக்கு ஆகிய திசைகளில் அதிகம் இடம் விடாமல் வீடுகட்டினால் அதனால் பல துன்பங்கள் விளையும். ஏற்கனவே அவ்வாறு வீடு கட்டியதால் சிரமம் தோன்றியவர்கள் அப்பகுதிகளில் அதிகம் இடம் இருக்கும்படி வீட்டைத் திருத்தி வடமேற்கிலோ, தென்கிழக்கிலோ வட்டமான கட்டடம் கட்டினால் தோஷம் நீங்கும்.

மேற்குத்திசையை நோக்கித் தலைவாயில் கொண்ட வீட்டிற்கு மாடிப்படி அமைக்கும்போது வடக்கிலிருந்து தெற்கு



நோக்கிப் படியேறி அங்கு வடக்கு நோக்கி மேலுள்ள அறைக்குள் செல்லுமாறு அமைக்க வேண்டும்.

வடக்கிலிருந்து அமைக்கும்போது வடகிழக்கிலிருந்து நேராகத் தெற்கு நோக்கி ஏறும்படி அமைத்துக் கொள்ள வேண்டும்.



அறைக்குள் படி அமைக்கும் போது வடகிழக்குத் திசையை விட்டு மேற்குத் திசைப்பகுதியில் வடக்கிலிருந்து தெற்கு முகமாக ஏறி நடுவில் திரும்பி கிழக்குத் திசையை நோக்கியவாறு மாடி அறைக்குள் புகும்படி அமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு அமைக்கும்போது கிழக்குச் சுவரை தொடாமல் இருக்கும்படி அமைத்துக் கொள்ள வேண்டும். மேற்குச் சுவரை ஒட்டிப் படிக்கட்டு அமைய வேண்டும். மேற்குத் திசையில் உள்ள அறைகளிலேயே படிக்கட்டு அமைத்துக் கொள்வது நலம்.


கிழக்கு சாரது
செப்டிக் டாங்க்
தாரதோட்டம்
கு.
அ
D
W
உணவு அறை
சமையல் அறை
ஹால்
படுக்கை அறை
வரவேற்பு அறை
படுக்கை அறை
MG
மேற்கு வரை


கிழக்கு சந்து
MG
மேற்கு தெரு


கிழக்கு சந்து
MG
மேற்கு தெரு



☐ வீட்டில் மொத்தம் இரண்டு வாயில்கள் இருந்தால் நலம் விளையும். மூன்று வாயில்கள் பகை மிகும். நான்கு வாயில்கள் நீண்ட ஆயுள், ஐந்து நோய், ஆறு மக்கட்பேறு, ஏழு மரணம், எட்டு எப்பொழுதும் செல்வ வளர்ச்சி, ஒன்பது நோய், பத்து பெண்களுக்குக் கேடு, திருடர் பயம், பதினொன்று நற்பலன்கள் கெடுதல், பன்னிரண்டு வியாபார விருத்தி, பதிமூன்று தலைவனுக்கு ஆயுள் குறைவு, பதினான்கு செல்வ வளர்ச்சி, பதினைந்து பலன் கெடுதல், பதினாறு மிக்க நன்மை எனப் பலன்களை அறிக. வாயில்கள் இரட்டைப் படை எண்ணிக்கையில் இருக்க வேண்டும். ஆனால் 10, 20 எனப் பூஜ்யத்துடன் முடிவதாக இருக்கக்கூடாது.



☐ எந்த அறையிலும் வடகிழக்குப் பகுதியில் கழிகள், அழுக்குத் துணிகள், செருப்புகள், துடைப்பம், நாற்காலி போன்ற பொருள் களை வைக்க வேண்டாம். பூஜைக்கு உரிய திசை ஆகையால் தெய்வப் படங்கள், தெய்வீக நூல்கள், பூஜைக்கு ஏற்ற பொருள்கள் ஆகியவற்றை மட்டும் இத்திசையில் வைக்கவும்.



☐ வீட்டில் 'பௌண்டென்' வைத்து அதைச் சுற்றிப் பூந்தோட்டம் அமைப்பதைக் காண்கிறோம். இவ்வாறு அமைக்கும்போது வடக்கு அல்லது கிழக்குத் திசையில் வீட்டின் தலைவாயிலின் உயரத்திற்கு ஏற்ப இடைவெளி விட்டு அமைக்க வேண்டும். வேறு திசைகளில் அமைப்பதால் சுகம் குறையும். முக்கியமாகப் பெண்களுக்கு நோய் வரும்.



☐ உண்டபின் தட்டைக் கழுவிய நீரைக் கிழக்காக இறைத்தால் நலம். தென்கிழக்கு மூலையாக இறைத்தால் அவமானம். தெற்காக இறைத்தால் ஆயுள் குறைவு. தென்மேற்காக இறைத்தால் நோய். மேற்காக இறைத்தால் செல்வம். வடமேற்காக இறைத்தால் பகை தோன்றும். வடக்காக இறைத்தால் செல்வம். எனவே இதற்கேற்ப உணவு உட்கொள்ளும் அறையில் கைகழுவும் பேஸின் அமைப்பது நலம் தரும். வடகிழக்காக இறைத்தால் எல்லா நன்மைகளும் உண்டாகும்.

வடக்குத் திசையை நோக்கிய இல்லத்தின் அமைப்பு



வடக்குத் திசையில் உள்ள தெருவை நோக்கித் தலைவாயில் கொண்டுள்ள வீடு அமைத்துக் கொள்ள வேண்டிய முறை இனி விளக்கப்படுகிறது. தெருவிலிருந்து வீட்டின் முகப்புக்கு இடையில் உள்ள வெற்றிடம் எவ்வளவு அகலமாக இருக்குமோ அவ்வளவு நலம் தரும். வடக்கு தெற்கு அளவில் ஒன்பதில் ஒரு பகுதி மட்டும் விட்டால் போதும். மேற்கிலும் அவ்வாறே குறைந்த அளவில் இடம் விட்டுக் கிழக்குப் பகுதியில் அதிக அளவில் வெற்றிடம் விடவேண்டும். வடக்கிலோ கிழக்கிலோ உள்ள வெற்றிடத்தில் கொட்டகை, சார்பு, குளியல் அறை, பந்தல் போன்ற அமைப்புகளில் எதையும் அமைக்கக் கூடாது. பழைய வீட்டில் கிழக்கிலோ, வடக்கிலோ அதிகமாக வெற்றிடம் விடப்படாமல் இருக்கும்போது அக்குற்றம் நீங்கத் தெற்கு, மேற்கு, தென்மேற்குத் திசைகளில் பிறைச்சந்திரன் வடிவில் சுவர் அமைந்த சிறுவீடுகள் கட்டிக்கொள்வது நலம். இந்த வட்டமான அறைகள் முக்கிய இல்லத்தைவிடச் சற்று அதிக உயரம் உள்ளவாறு கட்டிக் கொண்டால் செல்வம் வளரும்.



தலைவாயில் நேராக வடக்கு நோக்கி அமைக்கும்போது கிழக்கு, மேற்கு அளவில் பாதி அளந்து வடபகுதி பாதியில் வாயில் அமைக்க வேண்டும். அவ்வாறே கிழக்கு நோக்கி வாயில் அமைக்கும் போதும் வடக்கு தெற்கு அளவில் பாதி அளந்து வடக்குப் பாதியில் வாயில் இருக்கும்படி அமைத்துக் கொள்ள வேண்டும்.

வடக்குப் பகுதியிலோ கிழக்குப் பகுதியிலோ உயரமான மாடி கட்டக்கூடாது. மாடி அமைக்கும் போது மேற்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் சற்று உயரமான கட்டடம் அமைத்துக் கட்டிக் கொள்ள வேண்டும். மேற்குப் பகுதியில் வாயில் அமைக்கக் கூடாது. வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதிகளில் மட்டும் வாயில்கள் இருக்கும்படி அமைத்துக் கொள்ள வேண்டும். வீட்டிற்குள் உள்ள அறைகளிலும், ஹாலிலும், மனையிலும், சார்புகளிலும், மேற்கு தெற்குப் பகுதிகளில் அமைக்கவிருக்கும் குளியல் அறை, கொட்டகை போன்றவற்றிலும் நீர் ஓட்டம் மேற்கிலிருந்து கிழக்காகவும், தெற்கிலிருந்து வடக்காகவும் செல்லும்படி அமைத்துக் கொள்ள வேண்டும்.

வடக்குப் பகுதியிலிருந்து கிழக்கு ஓரமாக நீர் வெளியேறும் படி அமைப்பது சிறந்தது.



வடக்கு நோக்கிய இல்லத்தில் முன்பக்கத்தில் அதாவது வடக்கு நோக்கி சார்பு அமைத்துக் கொள்வது நலம். வடக்கு நோக்கிய இல்லம் உள்ளவர்களுக்கு கிழக்குப் பகுதியில் உள்ள வெற்றிடம், ஏனைய பகுதிகளில் உள்ளதை விட இரண்டு

மடங்காக இருக்கும்போது ஆண் குழந்தைகள் எண்ணிக்கையில் மிகுந்திருப்பர். குறைந்தால் பெண் சந்ததி மிகும்.

வடக்குத் திசையில் குப்பை, சாணிக்குவியல், கற்குவியல் முதலியன இருந்தால் செல்வம் குறையும்.

வடக்கு நோக்கிய இல்லத்தில், தலைவாயில் வடமேற்குப் பகுதியை ஒட்டிக் கட்டினால் நெருப்பாலோ திருடர்களாலோ தீங்கு விளையலாம்.

வடக்குப் பகுதியில் காலிமனை இருந்தால் எவ்வளவு விலையானாலும் கொடுத்துத் தன் மனையுடன் சேர்த்துக் கொண்டால் செல்வம் மிகும்.

வடக்குப் பகுதியில் உள்ள சுற்றுச் சுவருக்குப் புறமிருந்து பார்த்தால் தலை வாயிலின் மேற்பகுதி கண்களுக்குப் புலனாகும் படி அமைக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் உயரமாகக் கட்டினால் தீங்கு விளையும்.

வடக்கு நோக்கிய இல்லத்தில் மாடிப்படி அமைக்கும் போது கிழக்கிலிருந்து மேற்குமுகமாக ஏறித் திரும்பி மேற்கில் சிறிதளவு சென்று அங்கு கிழக்கு நோக்கித் திரும்பி மாடி அறைக்குள் புகும்படி அமைக்க வேண்டும். கிழக்குப் பகுதியில் அமைப்பதானால் கிழக்கு சுற்றுச் சுவரைத் தொடாமல் வடக்கிலிருந்து தெற்கு முகமாக ஏறி அங்கு திரும்பி மேற்கு நோக்கிச் சில படிகள் ஏறி வடக்கில் அறைக்குள் புகும்படி அமைக்க வேண்டும்.



வடகிழக்கில் அமைக்கும்போது கிழக்கு அல்லது வடக்கு சுற்றுச் சுவரைத் தொடாமல் ஏறும்படி அமைக்க வேண்டும். தெற்குத் திசையில் படி சுற்றுச் சுவரைத் தொடும்படியோ தொடாமலோ மேற்கு நோக்கி ஏறித் திரும்பி வடக்குத் திசையை நோக்கி மாடி அறைக்குள் புகும்படி அமைக்க வேண்டும்.

இதுவரை நேராக அந்தந்த திசையை நோக்கிய இல்லங்களை அமைக்கும் முறை விளக்கப்பட்டது.

இனி மூலைகள் பற்றி விளக்கப்படும்.



பூமியின் இயற்கை, அதன் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சுழலும் தன்மை, நிலத்தடியில் நீரோட்டம், ஆதவனைச் சுற்றி வரும்பொழுது அவன் ஒளிபடுதலால் தோன்றும் பலன்கள், பூமி

சுழலும்போது சுற்றிலும் காற்று வீசுவதால் ஏற்படும் விளைவுகள் முதலியவற்றைக் கொண்டே, வீட்டின் அமைப்பு இருக்க வேண்டிய முறைகளைப் பற்றி நம் முன்னோர்கள் ஆராய்ந்துள்ளனர். வீட்டின் அமைப்பு நில உலகில் ஒரு நாடு இருக்கும் நிலை, அதைச் சுற்றியுள்ள கடல், அக்ஷரேகை தீர்க்க ரேகைகளைச் சார்ந்து இருக்கும் நிலை, அந்தந்தப் பருவத்தில் காற்று வீசும் திசை, வானிலை மாறுபாடு முதலியவற்றைக் கொண்டே இல்லங்களின் அமைப்பு இருக்க வேண்டும். பூகம்பம் மிகுந்த ஜப்பானில் வீடுகள் கட்டும் முறை, மழை மிகக்குறைந்த அளவில் உள்ள அரபு நாடுகளில் உள்ள வீடுகளின் அமைப்பு, பனி மிகுந்த நாடுகளிலும் மழை மிகுதியாகப் பெய்யும் நாடுகளிலும் உள்ள வீட்டின் அமைப்புகள் முதலியவை இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். வடநாட்டிற்கும், தென்நாட்டிற்கும் வீடுகள் அமைப்பதில் பல வேறுபட்ட கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன. இந்நூலில் பெரும்பாலும் விந்திய மலைக்குத் தெற்கிலும் பூமத்தியக் கோட்டிற்கு வடக்கிலும் உள்ள நிலப்பகுதிகளுக்குப் பொருத்தமான முறைகளே விளக்கப்படுகின்றன என்பது உணரத் தக்கது.

இயற்கையை ஒட்டி மனிதன் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். எனவேதான் இயற்கையின் வலிமைக்கேற்ப இல்லத்தின் அமைப்பு இருக்க வேண்டுமென்பது வாஸ்து சாஸ்திரத்தின் கொள்கையாகும்.

இக்கருத்தைக் கொண்டு ஆராயும்போது, நம் பூமி வடக்குக் கோடு $23^{1}/_{2}$ டிகிரி சாய்ந்திருப்பதன் காரணமாக வடக்கு வடகிழக்குப் பகுதிகள் தாழ்ந்திருப்பதும், தெற்கு, மேற்குப் பகுதிகள் உயர்ந்திருப்பதும், வடமேற்கு வடகிழக்குப் பகுதிகளை விடத் தென்கிழக்குப் பகுதி சற்று மேடாக இருப்பதும் காணலாம். எனவே, அதற்கு ஏற்ப வீடுகள் அமைந்த போது நன்மையும், மாறாக இருந்தபோது தீமையும் விளைகின்றன. காற்றோட்டம், நிலத்தன்மை, வானிலை முதலியவை அந்தந்த நிலத்தில் வாழும் மக்களின் உடல் வலிமை, திறமை, அறிவாற்றல், செயலாற்றும் திறமை முதலியவற்றிற்குக் காரணமாகும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். ஆற்றோரத்திலும், ஆறுகள் கடல்களில் சேரும் பகுதிகளிலும், மேடான மலைப்பாங்கான இடங்களிலும் வசிக்கும் மக்கள் உடல் வலிமை, அறிவாற்றல், தோற்றம், உயரம் முதலியவற்றில் பல வேறுபாடுகளை இயற்கையாகக் கொண்டிருப்பதை நாம் காணலாம்.

அந்தந்த இடத்திற்கு மாறான தன்மைகளைக் கொண்ட ஒரு சிலர் அங்கு வசிக்கலாம். அத்தகையவர்கள் சிறுபான்மையாகவே இருப்பர். பல பிறஇகளில் பெற்ற பண்பாடு, சமுதாயச் சூழ் நிலை, பழக்கத்தால் ஏற்படும் மாறுபாடுகள், பொருளாதாரச் சூழ்நிலை போன்ற பல காரணங்களாலும் மனிதர்களின் குணந லன்களும் தன்மைகளும் மாறுபடலாம்.

ஒவ்வொருவர் தன்மையையும் ஆராய்ந்து அவரவர்கள் தத்த மக்கேற்றபடி இருக்கைகள் அமைத்துக் கொள்வது முடியாத காரியம். எனவே, பெரும்பான்மையானவர்களின் தன்மைகளை யும், நாடு, சூழ்நிலை, தட்பவெப்பநிலை, நாட்டின் அமைப்பு முதலியவற்றிற்கு ஏற்ப நன்மை விளைவிக்கும் அமைப்புகள் பற்றியே இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன என்பது முக்கியமாகக் கவனிக்கத் தக்கது.

எனவே, அந்தந்தத் திசையை நோக்கி தலைவாயில் கொண்ட இல்லத்தின் அமைப்பு வேறுபடும். அவ்வாறே மூலைகளை நோக்கியுள்ள வீட்டின் அமைப்புகளும் வேறுபட்டிருக்க வேண் டும்.

தென்கிழக்குத் திசை இல்லம்

கிழக்கிலும், தெற்கிலும் தெருக்கள் இருந்தால் அந்த முனை தென்கிழக்கு திசை எனப்படும். பொதுவாக வடகிழக்குப் பகுதி தவிர ஏனைய மூலைகளில் வீடு கட்டுவதைத் தவிர்ப்பது நல்லது. சில நேரங்களில் அந்த மூலைகளில் வீடு கட்டிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் (வேறு இடத்தில் காலிமனை கிடைக்கா மையால்) ஏற்படும்போது கவனமாகத் தோஷங்கள் தாக்காதபடி அமைத்துக் கொள்வது சிறப்பானதாகும்.

பொதுவாக ஏனைய மூலைகளை விட ஆக்னேயம் அதாவது அக்னிக்கு உரிய திசையாகிய தென்கிழக்கு மூலை தோஷங்கள் நிறைந்தது. கிராமங்களிலோ, நகரங்களிலோ தென்கிழக்கு மூலை யில் வசிப்பவர்கள், ஏழ்மை மிகுந்து வறுமையின் பிடியில் சிக்கித் தவிப்பவர்களாகவும், சண்டை சச்சரவுகளுடன் அமைதியற்ற வாழ்க்கை நடத்துபவர்களாகவும் காணப்படுகின்றனர். தென்கிழக் குப் பகுதி தென்மேற்கு, தெற்கு, வடகிழக்கு வடமேற்குப் பகுதிகளைவிட பள்ளமாக இருந்தால் நோய், அமைதியின்மை, சண்டை சச்சரவுகள், நெருப்பால் தீங்கு, ஏழ்மை, மக்கள் நலம் கெடுதல் போன்ற தீமைகளை விளைவிக்கும்.



தென்கிழக்குப் பகுதியில் கிழக்கு மிகுந்த இடத்தில் வீடு கட்டியவர்கள் பிள்ளை இல்லாதவர்களாகவோ, பிறந்த குழந்தைகளை இழந்துவிடுபவர்களாகவோ காணப்படுகின்றனர். உயிருடன் இருக்கும் மக்களும் குடி போன்ற கெட்ட வழிகளில் ஈடுபட்டுப் பணத்தை இழப்பதுடன் உடல் நலத்தையும் கெடுத்துக் கொள்கின்றனர். தென்கிழக்குப் பகுதியில் உள்ள இடம் தெற்கு நோக்கிப் பரந்து அல்லது இடம் அகன்று இருந்தால் அந்த இடத்தில் கட்டப்பட்ட வீட்டில் வசிக்கும் பெண்கள் பெரும்பாடு போன்ற நோய்களுக்கு இலக்காகித் துன்பம் அடைகின்றனர். அல்லது நெருப்பு முதலியவற்றால் தீங்குக்கு இலக்காகின்றனர்.



□ வீட்டின் ஒரு பகுதி வாடகைக்குவிட வேண்டியிருந்தால் வீட்டின் உரிமையாளர் தெற்குப் பகுதியிலிருந்து கொண்டு வடக்கு வடகிழக்குப் பகுதிகளில் உள்ள பகுதிகளை வாடகைக்கு விடலாம். ஒருவேளை குடியிருப்பவர் வேறிடம் சென்ற போது சில நாட்கள் அப்பகுதியை 'காலி'யாக விட்டு வைக்கலாம். ஆனால், தெற்குப் பகுதியை எந்த நிலையிலும் காலியாக வைத்திருக்க வேண்டாம்.

தென்கிழக்கில் இருக்கும் வீட்டிற்கு வடக்கில் உள்ள இல்லம் தாழ இருப்பது, அங்கு கிழக்குத் தெரு தாழ்ந்திருப்பது, வட மேற்கு, வடகிழக்கு, வடக்குப் பகுதியில் மிகவும் தாழ்ந்திருப்பது, தெற்குப் பகுதி நன்கு மேடாக அமைந்திருப்பது போன்ற காரணங்களால் தென்கிழக்கில் வசிப்பவர்கள் ஓரளவு



சுகமாக வாழலாம். எனவே வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள வீடுகளைவிட உயரமாக வீடு கட்டுதல், தெற்கு நோக்கித் தலைவாயில் அமைத்தல், கிழக்கில் மாடி கட்டுதல் ஆகியவை இல்லத் தலைவனுக்குக் கேட்டை விளைவிக்கும்.



மேற்கில் வெற்றிடம் இல்லாமல், வடக்குகிழக்குப் பகுதிகளில் வெற்றிடம் மிகுந்து, வடகிழக்கில் கிணறு இருந்து மேற்கு, தெற்குத் திசைகள் மேடாகி, கிழக்கும், வடக்கும் தாழ்ந்திருக்கும் படி வீடு அமைத்துக் கொண்டால் செல்வம் வளரும். கிழக்கில் இருக்கும் தெரு தென்கிழக்கில் இருக்கும் வீட்டைத் தாண்டித் தெற்கு நோக்கி மேலும் நீண்டிருக்க வேண்டும். அவ்வாறின்றி அந்த வீட்டின் அருகிலேயே கிழக்குத் தெரு முடிந்துவிட்டால் விரைவில் அந்த வீடு கைவிட்டுப் போகும்.

தென்மேற்குப் பகுதியில் தெற்கு வீதி தாழ்ந்து கிழக்கு வீதி மேடாகி இருந்தால் தெற்குநோக்கி வாயில் அமைக்கக் கூடாது. வடக்கிலும், கிழக்கிலும் வாயில்கள் அமைத்துக் கொள்ள வேண்டும். தென்மேற்குப் பகுதியைவிட தென்கிழக்குப் பகுதி பள்ளமா

கவும், வடமேற்கு வடகிழக்குப் பகுதிகளைவிட மேடாகவும் இருக்கும்படி நிலத்தைச் சீர்படுத்திக் கொண்டபின் அங்கு வீடு கட்ட வேண்டும். கிழக்கு வாயிலை வடகிழக்குப் பகுதியில் அமைத்துக் கொள்ளவும்.



தென்கிழக்குப் பகுதியிலிருந்து நீர் வெளியேறும்படி வழி அமைக்கக் கூடாது. வடகிழக்குப் பகுதியாக வெளியேறும்படி அமைத்துக் கொள்ள வேண்டும்.

தென்கிழக்குப் பகுதியில் தெரு இருந்து அதை நோக்கித் தலைவாயில் கொண்ட இல்லத்தை அமைத்துக் கொள்ள வேண்டு மாயின் வடமேற்கிலும் தெரு அமையும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்குப் பகுதிகள்

திறந்தில்லாமல் 'ஓளட் ஹவுஸ்' போன்ற அமைப்புகள் கட்டி இருக்க வேண்டும். இடம் அனுகூலமாக இருந்தால் தெருவை நோக்கிப் பல சிறு கடைகள் அமைத்துக் கொண்டு வடகிழக்கு கிழக்கு வடக்குத் திசைகளில் வெற்றிடம் மிகுந்திருக்



கும்படி அமைத்துக்கொள்ள வேண்டும். ப,ய,ச,ட என்ற எழுத்துக் களைத் தம் பெயரின் முதல் எழுத்துக்களாக உடையவர்களுக்கு இந்த அமைப்பு நன்மை தரும். (வடமேற்குப் பகுதியில் தெரு இல்லாதபோது) முக்கிய இல்லத்திற்கு வடமேற்குப் பகுதியில் தெருபோன்ற காலி இடம் விட்டு எல்லையை ஒட்டிச் சிறு அறைகள் கட்டிக் கொள்ள வேண்டும். தலைவாயில் கிழக்குத் திசை நோக்கி இருத்தல் நலம் தரும்.



தென்மேற்குப் பகுதியில் வீடு

தெற்கிலும், மேற்கிலும் தெருக்களைக் கொண்ட மனை தென்மேற்கு மனையாகும்.

தென்மேற்குப் பகுதி ஏனைய மூலைகளை விட மேடாக இருக்கும்படி மனையைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு அமைத்துக் கொண்டு வாஸ்து முறைப்படி இல்லம் அமைத்துக் கொண்டால் புகழ், அதிகாரம், வெற்றி, பல வழிகளில் செல்வம் சேருதல் முதலிய நன்மைகள் உண்டாகும்.

அவ்வாறின்றி தென்மேற்குப் பகுதி பள்ளமாக இருக்கும் போது அங்கு வீடு கட்டி வாழ முற்படுபவர்கள் நீண்ட காலம் துன்பம் விளைவிக்கும் நோய்களுக்கு இலக்காகுதல், தீயநடத்தை, ஏழ்மை, அடிமை வாழ்வு, தோல்வி, கொலை செய்யப்படுதல் போன்ற பல கேடுகளுக்கு இலக்காகின்றனர்.



மனை வாங்கும் பொழுது தென்மேற்கு நிலத்தில் கிணறு, பள்ளம் முதலியவை இருந்தால் அங்கு மேடாக்கி வீடு கட்டுவது இயலாததாகி விடும். அதாவது அங்கு வீடு கட்ட முற்படுபவன் எளிதில் முடிக்காமல் பல இன்னல்களுக்கு இலக்காக நேரும். பலர் தம் வாழ்நாளில் அங்கு வீடுகட்டி முடிக்காமலேயே வேறிடம் சென்று விடுவதோ, உயிர் துறப்பதோ நேர்ந்துள்ளது.

இந்த மனையில் மேற்கு நோக்கிய வாயில் நேராக மேற்குத் திசையை நோக்கி இருக்கும்படி அமைத்துக் கொள்ளவேண்டும்.

தென்மேற்குப் பகுதியில் வீட்டின் அமைப்பும் சுற்றுச்சுவர் அமைப்பும் பிறை வடிவம் ⌣ என்பது போல வளைந்திருப்பதும் நலம் தரும். தென்மேற்குப் பகுதியில் தெற்கு மேற்கு அளவில் பாதியிலிருந்து வளைவு துவங்கி, தெற்குத் திசையில் தென்கிழக்குப் பாதிக்குள் முடியும்படி அமைய வேண்டும். மேற்குத் திசையில் வளைவை ஒட்டி வடக்குப் பாதியில் தலைவாயில் அமைய வேண்டும். வீட்டின் முகப்பிற்கும், சுற்றுச் சுவருக்கும் இடையில் உயர்ந்து வளரும் தென்னை மரம் போன்றவை வளர்ப்பதும், தெற்கு மேற்குப் பகுதிகளில் பந்தல் அமைத்து உயர்ந்து வளர்ந்துள்ள மல்லிகைப் புதர் முதலியவை அமைத்துக் கொள்வதும் நன்மை விளைவிக்கும். (இல்லங்களில் வளர்க்கத் தக்க மரங்களைப் பற்றிய விளக்கம் இந்நூலின் வேறு பகுதியில் காணலாம்.)

தெற்கில் வேறுபடுத்திய பகுதியில் கடைகள் அமைத்துக் கொள்ளலாம். அவ்வாறு அமைத்துக் கொள்ளும் போது, தெற்கில் மற்றும் தென்கிழக்கில் காலி இடம் மிகுந்த பரப்பில் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வடமேற்குத் திசை இல்லம்

வடக்கிலும், மேற்கிலும் தெருக்கள் அமைந்த மூலை வடமேற்குத் திசையாகும்.

வடமேற்குத் திசையை நோக்கி இல்லம் அமைக்க வேண்டுமானால் அத்தகைய மனைக்குத் தென்கிழக்கிலும் தெரு இருக்க வேண்டும். தெற்கு, தென்மேற்கு, மேற்குப் பகுதிகளை ஒட்டிச் சிறு அறைகளைக் கட்டிக் கொண்டு வடக்குப் பகுதியில் அதிக இடம் விட்டு நேராக வடக்கு நோக்கி இல்லம் அமைத்துக் கொள்ள வேண்டும். தென்மேற்குப் பகுதியில் அறை முக்கிய இல்லத்தின் தரையைவிடச் சற்று உயர்ந்துள்ள தரை உள்ளதாக அமைத்துக் கொள்ள வேண்டும். வடமேற்குப் பகுதியில் இடம் வளர்ந்திருக்குமானால் அவ்வளர்ந்த இடத்தைத் தனியாகப் பிரித்து அங்கு கடைகள் கட்டிக் கொள்ளலாம். முக்கிய இல்லத்திற்கும், தென்மேற்குத் திசையிலும், தெற்கிலும் உள்ள சிறு அறைகளுக்கு இடையில் குறுகிய சந்து போன்ற இடைவெளி அமைத்துக் கொள்ளவும். வடகிழக்குப் பகுதியில் உள்ள இடத்தை அடைக்காமல் காலியாக விட்டு விடவும். கிழக்குப் பகுதியிலும் அதிக

இடைவெளி விடவும். கிழக்கு, வடக்கு, வடகிழக்குப் பகுதிகளில் சிறு அறைகள் கட்டுவதோ கொட்டகை, பந்தல் போன்றவை அமைப்பதோ கூடாது.

ச-க-ஸ என்ற எழுத்துக்களைத் தம் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கு இந்த இல்லம் மிக்க நன்மை தரும்.

வடமேற்கு முனையில் இல்லத்தின் முகப்பைச் சற்று உள்ளடக்கிக் கட்டுவது நலம் தரும்.



□ வீட்டு மூலைகள் மற்றொரு வீட்டின் வாயில் அல்லது ஜன்னலை எதிர்நோக்கியிருக்கும்படி கட்டக்கூடாது.



மற்றைய விதிகள் முன்பு வடமேற்குத் திசைக்குக் கூறப்பட்டுள்ளபடியே உணர்ந்து கொள்க.

தென்மேற்காகத் தெரு இருக்கும் போது வடகிழக்குப் பகுதியிலும் தெரு இருப்பது அவசியம். அவ்வாறு இல்லாத போது மனையில் வடமேற்குப் பகுதியில் அறைகள் கட்டி; வடகிழக்குப் பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் அதிக பரப்புள்ள வெற்றிடம் விட்டு, மேற்கு தெற்குப் பகுதிகளைச் சேர்த்து முக்கிய இல்லம் அமைத்துக் கொண்டு, வடக்கில் உள்ள அறைகளுக்கும் முக்கிய வீட்டிற்கும் தெருவைப் போல இடைவெளி விட்டு அமைத்துக் கொள்வது நலம் தரும். இத்தகைய மூலையில் மேற்கைவிட கிழக்கை நோக்கி உயர்ந்து செல்லும் தெருவிருந்தால் அங்கு வசிப்பவர்கள் செல்வம் மிகுந்திருப்பர். ஆனால் அப்பொழுது தென்கிழக்குப் பகுதியில் மிகுந்திருக்கும் பகுதியை வீட்டை விட்டு வேறுபடுத்திக் கொள்ள வேண்டும்.

மேற்குத் திசையை நோக்கித் தலைவாயில் அமைக்கும் போது கிழக்கிலும் வடக்கிலும் மிகுந்த பரப்புள்ள வெற்றிடம் விட்டு, கிழக்கு வடக்குச் சுற்றுச் சுவரைச் சேர்த்து கட்டடம் ஏதும் அமைக்காமல் வடகிழக்கில் கிணறு, தென்கிழக்கில் சமையல் அறை அமைத்துக் கொண்ட போது அத்தகைய இல்லத்தில் உள்ளவர்கள் நன்மை பெறுவர்.

முதலில் தென்மேற்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளை விட வடமேற்குப் பகுதி பள்ளமாகவும், வடகிழக்குப் பகுதியை விட மேடாகவும் இருக்கும்படி நிலத்தை அமைத்துக் கொண்டு பிறகு வீடு கட்ட வேண்டும்.



வடமேற்குப் பகுதியிலிருந்து மழைநீர், வீட்டில் புழங்கும் நீர் மேற்கு வடக்குப் பகுதிகளில் வெளியேறாமல் கிழக்குப் பகுதி அல்லது வடகிழக்குப் பகுதியில் வெளியேறும்படி அமைக்க வேண்டும்.

வடமேற்குப் பகுதி வாஸ்து தோஷம் உள்ளதாகி அமைந்த வீடு, விரைவில் ஏலம் போவதோ, இல்லத் தலைவன் திவாலாகி விடுவதோ ஏற்படுகிறது. வடமேற்கு, தென்கிழக்குப் பகுதிகள் வடகிழக்கு தென்மேற்குப் பகுதிகளைவிட வளர்ந்திருக்கும் போது (அதிக பரப்பளவு கொண்ட போது, அங்கு வீடு கட்டி வாழ்பவர்கள் நெருப்பினால் துன்பமடைந்தவர்களாகின்றனர்.

மேற்குத் திசையைச் சார்ந்த வடமேற்குப் பகுதிகளில் உயர்ந்து வளரும் தென்னை மரம் நட்டு வளர்ப்பது நலம் தரும்.

வடக்கிலும், வடக்கை நோக்கிய வடமேற்கிலும் சிறு பூச்செடிகள் மட்டும் வளர்க்கலாம்.

வடமேற்கு மூலை சுற்றுச்சுவரை வட்டமாகவும், வடமேற்கு மூலையைச் சார்ந்த வீட்டு முன்பக்கத்தை பிறை வடிவில் அரை வட்டமாகவும் அமைத்துக் கொள்வது நலம் தரும்.



வீட்டிற்குள் அறைகளில் வடமேற்கிலிருந்து தென்கிழக்காக நடந்து செல்லும் வகையில் அமைக்கக் கூடாது. மேற்கிலிருந்து வடக்கு அல்லது வடகிழக்கு நோக்கி அறைகளுக்குள் புகும்படி அமைத்தல் நன்மை தரும். அல்லது கிழக்கு நோக்கி உட்புகும்படி அமைக்க வேண்டும்.


தென்கிழக்கு சந்து
சமையல் அறை
ஹால
படுகை அறை
உணவு அறை
அலுவலக அறை
சு
கு
வடகிழக்கு
தென்மேற்கு
MG
வடமேற்கு தெரு


தென்கிழக்கு சந்து
சு
கு
அறை
உணவு அறை
சமையல் அறை
அறை
அறை
அறை
வடகிழக்கு
தென்மேற்கு
MG
வடமேற்கு தெரு



□ வீட்டின் தென்மேற்குப் பகுதியில் கழிவறை அமைத்தல் நலம். அல்லது தென்மேற்கில் சற்று மேற்குப் பகுதியாக கட்டுதல், தென்கிழக்கில் சற்று தெற்கிலிருக்கக் கட்டுதல் நலம். மற்ற திசைகளில் இருப்பது சிறப்பல்ல. பகலில் தெற்கு நோக்கியும் இரவில் வடக்கு நோக்கியும் இருந்து மலஜலம் கழிக்க வேண்டுமென்பது முன்னோர் கொள்கை. அதற்கேற்பக் கழிவறை அமைத்தல் நலம்.



வடகிழக்குப் பகுதியில் உள்ள இல்லம்

வடக்கிலும் கிழக்கிலும் தெருக்களைக் கொண்டுள்ள மனை வடகிழக்கு மனை ஆகும்.

மூலைகளில் இது மிகவும் சிறந்தது. தெய்வீகத் தன்மை கொண்ட இடமாகும். அந்த இடத்தில் வாஸ்து முறைப்படி இல்லம் அமைத்துக் கொண்டு வாழ்பவர்கள் அறிவாற்றல்களிலும் நெறிமுறைகளிலும் சிறந்து புகழ்பெற்று விளங்குவார்கள். கிழக்கு வடக்குத் திசைகளில் உள்ள தெருக்கள் நேராகச் செல்லுமானால் சிறப்பான பலன்களைத் தரும். வடக்கிலும், கிழக்குத் திசையிலும் வெற்றிடம் அதிக அளவில் விட்டு வீடு கட்ட வேண்டும். தென்மேற்குப் பகுதியில் கிணறு அல்லது பள்ளம் இருக்கக் கூடாது.



☐ வீட்டில் நீர்த்தொட்டி (Water Tank) வடமேற்கு வடகிழக்குப் பகுதிகளில் நேராக வடகிழக்கு மூலையை ஒட்டி இல்லாமல் சற்று மேற்கு அல்லது கிழக்குப் பகுதியில் தள்ளி இருந்தால் நலம். வடக்குப் பகுதி நடுவிலோ (வீட்டின் மேற்கு கிழக்கு அளவிற்கு நடுவில்) அல்லது கிழக்குப் பகுதி நடுவிலோ இருந்தால் முறையே அவமானத்தையும் வீண் செலவையும் தரும். அவ்வாறு நீர்த்தொட்டி அமைக்கும்போது தென்மேற்கு அல்லது தென்கிழக்குப் பகுதியில் டாங்கின் உயரத்தை மிஞ்சிய உயர முள்ள கட்டடம் (அறை அல்லது சார்பு) இருப்பது நலம்.



கிழக்கிலோ, வடக்கிலோ போர்ட்டிகோ அமைக்க வேண்டாம். அமைத்துக் கொள்ள விரும்பினால் வடகிழக்கு மூலையை மூடாமல், அதாவது வடக்கு கிழக்கு அளவில் கிழக்குப் பகுதியில் கால்பாகம் விட்டு மேற்குத் திசையாகவோ, அல்லது வடக்கு தெற்கு அளவில் நாலில் ஒரு பங்கு வடபாகத்தில் விட்டு அதற்குத் தெற்காகவோ அமைத்துக் கொள்ளலாம். அவ்வாறு போர்ட்டிகோ வால் மறைக்கப்படும் பரப்பளவு வடக்கு அல்லது கிழக்குப் பகுதியின் பரப்பளவில் கழித்தால் மீதியுள்ள அளவு வெற்றிடம் மேற்கு தெற்குப் பகுதியில் உள்ள வெற்றிட அளவைவிட மிகுந்திருக்க வேண்டும்.

வடகிழக்குப் பகுதியிலேயே கிணறு அமைந்திருக்க வேண்டும்.

சுற்றுச் சுவர் வடகிழக்குப் பகுதியில் கோணலாக வளைந்தோ, வடகிழக்குப் பகுதியின் பரப்பளவு குறைந்தோ இருக்குமானால் இல்லத்தில் உள்ள பெரியவர்களுக்குத் தீங்கு விளையும்.



வடகிழக்கு தெரு

தெற்குத் திசையில் இருப்பதைவிட வடதிசையில் வெற்றிடம் பரந்து, மேற்கைவிட கிழக்கும், தெற்கை விட, வடக்கும் தாழ்ந்திருக்கும்படி நிலத்தை முதலில் சீர்படுத்திக் கொண்டு பிறகு வீடு கட்ட வேண்டும்.

கிழக்கு வடக்குத் தெருக்களை விட மனை மேடாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

வடகிழக்கில் உள்ள அறைக்குக் கிழக்கு வடக்குத் திசைகளில் வாயில்கள் இருக்க வேண்டும்.

வடகிழக்குப் பகுதியில் பந்தல், கொட்டகை போன்ற கட்டடம் ஏதும் அமைக்கக் கூடாது. வடகிழக்குப் பகுதியிலிருந்து வீட்டில் புழங்கும் நீர் மற்றும் மழைநீர் வெளியேறும்படி நீர்வழி அமைக்க வேண்டும்.

வடகிழக்குப் பகுதியில் கற்குவியல், குப்பைமேடு முதலியவை இருக்கக் கூடாது. வடகிழக்குப் பகுதியை ஒட்டி வெளியில் குளம், ஏரி போன்றவை இருந்தால் குடும்பம் நன்குவளரும்.



வடக்கிலோ, கிழக்கிலோ மேலும் மனையைச் சேர்த்துக் கொள்வ தால் செல்வம் வளரும். வடகிழக்குப் பகுதியில் உள்ள சுற்றுச்சு வர் வளைவில்லாமல், சீராக அமைந்திருக்க வேண்டும்.

வடகிழக்கு இல்லத்திற்கு அல்லது வடக்குத் திசையில் உள்ள அறைக்கு மூன்று வாயில்களை அமைக்க வேண்டாம்.



☐ வீட்டு மனைக்குள் முக்கிய வீடு தவிர வேறு சிறு வீடுகள் (out house) கட்டுவதாளால் தென்கிழக்கு தெற்கு தென்மேற்கு மேற்குத் திசைகளை விலக்கி வடக்கு அல்லது கிழக்குத் திசைக ளில் போதிய வெற்றிடம் விட்டுக் கட்ட வேண்டும்.



□ ஒரே மனையில் இரண்டு இல்லங்களை அமைக்க விரும்பினால் முதலில் தெற்குப் பகுதி அல்லது மேற்குப் பகுதியில் உள்ள இல்லத்தைக் கட்டிய பிறகு கிழக்கு அல்லது வடக்கில் உள்ள வீட்டைக் கட்ட வேண்டும்.


தெற்கு
உணவு அறை
படுக்கை அறை
சமையல் அறை
குளியல் அறை
ஹால்
ஹால்
அலுவலக அறை
MG
வடக்கு


கிழக்கு
சமையல் அறை
உணவு அறை
படுக்கை அறை
குளியல் அறை
மேற்கு
அறை
ஹால்
அலுவலக அறை
MG


தெற்கு தெரு
ஸ்டோர் ரூம்
D
W
சமையல் அறை
ஹால்
படுக்கை அறை
அறை
க.அ
மு.அ
அறை
M.G.
வடக்கு தெரு


தெற்கு தெரு
ஸ்டோர் ரூம்
படுக்கை அறை
க.அ
மு.அ
ஹால்
படுக்கை அறை
வரவேற்பு அறை
MG
வடக்கு தெரு



☐ ஒரு வீட்டை அண்ணன் தம்பி பங்கிட்டுக் கொள்ளும் போது கிழக்கு வடக்குப் பகுதியை அண்ணன் பெற்றாலும் தெற்கு மேற்கு திசையில் உள்ள பகுதியைத் தம்பி பெற்றாலும் செல்வம் குறைந்து போகும். அதற்கு மாறாக வசிக்கத் துவங்கினால் செல்வம் வளரும்.



□ மேற்குத் திசையை நோக்கிய இல்லத்தின் சுற்றுச் சுவரில் 'கேட்' வடமேற்குத் திசையில் இருக்க வேண்டும். தென் மேற்குப் பகுதியில் இருக்கக் கூடாது. வடக்குத் திசையை நோக்கிய இல்லத்தின் சுற்றுச் சுவரில் 'கேட்' வடகிழக்குப் பகுதியில் அமைப்பது நலம். வடமேற்குப் பகுதியில் கூடாது.


வடக்கு சந்து
உணவு அறை
அறை
சமையல் அறை
ஹால்
படுக்கை அறை
MG
தெற்கு தெரு
மேற்கு
கிழக்கு
வடக்கு சந்து
கிணறு
சமையல் அறை
உணவு அறை
ஹால்
அலுவல் அறை
படுக்கை அறை
ஹால்
MG
தெற்கு தெரு
மேற்கு
கிழக்கு



☐ இந்திரனுக்கு உரிய கிழக்கு, குபேரனுக்கு உரிய வடக்கு, பரமசிவனுக்கு உரிய வடகிழக்கு எனும் திசைகள் தெய்வப் படங்கள் வைத்து வழிபடத்தக்க திசைகளாகும். தெற்கு நோக்கிப் படங்களை வைக்காமல் மற்ற திசைகளை நோக்கி இருக்குமாறு வைக்க வேண்டும். பூஜை செய்பவர் தெற்கு, தென்கிழக்கு தென்மேற்குத் திசைகளைப் பார்த்துக் கொண்டு அமரக்கூடாது.

☐ கிழக்கு நோக்கிய இல்லத்தில் சுற்றுச்சுவரில் தலைவாயிலுக்கு நேராக 'கேட்' அமைத்து வடகிழக்குப் பகுதியில் மற்றொரு (சின்ன கேட்) வாயில் அமைத்துக் கொள்ளலாம். ஆனால் தென்கிழக்குப் பகுதியில் வாயில் அமைக்கக் கூடாது.



☐ வீட்டின் தலைப் பகுதியில் ஒரு வாயில் இருந்தால் செல்வம் வளரும். இரண்டு வாயில்கள் சுகம் உண்டாகும். மூன்றுவாயில் கள் கேடு விளைவிக்கும். பலவாயில்கள் மிக்க தோஷம் விளைவிக்கும்.


வடக்கு சந்து
அறை
அறை
துணை அறை
அலுவல் அறை
ஹால்
சமையல் அறை
படுக்கை அறை
மேற்கு
கிழக்கு
MS


வடக்கு சந்து
அறை
அறை
அறை
சமையல் அறை
வரவேற்பு அறை
உணவு அறை
படுக்கை அறை
மேற்கு
கிழக்கு
MS
தெற்கு தெரு


அவுட் ஹவுஸ்
சமையல் அறை
பூஜை அறை
படுக்கை அறை
க.அ
உணவு அறை
கு.அ
அறை
ஹால்
MG
தெற்கு தெரு


வடக்கு சந்து
அவுட் ஹவுஸ்
அறை
உணவு அறை
உணவு அறை
அறை
கு.அ
க.அ
ஹால்
சமையல் அறை
அறை
சோர்பு
MG
தெற்கு தெரு



□ கிணறு வடகிழக்கில் இருந்தால் நன்மை தரும். கிழக்கில் செல்வ வளர்ச்சி, மக்கட்பேறு, தென்கிழக்கில் மக்களுக்குக் கேடு, தெற்கில் மனைவிக்கு ஆயுட்குறைவு, தென்மேற்கில் மரணபயம், மேற்கில் கேடுவிளையும், வடமேற்கில் பகைவரால் துன்பம். வடக்கில் குறைந்த அளவில் சுகம். இல்லத்திற்கு நடுவில் கிணறு, செல்வம் குறைந்து போதல் எனப்பலன்கள் தரும்.



□ ஒரே மனையில் இரு இல்லங்கள் அமைக்கும்போது மேற்கில் உள்ள இல்லத்தைவிட கிழக்கில் உள்ள வீடு அல்லது தெற்கில் உள்ள இல்லத்தைவிட வடக்கில் உள்ள வீடு சற்று பள்ளமாக இருக்க அமைப்பது நலம்.



□ மனிதர் வசிக்கத்தக்க இடம் 'வஸ்து' எனப்படும். அதைச் சார்ந்த நன்மை தீமைகளை விளக்கும் நூல் வாஸ்து சாஸ்திரமாகும். தமிழில் 'மனையடி நூல்' எனப்படும்.



☐ வீட்டின் உரிமையாளர் மாடிப்பகுதியில் குடி இருந்து கீழ்ப்பகுதியை வாடகைக்கு விடலாம். ஒருவேளை கீழ்ப்பகுதியில் குடியிருப்பவர் காலி செய்துவிட்டால் அப்பகுதியையும் தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மாடிப் பகுதியை வாடகைக்கு விடும்போது சில நாட்கள் அதைப் பூட்டி வைத்தாலும் கெடுதல் இல்லை.

☐ ஒரே ஆவரணத்தில் அல்லது அடுத்தடுத்து மூன்று சகோதரர்கள் மூன்று இல்லங்கள் கட்டக்கூடாது. ஒரு இல்லத்தை மூன்று சகோதரர்கள் மூன்றாகப் பங்கிட்டுக் கொள்ளக்கூடாது.

☐ சகோதர சகோதரிகள் ஒரு வீட்டில் வேறு வேறு பகுதிகளில் வசிக்க நேர்ந்தால் பெண்கள் கிழக்கு வடக்குப் பகுதிகளிலும் சகோதரர்கள் தெற்கு மேற்குப் பகுதிகளிலும் வசிக்க வேண்டும்.



வேதை அல்லது சூலை விளக்கம்

வீட்டிற்குப் புறம்பேயுள்ள சிலவற்றால் தோஷம் ஏற்படும். அந்த தோஷம், வேதை, சூலை, குத்து என்று பலவாறாகப் பெயர் கொண்டு வழங்கப்படுகிறது. இந்த வேதைகள் கடுமையான துன்பங்களை விளைவிக்க வல்லவை எனச் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

1. அந்தக வேதை: தலைவாயிலுக்கு இருபக்கங்களிலும் சன்னல்கள் இல்லாவிடில் அது அந்தக வேதை எனும் குற்றமாகும். அத்தகைய குற்றமுள்ள வீட்டில் வசிப்பவர்கள் எப்பொழுதும் நோயால் துன்புறுவர். இல்லத் தலைவன் கடன்பட்டு சங்கடப்படுவான். குழந்தைகளுக்கும் கெடுதல் நேரும்.

2. ருதிர வேதை: வாஸ்து முறையில் கூறப்பட்ட அளவுகளுக்கு ஏற்றத்தாழ்வுள்ள அளவில் வீடுகட்டினால், அக்குற்றம் ருதிர வேதை எனப்படும். இந்தக் குற்றம் உள்ள வீட்டில் வசிப்பவர்களுக்கு அதிசாரம் போன்ற நோய்களும் வேறுவகையான அச்சங்களும் உண்டாகும். (வீட்டின் அளவுகள் 'ஆயம்' எனப்படும். ஆனால் தற்காலத்தில் இந்த 'ஆயம்' என்னும் அளவைக் கொண்டு

கட்டப்படும் இல்லங்கள் மிகக் குறைவு. இந்த ஆயங்களைப் பற்றிய விளக்கம் இந்நூலின் கடைசிப் பகுதியில் விளக்கப்படும்.)

3. குப்ஜ வேதை: வீட்டின் ஜன்னல், வென்டிலேட்டர் முதலியவை வீட்டின் அளவிற்கு ஏற்றபடி அமையாவிட்டால் அக்குற்றம் குப்ஜ வேதை எனப்படும். ஜன்னல்களின் நீளமும் அகலமும் வீட்டின் ஆயத்திற்கு ஏற்றபடி அமைய வேண்டும். இக்குற்றமுள்ள வீடு வசிப்பவர்களுக்குப் பல தீராத நோய்களைத் தோற்றுவிக்கும்.

4. காண வேதை: வீட்டின் தலைவாயிலுக்கு ஒரு பக்கத்தில் மட்டும் ஜன்னல் இருப்பது: இருக்க வேண்டிய திசையில் ஜன்னல் இல்லாதிருப்பது போன்ற தோஷங்கள் 'காண வேதை' எனப்படும். இக்குற்றமுள்ள வீட்டில் வசிப்பவர்கள் கண் காது நோய்களுக்கு இலக்காக நேரிடும். அல்லது ஊமையான குழந்தை பிறக்கும்.

5. பதிர வேதை: சில வீடுகளில் தலைவாயில் தரைமட்டத்திற்கு மேலாக இல்லாமல் தாழ இருக்கும் (சென்னையில் சாலைகளைச் சீர்படுத்தும்போது அதன் மட்டம் உயர்ந்து அருகில் உள்ள வீடுகள் தாழ இருப்பதைக் காணலாம்) அவ்வாறு இருப்பது 'பதிர வேதை' எனப்படும். இந்தக் குற்றமுள்ள இல்லத்தில் வசிப்பவர்கள் ஏழ்மையாலும், நோய்நொடிகளாலும் துன்பப்பட நேரும்.

6. திக்வக்த்ர வேதை: இல்லத்தில் உள்ள வாயில்களும் ஜன்னல்களும் ஒன்றுக்கொன்று நேர் எதிராக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் வேறுபட்டிருந்தால் திக்வக்த்ர தோஷம் உண்டாகும். அதனால் இல்லத்தில் உள்ள பெண்களுக்குக் கருச்சிதைவு, குழந்தைகள் மரித்தல் போன்ற துன்பங்கள் உண்டாகும்.

7. சிபிடக வேதை: இல்லம் அகலம் நீளத்திற்கு ஏற்றவாறு உயர்ந்திருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் உயரம் குறைந்தால் சிபிடக தோஷம் உண்டாகும். இத்தகைய இல்லத்தில் வசிக்கும் வீட்டுத் தலைவன் குடி, திருட்டுத் தொழில் போன்ற தீய குணங்களுக்கு இலக்காவான். தீயவர் நட்பு கொள்வான்.

8. வியங்கிய வேதை: இல்லத்திற்கு இருக்க வேண்டிய உறுப்புகள் குறைந்தால் வியங்கியவேதை என்னும் தோஷம் உண்டாகும். இத்தகைய இல்லத்தில் வசிப்பவர்களுக்கு உடல் ஊனம், மன மாறாட்டம், பகைவர்களால் துன்பம் போன்றவை ஏற்படும்.

9. முரஜ வேதை: வீட்டின் தலைவாயிலின் இருபக்கங்களும் சமமாக இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் ஒரு பகுதி மட்டும்

சற்று உயர்ந்திருந்தால் முரஜ வேதை உண்டாகும். இத்தகைய தோஷமுள்ள இல்லத்தில் வசிப்பவர்களின் குலம் விளங்காமல் போகும். (மக்கள் பிறவாமை, பிறந்தவர்கள் நிலை வரவரத் தாழ்ந்து போதல் முதலியன நேரும்.)

10. குடல வேதை:- வீட்டின் முகப்பில் உள்ள சார்பின் முன் முகப்பு சாஸ்திரப்படி இல்லாமல் அளவில் குறைந்தால் (சார்பின் மேற்கூரையின் முகப்பு சுவற்றை விட ஒரு சாண் நீண்டிருக்க வேண்டும். அதன் அளவு குறைந்தால் குடலவேதை உண்டாகும். இந்தத் தோஷம் வீட்டின் முன், சார்பு இருக்கும் போது தோன்றும்) இந்தக் குற்றமுள்ள இல்லம் இல்லத் தலைவனின் ஆயுளைக் குறைக்கும்.

11. குட்டக வேதை:- அஸ்திவாரம் கடைக்கால் போடும் போது நிலத்தைத் தோண்டுவதுண்டு. தோண்டி அடிச்சுவர் கட்டியதும் தரையை நன்கு பள்ளம் இல்லாமல் மூடவேண்டும். அவ்வாறின்றி நிலத்தடிக்குக் கீழ்மட்டத்தில் வீடு கட்டினால் அல்லது கட்டிய வீட்டுத் தரையைத் தோண்டி பள்ளமாக்கினால் குட்டக வேதை உண்டாகும். இத்தகைய இல்லத்தில் வசிப்பவர்களுக்கு பூதம்-பிசாசு-கிரகங்கள் முதலியவற்றால் துன்பங்கள் தோன்றும்.

12. சுப்தக வேதை:- கோசாரத்தில் சூரியன் இருக்கும் நக்ஷத்திரம் முதல் 5-7-9-12-19-26வது நட்சத்திரங்களில் உள்ள நாட்களில் வீடுகட்டத் துவங்கினால் அதனால் சுப்தகம் என்னும் தோஷம் உண்டாகும். சிலர் மேற்படி நட்சத்திரங்களில் முறையே 4-8-5-3-6-7 வது நாழிகைகள் குற்றமுள்ளவை எனக் கொள்கின்றனர். இந்த தோஷமுள்ள வேளைகளில் துவங்கப்பட்ட இல்லத்தில் வசிப்பதால் தலைவனுக்கு ஆயுள் குறைதல், அல்லது செல்வம் குறைதல் எனும் தீங்குகள் உண்டாகும்.

13. சங்கபாலக வேதை:- கம்பமில்லாத வீடு சங்கபாலக வேதை என்னும் தோஷத்திற்கு இலக்காகும். (பெருநகரங்களில் கட்டப்படும் கான்கிரீட் இல்லங்களுக்கு 'பில்லர்கள்' வைத்துக் கட்டப்படுவதால் இக்கட்டடங்கள் தூண்கள் உள்ளவையேயாகும். எனவே தோஷம் இல்லை) இத்தகைய இல்லத்தில் வசிப்பவர்கள் அழகற்ற உடல் கொண்டிருப்பர். குடிசை வீடாயினும் கம்பங்கள் நட்டுக் கட்டப்படுவதை நாம் அறிவோம். அவ்வாறின்றி வெறும் சுவர்கள் மட்டும் வைத்து வீடு கட்டக்கூடாது.

வீட்டின் எதிர்ப்புறத்தில் உள்ள தெருவின் அகலத்தை விட அதிக அளவில் அகலமுள்ள தெரு வீட்டிற்கும் எதிர் தெருவுக்கும்

நடுவில் குறுக்காகச் சென்றால் தோஷம் இல்லை என்பது சிலர் கருத்து. இத்தோஷம் நேர்ந்தால் அதற்கு பரிகாரமாக அத்தெரு விற்கு எதிரில் தன் வீட்டைச் சார்ந்து சிறு கோயில் (பிள்ளையார் கோயில் போன்றவை) நிறுவப்பட்டிருப்பதைச் சென்னை போன்ற நகரங்களில் காணலாம். (கோயில்களுக்கு நேர் எதிரில் தெருக்கள் இருப்பதைக் காணலாம்.)

14. விகட வேதை:- தலைவாயில் இல்லத்திற்கு ஏற்ப அகலம் நீளம் கொண்டிருக்க வேண்டும். அளவில் ஏற்றத்தாழ்வு இருந்தா லும், மிகப்பெரியதாகவோ, மிகச் சிறியதாகவோ இருந்தாலும் விகடம் என்னும் தோஷம் உண்டாகும். இதனால் இல்லத் தலைவனின் ஆயுள் குறையும்.

15. கங்க வேதை: ஓரில்லத்திற்கு சார்பு வைப்பதானால் நான்கு பக்கங்களிலோ, அல்லது இரண்டு பக்கங்களிலோ அமைக்க வேண்டும். ஒரு பக்கத்தில் மட்டும் அல்லது மூன்று பக்கங்களில் மட்டும் அமைக்கக் கூடாது. அவ்வாறு அமைத்தால் கங்கவேதை உண்டாகும். அதனால் இல்லத்தில் வசிப்பவர்கள் ஏழ்மையால் வருந்துவர்.

16. கைகர வேதை:- வீட்டிற்கு அகலம், உயரம், நீளம் போன்ற அளவுகள் வாஸ்து முறைப்படி இல்லாமல் ஏற்றமும் தாழ்வும் பெற்றிருந்தால் கைகர வேதை என்னும் தோஷம் உண்டாகும். இந்தத் தோஷம் உள்ள இல்லத்தில் வசிக்கும் தலைவனின் மனைவிக்கு ஆயுள் குறையும்.

17. குலிச வேதை:- வீட்டின் தலைவாயில் அல்லது வேறு வாயில்கள், கதவுகள் முதலியன கோடாலி (கோடரி) போன்ற ஆயுதங்களால் தாக்கப்பட்டிருந்தால் குலிசம் என்னும் தோஷம் உண்டாகும். இந்த தோஷம் இல்லத்தில் வசிப்பவர்களின் ஆயு ளைக் குறைக்கும்.

18. ஊர்த்வ வேதை:- வீட்டின் உயரம் சாஸ்திர முறைக்குப் புறம்பாக மிக உயர்ந்திருந்தால் அது ஊர்த்வ வேதை எனப்படும். இத்தோஷம் உள்ள இல்லத்தில் வசிக்கும் தலைவனின் செயல்கள் பலன் தராமல் வீணாகும். அல்லது மாறான பலன்களைத் தரும்.

19. ரத்யா வேதை:- வீட்டின் தலைவாயிலுக்கு நேராக நெடுந் தெரு இருந்தால் ரத்யா வேதை எனப்படும். இது 'தெருக்குத்து' என்றும் சொல்லப்படுகிறது. இந்தக் குற்றமுள்ள வீட்டில் வசிக் கும் தலைவனுக்கு ஆயுள் குறைதல் போன்ற கேடு விளையும்.

20. விருக்ஷ வேதை:- இல்லத்தின் தலைவாயிலுக்கு நேராக மரம் இருந்தால் விருக்ஷ வேதை ஏற்படும். இதனால் இல்லத் தலைவனின் குழந்தைகளுக்குத் தீங்கு நேரும்.

21. பங்க வேதை:- வீட்டின் தலைவாயிலுக்கு நேரில் சேறு நிறைந்திருக்குமானால் அது பங்கவேதை எனப்படும். அதனால் இல்லத்தில் வசிப்பவர்களுக்குத் துக்கம் நேரும்.

22. அம்புநிஸ்ரவண வேதை:- மழைக்காலத்தில் தற்செயலாக ஏற்படுவதன்றி இல்லத்திற்கு எதிராக எப்பொழுதும் நீர் ஓட்டம் இருக்குமானால் அம்புநிஸ்ரவண வேதை எனும் குற்றம் உண்டாகும். இதனால் வீட்டில் வசிப்பவர்களுக்குப் பொருட்செலவு மிகும். (பெரும்பாலும் நகரத் தெருக்களில் இல்லங்களுக்கு எதிராகச் சாக்கடை நீர், விடாமல் ஓடிக் கொண்டிருப்பதும், அதனால் கொசு போன்றவற்றால் நோய் நொடிகள் மிகுவதும் காணலாம். அவ்வாறு சாக்கடைகள் வீட்டின் முன்பக்கத்தில் இல்லாமல் பின்பக்கத்திலோ, பக்கங்களிலோ இருந்தால் ஓரளவு தோஷம் குறையும்.) தவிர்க்க முடியாதபோது வீட்டின் முன் கண்களுக்குப் புலனாகாமல் நன்றாக மூடி வைப்பது தகும்.

23. கூப வேதை: வீட்டின் தலைவாயிலுக்கு நேராகக் கிணறு இருப்பதால் கூப வேதை உண்டாகும். இக்குற்றம் உள்ள வீட்டில் வசிக்கும் தலைவனுக்கு அபஸ்மாரம், மூர்ச்சை போன்ற நோய்கள் தோன்றும்.

24. தேவதா வேதை: தலைவாயிலுக்கு நேர் எதிரில் கோயில் இருக்குமானால் அது தேவதா வேதை எனப்படும். இக்குற்றம் உள்ள இல்லத்தில் வசிப்பவர்கள் செல்வக்குறைவு, குடும்பம் சீர்கெடுவது போன்ற துன்பங்களுக்கு இலக்காக நேரும்.

25. ஸ்தம்ப வேதை: இல்லத்தின் தலைவாயிலுக்கு நேர் எதிரில் பிறர் வீட்டுக் கம்பமோ அல்லது வேறு வகையில் நடப்பட்டுள்ள கம்பமோ (கொடிக்கம்பம், பந்தல் கம்பம் போன்றவை) இருந்தால் ஸ்தம்ப வேதை உண்டாகும். இக்குற்றமுள்ள இல்லத்தில் வசிக்கும் தலைவன் மனைவியை இழப்பான். அல்லது மனைவி கெட்ட நடத்தை உள்ளவள் ஆவாள்.

இவ்வாறு கூறப்பட்ட பங்க வேதை, விருக்ஷ வேதை நீரோட்டம் முதலியவை தன் வீட்டின் உயரதிற்கு இரண்டு மடங்கான தூரத்திற்கு அப்புறத்தில் இருந்தால் தோஷம் இல்லை. மேலும் தோஷம் தரும் மரம் முதலிவற்றிற்கும் தன் இல்லத்திற்கும் இடையே அகன்ற தெரு இருந்தால் தோஷம் இல்லை.

26. விருக்ஷச்சாயா வேதை: ஏதேனும் ஒரு மரத்தின் நிழல் காலை முதல் யாமம், பகலின் கடைசி யாமம் தவிர (சூரியோதயம் முதல் மூன்று மணி, அஸ்தமிப்பதற்கு முன் மூன்று மணி) ஏனைய காலங்களில் இல்லத்தின் மேல் விழுமானால் அது விருக்ஷச்சாயா தோஷம் எனப்படும். இக்குற்றமுள்ள இல்லத்தில் வசிப்பவர்க ளுக்கு எப்பொழுதும் வருத்தம் தோன்றிக் கொண்டே இருக்கும்.

27. ஸங்கீர்ண வேதை: இல்லத்தின் அளவிற்குத் தேவையான அளவை விட அதிக அளவில் தலைவாயில் இருந்தால் ஸங்கீர்ண வேதை உண்டாகும். இது ஏழ்மையைத் தோற்றுவிக்கும்.

28. பீடிதத்வார வேதை: வீட்டின் தலைவாயில்படி மிகப் பெரியதாகவோ சிறியதாகவோ இருந்தால் பீடிதத்வார வேதை எனப்படும். இதனால் இல்லத் தலைவனுக்கு எப்பொழுதும் ஏதேனும் துன்பம் உண்டாகிக் கொண்டே இருக்கும்.

29. அந்தர்வினதத்வார வேதை: இல்லத்தின் தலைவாயில் சரி யாக அமைக்கப்படாமல் உள்நோக்கிச் சாய்ந்திருந்தால் அந்தர்வின தம் என்னும் தோஷம் உண்டாகும். இதனால் வீட்டில் உள்ளவர் கள் ஒற்றுமையின்றி ஒருவரோடு மற்றொருவர் சண்டையிட்டுக் கொண்டே இருப்பர்.

30. பாஹ்யவிநதத்வார வேதை: தலைவாயில் வெளிப்பகுதியை நோக்கிச் சாய்ந்திருந்தால் இல்லத்தலைவன் வீட்டில் வசிக்காமல் எந்நாளும் வெளியூரில் சுற்றிக் கொண்டிருப்பான்.

31. திக்ப்ராந்தத்வார வேதை: வாயில் நேராகத் ஒரு திசையை நோக்கி இராமல் ஒருபக்கத்தில் திரும்பியிருந்தால் திக்பிராந்தம் என்னும் குற்றம் உண்டாகும். இத்தகைய இல்லத்திற்குத் திருடர்க ளால் தீங்கு நேரும்.

32. உத்காடிதகவாட வேதை: இல்லத்தின் வாயில்கதவு தானா கவே திறந்து கொள்ளுமாறு அமைக்கப்பட்டிருந்தால் உத்காடிதக வாடம் என்னும் குற்றம் உண்டாகும். இதனால் இல்லத் தலைவ னுக்கு மனச்சஞ்சலம் உண்டாகும்.

33. பிஹிதகவாட வேதை: இல்லத்தின் வாயில் கதவு தானாகவே மூடிக் கொள்ளுமானால் விஹிதகவாடம் என்னும் தோஷமாகும். இதனால் இல்லத் தலைவனின் குலம் விளங்காமல் போகும். (தலைவாயிலில் உள்ள கதவுக்கு இத்தோஷம் உண்டாகும். சில இல்லங்களில் ஸ்பிரிங் அமைத்துத் தானாகவே மூடிக் கொள்ளு மாறு அமைக்கப்படுவதுண்டு. அது இத்தோஷத்திற்கு சேராது. நம் முயற்சியால் மூடிக்கொள்வது போன்றது.

34. சூரிய கிரணாவரோத வேதை: இல்லம், கோயில் போன்ற எந்தக் கட்டடமானாலும் பகலில் முதல் யாமம் கடை யாமங்களில் (சூரிய உதயத்திலிருந்து மூன்று மணி நேரமும், அஸ்தமிப்பதற்கு முன் மூன்று மணி நேரமும்) சூரிய ஒளி வீட்டில் நன்கு படும்படி அமைக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் சூரிய கிரண அவரோதம் என்னும் குற்றமுண்டாகும். இந்தத் தோஷத்தால் இல்லத்தில் உள்ளவர்கள் அடிக்கடி நோய்வாய்ப்பட நேரும். கால்நடைகளும் அழியும்.

(உடல் நலத்திற்கு சூரிய ஒளி படுதல் மிகவும் அவசியம். அதனால்தான் கிழக்குப் பகுதியில் வெற்றிடம் அதிகமாக அமைய வேண்டும். உத்தராயண காலத்தில் சூரியனின் ஒளி வலிமை பெற்றிருப்பதால் வடக்கில் வெற்றிடம் மிகுந்திருந்தால் சூரிய ஒளியின் பிரபாவம் வீட்டில் அதிகமாக விளங்கும். நம் அறிவாற்றலுக்கும், திறமைக்கும் உயிர்த்திருப்பதற்கும் சூரிய சக்தி இன்றியமையாதது என்பது விஞ்ஞானம் கூறும் விஷயமாகும்.)

35. கிருஹச்சாயா வேதை: பகலில் இரண்டாவது மூன்றாவது யாமங்களில் அதாவது சூரியோதயம் ஆனபிறகு ஆறுமணி நேரம் சூரிய கிரணம் கிணற்றில் படவேண்டும். அவ்வாறில்லாமல் வீட்டு நிழல் அக்காலத்தில் கிணற்றின் மேல் விழுமானால் கிருஹசாயை என்னும் குற்றம் உண்டாகும். இதனால் இல்லத்தில் பெண்களுக்கு நோய் நொடியும், பசுக்களுக்குத் துன்பமும் விளையும். (கிணற்று நீரில் வெயில் பட வேண்டுமென்பது விஞ்ஞானம் கூறும் உண்மையாகும்.)

36. சாயா வேதை: ஒரு சுற்றுச்சுவர் உள்ள இடத்தில் பல வீடுகள் கட்டும்போது ஒன்றின் நிழல் மற்றொன்றில் விழும், (அதனால் சூரியகிரணம் அந்த வீட்டில் படாமலேயே போய்விடும்.) அதனால் சாயா வேதை என்னும் தோஷம் உண்டாகும். நிழலில் உள்ள இல்லத்தில் வசிப்பவர்கள் நோய் நொடியால் துன்புறுவர். கால்நடைகளும் அழியும். பக்கத்தில் மிக உயர்ந்த வீடு இருந்தால் அதை அடுத்துள்ள சிறு வீட்டிற்கு உச்சிப் பொழுதிலாவது சூரியஒளி படும்படி இருக்க வேண்டும். சுமார் நான்கைந்து மணி நேரமாவது அவ்வாறு இருக்க வேண்டும். இல்லாவிடில் இந்தக் குற்றம் உண்டாகும்.

37. ருது வேதை: கிழக்கு வடக்குப் பகுதிகளில் உள்ள சுவர்கள் மிக்க உயரமாகவும், தெற்கு மேற்கில் உள்ளவை தாழ்வாகவும் இருந்தால் ருதுக்குற்றம் உண்டாகும். வீட்டைச் சுற்றியுள்ள

பாதுகாப்புச் சுவர்களும் கிழக்கிலும் வடக்கிலும் சற்று தாழ்ந்தும், மேற்கு தெற்குத் திசைகளில் உயர்ந்தும் இருக்க வேண்டும். உத்தராயண காலத்தில் சூரியன் வலிமை பெற்றிருப்பான். தக்ஷிணாயனத்தில் அவன் வலிமை குறைந்திருக்கும். அதனால் சூரிய ஒளி வெகுநேரம் இல்லத்தில் மிக அதிகமாகப் பரவும் வண்ணம் கிழக்கு வடக்குச் சுவர்கள் சற்றுத் தாழ்வாக இருத்தல் அவசியம். தக்ஷிணாயனத்தில் பனி மிகுந்து சூரிய ஒளி வலிமை குன்றியிருப்பதால் அதற்கேற்ப தெற்கு மேற்குச் சுவர்கள் உயரமாக வும், தெற்கு மேற்குப் பகுதிகள் குறுகியும் இருப்பதால் பனி, குளிர் முதலியவற்றின் தாக்குதலும் பலவீனமடையும்.

38. வம்ச வேதை: பங்காளிகளின் வீட்டுக் கம்பம், அல்லது வீட்டின் மூலைப்பகுதி ஆகியவற்றிற்கு நேராக வீடு ஏற்றமும் தாழ்வும் பெற்றிருக்கும் போதும், மேற்கு தெற்குத் திசைகளில் சிறியவர்களும், வடக்கு கிழக்குத் திசைகளில் பெரியவர்களும் வசிக்கும் போதும் குலத்தால் இல்லத்திற்குத் தோஷம் ஏற்படும். இத்தகைய இல்லத்தில் வசிப்பவர்கள் ஏழ்மையால் துன்புறுவர். குலமும் விளங்காமல் போகும்.

39. அக்ரபூமிக வேதை: வீட்டிலும், சுற்றுப்புறத்திலும், கிழக்கு வடக்குத் திசைகளில் உள்ள நிலம் உயர்ந்து, மேற்கு தெற்குத் திசைகள் தாழ்ந்து இருக்குமானால் அக்ரபூமிக வேதை எனப்படும் குற்றம் உண்டாகும். இதனால் வீட்டில் உள்ளவர்களிடையே கலகம், நோய், துக்கம், ஏழ்மை முதலிய துன்பங்கள் தோன்றும்.

40. ஸங்காத வேதை: வீட்டிற்கு முன்பு அல்லது ஆவரணத்தில் கால்நடைகளைக் கொல்லும் இடம் இருந்தால் ஸங்காத வேதை உண்டாகும். இதனால் வீட்டுத் தலைவனின் ஆயுள் குறையும், புகழும் கெடும்.

41. தந்த வேதை: மலைக்கு நேராகத் தலைவாயில் இருந்தாலும், வீட்டின் உச்சி மலையைப் போன்ற தோற்றம் கொண்டிருந்தாலும் தந்த வேதை உண்டாகும். இந்த இல்லத்தில் வசிப்பதால் நோயும், துக்கமும் இல்லத்தில் உள்ளவர்களை வாட்டும்.

42. திரிகோண வேதை: வீட்டு மனை அல்லது வீடு முக்கோண வடிவில் இருந்தால் திரிகோண வேதை உண்டாகும். இதனால் வீட்டுத் தலைவனுக்கு மனம் பேதலிக்கும். ஏழ்மையும் மிகும்.

43. மடவேதை: சன்யாசிகள் வசிக்கும் மடத்திற்கு நான்கு பக்கங்களிலும் 200 கஜம் அல்லது 186 மீட்டர் தொலைவில் வீடு கட்டிக் கொள்ள வேண்டும். அந்த எல்லைக்குள் வீடு இருந்தால்

மடத்தால் வேதை உண்டாகும். இந்த இல்லத்தில் வசிப்பவர்களுக்குத் திருடர்களால் அச்சம் விளையலாம்.

44. சிவ வேதை: வீட்டிற்கு எதிரில் 200 கெஜ அளவிற்குள் சிவன் கோயில் அல்லது சிவலிங்கம் இருந்தால் சிவ வேதை உண்டாகும். இதனால் இல்லத்தில் கலகமும், ஏழ்மையும் மிகும். நெருப்பால் தீங்கு விளையும்.

45. விஷ்ணு வேதை: வீட்டிற்கு எதிரில் 200 கெஜங்களுக்குள் விஷ்ணு கோயில் அல்லது விக்ரகம் இருந்தால் அதனால் விஷ்ணு வேதை உண்டாகும். இந்தக் குற்றம் உள்ள இல்லத்தில் வசிப்பவர்களுக்குத் திருடராலும், நோய்களாலும் துன்பம் உண்டாகும். ஏழ்மையும் மிகும்.

46. சக்தி வேதை: வீட்டிற்குப் பக்கத்தில் 200 கெஜத்திற்குள் சக்தியின் கோயில் இருந்தால் சக்தி வேதை என்னும் தோஷம் உண்டாகும். இந்தத் தோஷத்தால் இல்லத்தில் வசிப்பவர்களின் குலம் விளங்காமல் போகும். ஏழ்மையும் மிகும்.

47. தருமசாலா வேதை: இல்லத்திற்கு எதிரிலோ, பக்கத்திலோ இருநூறு கெஜங்களுக்குள் தர்மசாலை (தர்ம சத்திரம்) இருந்தால் குற்றமாம். இத்தகைய இல்லத்தில் வசிப்பவர்களுக்கு மனச் சஞ்சலமும், தீய நடத்தையும் உண்டாகலாம். (பல தரப்பட்ட மக்கள் வந்து போகும் இடமாகையால் எளிதில் அத்தகையவர்களின் தொடர்பு ஏற்படக்கூடும். அதனால் தீங்கு விளைவது இயற்கையே.)

48. பர்வத வேதை: மலை உச்சி, மலைச் சரிவு, மலை அடிவாரம் ஆகிய இடங்களில் வீடு கட்டுவதாலும், மலையின் நிழல் வீட்டின் மேல் பரவும்படி அமைப்பதாலும் பர்வத வேதை உண்டாகும். இத்தகைய இல்லங்களில் வசிப்பவர்கள் எவ்வளவு பணம் சம்பாதித்தாலும் நிலையாக நிற்காது.

49. பாஷாண வேதை: வீட்டின் மனை, சுற்றுப் புறங்களில் நிலத்தடியில் 3 கெஜம் அளவிற்குள் (2.743 மீ) பாறைகள் இருந்தால் பாஷாண வேதை உண்டாகும். இக்குற்றம் உள்ள இல்லத்தில் வசிப்பவர்கள் தீராத நோய்களுக்கு இலக்காக நேரிடும். சில சமயங்களில் அபமிருத்யுவும் உண்டாகலாம்.

(மழைநீர் முதலியவை ஆழமாக நிலத்தில் இறங்காமல் மேலேயே தங்குவதால் நோய் கிருமிகள் தோன்ற இடமுண்டு என்பதை உணர்க. அதனால் எளிதில் பல நோய்கள் உண்டாக

லாம். அந்நோய்க் கிருமிகள் உள்ள நீர், கிணற்று நீருடன் சேரும் வாய்ப்பு உண்டாகும்.)

50. குல்ய வேதை: வீட்டிற்கு தெற்கிலோ மேற்கிலோ, வாய்க் கால் போன்ற நீரோட்ட நிலைகள் இருந்தால் குல்ய வேதை உண்டாகலாம். இந்தத் தோஷம் உள்ள இடத்தில் வசிப்பவர்களுக் குத் திடீரென உபத்ரவங்களும், நோய்களும், மரண பயமும் உண்டாகலாம். (வீட்டின் உயரத்திற்கு இரண்டு மூன்று அடி அளவு தூரம் தாண்டி இருந்தால் தோஷம் நேராது.)

51. தடாக வேதை: வீட்டிற்குத் தெற்கு, தென்கிழக்கு, வடமேற் குப் பகுதிகளில் ஏரி, குளம் முதலியவை இருந்தால் தடாக வேதை என்னும் தோஷம் உண்டாகும். இதனால் வீட்டுத் தலைவனுக்குப் பல துன்பங்கள் உண்டாகும்.

52. வாரி பிரவாஹ வேதை: தென் மேற்குத் திசையிலிருந்து தென் கிழக்காகவோ, தென்கிழக்குத் திசையிலிருந்து தென் மேற்காகவோ ஆறு, வாய்க்கால் போன்ற நீர் ஓட்ட நிலைகள் இருந்தால் வாரி பிரவாஹ தோஷம் உண்டாகும். வடகிழக்கிலி ருந்து தென்கிழக்காகவோ தென்மேற்கிலிருந்து வடமேற்காகவோ, வடமேற்கிலிருந்து தென்மேற்காகவோ நீர் ஓட்டமிருந்தாலும் இந்தத் தோஷம் உண்டாகும். இதனால் தலைவனின் குலம் விளங்காமல் போவதோ, தலைவனின் ஆயுள் குறைதலோ நேரும்.

53. சுய ஜல வேதை: தன் வீட்டின் நீர் தன் வீட்டின் ஆவரணத்தில் தெற்கு, மேற்கு, தென்மேற்கு, வடமேற்கு, தென்கிழக்குத் திசைகளில் எந்த வழியால் வெளியேறினாலும் சுய ஜலவேதை என்னும் தோஷம் உண்டாகும். இதனால் மனத்திற்கு கவலை, நோயால் துன்பம் ஆகியவை உண்டாகும்.

54. பர ஜல வேதை: பிறருடைய இல்லத்திலிருந்து மழை நீர் புழங்கும் நீர், முதலியவை தன் வீட்டின் ஆவரணத்திற்குள் பாயுமானால் பர ஜல வேதை என்பது உண்டாகும். இதனால் வீண் கலகம், பகைவரால் துன்பம், நஞ்சுள்ள பூச்சிகளால் கேடு முதலியன தோன்றும்.

55. பக்ஷி வேதை: காகம், வௌவால் போன்றவை வீட்டின் ஆவரணத்தில் வாசம் செய்யத் தொடங்கினால் பக்ஷி வேதை உண்டாகும். இதனால் கு(ந்தைகளுக்குக் கெடுதலும், மனக்கவ லையும் தோன்றும்.

56. உலூகம் முதலியவற்றால் வேதை: கழுகு, கோட்டான் முதலியவை வீட்டின் ஆவரணத்தில் தங்கினால் உலூகம் முதலிய வற்றால் தோஷம் உண்டாகும். அதனால் குழந்தைகளுக்குக் கேடு, மனக்கவலை, கெட்ட கனவுகளால் சஞ்சலம் முதலியன உண்டா கும்.

57. சசகாதி வேதை: இரவு வேளைகளில் வீட்டின் ஆவரணத்தில் முயல் முதலியன தங்கினால் சசகாதி வேதை தோன்றும். இதனால் சுகக் குறைவு, உடல் நலமின்மை முதலியன தோன்றும். பசு சாணம், பசுவின் சிறுநீர் (கோமயம்) முதலியன கிருமிகளைக் கொல்லும் தன்மை வாய்ந்தவை. அவை வீட்டின் நிலத்திலுள்ள மண்ணில் சேர்வதால் தீங்கில்லை. ஏனைய முயல் முதலியவற்றின் எச்சம் நிலத்தில் சேர்ந்தபோது தீங்கு விளைவிக்கும் கிருமிகள் தோன்றலாம்.

58. நிசாசர வேதை: வீட்டில் பகலில் சூரிய ஒளியும், இரவில் சந்திரன் நிலவும் நன்கு படாமல் இருந்தால் நிசாசர வேதை என்னும் தோஷம் உண்டாகும். இதனால் இல்லத்தில் வசிப்பவர்க ளுக்குத் தீராத நோய்கள் தோன்றலாம்.

59. சிகாவிஹீன வேதை: இல்லத்தின் தலைப்பகுதி பள்ளமாகத் தாழ்ந்து அல்லது வளைந்து இருந்தால் சிகாவிஹீன வேதை தோன்றும். இதனால் இல்லத் தலைவனுக்கு அடிக்கடி நோய்க ளால் தொந்தரவு நேரும்.

60. குட்யஹீன வேதை: இல்லத்தின் சுவர்கள் முழுமையாகக் கட்டப்படாவிட்டாலும், வளைந்திருந்தாலும் $2^1/_2$ கெஜம் (சுமார் 2.439 மீட்டர்) அளவை விடக் குறைந்தாலும், குட்யஹீன வேதை உண்டாகும். இதனால் இல்லத்தில் வசிக்கும் குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் கேடு, கலகம், செல்வம் திருடர்கள் வயப்படுதல் முதலியவை நேரும்.

61. புத்புத வேதை: வீட்டின் ஆவரணம் அல்லது அறைகள் ஆகியவற்றின் தரையிலிருந்து தானாக நீர் மேல்நோக்கிக் கசிந்து கொண்டிருந்தால் புத்புத வேதை உண்டாகும். இதனால் குழந்தை களுக்கும், கால்நடைகளுக்கும் தீங்கு நேரும்.

62. வஹ்னி வேதை: வீட்டின் ஆவரணத்தில் தென்கிழக்குப் பகுதியில் தூமாயம் என்ற அளவில் இல்லாமல் வேறு அளவில் வீடு கட்டினாலும், வேறு ஆயம் என்ற அளவு கொண்ட வீடு தென்கிழக்குத் திசையை நோக்கினாலும், வஹ்னி (நெருப்பு) வேதை உண்டாகும். இதனால் பல துன்பங்களும், நெருப்பால்

தீங்கும் விளையும். (அந்தந்தத் திசைகளை நோக்கி இல்லம் அல்லது அறைகள் இருக்க வேண்டிய அளவுகளைப் பழைய வாஸ்து சாஸ்திர நூல் விளக்கியுள்ளது. தற்காலத்தில் சில கிராமங்களில் தவிர பெருநகரங்களில் இத்தகைய நியதிகள் பின்பற்றப்படுவதில்லை. ஆயினும் குற்றமுள்ள அமைப்பில் தோஷங்கள் விளைவதைப் பற்றி யாரும் ஆராய்ச்சி மூலமாகக் கண்டு கொள்ளவும் இல்லை. எனவே அவை இந்நூலின் முதலில் விளக்கப்படவில்லை. நூலின் முடிவில் அவை விளக்கப்படும்.)

63. தக்தகாஷ்ட வேதை: வீடுகட்டப் பயன்படுத்தப்படும் மரத்தைப் பற்றிச் சில குற்றங்கள் நேரும். நெருப்பால் சுடப்பட்டுள்ள மரத்தின் பலகைகளைக் கொண்டு வீடுகட்டினால் தக்தகாஷ்ட வேதை உண்டாகும். இந்த இல்லத்தில் வசிப்பவர்களுக்கு நெருப்பாலோ, விரணம் முதலியவற்றாலோ தீங்கு விளையலாம்.

64. சதுஷ்கோண வேதை: வீடு நான்கு பக்கங்களிலும் சம அளவுள்ளதாகக் கட்டினால் சதுஷ்கோண வேதை உண்டாகும். (அகலம், நீளம் அளவுகள் வேறுபட்டிருக்க வேண்டும்.) இந்த குற்றமுள்ள வீடு ஏழ்மையையும், இடம் விட்டுப் பெயர் தலையும் உண்டாக்கும்.

65. வாயுச்சித்ர வேதை: மேற்கு, தெற்குப் பகுதிகளில் உள்ள சுவர்களுக்கு ஜன்னல்கள் அமைக்கப்படாவிட்டால் வாயுச் சித்ர தோஷம் உண்டாகும். இதனால் இல்லத் தலைவனின் மக்கள் ஆயுள் குறைதல், நோய்கள் தோன்றுதல், அகால மரணம் போன்ற துன்பங்கள் விளையும்.

66. பிரேததூமவேதை: மயானத்திலிருந்து வெளியேறும் புகை பரவக்கூடிய வகையில் அமைந்த இல்லம் பிரேததூம வேதை என்னும் குற்றம் உள்ளதாகும். இந்தக் குற்றமுள்ள இல்லத்தில் வசித்தால் உடல்நலம் கெடும். அகால மரணமும் நேரும்.

67. கவாட வேதை: வீட்டின் வாயில் பழையதாகி வலிவிழந்து சிதிலமாகி இருந்தாலும், வீட்டு வாயிலுக்குக் கதவுகள் இல்லாமல் இருந்தாலும், கவாடவேதை என்னும் குற்றம் நேரும். இதனால் தீராத நோய், திருடர்களால் பயம், செல்வம் இழத்தல் முதலியன நேரும்.

68. காத வேதை: இல்லத்திற்குத் தென்கிழக்கு, தென்மேற்கு, தெற்கு, மேற்கு வடமேற்குப் பகுதிகளில் எந்தத் திசையிலாவது பள்ளம் (குழி) இருந்தாலும், பள்ளம் வெட்டினாலும் காதவேதை என்னும் தோஷம் உண்டாகும். இதனால் பசுக்கள் அழிதல்,

செல்வம் குறைதல், மனத்திற்கு அமைதியின்மை, கடன் தொல்லை போன்ற தீங்குகள் விளையும்.

69. தாரு வேதை: வேறொரு வீட்டின் ஜன்னல், கதவு, வாயிற்படி முதலியவற்றைப் புதியதாகக் கட்டும் வீட்டிற்குப் பயன்படுத்தினால் தாரு வேதை என்னும் குற்றம் உண்டாகும். இத்தோஷம் உள்ள வீட்டில் தலைவன் நிலைத்துத் தங்கமாட்டான். அல்லது அவன் ஆயுள் குறையும். (புதிய இல்லத்திற்கு ஒருமுறைகூட பயன்படுத்தப்படாத புதிய மரப்பலகை முதலியவற்றையே பயன் படுத்த வேண்டும். பழைய வீட்டைச் சீர்படுத்தும்போது ஒரு முறை பயன்படுத்தப்பட்ட மரச்சாமான்களைப் பயன்படுத்த வேண்டும் என்பது வாஸ்து சாஸ்திரக் கொள்கையாகும்.)

70. நீச வேதை: இல்லத்தின் சுற்றுப்புறத்தில் கிழக்கிலோ, வடக்கிலோ, வடகிழக்கிலோ, சாணம், குப்பை முதலியவற்றைக் குவித்து வைத்தால் நீச வேதை என்னும் தோஷம் உண்டாகும். இது குழந்தைகளுக்குக் கேடு விளைவிக்கும்.

71. கர்ப வேதை: இல்லத்தின் நடுப்பகுதியில் உள்ள கூடம் அல்லது ஹால் 4 கஜங்கள் (3.658 மீ) அளவு நீண்டிருக்க வேண்டும். குறைவாக இருந்தாலும், மிகுந்திருந்தாலும் கர்பதோஷம் உண்டாகும். இக்குற்றம் இருந்தால் செலவு மிகும். குழந்தைகளின் உடல்நலம் அடிக்கடி கெடும். பசுக்களுக்கும் கெடுதல் உண்டாகும்.

72. சதுஷ்பத வேதை: வீட்டிற்கு நான்கு பக்கங்களிலும் தெரு இருக்கும்போது சதுஷ்பத வேதை உண்டாகும். இக்குற்றமிருந்தால் பகைவர்களாலும், திருடர்களாலும் தீங்கு விளையும்.

73. கல்ப வேதை: இல்லத்தின் ஆவரணத்தில் பனைமரம் இருந்தால் கல்ப வேதை உண்டாகும். இக்குற்றம் இருந்தால் பூதங்களாலும், இடியாலும் தீங்கு விளையும்.

74. தாருசந்தி வேதை: கிராமங்களில் மரத்தால் தூலங்கள் சுவற்றின் மேல் அமைத்து வீடுகட்டுவது உண்டு. அவ்வாறு அமைக்கும்போது, தெற்குத் திசையில் உள்ள தூலம் முதலியவற்றின் மேல் மேற்கு மரமும், மேற்கு மரத்தின் மேல் கிழக்குத் தூலமும், வடக்குத் தூலத்தின் மேல் கிழக்குத் தூலமும் ஏறி இருக்க வேண்டும். இரு மரங்களின் அடிப்பகுதிகளோ, நுனி பகுதிகளோ ஒன்றுசேரக் கூடாது அவ்வாறு தவறாக அமைத்தால் கலகமும், நோயும், கடனும் துன்புறுத்தும்.

75. திக்தாரு வேதை: மரத்தால் இல்லத்தின் மேற்பகுதி கட்டும் போது மரத்தின் அடிப்பகுதி தெற்கு மேற்குத் திசைகளிலும், நுனிப்பகுதிகள் வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் இருக்குமாறு அமைக்க வேண்டும். மாறாக அமைத்தால் செல்வம் குறையும். (கிராமங்களிலும், நகரத்தின் புறப்பகுதிகளிலும் மூங்கில்களைப் பரப்பி அதன்மேல் ஓடு வேய்ந்து ஓட்டு வீடுகள் கட்டப்படுகின்றன. அவ்வில்லங்களுக்கு இது பொருந்தும்.)

76. அனிந்த வேதை: வீட்டிற்குள் இருக்கும் அறைகள் ஒற்றைப் படை எண்ணிக்கையில் இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் இரட்டைப்படை எண்ணிக்கையில் இருந்தால் இல்லத்தலைவன் பௌருஷம் குறைந்தவனாகவும், மனச் சஞ்சலம் உள்ளவனாகவும் இருப்பான். செல்வம் வரவரக் குறையும்.

77. ஆய வேதை: திசைகளில் உள்ள அறைகளின் அளவுகள் சாஸ்திர முறைப்படி அமையாவிடில் ஆய வேதை உண்டாகும். இக்குற்றமுள்ள வீட்டுத் தலைவன் செய்யும் தொழில், முயற்சிகள் சரியான பலன் விளைவிக்காது. செல்வங்களும் குறைவுபடும்.

78. ஸங்கர துவார வேதை: வாயில்கள் முழுவதும் ஒரே மரத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டும். வேறு வேறு மரத்தைச் சார்ந்த மரப்பலகைகளால் வாயிற்கால், கதவு முதலியவை இணைத்தால் ஸங்கர துவார வேதை உண்டாகும். இக்குற்றம் இருந்தால் வீட்டிலுள்ளவர்களிடையே கலகமும், பெண்களுக்குக் கெடுதலும் உண்டாகும். (பெரிய கதவுகளை மூன்று பலகைகளால் இணைப்பது நலம் தரும்.) ஆனால், ஒரே ஜாதியைச் சேர்ந்த மரத்தின் பலகைகளாக இருக்க வேண்டியது அவசியம்.

79. காந்தி வேதை: கிழக்குத் திசை இல்லம் வெண்ணிறமும், தென்கிழக்குப் பகுதி இல்லம் முகில் நிறமும், தெற்கு இல்லம் சிவப்பு நிறமும், தென்மேற்கு இல்லம் பச்சை நிறமும், மேற்கு இல்லம் நீலநிறமும், வடமேற்கு இல்லம் வெண்ணிறமும், வடக்கு இல்லம் பச்சை நிறமும், வடகிழக்கு இல்லம் மஞ்சள் நிறமும் கொண்டிருக்க வேண்டும். எத்திசையை நோக்கி வீட்டிற்குள் புகுகின்றோமோ அத்திசையைச் சார்ந்த இல்லம் எனக் கொள்க. தெற்கிலும் மேற்கிலும் உள்ள வீடு தென்மேற்கு பகுதியில் இருந்தாலும், வீட்டிற்குள் புகும்போது வடகிழக்கை நோக்கிப் புக வேண்டியிருக்கும். எனவே அந்த இல்லம் தென்மேற்குத் திசையை நோக்கிய இல்லமென்றும், தென்மேற்கு இல்லம் எனப்படும் என்றும் உணர்க. சிலர் வீடு இருக்கும்

திசை அதன் திசையாகக் கொள்கின்றனர். தெற்கு வடக்காக உள்ள தெருவில் கிழக்கு நோக்கிய வாயில் கொண்ட வீடு மேற்குப் பகுதியிலும், மேற்கு நோக்கிய வாயிலைக் கொண்ட வீடு கிழக்குத் திசையிலும் இருக்கும். கிழக்கு நோக்கிய வீட்டினுள் புகும்போது மேற்காகச் செல்கிறோம். எனவே அது மேற்கு வீடு என்றும், மேற்கு நோக்கிய இல்லத்தில் புகும்போது கிழக்கு நோக்கிப் புகுவதால் கிழக்கு வீடு என்றும் கொள்வதையே பெரும்பான்மை ஜோதிடர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். அந்தந்த வீடுகளுக்கு வெளியில் வண்ணம் தீட்டும் போது இத்தோஷம் இல்லாமல் அமைக்க வேண்டும். நிறம் மாறுபட்டிருந்தால் காந்தி வேதை உண்டாகும். இக்குற்றம் தலைவனுக்கு அவப்பெயரையும் வலிமை குறைபடுதலையும், சுகமின்மையையும் விளைவிக்கும், செல்வமும் குறையும். இல்லத் தலைவன் தீய நடத்தை உள்ளவனாகவும் ஆகக்கூடும்.

80. தரு வேதை:- தெய்வத்தின் விக்ரங்கள் வைக்கப்பட்டிருந்தவை, ஒன்றோடொன்று உராய்ந்து கொண்டு தேய்ந்தவை கிராம தேவதைகளுடைய விக்ரகங்கள் வைக்கப்பட்டிருந்தவை முதலிய பலகைகளை வீட்டிற்குப் பயன்படுத்துவதால் தரு வேதை என்னும் தோஷம் உண்டாகும். இக்குற்றம் இல்லத் தலைவனின் மனைவியைத் துன்புறுத்தும், கலகம், சுகக்கேடு போன்ற துன்பங்கள் நேரலாம்.

81. துக்த விருக்ஷ வேதை:- வீட்டின் ஆவரணத்திற்குள் பாலுள்ள மரங்களை வளர்த்தால் துக்த விருக்ஷ வேதை உண்டாகும். இக்குற்றம் செல்வத்தைக் குறைக்கும்.

82. கண்டக விருக்ஷ வேதை:- முள் உள்ள மரங்களை வீட்டின் ஆவரணத்தில் வளர்த்தால் கண்டக விருக்ஷ வேதை ஏற்படும். இது பகைவரால் துன்பம், தோல்வி, மனக்கலக்கம் முதலியவற்றைத் தோன்றுவிக்கும்.

83. சகட வேதை:- வாயிலின் மேல்பக்கத்தில் வேறு ஒரு வாயில் வைத்தால் சகட வேதை உண்டாகும். இதனால் தலைவனின் குலம் விளங்காமல் போகும்.

84. பிருஷ்ட பங்க வேதை: இல்லத்தின் முன் பகுதியிலிருந்து வீட்டிற்குள் செல்லும் வழக்கம் கொண்டிருப்பது நலம். அவ்வாறல்லாது பின்புறத்து வழியாலோ, பக்கங்களிலுள்ள வாயிலாகவோ உள்ளே புகும்படி அமைத்துக் கொண்டால் பிருஷ்ட பங்க வேதை ஏற்படும். இதனால் செல்வம் குறைவுபடும்.

85. அபஸவ்யகமன வேதை: வலம் வருவது போல வீட்டிற்குள் புகும்படி இல்லம் அமைந்திருக்க வேண்டும். அதாவது ஒரு துவாரத்தினுள் புகுந்ததும் இடது பக்கத்தின் வழியாக வேறு ஒரு துவாரத்தின் மூலம் உள்ளே செல்லுமாறு இருந்தால் அபஸவ்யகமன வேதை உண்டாகும். ஒரே துவாரத்தின் வழியே வீட்டின் எல்லையில் புகுந்து பிறகு வலது பக்கமாகச் சென்று வேறு துவாரத்தின் வழியே வீட்டிற்குள் புகும்படி வழி அமைத்துக் கொள்ள வேண்டும். அபஸவ்ய தோஷம் இருந்தால் வீட்டின் தலைவனுக்குப் பல துன்பங்கள் விளையும்.

இவ்வாறு பல தோஷங்கள் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. பெரும்பாலும் இத்தோஷங்கள் எம் பல்லாண்டு அனுபவத்தில் உண்மையாகவே பலன் தருவதை உணர்ந்துள்ளோம். வேதையின் தோஷம் நான்கு, ஆறு, எட்டு, ஒன்பது ஆண்டுகளில் பலன் தரும். ஒரு முறை ஏதேனும் தீங்கு நேர்ந்தால் ஆராய்ந்து ஏதேனும் குற்றம் இருந்தால் அதை நீக்கிக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் அடுத்த நான்காவது அல்லது ஆறாவது ஆண்டில் மீண்டும் துன்பம் விளையும்.

இவற்றில் சில தோஷங்கள் வீட்டில் குடியேறிய நான்காவது ஆண்டில் மகனை இழக்கும்படியும், ஆறாவது ஆண்டில் தலைவனுக்குத் தீராத நோயையும், ஒன்றிரண்டு இடங்களில் மரணத்தையும், ஒன்பதாவது ஆண்டில் செல்வம் குறைந்து போனதையும் அனுபவத்தில் கண்டுள்ளேன்.

வீட்டின் சொந்தக்காரர்களுக்கு மட்டும் அல்ல, வாடகைக்கு குடிபுகுந்தவர்களையும் இத்தோஷங்கள் தாக்கும். எனவே வாடகைக்கு வீடு அமர்த்திக் கொள்பவர்களும் தங்களுக்குத் தக்க திசையில் தோஷமற்ற வீடு அமைத்துக் கொள்வது நலம் தரும்.

வீடும், மரமும்

வீட்டைச் சுற்றிலும் மரங்கள் நடுவது உடல்நலத்தை வளர்க்கும் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் எந்த ஜாதியைச் சேர்ந்த மரம் இருக்க வேண்டும்? எவை கூடாது என்பதை அறிந்து அதற்கேற்ப வளர்க்க வேண்டும்.

வீட்டின் மனைக்குக் கிழக்கில் அரசமரம் இருந்தால் அச்சம் விளைவிக்கும். தெற்கில் கல் ஆலமரம் இருந்தால் அவமானமும், மேற்கில் ஆலமரம் இருந்தால் அரசாங்கத்தால் துன்பமும், வடக்கில் அத்திமரம் இருந்தால் கண்நோயும் உண்டாகும்.

மனைக்குக் கிழக்கில் ஆலமரமும், தெற்கில் அத்திமரமும், மேற்கில் அரசமரமும், வடக்கில் கல் ஆலமரமும் இருக்கலாம்.

வீட்டின் ஆவரணத்திற்குள் பால் உள்ளவை, முள் நிறைந்தவை இருக்கக் கூடாது. காலையில் சூரியன் உதயமான பிறகு மூன்று மணி நேரம் கழிந்த பின்னரும் மரத்தின் நிழல் வீட்டில் பரவும்படி இருக்கக் கூடாது.

பால் உள்ள மரம், ஆலம், அரசு சிவப்பு மலர்கள் பூக்கும் மரம், முள் நிறைந்த மரம், இலவமரம், அத்திமரம் முதலியவை தென்கிழக்குத் திசையில் இருந்தால் மரணம் விளைவிக்கும்.

புன்னை, ஞாழல், வேம்பு, மாதுளை, அசோக மரம், சிறுநாகப்பூ, சந்தனம், வசம்பு, விண்ணுகரந்தை, வாழை, தென்னை, மா, நாரத்தை, வில்வம் முதலிய மரங்களை வீட்டின் ஆவரணத்தில் வளர்க்கலாம்.

பலா மரம் எத்திசையில் இருந்தாலும் நன்மையே. ஆனால் தெற்கில் எத்தகைய மரமும் கூடாது.

புளியமரம், வில்வம், பனை, வேம்பு முதலியவை வீட்டு ஆவரணத்தில் இருந்தால் இல்லத்தில் வசிப்பவர்களுக்கு உடல் சோர்வு மிகும். எலுமிச்சை, நாவல் மரங்கள் இருந்தால் புகழ் மங்கும். நொச்சி, பேரீச்சை, இலந்தை மரங்கள் இருந்தால் புகழ் மங்கும். பாக்கு, முந்திரி, ஊமத்தை, மா என்னும் மரங்கள் இருந்தால் சுகம் குறையும். அரசு, கல் ஆலை, அகத்தி, மருது போன்ற மரங்கள் துக்கத்தை விளைவிக்கும். வீட்டின் முன்புறத்தில் மாதுளை, முருங்கை, நிலாவாரை என்பவை இருந்தால் இல்லத் தலைவனின் மனைவி தீராத நோய் கொள்வாள்.

வீட்டின் வடக்கில் விலாமரம், கிழக்கில் ஆலமரம், தெற்கில் அத்திமரம், மேற்கில் அரசமரம் இருந்தால் இல்லத்தில் நன்மை பெருகும்.

பாலுள்ள மரம் தன் உயரத்தைப் போல நான்கு மடங்கு அளவுடன் பரப்புள்ள நிலம் வரையும், அரசமரம் தன் உயரத்திற்கு ஐந்து மடங்கு அளவு பரப்பு சுற்றிலும், நெல்லிமரம் தன் உயரத்திற்கு ஆறுமடங்கு பரப்புள்ள நிலம் வரையும் தோஷம் விளைவிக்கும்.

வீட்டைப் பங்கிடுதல்

ஓரில்லத்தை இரண்டாகப் பிரிக்கக் கூடாது. அவ்வாறு பங்கிட்டுக் கொண்டால், கிழக்கு அல்லது வடக்கில் உள்ளவர்கள் மிக்க உயர்ந்தநிலை பெறுவர். தெற்கிலோ, மேற்கிலோ இருப்பவர் தாழ்ந்து போவர்.

ஒரு வீட்டை மூன்று பாகங்களாகவோ, நான்கு பாகங்களாகவோ பங்கிடுதல் கூடாது. மூன்றாகப் பங்கிட்டால் ஒரு பகுதியில் உள்ளவர் ஏழ்மையாலோ, மக்களை இழப்பதாலோ துன்பப்பட நேரும். ஓரில்லத்தை நான்காகப் பங்கிட்டால் ஒரு பாகத்தில் இருப்பவர் மட்டும் சிறப்பு பெறுவார். மற்றவர்கள் பல கஷ்டநஷ்டங்களுக்கு உட்படுவார்கள்.

அண்ணன் தம்பிகள் ஒரே ஆவரணத்தில் தனித்தனியாக வீடுகள் அமைத்துக் கொள்ளலாம்.

அண்ணன் தம்பிகள் நேர் எதிர் எதிராக வீடுகள் அமைத்துக் கொள்ளக் கூடாது. அவ்வாறு அமைத்துக் கொண்டால் ஒருவர் மக்கட்பேறின்மையாலோ மக்களை இழப்பதாலோ துன்பப்பட நேரும்.

அண்ணன் தம்பிகள் ஒருவருக்கொருவர் தென்கிழக்கு, தென் மேற்குப் பகுதிகளில் வீடுகள் அமைத்துக் கொண்டால் சிறப்பாக வாழ்வார்கள்.

தென்மேற்கு, வடகிழக்குப் பகுதிகளில் வீடு கட்டிக் கொண்டால் பல துன்பங்கள் விளையும்.

அண்ணன் தம்பிகள் வீட்டைப் பங்கிட்டுக் கொள்வதானால், பெரியவர் மேற்கிலோ, வடக்கிலோ இருக்க வேண்டுமென்பதும் சிறியவர் கிழக்கிலோ வடக்கிலோ இருக்க வேண்டும் என்பதும் வழக்கமாக உள்ளது.

வேறு வழியின்றி பங்கிட்டுக் கொள்ளவேண்டி வந்தபோது தாழ்ந்த பகுதியில் குடியேறியவர் தென்மேற்கில் வலிமையுள்ள ஓர் அறையைக் கட்டிக்கொள்ள வேண்டும்.

வாடகைக்கு அமர்த்துதல்

வீட்டில் ஒரு பகுதியை வாடகைக்குக் கொடுக்க வேண்டி நேர்ந்த போது வீட்டுக்காரர் உயர்ந்த பகுதியில் அதாவது கிழக்கு வடக்குப் பகுதிகளில் வசித்து, ஏனைய பகுதியை வாடகைக்கு விடுவது நலம்.

வீட்டை விரிவுபடுத்தல்

வசிக்கும் வீட்டை மேலும் விரிவுபடுத்திக் கட்டவேண்டும் என்று எண்ணினால் நான்கு பக்கங்களிலும் விரிவுபடுத்திக் கட்டவேண்டும். ஒரு பகுதியை மட்டும் விரிவுபடுத்தக் கூடாது. சிலர் கிழக்கு வடக்குப் பகுதிகளில் வளர்த்திக் கட்டலாம் என்கின்றனர். ஆனால் கிழக்குப் பகுதியை மட்டும் வளர்த்திக் கட்டினால் நண்பர்களுடன் பகையும், தெற்குப் பகுதியை மட்டும் வளர்த்திக் கட்டினால் மரணமும், மேற்குப் பகுதியை மட்டும் வளர்த்தால் செல்வம் குறைவதுமம, வடக்குப் பகுதியை மட்டும் வளர்த்தினால் மனஸ்தாபமும் உண்டாகும் என்பது வாஸ்து நூல் கொள்கையாகும். ஓர் ஆவரணத்திற்குள் வேறு இல்லம் கட்டுவதானால், தெற்கிலோ மேற்கிலோ புது வீடு கட்டக்கூடாது. வடக்கிலோ கிழக்கிலோ கட்டிக் கொள்ளலாம்.

இதுவரை வீடு கட்டுவதற்கான சாஸ்திர முறைகள் விளக்கப் பட்டன. புது இல்லத்தில் நன்னாள் பார்த்துக் குடிபுகுவது அவசியம், நாள் செய்யும் நன்மை நல்லோர் செய்யார் என்னும் மூதுரை நினைவிற் கொள்ளத்தக்கது.

ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி ஆகிய இந்நான்கு மாதங்களும், ஞாயிறு, செவ்வாய்க் கிழமைகளும், பிரதமை, சதுர்த்தி, சஷ்டி, அஷ்டமி, நவமி, துவாதசி, சதுர்த்தசி, பௌர்ணமி அல்லது அமாவாசை ஆகிய திதிகளும் புது இல்லத்தில் புகும் முகூர்த்தத்திற்குத் தவிர்க்க வேண்டியவை. பகலிலோ, இரவிலோ கிரகப்பிரவேசம் செய்யலாம் என்று சாஸ்திரம் கூறினாலும், ஹோமம், பூஜை முதலியவை செய்ய காலை நேரமே சிறப்பானவை.

ரோகிணி, மிருகசிருஷம், புனர்வசு, பூசம், உத்திரம், ஹஸ்தம், அனுஷம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி என்னும் நக்ஷத்திரங்கள் கிரஹப் பிரவேசத்திற்கு ஏற்றவை.

சந்திரனைக் கொண்டு கணக்கிடப்படும் மாதங்களில் புது மனை புகுவது நலம் என்றும், மாசி மாதத்தில் கிரகப் பிரவேசம் செய்தால் செல்வ வளர்ச்சி, பால்குனத்தில் புத்திர தனலாபங்களும், வைசாகத்திலானால் தனதானிய லாபம் என்றும், ஜேஷ்ட மாதமானால் பசு புத்ராதிகளின் லாபம் என்றும் வாஸ்துரத்னாகரம் கூறுகிறது. சைத்ரம் விலக்கப்பட்டுள்ளது. (சைத்ரமும் - பங்குனியும் சேர்ந்துள்ள நாட்கள் விடத்தக்கவை. அதைப்போல மீன மாதமும், சைத்ரமும் கலந்துள்ள நாட்கள் அதாவது பங்குனி மாதக் கடைசி பதினைந்து நாட்கள் வரை சுபகாரியங்கள் விலக்கத் தக்கவை.)

மகரம் முதல் ஆறு இராசிகளில் சூரியன் சஞ்சாரம் செய்யும் மாதங்கள் கிருஹப் பிரவேசம் செய்யத் தகுந்தவை. ஆனால் அவற்றில் கும்பமாதம் (மாசி) விலக்கத் தக்கது என்பது ஒரு கொள்கை. பொதுவாக ஆனி மாதமும் விலக்கப்படுகிறது.

ரோகிணி, மிருகசீருஷம், ரேவதி, சித்திரை, அனுஷம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி நக்ஷத்திரங்களிலும், பிறந்த லக்னம் பிறந்த ராசிகளுக்கு உபசயராசிகளாகிய 3,6,10,11 ராசிகளில் ஒன்று லக்னமாக உள்ள போது, அல்லது ஸ்திரராசிகளான விருஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆகியவற்றில் ஒன்று லக்கினமான போது கிருகப்பிரவேசம் செய்வது நலம் என்று வாஸ்து ரத்னாகரம் கூறுகிறது.

பழைய வீட்டில், அல்லது நீர், நெருப்பு, காற்று, மின்னல் ஆகியவற்றின் தாக்குதலால் சிதைந்து போன வீட்டைச் சீர்படுத்திய பிறகும், கார்த்திகை ஆவணி மாதங்களில் சதயம், பூசம், சுவாதி, அவிட்டம் என்னும் நக்ஷத்திரங்கள் உள்ள நன்னாட்களில் கிருகப்பிரவேசம் செய்வதால் நன்மையுண்டாகும்.

புதிய இல்லத்தில் பிரவேசம் செய்வதற்கு லக்கினம் முதலியவற்றை ஆராய வேண்டும். பழைய இல்லத்தில் பிரவேசம் செய்ய வேண்டுமாயின் பஞ்சாங்க சுத்தி (திதி—வார—நக்ஷத்திர—யோக — கரணங்கள்) நலமாக இருந்தால் போதும்.

புது இல்லத்தில் புகும்போது குரு சுக்கிர அஸ்தமயம் கூடாது. பழைய வீட்டில் பிரவேசிக்கும் போது அந்தத் தோஷம் இல்லை.

தலைவனின் பிறந்த லக்கினம், ராசி, கிருகப்பிரவேச முகூர்த்த லக்கினம் இம்மூன்றும் ஒன்றாகில், நோயற்ற

வாழ்வு உண்டாகும். இரண்டாவது ராசி பிரவேச லக்னமாகில் ஏழ்மைப்படும். மூன்றாம் ராசி பிரவேச லக்னமாகில் புகழ்மிகும். நான்காவது பிரவேச லக்ன்மாகில் நண்பர்களுக்குக் கேடு, ஐந்தாவது லக்னமாகில் மக்களுக்குக் கெடுதல், ஆறாவது பிரவேச லக்னமாகில் பகைவர்களுக்குக் கேடு, ஏழாவது லக்னமாகில் மனைவிக்குக் கேடு, எட்டாவது லக்னமாகில் ஆயுள் குறைவு, ஒன்பதாவது லக்னமாகில் நோய் மிகும், பத்தாவது ராசி பிரவேச லக்னமாகில் செயல்கள் அனைத்தும் வெற்றி பெறுதல், பதினொன்றாவது லக்னமாகில் செல்வ வளர்ச்சி, பன்னிரண்டாவது இராசியாகில் நோய் மிகும், பகைவரால் துன்பம் நேரும். ஸ்திரராசி (விருஷப-சிம்ம- விருச்சிக- கும்பங்கள்) லக்னமான போது சுப கிரகங்களின் பார்வை இருந்தால் நலம் விளையும்.

கிரகப் பிரவேச லக்னத்திற்கு 5,9,1,7,10,11 மற்றும் 2-ம் ராசிகளில் சுப கிரகங்கள் இருக்க வேண்டும். 1,3,6,11-ம் ஸ்தானங்களில் பாப கிரகங்கள் இருக்க வேண்டும். நான்காம் எட்டாம் ராசிகளில் எந்தக் கிரகமும் இருக்கலாகாது. பிறந்த லக்னம் மற்றும் இராசிகளுக்கு எட்டாவது இராசி கூடாது, ஞாயிறு செவ்வாய் வாரங்களும், ரிக்த திதிகளாகிய சதுர்த்தி, ஷஷ்டி, சதுர்த்தசிகளும், சரராசிகளாகிய மேஷ—கடக—துலா, —மகரங்களும் சைத்திர மாதமும் கிரகப் பிரவேசத்தில் விடத்தக்கவை.

கிருஷ்ண பக்ஷத்துச் சந்திரன் 6,8,12ம் ராசிகளில் இருந்து பாப கிரகங்களின் பார்வை பெற்று, பாபகிரகம் இலக்னத்தில் இருக்கும் போது கிரகப் பிரவேசம் செய்தால், இல்லத் தலைவனின் மனைவி ஓராண்டு காலத்திற்குள் மரணமடைவாள். சுப கிரகங்களின் பார்வை மட்டும் இருந்தால் மூன்றாண்டுகளுக்குள் மரணமடைவாள்.

வாமரவி மாதங்கள்

கிழக்கை நோக்கிய வாயில் கொண்ட இல்லங்களும் பிரவேசம் செய்யும் பொது பிரவேச லக்கினத்திற்கு எட்டாம் ராசியிலிருந்து ஐந்து ராசிகளில் சூரியன் இருந்தால் வாமரவியாகும். தெற்கு நோக்கிய தலைவாயில் கொண்ட இல்லத்தில் பிரவேச லக்னத்திற்கு ஐந்தாம் இடத்திலிருந்து ஐந்து ராசிகளில் சூரியன் இருந்தால் வாமரவியாகும். மேற்கு நோக்கிய தலைவாயில் கொண்ட இல்லத்தில் பிரவேசம் செய்யும் போது பிரவேச லக்னத்திற்கு இரண்டாம் ராசியிலிருந்து ஐந்து ராசிகளில் சூரியன் இருந்தால் வாமரவியாகும். வடக்கு நோக்கிய இல்லத்திற்குப் பிரவேச

லக்னத்திற்குப் பதினோராவது ராசியிலிருந்து ஐந்து ராசிகளுக்குள் சூரியன் இருந்தால் வாமரவியாகும். வாமரவியாக இருக்கும் லக்னங்கள் கிரகப் பிரவேசத்திற்குச் சிறந்தவை.

கும்ப சக்கரம்

சூரியன் இருக்கும் நட்சத்திரம் முகத்தில் வரைக. கும்பம் போன்ற படம் வரைந்து அடுத்த நான்கு நக்ஷத்திரங்களைக் கிழக்கிலும், அடுத்த நான்கை தெற்கிலும், அடுத்த நான்கினை மேற்கிலும், அடுத்த நான்கு நட்சத்திரங்களை வடக்கிலும், அடுத்த நான்கு நட்சத்திரங்கள் பானையின் நடுவிலும், அடுத்த மூன்று நட்சத்திரங்கள் பானையின் அடிப்பகுதியிலும், கடைசி மூன்று நட்சத்திரங்கள் கண்டத்திலும் வரைக.

பிரவேச நட்சத்திரம் வாய்ப் பகுதியானால் நெருப்பால் தீங்கு, கிழக்கு நான்கு நட்சத்திரங்களில் ஒன்றானால் வீட்டில் நிலையாகத் தங்காமை, தெற்கு நான்கு நட்சத்திரங்களில் ஒன்றானால் லாபம், வடக்கு நான்கு நட்சத்திரங்களில் ஒன்றானால் கலகம், வயிற்றில் நான்கு நட்சத்திரங்களில் ஒன்றானால் அழிவு, பானையின் அடிப்ப குதி மூன்று நட்சத்திரங்களானால் ஸ்திரமாக வீட்டில் இருத்தல், தொண்டைப் பகுதி மூன்றில் ஒன்றானாலும் ஸ்திரமாக இருத்தல் என்னும் பலன்களை விளைவிக்கும்.

சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேதுக்கள் இருக்கும் நட்சத்திரம் முதல் அடுத்த மூன்று தீமை, சந்திர — புத — சுக்கிர — குருக்கள் இருக்கும் நட்சத்திரத்திலிருந்து அடுத்த மூன்றும் நன்மை ஆகிய பலன்களைத் தரும்.

அக்னிவாச விளக்கம்

சுக்லபக்ஷ பிரதமை முதல் அன்றைய திதிவரை எண்ணிய மொத்தத்துடன் ஒன்று கூட்டி, ஞாயிறு முதல் அன்றைய வார எண்ணிக்கையையும் கூட்டிய மொத்தத்தை நான்கால் வகுத்தால், 0 அல்லது 3 மிகுந்திருக்குமாயின் நிலத்தில் அக்னி வாசம் இருக்கும். இந்தக் காலம் ஹோமம் செய்வதற்கு ஏற்றதாகும். ஒன்று மிகுந்திருக்குமானால் ஆகாயத்தில் அக்னி வாசம் இருக்கும். இது உயிரைப் போக்கவல்லது. 2 மிகுந்திருக்குமானால் பாதாளத்தில் அக்னி வாசம் இருக்கும். இந்தக் காலத்தில் ஹோமம் செய்தால் செல்வம் அழியும்.

புது இல்லத்தில் புகுந்ததும் ஹோமம் செய்ய வேண்டும். ஆகையால் நிலத்தில் அக்னி வசிக்கும் 0 அல்லது 3 மிகுந்திருக்கும்

திதி உள்ள நன்னாளில் கிரகப்பிரவேசம் செய்வது மிக்க நலம் விளைவிக்கும்.

எந்த இல்லத்திற்குச் சன்னல்கள் கதவுகள், வாயில் கதவுகள் அமைக்கப்படவில்லையோ, மேல்தளம் அல்லது கூரை வேயப்பட வில்லையோ, வாஸ்து புருடன் பலி முதலியவற்றால் திருப்தி செய்யப்படவில்லையோ, அந்த இல்லத்தில் பிரவேசம் செய்தால் தீங்கு விளையும்.

புது வீட்டிற்குள் பிரவேசம் செய்ய வேண்டிய முறை

நீர் நிறைந்த குடத்தைக் கையில் ஏந்தி இரு அந்தணர்கள் வேதகானம் செய்ய வாமரவி இருக்கும் லக்கினத்தில் தூய புத்தாடை அணிந்து, அணி சந்தனம் பூசி கலன்களும் பூமாலையும் அணிந்து, தன் மனைவியுடன் தோரணங்களால் அலங்கரிக்கப் பட்ட இல்லத்தில் வலது கால் முன் வைத்துப் புக வேண்டும். முன்னதாகக் கன்றுடன் கூடிய நன்கு பூஜிக்கப்பட்ட பசுவைச் செல்லச் செய்வது நலம் விளைவிக்கும். தற்காலத்தில் சென்னை யில் மாடி வீடு கட்டி அங்கு பிரவேசம் செய்பவர்கள், முன்னதாக கோபூஜையாவது செய்து, பிறகு கிருகத்திற்குள் பிரவேசம் செய்வது நலம் விளைவிக்கும்.

வீட்டிற்குள் பிரவேசித்ததும் நெய் தீபம் ஏற்றி வைத்து ஹோமம் செய்து குலதெய்வ பூஜை செய்து, முடிந்தவரை பிறருக்கு விருந்தளித்து மகிழ்விப்பது நலம்.

வாஸ்து பூஜை

மனையை அளத்தல், நிலத்தைச் சோதனை செய்தல், வாயில் அமைத்தல், கடைக்கால் நடுதல், மற்றும் கட்டி முடித்த இல்லத் தில் புகுதல் ஆக இவ்வைந்து சமயங்களிலும் வாஸ்து பூஜை செய்ய வேண்டும்.

இல்லத்தில் கூடத்தின் நடுவில் ஒருகை அதாவது இரண்டு அடிகள் அகலமும் நீளமும் கொண்ட சதுரமாக அரிசியைப் பரப்பி, அதன்மேல் 81 பதங்கள் (கட்டடங்கள் அடையாளமிட வேண்டும்) ஏற்படுத்த வேண்டும். முனைப்பகுதிகளில் 32, நடுப்பகுதிகளில் 13—ஆக 45 வாஸ்து தேவதைகள் இடம்பெறுவர்.

இவ்விடங்கள் வடகிழக்குப் பகுதி முதலாகக் கணக்கிடப்பட வேண்டும்.

முதலில் வடகிழக்கில் முதல் கட்டத்தில் அக்னி, அடுத்து பர்ஜன்ய தேவதைக்கு ஒரு கட்டம், பிறகு முறையாக ஜயந்த - இந்திர - சூரியா - சத்ய - பிருச தேவதைகள் இரண்டிரண்டு கட்டங்கள் பெறுவர். பிறகு தென்கிழக்குப் பகுதியில் எட்டாவது ஆகாயம், 9வது வாயு தேவதைகள் இடம்பெறுவர். இவர்களுக்கு ஒவ்வொரு கட்டம் ஆகும். இவ்வாறு கிழக்குப் பகுதியில் தேவதைகள் இடம்பெறுவர்.

தெற்கில் இரண்டாவது பூஷா, மூன்றாவது விதத, நான்காவது பிருஹத்க்ஷத, 5வது யம, 6வது கந்தர்வ, 7வது பிருங்கராஜ, 8வது மிருக, 9வது யம எனத் தேவதைகள் முன்போலவே இடம்பெறுவர்.

மேற்கில் பித்ருகணங்களும் பாபமும் இவ்வாறே இடம்பெறுவர். வடக்கிலும் ரோகம் முதல் திதி வரை உள்ள தேவர்கள் இடம்பெறுவர். நடுவில் வடகிழக்கு முதல் நான்கு மூலைகளிலும் முறையே ஆப, ஸாவித்ர, விஜய, ருத்ர்களெனும் தெய்வங்கள் இடம்பெறும். நடுப்பகுதியில் பிரும்மாவிற்கு ஆறு கட்டங்கள். அவருக்கு நான்கு மூலைகளிலும், வடகிழக்கு முதல், வரிசையாக அபவத்ஸ, ஸவிதா, விஷ்ணுதாதிப, ராஜ யக்ஷ்மா என்னும் தேவதைகள் இடம்பெறுவர்.

பிரும்மாவின் இருப்பிடம் முதல் கிழக்கு முதல் நான்கு திசைகளிலும் அர்யமா, விவஸ்வான், மித்ரன், பித்ருதரன் என்ற நான்கு தேவதைகள் இடம்பெறுவர்.

முறையே கிழக்கிலிருந்து அக்னி, பர்ஜன்யன், ஜயந்தன், இந்திரன், சூரியன், ஸத்யதேவன், பிருசன், ஆகாய தேவன், வாயு, பூஷா, வைததன், பிருஹத்க்ஷதன், பித்ருபதி (யமராஜன்), கந்தர்வன், பிருங்கராசன், மிருகன், பித்ருகணம், தௌவாரிகன், ஸுக்ரீவன், புஷ்பதந்தன், வருணம், ராக்ஷஸன், சோஷன், பாபன், ரோக தேவதை, அஹிமுகன், பல்லாடன், ஸோமம், ஸர்ப்பன், திதி, அதிதி ஆகிய முப்பத்திரண்டு தேவதைகள் இடம் பெறுவர்.

உட்பகுதியில் ஆபன், ஸாவித்ரன், ஜயன், ருத்திரன், பிரும்மா, அர்யமா, ஸவிதா, விவஸ்வான், இந்திரன், மித்ரன், ராஜயக்ஷ்மதேவதை, பித்ருகரன், ஆபவத்ஸன் எனப் பதிமூன்று தேவதைகள் இடம்பெறுவர்.

இவ்வாறு 81 பதங்களில் 45 தேவதைகளை ஆவாஹனம் செய்து சந்தனம், அக்ஷதை, புஷ்பம் முதலியவற்றைக் கொண்டு வாஸ்து மந்திரத்தாலோ அல்லது அந்தந்த தெய்வங்களின் பெயரைச் சொல்லியோ ஷோடச உபசாரங்களுடன் பூஜை செய்ய வேண்டும். இரு வெள்ளை ஆடைகளை (ஒவ்வொரு தேவதைக்கும்) அளிக்க வேண்டும். பழங்களை நிவேதனம் செய்ய வேண்டும். தாம்பூலம் அளிக்க வேண்டும்.

இவ்வாறு வாஸ்து பூஜை செய்து நவக்கிரக சாந்தி, வாஸ்து சாந்தி ஓமம் செய்ய வேண்டும்.

வாஸ்து சாந்தி செய்யும் முறை

சாந்தி மங்கள பாடம்
பிரதான ஸங்கல்பம்
கணேச அம்பிகா பூஜை
கலச ஸ்தாபனம்
புண்யாஹ வாசனம்
மாத்ருகா பூஜை
வஸோர் தாரா பூஜை
ஆயிஷ்ய மந்திர ஜபம்
நாந்தீ சிராத்தம்
ஆசாரிய, பிரும்மா, ஹோதா முதலியவர்களை வரித்தல்
பௌராணிகர் முதலியவர்களை வரித்தல்
மண்டபத்தில் த்வாரபாலகர் முதலியவர்களை வரித்தல்
மண்டப பூஜை
அக்னி ஸ்தாபனம்
கிரக ஸ்தாபனம் - பூஜை
மூலைகளில் கிலஸ்தாபனம்
மூலைகளில் பலிதானம்
வாஸ்து வேதியில் ரேகா பூஜை
அக்னி முதல் 45 தேவதைகளைப் பூஜை செய்தல்
பத்து திக்பாலர்களைப் பூஜை செய்தல்
வாஸ்து வேதி நடுவில் கலசம் வெய்த்தல்
வாஸ்து பிரதிமையைப் பூஜை செய்தல்
குசகண்டிகை
'இஹரதி' முதலாக ஆறு மந்திரங்களைச் சொல்லி ஓமம் செய்தல். பிராம்ஹணாந்வாரப்தம்.
ஆதார ஆஜ்யபாக ஹோமம் 'அக்னிஂந்த்ர' முதலாக ஆறு ஆஹுதிகளால் ஹோமம்.

8 அல்லது 28 ஆஹுதிகளால ஹோமம்
சரக்யாதி ஹோமம்
'வாஸ்தோஷ்பதே' ஆகிய ஐந்து மந்திரங்களைச் சொல்லல்
ஐந்து வில்வ ஹோமம்
'ஸத்விஷ்ட கிருத்' ஒன்பது ஆஹுதி
அக்னி முதலியவர்களுக்கு பலி
சரக்யாதி பலி
சரக்யாதி நாதல்வரை பூஜித்தல்
ஸ்கந்தர் முதலிய நால்வரைப் பூஜித்தல்
ஸார்வபௌதிக பலி
பிரும்மபதத்தில் பூமியைப் பூஜை செய்தல்
திரிஸுத்ரியால் கிருகத்தைச் சுற்றுதல்
பால் கலந்த நீரை இடைவிடாமல் தாரையாக விடுவதால் பூஜை செய்தல்
லக்னதோஷம் நீங்க தானம் செய்தல்
நீர் நிறைந்த கலசத்துடன் கிருகத்தில் பிரவேசித்தல்
தீபமேற்றுதல்
அடுப்பில் தர்மராஜனைப் பூஜை செய்தல்
ஸம்மார்ஜனம் இடத்தில் ஜேஷ்டாதேவியைப் பூசித்தல்
நீர்நிலை இடத்தில் வருணனைப் பூஜை செய்தல்
இயந்திரத்தில் சுபகாவைப் பூஜித்தல்
உரலில் ரௌத்ரபீடத்தைப் பூஜித்தல்
படுக்கையில் காமதேவனைப் பூஜித்தல்
இல்லத்தின் நடுவில் எல்லா தேவதைகளையும் பூஜித்தல்
பசுக்கொட்டகையில் பசுபதி தேவனைப் பூஜித்தல்

வடகிழக்கு முதல் எட்டுத் திசைகளிலும் தானியங்களைச் சேமித்து வைத்தல்.

தயிர் சேமித்து வைத்தல் (புது இல்லத்தில் நம் இல்லத்திற்குத் தேவையான பொருள்களை முதன் முதலில் அந்தந்த தெய்வங்களை எண்ணி பூஜை செய்து வைத்தலும், இல்லத்திற்குத் தேவையான உரல் முதலிய கருவிகளிலும் தெய்வீக சக்தியை ஆவாஹனம் செய்து பூஜை செய்வதும் முன்னோர் வழக்கம்.)

புதுக் கலசம் வைத்தல்
திக்பாலர்களுக்குப் பலி அளித்தல்
கோத்திரபால பலி
நீரை நிரப்புதல்

மண்ணாலான பெட்ட அல்லது பானையில் ஏழு தானியங்கள், தயிர், புஷ்பம் முதலி வற்றை வைத்துப் பிரம்ம ஸ்தானத்தில்

வைத்து வாஸ்து பிரதிமையை வைத்து உரிய இடத்தில் தரைக்குள் பதித்தல் இம்முறை தற்காலத்தில் செய்யப்படுவதில்லை.

தரைக்குள் பதித்த பின் சாணம் கொண்டு அவ்விடத்தை மெழுகுதல்.

பூர்ணாஹுதி
ஸம்ஸ்ரவ பிராசனம்
மார்ஜனம்
பூர்ணபாத்ர தானம்

ஆசாரியர் முதலாக ஓமம் செய்ய உதவியவர்களுக்குத் தக்ஷணை அளித்தல்.

ஸங்கல்பம்

விருந்தினரைப் பெரியோர்களை அந்தணர்களை உணவிட்டு உபசரித்தல்

தம் சுற்றத்தாருடன் இல்லத்தலைவன் அபிஷேகம் செய்யப் பெறுதல்.

விஸர்ஜனம்

திலகாசீர்வாதம்

என இவ்வாறு வாஸ்து சாந்தி ஹோமத்தை நடத்தியபின், அவ்வில்லத்தில் வசிக்க முற்படவேண்டும் என சாஸ்திரம் கூறுகிறது. தற்காலத்தில் இம்முறைகளில் ஒருசில மட்டும் பின்பற்றப்படுகின்றன. ஆயினும் அன்பர்கள் விளக்கம் பெற இம்முறைகள் இங்கு குறிப்பிடப்பட்டன.

நிறைவான பலனை விரும்பும்போது சிரத்தையுடன் அதற்கு உரிய தெய்வ கர்மாக்களை நடத்துவதால் நன்மைகள் பெருகும் என்பதில் ஐயம் இல்லை.

வீட்டிற்குப் பெயர் சூட்டுதல்

அவரவர் வசிக்கும் இல்லங்களுக்குப் பெயர் சூட்டிக் கொள்ளுதல் இன்று வழக்கமாக உள்ளது. முன் காலத்தில் மன்னர்களும், பெரும் செல்வந்தர்களும் இவ்வாறு தங்களுடைய ஆஸ்தானம், இருக்கை முதலியவற்றிற்குப் பெயர்கள் சூட்டுவது வழக்கம் என்பதை நாம் அறிவோம்.

வாஸ்து சாஸ்திரத்தில் அவரவர்கள் தங்கள் பெயருக்கு ஏற்ற ஊரில் வசித்தல், பெயருக்கேற்ற திசையில் வசித்தல் முதலியவற்றைப் பற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. முதல் அத்தியாயத்தில் இவ்விளக்கம் தரப்பட்டுள்ளது. தங்கள் பெயருக்கேற்பப்

பொருத்தமான எழுத்தை அறிந்து, அவ்வெழுத்து சூட்டிக் கொண்டால் மிக்க நன்மை பெறலாம் என்பதில் ஐயம் இல்லை.

தக்க பெயரை நிர்ணயம் செய்து கொண்டு அப்பெயரை ஒரு கல் அல்லது பலகையில் பொறித்து வாஸ்து சாந்தி செய்து, இல்லத்தில் பிரவேசம் செய்யும் நாளில் அப்பலகையையும் தக்கபடி பூஜித்த பிறகு, அதை இல்லத்தின் வெளியே பதிப்பித்தல் மிக்க நலம் தரும்.

ஒவ்வோர் எழுத்துக்கும் ஒவ்வொரு தெய்வம் உண்டு. மந்திர சாஸ்திரத்தில் இதன் விளக்கம் காணலாம். இதை 'மாத்ருகா பூஜை' என்று சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன.

வீட்டின் பெயரில் உள்ள எழுத்துக்களுக்கு உரிய தெய்வங்களை வணங்குதல், அத்தெய்வங்களின் பெயரைச் சொல்லி, புஷ்ப தீப சந்தன - தாம்பூலாதிகளை அர்ப்பணம் செய்தல் மாத்ருகா பூஜையாகும்.

வாஸ்து சாந்தி செய்யும் நாளில் தம் இல்லத்தின் பெயருள்ள கற்பலகையில் அவ்வெழுத்துக்களுக்கு உள்ள தெய்வங்களைப் பூஜித்த பின், வீட்டின் முன் பதிய வைத்துக் கொண்டால் அப்பெயர் மந்திரம் போல் சிறந்த பலனைத் தரும். விடியற்காலையில் எழுந்ததும் அப்பலகையின் முன் தீபம் காட்டுவதும் நாள்தோறும் நன்மையைவளர்க்கும் என்பதை உணர்க. நம்பிக்கையும், சிரத்தையும் நற்பலன்களை வளர்க்கும் என்பதில் ஐயம் இல்லை.

அவரவர்களின் பெயருக்கேற்ப நன்மை தரும் எழுத்துக்கள் இங்கு குறிப்பிடப்படுகின்றன.

1. 'அ' முதல் 'ஔ' வரை உயிரெழுத்துக்களில் ஒன்று பெயரின் முதல் எழுத்தாக உள்ளவர்களுக்கு (அழகப்பன், ஆனந்தன், இளங்கோ, ஈசுவரன், உமாமகேசுவரன், எல்லப்பன், ஏழுமலை, ஐயப்பன் போன்ற பெயர்கள் கொண்டவர்களுக்கு) க,ச,ய,ர,ல,வ என்ற எழுத்துக்கள் முதலில் உள்ள பெயர்கள் நன்மை தரும். (கற்பகம், கலாநிலையம், சம்பகம் யதுகிரி போன்ற பெயர்களை வைக்கலாம்.)

2. க,ங என்ற எழுத்துக்களை முதல் எழுத்துள்ள (கணேசன், கல்யாணராமன், கற்பகம், கமலக்கண்ணன் ஞானசேகரன் போன்ற) பெயர்கள் கொண்டவர்களுக்கு ச,த,ப,ந,ம,ர,ல,வ என்னும் எழுத்துக்கள் முதலில் உள்ள பெயர்கள் செல்வம் தரும்.

3. ச,ஜ,ஞ என்னும் எழுத்துக்களை முதலில் கொண்ட (சம்பகம், ஜயராமன், சத்ரபதி, ஜகன்னாதன் போன்ற) பெயர்கள் கொண்ட வர்களுக்கு 'ட' 'த' 'ந' 'ப' 'ம' என்ற தாமரை தங்கம், பத்ம நிலையம், பாக்ய நிலையம் போன்ற பெயர்களைச் சூட்டுதல் நலம் தரும்.

4. ட,ண (பொதுவாக இவ்வெழுத்துக்கள் பெயர்களில் முன்வரு வதில்லை ஆனால் 'டாகுர்' 'டேவிட்' போன்ற பெயர்கள் கொண்டவர்களுக்கு) 'அ' 'க' 'த' 'ந' 'ம' என்ற (அன்பில்லம், ஆனந்த நிலையம், தங்கப் பதும நிலையம் போன்ற) முதல் எழுத்துள்ள பெயர்கள் நன்மை தரும்.

5. த,ந என்ற எழுத்துக்களை முதலில் கொண்ட (தங்கராசன், தசரதன், தாமோதரன், தயாளன், தர்மராஜன், நாராயணன், நாகரத்னம் போன்ற) பெயர்களைக் கொண்டவர்களுக்கு 'அ' 'ய' 'ச' என்னும் எழுத்துக்களை முதலில் உள்ள (அன்பு நிலையம், ஆனந்த பவனம், யசோதராலயம், சமந்தகம், சங்கர நிலையம் போன்றவை நன்மை தரும். (இங்கு 'ச' என்ற எழுத்து சங்கரன், சமம், சாந்தி போன்ற உச்சரிப்புள்ள எழுத்தாகும்.)

6. ப,ம, என்ற எழுத்துக்களை முதலில் கொண்ட (பத்மநாபன், பலராமன், பாகீரதி, மகேசுவரன், மாணிக்கம், மாதவன் போன்ற) பெயர்களை முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கு 'அ,ந,ர,ல, வ,த,ய,ச (சாந்தி போன்ற உச்சாரணம் உள்ள) பெயர்கள் நன்மை தரும்.

7. ய,ர,ல,வ என்ற எழுத்துக்களை முதல் எழுத்தாக உள்ள (யசோதா, யசோதரன், ராகவன், ராமகிருஷ்ணன், லக்ஷ்மணன், வாசுதேவன், வெங்கடேசன் போன்ற) பெயர்களுள்ளவர்களுக்கு 'ச' (சம்பகம் போன்ற உச்சரிப்புள்ள எழுத்து) ட,ஷ (சாந்தி போன்ற உச்சரிப்புள்ள எழுத்து) முதலில் உள்ள பெயர் நன்மை தரும்.

8. ச,ஷ,ஸ,ஹ முதல் எழுத்தாகக் (சாந்தி, சங்கரன், சம்பு, சாம்பசிவன், ஸந்தோஷம், ஹரி போன்ற பெயர்கள்) கொண்டவர் களுக்கு 'அ' 'க' 'ச' 'ட' என்னும் எழுத்துக்கள் முதலில் உள்ள பெயர்கள் நன்மை தரும்.

இப்பெயர்களில் க-ங்வும் ஓரினம் ச-ஞ ஓரினம், ட-ண ஓரினம் த-ந ஓரினம் 'ப-ம' ஓரினம், ய,ர,ல,வ நான்கும் ஓரினம். ச(சாந்தி) ஷ,ஸ,ஹ ஓரினம் ஆகும். எனவே, அந்தந்த எழுத்துக்கு இனத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் பொருந்தும் என்று உணர்க. அவரவர்கள் வசிக்க முற்படும் கிராமம், நகரம், நகரத்தின் உட்பிரிவு, ெ?ரு ஆகியவற்றின் பெயர்களின் முதல் எழுத்திற்கும் இப்பலன்கள் பொருந்தும்.

வினை விக்கும் பலன்	வீட்டின் பெயரில் முதல் எழுத்து
சமம்	'அ' முதல் 'ஔ'வரை
செல்வ வளர்ச்சி	க, KA, KHA GA, CHA 'ங'
செல்வ வளர்ச்சி	க, CA, CHA JA, JHA 'ஞ'
கடன் மிகுதல்	L, TA, THA, DA, DHA 'ண'
கடன் மிகுதல்	'த' TA, THA DA, DHA 'ந'
கடன் மிகுதல்	'ப' PA, PHA, BA, BHA, 'ம'
செல்வ வளர்ச்சி	ய, ர, ல, வ
கடன் மிகுதல்	சி (சாந்தி) ஶ, ஸ, ஹ

உயிர் எழுத்துக்களில் ஒன்று ('அ' முதல் 'ஔ' வரை) முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கு

வினை விக்கும் பலன்	வீட்டின் பெயரில் முதல் எழுத்து
கடன் மிகும்	'அ' முதல் 'ஔ'வரை
சமம்	KA, KHA GA, GHA க, ங
செல்வம் வினை விக்கும்	CA, CHA JA, JHA ச, ஞ
கடன் மிகும்	TA, THA. DA, DHA ட, ண
செல்வம் வளர்க் கும்	TA, THA, DA, DHA த, ந.
செல்வம் வளர்க் கும்	PA, PHA, BA, BHA ப, ம
செல்வம் வளர்க் கும்	ய, ர, ல, வ
கடன் மிகும்	சி (சாந்தி) ஶ, ஸ, ஹ

'க' (KA. KHA. GA. GHA) 'ங' எழுத்துக்களில் ஒன்றை தம் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கு

☐ ஒரு நெடிய மரத்தில் ஒரு கிளை தரையை நோக்கி வளைந்திருந்து வெளிறிய மஞ்சள் நிறத்துடன் காணப்பட்டால் உட்பகுதி நிலத்திற்குள் மூன்று மனித ஆழத்தில் நீரோட்டம் உள்ளதென்று அறிக.

'ச' (CA, CHA, JA, JHA) 'ஞ' என்ற எழுத்துக்களில் ஒன்றை தம் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கு

விளைவிக்கும் பலன்	நீட்டின், பயநில் முதல் எழுத்து
கடன் மிகும்	'அ' முதல் 'ஔ' வரை
கடன் மிகும்	KA, KHA GA, GHA க, ங
சமம்	CA, CHA JA, JHA ச, ஞ
செல்வம் வளர்க்கிறும்	TA, THA DA, DHA ட, ண
செல்வம் வளர்க்கும்	TA, THA, DA, DHA த, ந
செல்வம் வளர்க்கும்	PA, PHA BA, BHA ப, ம
கடன் மிகும்	ய, ர, ல, வ
கடன் மிகும்	ச (சாந்தி) ஷ, ஸ, ஹ

'ட' (TA, THA, DA, DHA) 'ண' என்ற எழுத்துக்களில் ஒன்றை தம் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கு

விளைவிக்கும் பலன்	நீட்டின், பயநில் முதல் எழுத்து
செல்வ வளர்ச்சி	'அ' முதல் 'ஔ' வரை
செல்வ வளர்ச்சி	KA, KHA GA, GHA க, ங
கடன் மிகுதல்	CA, CHA JA, JHA ச, ஞ
சமம்	TA, THA, DA, DHA ட, ண
செல்வ வளர்ச்சி	TA, THA, DA, DHA த, ந
செல்வ வளர்ச்சி	PA, PHA, BA, BHA ப, ம
கடன் மிகுதல்	ய, ர, ல, வ
கடன் மிகுதல்	ச (சாந்தி) ஷ, ஸ.

└ புற்றின் மேல் அருகம்புல் அல்லது தர்ப்பைப்புல் முளைத்து வெளிறிய மஞ்சள் நிறம் கொண்டிருந்தால் அந்நிலப் பகுதிக்குள் இருபத்தொரு ஆள் ஆழத்தில் நீரோட்டம் உள்ள தென்றறிக.

'த' (TA, THA, DA, DHA) 'ந' என்ற எழுத்துக்களில் ஒன்றை தம் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கு

விளை விக்கும் பலன்	வீட்டின் பெயரில் முதல் எழுத்து
செல்வ வளர்ச்சி	'அ' முதல் 'ஔ' வரை
கடன் மிகுதல்	KA, KHA, GA, GHA க, ங
கடன் மிகுதல்	CA, CHA, JA, JHA ச, ஞ
கடன் மிகுதல்	TA, THA, DA, DHA, ட, ண
சமம்	TA, THA, DA, DHA த, ந
கடன் மிகுதல்	PA, PHA BA, BHA ப, ம
செல்வ வளர்ச்சி	ய, ர, ல, வ
செல்வ வளர்ச்சி	ச (சாந்தி) ஶ, ஸ, ஹ

'ப' (PA, PHA, BA, BHA) 'ம' என்ற எழுத்துக்களில் ஒன்றை தம் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கு

விளை விக்கும் பலன்	வீட்டின் பெயரில் முதல் எழுத்து
செல்வ வளர்ச்சி	'அ' முதல் 'ஔ' வரை
கடன் மிகுதல்	KA, KHA GA, GHA க, ங
கடன் மிகுதல்	CA, CHA, JA, JHA ச, ஞ
கடன் மிகுதல்	TA, THA, DA, DHA ட, ண
செல்வ வளர்ச்சி	TA, THA, DA, DHA த, ந
சமம்	PA, PHA, BA, BHA ப, ம
செல்வ வளர்ச்சி	ய, ர, ல, வ
செல்வ வளர்ச்சி	ச (சாந்தி) ஶ, ஸ, ஹ

□ புல் தரைக்கிடையே புல் முளைக்காத பகுதி காணப்பட்டாலும் புல்முளைத்திராத நிலத்தில் புல் முளைத்துள்ள சிறு பகுதி காணப்பட்டாலும் அப்பகுதி நிலத்திற்குள் நீரோட்டம் உள்ளது. அல்லது புதையல் உள்ளது என்று உணர்க.

ய, ர, ல, வ என்பனவற்றில் ஒன்று தம் பெயரின் முதல் எழுத்தாக உள்ளவர்களுக்கு

வினை விக்கும் பலன்	ஜீவனுள்ள பெயரில் முதல் எழுத்து
கூடன் மிகுதல்	'அ' முதல் 'ஔ'வரை
கிடன் மிகுதல்	KA, KHA, GA, GHA க, ங
நெல்வ வளர்ச்சி	CA, CHA, JA, JHA ச, ஞ
நெல்வ வளர்ச்சி	TA, THA DA, DHA ட, ண
கூடன் மிகுதல்	TA, THA, DA, DHA த, ந
கிடன் மிகுதல்	PA, PHA, BA, BHA ப, ம
சூமம்	ய, ர, ல, வ
நெல்வ வளர்ச்சி	ச (சாந்தி) ஷ, ஸ, ஹ

'ச' (சாந்தி) ஷ, ஸ, ஹ என்ற எழுத்துக்களில் ஒன்றை தம் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கு

வினை விக்கும் பலன்	ஜீவனுள்ள பெயரில் முதல் எழுத்து
நெல்வ வளர்ச்சி	'அ' முதல் 'ஔ'வரை
நெல்வ வளர்ச்சி	KA, KHA, GA, GHA க, ங
நெல்வ வளர்ச்சி	CA, CHA JA, JHA ச, ஞ
நெல்வ வளர்ச்சி	TA, THA, DA, DHA ட, ண
கூடன் மிகுதல்	TA, THA, DA, DHA த, ந
கிடன் மிகுதல்	PA, PHA, BA, BHA ப, ம
கிடன் மிகுதல்	ய, ர, ல, வ
சூமம்	ச (சாந்தி) ஷ, ஸ, ஹ

□ சூடான நிலத்தில் ஏதேனும் ஒரு சிறு பகுதியில் மட்டும் குளிர்ச்சி காணப்பட்டாலும், குளிர்ந்துள்ள நிலத்தில் ஏதேனும் ஒரு சிறு பகுதி மட்டும் சூடாக இருந்தாலும் அப்பகுதி நிலத்திற்குள் 3½ ஆள் ஆழத்தில் நீரோட்டம் உள்ளதென்றறிக.

தங்கள் பெயரையே இல்லத்திற்குச் சூட்டுவதும், தங்கள் பெயரில் முதல் எழுத்தாக உள்ளதே முதலிலுள்ள பெயர்களைச் சூட்டுவதும் நடுத்தர பலன்களைத் தரும்.

'நியூமராலஜி'ப்படி ஆராய்ந்து தக்க 'பெயர்களைச் சிலர் சூட்டிக் கொள்கின்றனர். இங்கு கூறப்பட்டுள்ள எழுத்துக்கள் முதல் எழுத்தாக வரும்படியும், எண்கணிதப்படி எண்கள் சரியாக இருக்கும்படியும் கவனித்துப் பெயர் சூட்டுவதால் மிக்க நன்மை விளையும் என்பதில் ஐயம் இல்லை.

இதுவரை இல்லத்தின் அமைப்பிற்கும், கிரகப் பிரவேசம் செய்வதற்கும் தேவையான வாஸ்து சாஸ்திர விஷயங்கள் அனைத்தும் விளக்கப்பட்டன.

இவ்வனைத்தையும் ஆராய்ந்து தக்கபடி கட்டுதல் சாத்தியமா என்ற ஐயம் தோன்றலாம். நூற்றுக்கு நூறு பொருந்தாவிடிலும், பெரும்பாலான இலக்கணங்கள் உள்ளபடி கிணறு, வாயில், அறைகள் முதலியன அமைத்துக் கொள்வது கடினம் இல்லை. சென்னையில் 'ப்ளாட்' கட்டுவதிலும் பெரும்பாலும் இந்த இலக்கணங்களை ஒட்டி அமைத்துக் கொள்ளலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாகப் பல படங்கள் இப்புத்தகத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

அவற்றைக் கவனித்துத் தேவையானால் சிறு மாறுதல்களுடன் வீடு கட்டிக் கொண்டால் மிக்க நன்மை பெறலாம்.

சாஸ்திரங்கள் கூறுவது பொய்யல்ல. பெரும்பாலும் தோஷங்களில் தீமைகள் விளைவதை அனுபவத்தில் நான் கண்டுள்ளேன். நூற்றுக்கணக்கான எடுத்துக்காட்டுகளைக் கூறமுடியும். இடமின்மையால் ஒரு சிலவற்றை மட்டும் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

சென்னை, கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் என் நண்பர் செட்டியார் ஒருவர் பல்லாண்டுகள் வாடகைக்கு இருந்தார். அவ்வில்லத்தில் தலைவாயிலுக்கு நேர் எதிரில் மேற்குப் பகுதியில் கிணறு இருந்தது. வீட்டுத் தலைவன் வேறு இடத்தில் வசித்து வந்தார். அவர்களுக்கு மக்கட் பேறில்லை. குடும்பம் விளங்கவில்லை. குடியிருந்த செட்டியாருக்குக் குழந்தைகள் பல பிறந்தன. ஆனால் ஒரே நாளில் இரு சிறு குழந்தைகள் தண்ணீர்த் தொட்டியில் (இத்தொட்டியும் வீட்டிற்குத் தெற்குப் பகுதியில் உள்ளது) மூழ்கி இறந்தன. மூத்த மகன் தற்கொலை செய்து கொண்டான். மூத்தமகள் வறுமையால் பல காலம் வருந்தினாள்.

இரண்டாவது மகள் திருமணமானதும் பிள்ளைப்பேறு சரியில்லாமையால் திருமணமான அடுத்த ஆண்டு மரித்தாள். அடுத்தடுத்து நான்கைந்து ஆண்டுகளுக்கு ஒன்றாக இந்தக் கொடுமைகள் நிகழ்ந்தன. தற்சமயம் அவர் வேறு இடத்தில் பொருத்தமான வீடுகட்டிக் கொண்டு இருக்கும் ஒரு மகனிடம் நலமாக வாழ்கின்றார்.

என் மற்றொரு நண்பர் சென்னை, மேற்கு மாம்பலம், ஏரிக்கரைத் தெருவில் வசித்து வந்தார். சொந்த வீடு வடக்குப் பார்த்தது. கிழக்கில் கழிவுநீர் செல்லும் அகன்ற பெரிய வாய்க்கால், மேற்குப் பகுதி பள்ளம், கிழக்கில் மேடாக வீடு, தெற்கில் கிணறு அவருக்கு ஐந்து மகன்கள் தோன்றினர். சிறு வயதில் ஒருவன் இறந்தான். மூத்தவன், இன்ஜினியரிங் கல்லூரியில் படித்து வந்தவன், குளிக்கச் சென்ற குளத்தில் மூழ்கி விபத்தில் இறந்தான். மற்றொருவன் ரயில்வே இலாகாவில் வேலை செய்து வந்தவன், இருபத்தைந்து வயதிருக்கும், சரக்குப் பெட்டிகள் இணைக்கும் போது இடையில் சிக்கி விபத்தில் மாண்டான். வீட்டுத் தலைவரும் ஓய்வு பெற்ற இரண்டாண்டுகளில் திடீரென மறைந்தார். அடுத்தடுத்து ஐந்தாறு ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ்வாறு துன்ப நிகழ்ச்சிகள் நேர்ந்துள்ளன.

மற்றொரு நண்பர், நகைக் கடைக்காரர். தொழில் மந்தம் ஏற்பட்டது. இல்லத்தின் கேட் தென் மேற்கில், தெற்கு நோக்கிய இல்லம். மேற்கில் பெரிய கிணறு. மூத்த மகன் தீய வழிகளில் சென்று வீட்டில் நிலையாக இருக்காமல் சுற்றிவந்தான். ஒருநாள் திடீரென இளமையில் மரித்துவிட்டான். ஒரே மகள் திருமணமானதும் கணவனின் கொடுமை தாங்காமல் தாயகத்தில் தங்கிவிட்டாள். இல்லத் தலைவரும் நடுவயதில் இதய நோயால் திடீரென மறைந்து விட்டார்.

எனக்குத் தெரிந்த ஓர் ஊரில் தெற்கில் ஓடை. அதற்கு வடக்கில் இருந்த நான்கு இல்லங்களும் சரியாக விளங்கவில்லை. இவ்வாறு நூற்றுக்கணக்கான எடுத்துக்காட்டுகளை கூற முடியும்.

இல்லங்களுக்கு மட்டுமல்ல. இறைவன் எங்கும் இருப்பவன் ஆயினும், அளைத்துலகமும் அவன் படைப்பே ஆயினும், அவனுக்கு என மக்கள் நிறுவிய கோவில்கள் வாஸ்து முறைப்படி இல்லை எனில் சிறப்பாக விளங்குவதில்லை. சில கோயில்களில் பூஜைகளும் திருவிழாக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. சில

கோயில்கள் கேட்பாரின்றி இருக்கின்றன. இவற்றிற்குக் காரணங்கள் பல. அவற்றுள் வாஸ்து தோஷமும் ஒன்றாகும் என்பது ஆராய்ந்து பார்த்தால் தெளிவாகும்.

வாஸ்து சாஸ்திரப்படி திருப்பதி திருமலை கோயில் தனவர்க்கத்தில் அமைந்துள்ளது. மேற்கிலும் தெற்கிலும் மலைகள். வடக்கில் புஷ்கரணி. வடக்கில் செல்லச் செல்லப் பள்ளம். இவ்வாறு அமைந்திருப்பதால் செல்வம் குவிகிறது. அதை அடுத்துள்ள காளஹஸ்தி கோயில் ரிணவர்க்கத்தில் இருக்கிறது. தெற்கில் ஆறு. இக்காரணங்களால் சிறப்பில்லாமல் உள்ளது. இவ்வாறே பல கோயில்களில் நிலையையும் ஆராய்ந்து அவை வாஸ்து சாஸ்திர முறைக்கு ஏற்றவாறு பலன்கள் கொண்டிருப்பதைக் கண்கூடாகக் கண்டிருக்கிறேன்.

அவரவர் படும் கஷ்ட நஷ்டங்களுக்கு முற்பிறவியில் செய்த வினைகள் தான் காரணம்; இடம் என்ன செய்யும் என்று சிலர் எண்ணலாம்.

ஒரு மரம் செழிப்பாக வளர வேண்டுமாயின், நல்ல விதை, வளமான நிலம், காலத்தில் நீர் பாய்ச்சுதல், எரு, பூச்சிகளால் தாக்கப்படாமல் இருத்தல் முதலியன தேவை. அதைப்போலவே மனிதனின் வளமான வாழ்வுக்கு முன்செய்த வினைகள் விதை போன்றவை. வசிக்கும் இடம், தொழில் புரியும் இடம் ஆகியவை நிலம் போன்றவை. இப்பிறவியில் செய்யும் செயல்கள் காலத்தில் நீர்பாய்ச்சுவது போன்றது. நல்லவர்களுடைய, பெரியவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு அனுசரித்தல் எரு இடுதலைப் போன்றது. பிறருக்குத் தீங்கு விளையாமல் வாழ முற்படுவது பூச்சிகளால் தாக்கப்படாமைக்குச் சமம்.

விதைகளைக் கட்டாந்தரையில் போட்டால் முளைப்பதில்லை. அதைப் போல தோஷமற்ற இடத்தில் வசித்தால் நாம் செய்த தீவினைகள் பலன் தராவண்ணம் பார்த்துக் கொள்ள முடியும். காலங்கடத்தலால் நாம் செய்யும் நல்ல வினைகள் சேர்ந்து தீவினைப் பயன்களைக் குறைக்கும். எனவே, தீவினைகள் விளையாமல், நல்வினைகள் மட்டும் வளரக்கூடிய நிலவளமாகச் சாஸ்திர முறைக்கு ஏற்றபடி வீடு அமைத்துக் கொண்டு பல தலைமுறைகள் சீரும் சிறப்புமாக வாழ முற்படுவது விவேகத்திற்கு அறிகுறி.

நல்வழி பற்றி நலம் பெற முற்படுவோமாக.

தோஷங்களைத் தீர்க்கும் யந்திரங்கள்

சிலர் புது வீடு கட்டிக் குடி புகுந்ததும் பொருளாதாரச் சிக்கல், உடல்நலமின்மை போன்ற பல துன்பங்களுக்கு இலக்காவதைக் காண்கின்றோம். அத்தகைய தீமைகளுக்குக் காரணங்கள் பல இருப்பினும் அவற்றுள் புது இல்லத்தைக் கட்டுவதில் ஏற்பட்ட குற்றங்களும் ஒன்று என நம் முன்னோர்கள் கருதினர். அத்தகைய தோஷங்கள் நீங்கி நலம் பெறச் சில யந்திரங்களையும் உருவாக்கி உள்ளனர். அவற்றைத் தக்கபடி வைத்து வழிபடுவதால் தோஷங்கள் நீங்கி நன்மை பெற்றதை நான் கண்கூடாக அறிந்துள்ளேன்.

சென்னையில் வியாபாரி ஒருவர் பல நாட்களாகத் தொடர்ந்து வியாபாரம் செய்து வருகிறார். தம் கடைக்கு வடகிழக்குப் பகுதியில் சிறிது இடம் வாங்கிக் கடையைத் தம் இஷ்டம் போல வளர்த்திக் கட்டி விட்டார். வடகிழக்கு மூலையை வளர்த்தியும், மற்ற பகுதியை விடச் சற்று உயர்த்தியும் கட்டினார். அன்று முதல் வியாபாரம் குறைந்து கொண்டே வந்தது. பிறகு தற்செயலாக என்னைச் சந்தித்து நிலைமையை விளக்கினார். நான் அவருடைய கடைக்குச் சென்று ஆராய்ந்து, தக்க யந்திரத்தை வடகிழக்கில் வைத்து வழிபடும் முறையை அறிவித்தேன். ஒரு மாதத்திற்குள் வியாபாரம் குறைவதற்கான காரணங்கள் விலகி மீண்டும் நல்லபடி நடக்கத் துவங்கியுள்ளது.

நம்பிக்கையுடன் வழிபட்டால் நன்மை பெறலாம் என்பதை மேலும் சிலருடைய அனுபவத்தின் மூலம் அறிந்துள்ளேன்.

இடிதாக்குதல், கோட்டான் இரவில் வீட்டின் மேல் தங்கிக் கூவுதல், துஷ்ட கிரகங்களால் நோய் முதலிய துன்பங்கள் உண்டாகுதல், செல்வம் கேடுறுதல் முதலிய தீங்குகளால் துன்பம் விளையாமல் இருக்க பல யந்திரங்களை முன்னோர் கண்டுள்ளனர்.

அவற்றில் சிறந்தது மத்ஸ்ய யந்திரம். ஸ்ரீ ஹரியின் மத்ஸ்யாவதாரத்தைச் சார்ந்த இந்த யந்திரத்தை வடகிழக்குப் பகுதியில் வீட்டுச் சுவற்றில் வீடு கட்டும் போதே பதித்து வழிபடும் முறை நூல்களில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதால் பல தோஷங்கள் இருந்தாலும் அவையனைத்தும் நீங்கும். கட்டிய பிறகும் இந்த யந்திரத்தை வடகிழக்கில் பூஜையில் வைத்து வழிபடலாம். அந்தந்த திசையிலிருந்து தோஷம் நேராமல் தடுப்பது திக்பந்தன யந்திரமாகும்.

கிழக்கு முதலாக எட்டு திசைகளுக்கும் எட்டு திக்பந்தன யந்திரங்கள் உண்டு. மேலும் இந்திர யந்திரம் வேதை (சூலைக ளால் வரும்) தோஷங்களைப் போக்கும் வீட்டின் மேல் கோயில் நிழல், கோயிலிலுள்ள ஸ்வஜஸ்தம்பத்தின் நிழல் முதலியன படுதலால் உண்டாகும் தோஷத்தை பிரம யந்திரம் போக்கும். கிணறு குழி குளம் முதலியவற்றாலும் விஷ்ணு ஆலயத்தின் அருகில் வீடு இருப்பதாலும் நேரும் தோஷங்களை விஷ்ணு யந்திரம் போக்கும். சிவாலயத்தால் நேரும் தோஷங்களை மகேசுர யந்திரம் போக்கும்.

கடை, தொழிற்சாலை முதலியவற்றில் மஹாலக்ஷ்மி யந்தி ரத்தை வைத்து வழிபடுவதால் தோஷங்கள் நீங்கிச் செல்வம் வளரும். தொழில் மிக்க சிறப்பாக நடைபெறும். மனையில் எலும்பு முதலிய கூடாத பொருள்களை நீக்காமல் வாஸ்து முறையைக் கவனத்தில் கொள்ளாமல் கட்டியதால் தோன்றும் துன்பங்களைக் கூர்ம யந்திரம் போக்கும்.

வாஸ்து சாஸ்திரம் நன்கு கற்றறிந்த பெரியவர்களின் மூலம் இந்த யந்திரங்களைத் தயார் செய்யும் முறையையும் வழிபடும் முறையையும் அறிந்து பயன் பெறவும். (தேவைப்பட்டவர்கள் பதிப்பாளர் மூலம் ஆசிரியருடன் தொடர்பு கொண்டு அம்முறைக ளைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.)

வீட்டின் அளவு

அரசன் அரசி மந்திரி இளவரசன் படைத்தலைவன் அரச குரு என்ற முறையில் முன்பு அரசாட்சி அமைந்திருந்ததை நாம் அறிவோம். அதற்கேற்ப பண்டைய மனை அடி சாஸ்திர நூல்களும் அவரவர்களுக்கு உரிய இல்லங்களின் நீளம் அகலம் உயரம் முதலியன இருக்க வேண்டிய அளவுகளை வரையறுத்துக் கூறியுள்ளன. கோயில்களின் அமைப்புகளைப் பற்றிய விளக்கங்க ளும் அந்நூல்களில் காணப்படுகின்றன. ஒரு அறை முதல், பத்து அறைகளைக் கொண்டவை வரையில் பலவகையான வீடுகளின் அமைப்புகள், அவற்றிற்கு ஏற்ற பெயர்களுடன் தனித்தனியாக அந்நூல்களில் விளக்கப்பட்டுள்ளன.

ஒரு அறை (ஏகசாலா) வீடுகள் 1,04,000 வகைகள் இரண்டு அறை (துவிசாலா) வீடுகள் 8,92,000 வகைகள். இவ்வாறே ஏனைய வகைகளும் விளக்கப்பட்டுள்ளன.

ஸ்மராங்கண சூத்ரஸாரம், வாஸ்துராஜ வல்லபம், அபராஜித பிருச்சா, பிருஹத்ஸம்ஹிதை, வசிஷ்டஸம்ஹிதை, தைவக்ஞ மனோஹரம், வாஸ்துபிரதீபம், வாஸ்துதர்ப்பணம், பிருஹத் வாஸ்துமாலா, வாஸ்துரத்னாகரம் போன்ற நூல்களில் கூறப்பட் டுள்ள விஷயங்களைக் கண்ணுறும்போது 'நம் முன்னோர்கள் கட்டடக்கலையை எவ்வளவு நுணுக்கமாகவும் ஆராய்ந்துள்ளனர்!' என்ற வியப்புத் தோன்றும். ஆனால், அப்பொருள்கள் அனைத்தை யும் விளக்க இச்சிறுநூல் போதாது. அனைத்தையும் ஆய்ந்து செயல்படும் பொறுமையும் நமக்கு இல்லை. (இந்நூலில் விளக் கப்பட்டுள்ள பொருள்கள் பெரும்பாலும் அந்நூல்களில் கூறப்பட் டுள்ளவையே என்பது அறியத்தக்கது)

குறுக்காக எட்டு யவதானியங்களை அல்லது நீளமாக மூன்று நெற்களை வைத்தால் தோன்றும் அளவு அங்குலமாகும். இத்த கைய அங்குலங்கள் பன்னிரண்டு கொண்டது விதஸ்தி எனப்ப டும். இருபத்துநான்கு அங்குலங்கள் கொண்ட அளவு ஒரு ஹஸ்தம், அதாவது ஒரு கை நீளம், நான்கு கை நீளங்கள் ஒரு தண்டம் (கழி) என்ற அளவில், வீட்டின் அளவுகளை அளக்கத்த கும்.

மந்திரிகளின் வீடு 67 கை 12 அங்குல நீளமும், 60 கை அளவு அகலமும் கொண்டிருக்க வேண்டும்.

மருத்துவர் ஜோதிடர் முதலியவர்களுக்கான வீடு 46 கை 16 அங்குலம் நீளமும் 40 கை அகலமும் கொண்டிருக்க வேண்டும்.

வியாபாரிகளின் இல்லம் 46 கை 16 அங்குலம் நீளமும் 37 கை 8 அங்குலம் அகலமும் கொண்டிருக்க வேண்டும்.

பயிர்த்தொழில் செய்பவர்களின் இல்லம் 50 கை நீளமும் 40 கை அகலமும் கொண்டிருக்க வேண்டும்.

கலைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் வீடு 28 கை 8 அங்குலம் நீளமும் அதே அளவு அகலமும் கொண்டிருக்க வேண்டும்.

பொது மக்களுக்கான வீடு 39 கை 4 அங்குல நீளமும் 20 கை அகலமும் கொண்டிருக்க வேண்டும். இது முக்கிய வீட்டின் அளவு. இதை ஒட்டி ஒவ்வொருவருக்கும் முறையே குறைந்த அளவில் நான்கு இல்லங்கள் இருக்கலாம்.

வீட்டுச் சுவர்களின் உயரம், அகலத்தில் பதினாறில் ஒரு பங்கு அளவுடன் நான்கு கை அளவு கூட்டிய தொகைக்குச் சமமாக இருக்க வேண்டும்.

அகலத்தின் அளவில் 16ல் ஒரு பங்குடன் 4 கை அளவு கூட்ட முதல் வீட்டின் உயரமும், 3½ கை கூட்ட நடுத்தர இல்லத்தின் உயரமும், 3 கை கூட்ட கடைசி இல்லத்தின் உயரமும் வரும்.

இவ்வாறு முறையே 96 அங்குலத்துடன் 20,18,16 அங்குலங்களை கூட்ட 96,116,114,112 அங்குலங்கள் உயரம் உத்தம பட்சம் உயரமாகும்.

3½ கை அளவுடன் முறையே 27,21,15 அங்குலங்கள் கூட்ட வரும் 84,111,105,99 அங்குலங்கள் உயரம் என்பது மத்திம பட்சமாகும். மூன்று கை அளவுடன் முறையே 37,21,15 அங்குலங்கள் கூட்ட வரும் 72,99,93,87 அங்குலங்கள் அளவு என்பது மூன்றாவது பட்சமாகும்.

வாயில்களின் அளவு

வீட்டு வாயில்கள் இருக்க வேண்டிய அளவு பத்து வகையாகும். நீளத்தின் அளவை 9ஆல் வகுத்து 5ல் பெருக்க வரும் அளவு, வாயில் இருக்க வேண்டிய அகலம் ஆகும். (இவை நான்கு பக்கங்களிலும் உள்ள சட்டத்தின் அளவு போக உட்பகுதி அளவாகும்.)

துவாரங்களின் நீள அகலங்களின் விளக்கம்

1. நீளம் 150 அங் அகலம் (150X5/9=750/9—83 2/9) அங். (இவ்வாறே மற்ற அளவுகளை 5ல் பெருக்கி 9ல் வகுக்க அகல அளவு வரும்.)

2. நீளம் 140 அங் அகலம் 77 3/9 அங்
3. நீளம் 130 அங் அகலம் 72 2/9 அங்
4. நீளம் அங் 120 அகலம் 66 6/9 அங்
5. நீளம் 180 அங் அகலம் 100 அங்
6. நீளம் 190 அங் அகலம் 105 5/9 அங்
7 நீளம் 116 அங் அகலம் 64 4/9 அங்
8. நீளம் 190 அங் அகலம் 60 5/9 அங்
9. நீளம் 80 அங் அகலம் 44 4/9 அங்
10. நீளம் 110 அங் அகலம் 61 1/9 அங்

என இந்தப் பத்து வகை அளவுகளில் அவற்றின் உயரத்திற்கேற்ப வாயில்களின் உயரமும் ஆராய்ந்து கொள்ளத்தக்கது. இந்த அளவுகள் அரசர் மந்திரி முதலானவர்களுக்கான இல்லங்களுக்குத் தகும்.

பொதுவாகச் சாதாரண மக்கள் வசிக்கும் இல்லங்களுக்கு 64 அங்குல உயரமும் 34 அங்குல அகலமும் உள்ள துவாரம் தகும் எனச் சில நூல்கள் கூறுகின்றன.

துவாரம் அளவிற்கு அதிகமாக இருந்தால் திருடரால் அச்சமும், அளவில் குறைந்திருந்தால் ஏழ்மையும் விளையும்.

செங்கற்கள் அளவு

செங்கற்களின் அளவு நான்கு வகைப்படும்.

21 அங் நீளம், $10^1/_2$ அங் (நீளத்தில் பாதி) அகலம், $5^1/_4$ அங் நான்கில் ஒரு பங்கு கனம் உள்ள செங்கல் ஒருவகை. 17 அங் நீளம் $8^1/_2$ அங் அகலம், $4^1/_2$ அங் கனமுள்ள செங்கல் ஒருவகை. 13 அங் நீளம் $6^1/_2$ அங் அகலம், $3^1/_4$ அங் கனமுள்ள செங்கல் ஒரு வகை. 9 அங் நீளம், $4^1/_2$ அங் அகலம் $2^1/_4$ அங்குல கனம் உள்ள செங்கல் ஒருவகை என செங்கற்கள் நான்கு வகைகளாகும் என்று வாஸ்துரத்னாகரம் கூறுகிறது.

15 அங்குல நீளமுள்ள செங்கல் விஜயா என்றும், 17 அங்குல நீளமுள்ள செங்கல் மங்களா என்றும், 12 அங் நீளமுள்ள செங்கல் நிர்மலா என்றும், 13 அங் நீளமுள்ள செங்கல் சுகதா என்றும் கூறப்பட்டுள்ளது. இந்நான்கு வகைகளில் ஏதேனும் ஒன்று வீடுகட்ட பயன்படுத்தத் தக்கதென்றும் கர்கவாஸ்து கூறுகிறது. மேலும் செங்கல் அறுக்க, சூளை இடபோன்ற செயல்களுக்கும் தக்க மங்கல நாட்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகள் அந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மன்னர் மந்திரி, சேனைத் தலைவன், தூதன், கலை விற்பன்னன் உழவர், சேவகர் போன்ற வர்கள் வசிக்கத்தக்க இல்லங்களின் அமைப்புகளைப் பற்றிய நுட்பமான பொருள்களைப் பண்டைய வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது.

வீடு கட்டும் போது கடைப்பிடிக்க வேண்டிய சில குறிப்புகள்

போர்டிகோ

☐ வடக்குத் திசையில் தலைவாயில் உள்ள இல்லத்திற்கு வடகிழக்குப் பகுதியில் கிழக்கு அல்லது வடக்குத் திசை சுற்றுச் சுவரைத் தொடாமல் போர்டிகோ கட்டிக் கொள்ள வேண்டும்.

☐ மேற்குத் திசையில் தலைவாயில் உள்ள வீட்டிற்கு வடமேற்குத் திசையில் வடக்கு சுற்றுச் சுவரைத் தொடாமல் மேற்கு சுற்றுச் சுவரைத் தொட்டுக் கொண்டு போர்டிகோ கட்டிக் கொள்ளலாம்.

☐ கிழக்கு மேற்கு அளவு நீளமாகவும் அதைவிட வடக்கு தெற்குப் பகுதியின் நீள அளவு குறைவாகவும் இருப்பது ஆண் மனை, வடக்கு தெற்குப் பகுதி நீள அளவு மிகுந்து கிழக்கு மேற்குப் பகுதி நீள அளவு குறைந்தும் இருப்பது பெண் மனை என்றும் கூறப்படும்.

☐ தெற்குத் திசையில் தலைவாயில் உள்ள இல்லத்திற்குத் தென்கிழக்குத் திசையில் தலைவாயிலை உள்ளடக்கிப் போர்டிகோ சுட்டிக் கொள்ளலாம். ஆனால், அது தெற்குப் பகுதி சுற்றுச் சுவரைத் தொடாமல் இடைவெளி விட்டுக் கட்டிக் கொள்ள வேண்டும்.

☐ கிழக்கு வாயில் உள்ள வீட்டிற்குப் போர்டிகோ வடகிழக்குப் பகுதியில் அமைத்துக் கொள்ளலாம். தலைவாயில் போர்டிகோவுக்குள் இருக்கும்படிக் கட்ட வேண்டும். போர்டிகோ மேல் விழும் நீர் வடகிழக்கு அல்லது வடக்கு திசை நோக்கி கீழே விழுமாறு அமைக்க வேண்டும். தென்கிழக்கு அல்லது தெற்கு திசை நோக்கி விழும்படி அமைக்கக் கூடாது.

☐ முதலில் கட்டிய வீட்டிற்கு மாடியில் கட்டடம் அமைக்கும் போது தெற்கிலும் மேற்கிலும் சிறு வீடுகள் இருந்தால் (ஒரே காம்பவுண்டுக்குள்) முதலில் தெற்கிலும், மேற்கிலும் உள்ள வீடுகளின் மேல் மாடி கட்டிய பிறகு முக்கிய வீட்டில் மாடி கட்டவேண்டும்.

☐ பிறருடைய இல்லத்தில் வாசம் செய்து கொண்டு செய்யும் புண்ணிய காரியங்களின் பயன் வீட்டுக்கு உரியவனையே சாரும். எனவே, தனக்கென வீடுகட்டிக் கொண்டு செய்யும் அறச்செயல்களே நிறைவான பயன்தரும்.

☐ பழைய வீட்டிலிருந்து எடுக்கப்பட்ட கதவு, ஜன்னல் போன்ற பொருள்களைக் கொண்டு புது இல்லம் கட்டக்கூடாது. பழைய வீட்டை சீர்படுத்தும் போது மட்டும் வேறு பழைய வீட்டிலிருந்து கொண்ட பொருள்களைப் பயன்படுத்தலாம்.

☐ ஒரு வீட்டில் ஏதேனும் ஒரு சுவர் முழுவதும் கட்டப்படாமல் அறைகுறையாக இருந்தாலும், சுவர் வளைந்திருந்தாலும் ஐந்தடி உயரத்திற்கும் குறைந்த அளவில் இருந்தாலும் குழந்தைகளுக்கும் மனைவிக்கும் கெடுதல் நேரும். அல்லது ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொண்டிருப்பர்.

☐ வீட்டின் அருகில் சுற்றுப் புறத்திலோ வீட்டிற்குள்ளோ நிலத்திலிருந்து தானாக நீர் ஊற்றெடுத்து வந்தால் பசுக்களுக்குக் கேடு. குடும்பத்தில் கலகம் உண்டாகும்.

☐ வீட்டின் தெற்கு மேற்குத் திசைகளில் உள்ள சுவர்களில் ஜன்னல் இல்லாவிடில் குழந்தைகளுக்கு ஆயுள் குறைவு உண்டாகும்.

☐ வீட்டின் மேற் (கூரைப்) பகுதி பாணம் அல்லது அரை வட்டமாக இருந்தால் பெண்களுக்குக் கெடுதல், செல்வம் குறையும். புகழ் கெடும்.

☐ வீட்டிற்குப் பின்புறத்தில் அல்லது பக்கங்களில் உள்ள வாயில் மூலம் வீட்டிற்குள் புகும்படி வழக்கம் கொண்டால் செல்வம் குறையும். தலைவாயில் வழியாகவே போக்குவரத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

☐ வீட்டிற்கு மேல் மாடி கட்டும் போது கீழே உள்ள (கிரௌண்ட் ப்ளோர்) முழு அளவிற்கும் முதல் தளம் (பஸ்ட் ப்ளோர்) கட்டலாம். மேல்மாடியில் சிறிது காலி இடம் விட்டுக் கட்ட வேண்டுமென்றால் கிழக்கு நோக்கிய தலைவாயில் கொண்ட வீட்டிற்கு வடமேற்கில் காலி இடம் விடவேண்டும்.

☐ வடக்கு நோக்கிய தலைவாயில் கொண்ட வீட்டிற்கு (பஸ்ட் ப்ளோர்) மாடி கட்டும்போது தென்கிழக்கில் இடம் விட்டுக் கட்ட வேண்டும். தெற்கு நோக்கிய தலைவாயில் உள்ள வீட்டிற்கு வடமேற்கிலும், மேற்கு நோக்கிய தலைவாயில் கொண்ட வீட்டிற்கு தென்கிழக்கிலும் இடம் காலியாக விட்டுக் கட்ட வேண்டும்.

☐ தென்மேற்கு அல்லது வடகிழக்கில் 'ஓபன்டெர்ரேஸ்' அமைக்க வேண்டாம். மேல் மாடியிலும் சமையல் அறை, படுக்கை அறை, பூஜை அறை முதலியவை கீழ்ப்பகுதி வீட்டிற் குள் குறிப்பிட்டபடி அமைக்கவும்.

☐ ஒரு அரசமரம், ஒரு வேப்பமரம், ஒரு ஆலமரம், பத்து புளிய மரங்கள், பத்து வில்வ மரங்கள், பத்து நெல்லி மரங்கள், மூன்று அல்லது ஐந்து மாமரங்கள் நட்டு வளர்த்தவன் மிக்க புண்ணியம் செய்தவன் ஆவான்.

☐ பிள்ளைப் பேறில்லாதவன் மாந்தோப்பு ஒன்றை வளர்த்தால் பிள்ளையைப் பெற்றதால் உண்டாகும் புண்ய கதி பெறுவான்.

☐ மக்கள் பயணம் செய்யும் சாலைக்கு இரு பக்கங்களிலும் அழகிய மரங்களை நட்டு வளர்த்தவனும், பொது மக்களுக்குப் பயன்தரும் கிணறு அமைத்தவனும் எக்காலத்திலும் குறையாத புண்ணியம் செய்தவன் ஆவான்.

முடிவுரை

முன்னோர்கள் பல கோயில்கள், கோட்டைகள், அரச மாளிகைகள் முதலியவற்றை அமைத்துள்ள விதம், சிற்ப வித்தையில் உள்ள அவர்களது திறமைகளுக்கு எடுத்துக்காட்டான கட்டடங்கள் இன்றும் பல விளங்குவதைக் காண்கிறோம். அத்தகைய கட்டடங்களுக்கு மிக நுட்பமான பொருளையும் ஆராய்ந்து தக்க இலக்கணங்களைக் கண்டு விளக்கிய வகையும் வியக்கத்தக்கது.

ஒரு சில இக்காலத்திற்கு ஏற்றவை இச்சிறு நூலில் விளக்கப் பட்டுள்ளன. மேலும் சில பொருள்களைப் பற்றி அறிய விரும்புகிறவர்கள் மூல நூல்களைக் கண்டு தெளிவு பெறலாம்.

> '' எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பதறிவு''

என்னும் பொய்யில் புலவரின் பொன்னுரைக்கேற்ப நடுநிலையில் நின்று ஆராய்ந்து, பல இல்லங்களின் அமைப்புகளையும் அவற்றால் விளைந்த பலன்களையும் ஆய்ந்து, தமக்கு ஏற்றபடி இல்லம் அமைத்துக் கொண்டு சிறப்புக்கள் அனைத்தும் பெற்றுப் பல்லாண்டுகள் வாழவேண்டுமென அன்பர்களை வாழ்த்துகிறேன்.

முற்றும்.

செல்வம் கொழிக்கும் வீட்டின் அமைப்பு

பாகம் - 1

சுவாமி விஜயானந்தா

மனையடி சாஸ்திரம்

150 விளக்கப்படங்களுடன்

வளரி
புத்தக நிலையம்